

T28074

○ **நிகழ்-25—சிறப்பிதழ்**
○ **ஏப்ரல் 1993**

○ ஆசிரியரும் வெளியிடுபவரும் : கி.பழனிச்சாமி (ஞானி)
123, காளீசுவரர் நகர், காட்டூர், கோவை—641009

○ அச்சிட்டோர்: ஜென்னிராம் பிரஸ், 13,
வன்னியர் 2ஆம் தெரு, சென்னை-94

நிகழ் தனிச்சுற்றுக்கு மட்டும்

தாஸ்னாவுடன் இணைக்கப்பட்டது.

நன்கொடை : ரூபாய் இருபத்தியைந்து.

உள்ளே

□

- ○ சிரஞ்சீவி வள்ளல் (கவிதை) நோயல்—4
- ○ தலையங்கம்—5
- ○ இராமன் எத்தனை இராமனடி (கவிதை) கௌதமன்—9
- ○ அந்நியம் (கவிதை) ஷாராஜ்—10
- ○ உபதேசம் (கவிதை) ஜாபர்—10
- ○ நண்பர்கள்—பிரச்னை; நான்—நீங்கள்—ஞானி—11
- ○ சோமாசி (சிறுகதை) இரா. நடராசன்—17
- ○ தன்மயமாதல் (கவிதை) ரிஷி—25
- ○ பலி (சிறுகதை) தேவிபாரதி—32
- ○ மழை ஓய்ந்த வேளை (சிறுகதை) தமிழன்பன்—45
- ○ அநிகேதன் இரு கவிதைகள்—51
- ○ போரும் தீர்க்கதரிசியும் (கவிதை) மலைச்சாமி—52
- ○ தலித் மக்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் எது விடுதலை? எப்படி? (கட்டுரை) எஸ். என். நாகராசன்—53
- ○ காலத்தின் மாலை கோர் (கவிதை) சேந்தன்—64
- ○ யுலிசெஸ் (கட்டுரை) 'சிட்டி' பெ. கோ. சுந்தரராசன்—65
- ○ பெண்ணியல் திறனாய்வு (நிகழ் 24-ன் தொடர்ச்சி) பஞ்சு—72
- ○ புனரபி கிழவி (கவிதை) தேவரசிகன்—91
- ○ டால்ஸ்டாயா, தாஸ்தாயேவ்ஸ்கியா? (கட்டுரை) பூரணச்சந்திரன்—92
- ○ கடவுளே! (கவிதை) தேவதேவன்—106
- ○ மூன்று கவிதைகள்— எம். வி. வி.—107
- ○ கொலம்பஸ் முதல் புஷ்வரை [காலனியாதிக்க வரலாறு] (நிகழ் 24-ன் தொடர்ச்சி) ரவி சீனிவாஸ்—111
- ○ உண்மை, அதிகாரம், தான் (எனும் தனித்தன்மை) எஸ். சண்முகம்—119
- ○ நூல் மதிப்புரை—130
- ○ தூய்மைக் குறைவான ஒரு பயணம் (கவிதை) ஆத்மாஜி—141
- ○ தனிமையில் உறங்கும் அரசி (கவிதை) மனுஷ்யபுத்திரன்—142
- ○ இறையியல் (கவிதை) தேவதேவன்—144
- ○ பின்-நவீனத்துவம் (பிரடெரிக் ஜேம்சன் நூல் அறிமுகம்) இரவி கண்ணன்—145
- ○ திரைப்படங்களில் இந்துத்துவம் (கட்டுரை) பிரபாகரன்—157
- ○ எது குறித்து இந்தக்கவிதை (கட்டுரை) ரிஷி —160
- ○ எஸ். என். நாகராசன் கவிதைகள்—162

○ தற்கால உலகச் சிறுகதைகள் (விமர்சனங்கள்) 163
○ எரிப்பதற்காக எரியும் தீ (கவிதை)
பாப்லோ அறிவுக்குயில்—168
○ பறவைகள் (கவிதை) க. அம்சப்ரியா—169
○ இருத்தல் (கவிதை) உதயசங்கர்—170
○ கௌரவன் (கவிதை) கேத்தம்பட்டி செல்வா—170
○ இடைவெளிகள் (கவிதை) ரவிசுப்ரமணியன்—171
○ கவிதை—பெருந்தேவி—172
○ இதயத்தைத் தவிர-ஒரு கடிதம் (கவிதை) ம. ஜோசப்—173
○ ஒரு மரம்கூட அசையவில்லை (கவிதை)
குருநாத் கணேசன்—174
○ விமர்சனத்துக்கு மறுப்பு—தமிழவன்—175
○ ஜீவனம் (கவிதை) அமுதன் இஸ்மாயில்—177
○ கடிதங்கள்—178
○ இரங்கற்பா (கவிதை) ரிஷி—184
○ கவிதை—மதுசூதனன்—185
○ வரப்பெற்றோம்—186
○ கோழி (கவிதை) இலக்குமிகுமாரன் ஞானதிரவியம்—190
○ பா. வெங்கடேசன் கவிதைகள்—191

□

‘முன்றில்’- ஓர் அறிவிப்பு

தமிழ் கலை, பண்பாட்டின் மறுமலர்ச்சிக்காகவும், கலாச்சார பரிமாற்றத்தின் விவாத மேடையாகவும் விளங்கும் ‘முன்றிலின்’ புதிய எத்தனங்கள்:

நாவல், சிறுகதை, இலக்கிய விமர்சன கட்டுரைகள், நாடகம்/திரைப்படம் குறிதச படைப்பாக்கங்கள் உள்ளிட்ட 25 புதிய நூல்கள் வெளியிடத் திட்டம்.

அனைத்துத் தொடர்புகளுக்கும்

முன்றில்

28, இரண்டாவது தளம், சாந்தி காம்ப்ளக்ஸ்,
26, ரங்கநாதன் தெரு, தி. நகர் சென்னை-600 017

சிரஞ்சீவி வள்ளல்

தேனீ உடலின் திரவக் கொள்ளையில்
விந்துத் திமிங்கிலம் அழித்த கொழுப்பில்
உருண்டு திரண்டு முளைத்தது வர்த்தி
'தன்னையே தகனம் செய்து செய்து
ஒளிசெய்கின்றது! விழிதிறக்கின்றது!
என்னே! என்னே!' என்மனார் எவரும்.
திரிநூல் இழைகள் கருகக் கருகச்
சுடர்நாத் துடித்து இடைஇடை அரற்ற
மெழுகு நீள்உருளை உருக உருக
எரிந்தது பாதி; உறைந்தது பாதி.
'சேவை! தியாகம்! இணைமிகை இல்லை!
என்னே! என்னே!' என்மனார் எவரும்
திரியின் அடிமுனை சிறிதும், உறைந்து
படல்படலாகிய பாதி மெழுகும்
மேசை மீது மீந்து
விழித்த காலையில் விகடம் செய்தன:
பிறரின் அழிவில் தோற்றம் பெறுவதும்
ஆற்றோடு சென்றும் ஆதாயம் தேடல்போல்
இறுதி அபாயத்தில் வலிந்து மாட்டித்
தன்னையே தரினும் தனக்குள்ளே உபரி
ஒதுக்கிக் கொள்வதும் ஒருமித்த தியாகமா?
இன்றி அமையா ஒழுங்கிலாச்
சாகசம் நிரம்பிய சமயோசிதமா?

—நோயல்

நிகழ் - 25:

சில கேள்விகள்:

இசுலாமியரைக் குறிவைத்துத் தாக்குகிற பாரதிய ஜனதாவின் அரசியல் இந்து மதத்தைப் புதுப்பிக்கிற அரசியல்தானா! இந்துத்துவமும் இந்து மதமும் ஒன்று தானா? இவர்கள் உருவாக்கி முன்னிறுத்தும் இந்துத்துவம் யாருக்குச் சாதகமானது? கோயில் சொத்துக்களை மட்டுமல்லாமல் இதைவிடப் பலமடங்கு பெருத்த முதலாளியின் தனிஉடைமையைக் காப்பாற்றுவதல்லவா இவர்கள் நோக்கம்? சந்தைப் பொருளாதாரம் என்ற பெயரில் தன்னைப் பெருக்கிக் கொள்ளும் முதலாளியம், மக்கள் உடைமையை மட்டுமல்லாமல் அரசின் உடைமையையும் காவு கொள்ளத்தானே முனைகிறது? அரசியல் சட்டத்தின் உள்ளிருந்தே மக்களாட்சி முறை ஒழிக்கப்பட்டு விட்டது. சோசலிசச் சக்திகள் செயலற்றுக் கிடக்கின்றன. முதலாளிகளுக்காக இந்தியாவை ஒருமைப் படுத்த வேண்டும். பிரிவினை இயக்கங்கள் ஒழிக்கப்பட வேண்டும். மாநிலங்களைக் கொஞ்சம் மதிக்கிற அரசியல் சட்டம் இனி தேவையில்லை மையத்தில் ஒரு வலுவான அரசு வேண்டும். ஏகாதிபத்தியத்தின் காலடியில் வலுவான இந்திய அரசு பாதுகாப்பாக இருக்கும். இப்படி செயல்படுகிற அரசியலை எந்தப் பெரும் கட்சி மறுக்கிறது. சுரண்டலும் ஒடுக்கு முறையும் தொடர்ந்து அதிகரித்து வருகிற சூழலில் பெண்கள் இன்னும் அதிக அடக்குமுறைக்கு உள்ளாவார்கள். தலித்துகள் மீது கொடுமைகள் அதிகரிக்கும். புரட்சிகரமான மாற்றத்தை நோக்கியதாக இல்லாமல் வெறும் சாதி மத எதிர்ப்பாக குறுக்கப்படுகிற பெரியாரியம் யாருக்கு விடுதலை தரும். பெண்ணியம் என்றும் தலித் என்றும் பேசுகிறவர்கள், இவர்கள் மீது செலுத்தப்படும் ஒடுக்குமுறையின் பின்புலத்தில் யார் சுரண்டுகிறார்கள், யார் ஆதிக்கம் செய்கிறார்கள் என்ற உண்மையை எப்போது தெரிந்து கொள்ளப் போகிறார்கள்? முதலாளியத்தையும் அரசு அதிகாரத்தையும் இவற்றின் ஆழத்தில் செயல்படுகிற ஏகாதிபத்தியத்தையும் குறிவைத்துத் தாக்காதவரை இங்கு யாருக்கும் விடுதலை இல்லை. சுதந்திரம் பிரிவு படாதது என்ற மார்க்சின்! கூற்று, எத்தனை உண்மைகளை, தனக்குள் கொண்டுள்ளது!

சில பதிவுகள்

1. நிகழ்-24-இல் வெளிவந்த 'இயேசுவின் கடைசி (ஆத்ம) பரிசோதனை' என்ற டேவிட் சித்தையாவின் கட்டுரைக்கு ஆதரவாகவும் மறுத்தும் சில கடிதங்கள் வந்தன. ஜெயமோகனின் தேவிபிரசாத் பற்றிய கட்டுரைக்கு சில கடுமையான கண்டனங்கள் வந்தன. விமர்சனங்களுக்கு மனம் திறந்து கொள்கிற பார்வை/நிதானம் சில நண்பர்களுக்கு இல்லை. ஆர்.எஸ்.எஸில் ஒரு காலத்தில் ஜெயமோகன் இருந்ததை அவர் சொல்லித்தான் நமக்குத் தெரியும். இப்பொழுது அந்த வட்டாரத்தில் அவர் இல்லை என்றுதான் நான் நம்புகிறேன். இதற்கு ஆதாரம் அவரது கதைகள் தான். 'திசைகளின் நடுவே', 'மாடன் மோட்சம்', 'பல்லக்கு' ஆகிய கதைகள். பல்லக்கு கதையில் தலித்தை ஜெயமோகன் கேவலப்படுத்தியிருப்பதாக ஒரு குற்றச்சாட்டு. சுஜாதா சொல்கிறபடி மேனனை தலித் பழிவாங்குகிறார். காலம் காலமாக தம் மக்கள் மீது செலுத்திய ஒடுக்குமுறைக்கு இது ஒரு எதிர்வினை.

2. ஜெயமோகன் கட்டுரை பற்றி எனது கருத்தை இங்கு பதிவு செய்கிறேன். ஜெயமோகன் செமிட்டிக் தத்துவம் என்ன என்பதை விளக்கவில்லை. மெய்யியலை கருத்து முதல் வாதம் பொருள்முதல் வாதம் என இரண்டாக வெட்டிப் பேசமுடியாது. மேற்கத்திய மெய்யியலின் போக்கு இது. பொருளா, கருத்தா என்ற ஆய்வு இறுதியில் மெய்யியலை அறிவியலாக மட்டுமே சுருக்கிவிடும். மார்க்சியத்தில், இயங்கியல் விதிகள். இந்திய மெய்யியல்களின் மையம் மனிதவிடுதலை. பொருளா, கருத்தா என்ற ஆய்வு விடுதலையை மதிக்க வேண்டியதில்லை. மேற்கத்திய ஆய்வு முறைதான் தேவி பிரசாத்துக்கு உடன்பாடு. தேவிப்பிரசாத்தும் மெய்யியலை விட்டு அறிவியல் ஆய்வுக்குள்தான் தொடர்ந்து சென்றார். மேலும் ஒன்று. மெய்யியல் ஆய்வில் தேவிபிரசாத்தைக் காட்டிலும் கூடுதலான வளமுடையவர் கே.தாமோதரன். தேவி பிரசாத்தை மறுப்பதன் மூலம் மார்க்சியத்தை ஜெயமோகன் மறுக்கிறாரா என்று நண்பர் ரவி சீனிவாஸ் கேட்கிறார். கேட்க வேண்டிய கேள்வி. வறட்டுவாதமாகத் திரிபடைந்திருக்கிற மார்க்சியத்தை அதுதான் மார்க்சியம் எனக்கருதி விமர்சனம் செய்பவரை நாம் குற்றம் சொல்லிப் பயனில்லை.

3. இந்த இதழில் மேற்கத்திய சிந்தனை/இலக்கியப் பார்வை பற்றிய கட்டுரைகள் சற்றுக் கூடுதலாக இடம் பெறுகின்றன. நம் சூழலில் நம் சுயசிந்தனையை/பார்வையைத் தூண்டும் முறையில் இவற்றை நம்மால் பொருள்படுத்த முடியும். ஜி. எஸ். ஆர்.

கிருஷ்ணன் தன் கடிதத்தில் ஆர். எஸ். எஸ்., பாரதிய ஜனதா ஆகியவற்றின் நன்கொடைகள் எனக்குறிப்பிடும் கருத்தோடு நியாயமாகவே வேறுபாடு கொள்ளலாம். கவிஞர்கள் என நமக்குத் தெரியவந்திருக்கிற தமிழன்பன், நடராசன் ஆகியவர்கள் சிறுகதைகளுக்குள் தம் ஆக்கத்திறனை வெளியிட முனைந்திருக்கிறார்கள். இந்தப் போக்கை நாம் பெரிதும் வரவேற்கலாம். தேவிபாரதியின் சிறுகதைத் தொகுப்பிலிருந்து 'பலி' இந்த இதழில் இடம் பெறுகிறது. நிகழ் 24க்கு எழுதப்பட்ட மதிப்புரைகள் இந்த இதழில் வெளிவருகின்றன. இடையில் நிகழுக்கு வந்த நூல்களுக்கு இந்த இதழில் மதிப்புரை வெளியிட இயலவில்லை. இடமில்லை என்பதைத்தவிர வேறு காரணமில்லை. நண்பர்கள் மன்னிக்க வேண்டும்.

4. நிகழ்—25 இதழ் சிறப்புமலர். இத்துடன் நிகழை நிறுத்திக் கொள்கிறேன். பணமுடை, ஒரு காரணம். கொஞ்சம் படிக்க வேண்டும். நூலாக்கத்திற்கு முயற்சி செய்ய வேண்டும். இது இன்னொரு காரணம.

நிகழை நிறுத்திவிடக் கூடாதென்று உருக்கமாக சில நண்பர்கள் எழுதியிருக்கிறார்கள். நிகழ் நிறுத்தம் என்னை முடக்கிவிடும், என தன் வருத்தத்தை அ.மார்க்ஸ் தெரிவிக்கிறார். 'கண்ணீரோடு எழுதுகிறேன்' என்கிறார் கவிஞர் நடராசன். 'பொறுப்பை நாங்கள் ஏற்கிறோம்' என்கிறார் வேர்கள் இராமலிங்கம். நன்கொடை எனத் தொடர்ந்து கேட்பது அவமானமாக இருக்கிறது. எதற்கும் எனக்கு சற்று ஓய்வு தேவை. அரைத்த மாவையே தொடர்ந்து அரைக்கிற போக்கிலிருந்து விடுபடுவதற்கு இந்த ஓய்வு பயன்படலாம். ஒரு எண்ணம். இந்த சிறப்பிதழுக்கு செலவிடும் தொகை முழு அளவில் திரும்பக் கிடைக்குமானால் இந்த ஆண்டு இறுதிக்குள்ளே கூட இன்னொரு சிறப்பிதழைக் கொண்டு வர முடியும். எதற்கும் நண்பர்களுக்கு அவ்வப்போது எழுதுவேன். நிகழைத் திரும்பக் கொண்டு வருவது பற்றி 94 தொடக்கத்தில் தீர்மானிக்கலாம்.

இதுவரை நிகழோடு ஒத்துழைத்த நூற்றுக்கணக்கான நண்பர்களுக்கு நிகழ் நண்பர்கள் சார்பில் நன்றி. நிகழுக்கு நான் பொறுப்பேற்றுக் கொண்ட காலத்தில் என்னுடன் இருந்த சில நண்பர்கள் இன்று இல்லை. புதிய நண்பர்கள் பலர் சேர்ந்தாலும் அந்தப் பழையவர்கள் பிரிவு ஆழ்ந்த வருத்தமாய் உறைக்கிறது. எனது படிப்பிற்கும் எழுத்துப் பணிக்கும் இன்று எனக்கு இன்றியமையாதவர் நண்பர் சாந்தாராம். அவர் இல்லை என்றால்

நான் இல்லை. அவருக்கும் அவரது குடும்பத்தார்க்கும் என் நன்றியைத் தெரிவிக்க சொற்கள் இல்லை. என்மகன் மாதவன் ஒரு முறை கூறினான், 'கடவுள்தான் சாந்தாராமை நமக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.' அவனுக்கு கடவுள் நம்பிக்கை குறைவுதான். எனக்கு நம்பிக்கை அறவே இல்லை.

5. நண்பர் வேதசகாயகுமார் அண்மையில் வ.ரா. அவர்களின் மணிக்கொடி இதழ்களின் படி ஒன்றைப் பெற்றிருக்கிற செய்தியை நண்பர்கள் பலர்க்கும் உற்சாகத்தோடு தெரிவிக்கிறார். சிங்கப்பூரிலிருந்து இந்த நகலை அவர் பெற்றிருக்கிறார். இரண்டாண்டு மணிக்கொடி இதழ்கள். 2400 பக்கங்கள். பக்க அளவு $\frac{1}{4}$. வ.ராவின் மணிக்கொடி பற்றி பெரியவர் பலர் நம்மிடையே பரப்பி இருக்கிற கருத்துப் படிமத்தை முற்றாக மறுக்கும் முறையில் வ.ரா.வின் மணிக்கொடி அமைந்திருக்கிறது என்கிறார் வேதசகாய குமார். இது பற்றி முதலில் ஆய்வடங்கல் தயாரித்து பிறகு விரிவான, கட்டுரைகள் வெளியிடுவேன் என்கிறார். தேவைப்படுகிறவர்களுக்கு வ.ரா.வின் மணிக்கொடி இதழ்கள் நகல் எடுத்துத் தருவதாகவும் சொல்கிறார்.

6. இந்த இதழின் முன் அட்டை ஓவியம்: திரு. மருது. அனுப்பி வைத்தவர் திரு.ரவி சுப்பிரமணியம். முன் பின் அட்டை ஆக்கம், 'மிஸ்.ஸ்கிரினிகா' (கோவை-1). எம்.வி.வி. அவர்களின் ஓவியம், சீ. அரங்கராசன் (ஓவியக்கல்லூரி, கும்பகோணம்). 'பெண்ணியல் திறனாய்வு' கட்டுரைக்கான ஓவியம் நண்பர் முருகன். அபுக்கர், மற்றும் ஜென்னிராம் அச்சகத்தார் அனைவருக்கும் நிகழ் சார்பில் நன்றிகள்.

7. தமிழ்ச் சிற்றிதழ்களின் சங்கமும் (தாஸ்னா), தஞ்சைப் பல்கலைக் கழக நூலகத்துறையும் இணைந்து நடத்த இருக்கும் கருத்தரங்கம் ஒன்றிற்காக திரு. குன்றம்ராமரத்தினம் அவர்கள் (தாஸ்னா, இயக்கத் தலைவர்) முயற்சி எடுத்து வருகிறார். அவரோடு சிற்றிதழாளர்கள் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

□

8. எனக்கு வந்த குறிப்பிடத்தக்க கடிதங்களில் ஒன்றை வாசகர்கள் மத்தியில் வைக்கத் தோன்றியது... கடிதம் கீழே:

...ந.பிச்சமூர்த்தி, கு.ப.ரா. முதலியவர்கள் வசன கவிதை என்ற பெயராலேயே எழுதினோம். கு.ப.ரா. காலமான பிறகே நான் வசனகவிதை எழுதலானேன். ந.பி. அவற்றை ஏற்று உற்சாகப் படுத்தினார். எதுகை, மோனை குறைக்குமாறு யோசனையும்

கூறினார். பெருமளவு குறைத்தேன். ஆனால், உரை நடையிலும் ஓசை இன்பம் வேண்டுகிற என்னால் எதுகை, மோனையை முற்றிலும் கைவிட முடியவில்லை. கலாமோகினியும், கிராம ஊழியனும் நின்று விட்டதால் வசன கவிதையை வெளியிடும் சாதனம் இல்லாமல் போயிற்று. வசனகவிதையை மட்டும் அல்ல, நாடகத்தையும் வெளியிட ஏடுகள் முன் வரவில்லை. ஆகையால் வசனகவிதை உத்தியை என் சிறு கதைகளில் பயன்படுத்துவது என்று தீர்மானித்து அப்படியே செய்தும் வருகிறேன். புதுக்கவிதை தோன்றிய பிறகும் அத்திசையில் என் நாட்டம் செல்லவில்லை.

இப்போதும் என் இந்தப் படைப்புகளை வசன கவிதைகள் என்றே கூறுவேன்.

நாற்பதுகளின் தொடக்கம் முதல் கிட்டத்தட்ட முடிவுவரை எந்த அரசியல் கட்சியையும் சாராத அழுத்தமான நாத்திகனாக இருந்தேன். கடவுளைச் சேவிப்பவனை விடக் கலைஞனே உயர்ந்தவன் என்று நான் நம்பிய பருவம். அந்த கலைஞன்தான் உலகத்துக்கு அமைதியும் ஆனந்தமும் தர முடியும் என்று அப்போது நான் கருதினேன். இந்த என் கருத்துகளின் அடிநாதத்தை அப்போதைய என் எழுத்துக்களில் கேட்கலாம். நித்தியகன்னி, திலோத்தமை, மற்றும் சில சமூகக் கதைகளை இந்த காலகட்டத்திலேயே எழுதினேன். என் வசன கவிதைகள் யாவுமே நான் நாத்திகனாக எழுதியவை...

- (எம்.வி.யின் 30-4-92 கடிதத்திலிருந்து)
- எம்.வி.யின் மூன்று கவிதைகள் பக்கம் 107லிருந்து பிரசுரமாகியுள்ளன.

இராமன் எத்தனை இராமனடி!

எத்தனை இடத்தில் இராமர் இருக்கிறார்.
பாபர் இருக்கக் கூடாதா ஓரிடத்தில்?
அந்த இராமரோ விட்டுக் கொடுத்தார் அயோத்தியை
இந்த இராமனோ விட்டு வைக்கவில்லை மசூதியை.
அந்த இராமரோ அனுமனை அனுப்பினார்.
இந்த இராமனோ அனுப்பினான் அத்வானியை.
அந்த இராமரோ பாலம் கட்டினார்.
இந்த இராமனோ பாலத்தை இடித்தான்.
அந்த இராமரோ கல்யாண ராமர்.
இந்த இராமனோ கடப்பாறை ராமன்.

—கவுதமன்

அந்நியம்

பிறந்து தொப்புள் கொடியறுத்ததும்
தாயுடனிருந்து
துவங்கியதென் அந்நியத்தனம்.
மண்வீடு கட்டிப் பிரிந்த தோழி.
தோளில் கைபோட்டு கூடவே சுற்றின
நண்பனும் தன்வழி போனான்.
அறிவு விசாலமாகி
ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு நாட்டம்.
தன்னைத் தவிரப் பிறவெல்லாம்
தூசாகத் தோன்றுகிறது.
அதுவும் போய் ஒரு நாளில்
நானே எனக்கு மாற்றானாகித் திரிகிறேன்.
மாறுதலும் வளர்தலும் ஒருவித இழப்பு.
உண்டானது யாவும் அழிகிற நியதி.
ஆனாலும் நிதம் பலது கற்றுத்தந்து
தன் பாட்டுக்கு விலகிப்
போய்க்கொண்டிருக்கிறது வாழ்க்கை.

— ஷாராஜ்

உபதேசம்

இது பசி இது விரதம்
இது வறுமை இது சுரண்டல்
இது காயம் இது இரத்தம்
இது துப்பாக்கி இது மரணம்
இது துயரம் இது கண்ணீர்
இது விரக்தி இது தற்கொலை
இது அவஸ்தை இது போராட்டம்
இது வெளி இது விசும்பு
இது கடல் இது மழை
இது வெளிச்சம் இது பனித்துளி
இது பறவை இது பாட்டு
இது காற்று இது மூச்சு
சலித்து சோர்வுற்று
சாகலாம் போலிருக்கிறதா
மூதேவி
வாழ்க்கை உனக்குப்
புரியப் போவதில்லை
போ.

—ஜாபர்

'ஆகவே' (திருகோணமலை)—டிச' 92 இதழிலிருந்து.

நண்பர்கள் - பிரச்னை
நான் - நீங்கள்

□

ஞானி

புதிய தலைமுறையிலிருந்து (67-68) நான் வெளியேறிய/வெளியேற்றப்பட்ட பிறகு 70களின் தொடக்கத்தில் ஒரு மே தினத்தன்று விசாரணைக்காக சிறப்புப் புலணாய்வுத்துறை என்னையும் என்னைப் போல இன்னும் பலரையும் தன் அலுவலகத்திற்குக் கொண்டு சென்றது. நாங்கள் நக்சலைட்டுகள் என்று இந்த விசாரணை. குடும்ப நிலவரம், மார்க்சியத்திற்கு வந்த பாதை,பாராளுமன்றப்பாதையில் ஏன் உடன்பாடில்லை, மாவோவைப் பற்றி உங்கள் கருத்து என்ன, இப்படி பல கேள்விகள். இவற்றுக்கெல்லாம் உடனுக்குடன் பதில் தர வேண்டும். திருக்குறள் படித்த நீ புரட்சி பற்றி எப்படி பேசலாம், என்றெல்லாம் அதட்டல் தோரணையில் கேள்விகள் அந்தத் தொடக்கக் காலத்தில் தோழர் அப்பு கட்சி அமைப்பின் தலைவர். அவர் சம்மதத்தோடுதான் 'புதிய தலைமுறையில் கட்டுரைகளை வெளியிடுகிறீர்களா' என்று கேள்வி. இல்லை என்பது என் பதில். நான் 'ஆம்' என்று ஒப்புக்கொண்டதாக ஆய்வாளர் ஆங்கிலத்தில் எழுதுகிறார். நான் மறுத்த போது, அப்புறம், தாளை மறைத்து வைத்துக்கொண்டு எழுதுகிறார். திடீரென ஒரு கேள்வி. 'புதிய தலைமுறை' ஆசிரியர் குழுவில் நீங்கள் இருந்தீர்களா? சில கணங்கள் தீவிர சிந்தனை. ஏற்கனவே நண்பர் எஸ். வி. ஆருடன் இப்படி வரக்கூடிய விசாரணையின்போது எப்படி பதில் சொல்வது என்று பேசி முடிவு செய்திருந்தபடி 'ஆம்' என்றேன். காவல்துறைக்கு நன்கு தெரிந்த சில விவரங்களை மறைத்துப் பயனில்லை. இன்னொருவர் பெயர் சொல்லி அவர் இருந்தாரா என்று கேட்கிறார். 'ஆம்' என்றேன். அப்புறம் 'ஆதி'யின் பெயர் வந்தபோது 'ஆம்' என்றேன். 'ஆதி' என்மதிப்புக்குரிய நீண்டகால நண்பர். காவல் துறையின் கண்காணிப்புக்கும் துன்புறுத்தலுக்கும் உள்ளானவர். மரபுக் கவிதை அவர் விருப்பத்திற்கு அருமையாக வளைந்து கொடுக்கும். 'புதிய தலைமுறை'யிலிருந்து நான் வெளியேறிய பிறகு அவரோடு நெருக்கமான உறவு இல்லை. இடையில் என்னென்னவோ நடந்திருக்கின்றன. 'ஆம்' என்று

நான் கூறியவுடன் ஆதி அழைக்கப்பட்டார். அவரை நோக்கி வசைமொழி. ஆசிரியர் குழுவில் இருந்தீரா என்று அவரை நோக்கி கேள்வி. இல்லை என மறுக்கிறார். மீண்டும் சில வசைச் சொற்கள். காவல்துறைக்கு ஏற்கனவே தெரிந்திருக்கக்கூடிய, இப்பொழுது ஒப்புக்கொள்வதால் பாதிப்பு எதுவும் நேராது என்ற நிலையில் இந்தச் செய்தியை இவர் ஏன் மறுக்க வேண்டும்? அப்படியானால் என்னைப் பற்றி அவர் என்ன நினைப்பார் என்ற பதற்றம். மாலையில் வீடுகளுக்கு அனுப்பப் பட்டோம். மறுநாள் ஆதியைச் சந்தித்தேன். என்மீது அவருக்கு பலத்த சந்தேகம். 'என்னைப்பற்றி எப்படி சொல்ல லாம்' என்று கேட்டார். ஒன்றை ஒப்புக்கொண்டால் இன்னும் பலவற்றையும் ஒப்புக்கொள்ள வைப்பார்கள். முற்றாக மறுத்துவிட வேண்டும். இது அவர் அணுகல் முறை. எத் தனையோ கடிதங்கள் உடைக்கப்பட்டுத்தான் வந்து சேர்ந்தன. ஆதியின் அறையிலிருந்தும் 'புதிய தலைமுறை' அலுவலகத்தி லிருந்தும் நிறைய விவரங்கள் எடுத்துச் செல்லப்பட்டன. சிலவற்றை ஒப்புக்கொள்வதன் மூலம் இன்னும் சிலவற்றை மறைக்க முடியும். மறுக்கவும் வேண்டும். இப்படி ஆதி சிந்திக்க வில்லை. அவர் நிலைபாட்டை நான் தவறு என்று சொல்ல மாட்டேன். என்னைப் பொறுத்தவரை எனது அணுகுமுறை யும் தவறு அல்ல. ஆனால் அதன்பிறகு இன்றுவரை ஆதியின் மூலம் என்மீது சொல்லப்படும் அவதூறு, எனக்குள் உறைந் திருக்கிற மனவேதனை இதனோடுதான் நான் வாழவேண்டும். நான் ஒப்புக்கொண்ட செய்தியால் யாருக்கும் தீங்கு நேரவு மில்லை. எதை மறைத்தேன் என்று கேட்டால், சொல்வதற் கில்லை.

○

பூ.சா.கோ. கலைக்கல்லூரி சிந்தனை மன்றத்தில் (6-3-93) மாணவர்களுக்கு சிறுகதை எழுத பயிற்சி கொடுக்கிறார் சுஜாதா. தன் முன்னுரையில் மனுஷ்ய புத்திரனின், 'கால்களின் ஆல்பம்' என்ற கவிதையில் எழுதப்பட்ட சிறுகதையைக் கண் ணீர் ததும்ப எடுத்துரைத்தார் சுஜாதா. மண்டபத்தில் உணர்ச்சிக் கொந்தளிப்புகள். என்னருகில் விஜயா பதிப்பகம் திரு. வேலாயுதம் அமர்ந்திருக்கிறார். அவருக்குள் சில நினைவு கள் அலைமோதுகின்றன. சிறுவயது. பசி வயிற்றைத் தின்று கொண்டிருக்க இன்னொருவர்க்கு அடுக்கில் உணவு எடுத்துச்

செல்ல வேண்டும். பசி. இடைவழியில் அடுக்கைத் திறந்து வைத்து காய்கறியில் கொஞ்சம் என எடுத்துக்கொள்கிறார், எடுத்துக்கொண்டது தெரியாதபடி அளவு குறைச்சலாக எடுத் துக்கொள்கிறார். இப்படி பல நாட்கள் பிற்காலத்தில் வாழ்க்கைச் சக்கரத்தில் ஏற்றத் தாழ்வுகள் இவரிடமிருந்து பெற்ற கடனை சிரமத்திற்கிடையில் அவர் திருப்பித் தருகிறார்.

தன்கைக்கு வந்த தொகையை ஒரு கடிதத்தோடு வேலாயுதம் அவர்கள் அனுப்பி வைக்கிறார். 'உங்கள் அடுக்கிலிருந்து உணவை எடுத்து உண்டேன். நான் வளர்ந்து ஆளாகியதில் உங்களுக்கு பங்கு உண்டு. நான் செய்த குற்றம் என் நெஞ்சை இன்னும் துன்புறுத்துகிறது. இப்பொழுதாவது ஒப்புக் கொண்டு மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். உங்கள் தொகை யை நான் திருப்பி அனுப்புகிறேன்.' இதைச் சொல்லும் பொழுது திரு.வேலாயுதம் மனம் பொருமுகிறார்.

வாழ்வில் இப்படி அனுபவம் பெற்றவர்க்குத்தான் இலக்கி யம் தெரியும். மனிதனைத் தெரியும். படைப்பின் தூண்டுதல் தெரியும் என்கிறார். இவருக்குள் நெடுங்காலமாய்க் கிடந்தது இந்த அருமையான சிறுகதை.

○

ஒரு பத்தாண்டுகளுக்கு முன் எனக்கு அறிமுகமானவர் சகோதரி லயோலா அவர்கள். இருதய அறுவைச் சிகிச்சைக்குப் பின் மருத்துவமனையில் அவரைப் பார்த்தேன். இப்போது ஓராண்டுக்கு இடையில் நெருக்கமாக இருந்து அவரைப்பற்றித் தெரிந்து கொள்கிறபோது, எனக்கு ஏற்படும் வியப்புணர்வுக்கு அளவில்லை. அன்பு என்பதை அவரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும். தேவையறிந்து ஓசையில்லாமல் உதவி செய்கிறார். அறுவை சிகிச்சைக்குப்பின் இன்னும் ஒரு பெரிய நோய். ஒரு நாளைக்கு எத்தனை மாத்திரைகள் உட்கொள்வது என்ற சலிப்பு. கல்லூரி வேலை வேதனையை மறக்க மேலும் சில பணிகள். 84-ல் முனைவர் பட்டத்திற்காக அவர் எழுதிய ஆய்வேட்டின் சில இயல்களை அண்மையில் படித்தேன். 'விவிலியத்தில் மனித நேயம்' என்பது அவரது ஆய்வு. மார்க்சி யம், மனித நேயம், புரட்சி என்பது பல காலம் படித்து, பல ரோடு உறவு கொண்டு பகைத்து, கசந்து, மார்க்சியத்தின் ஆழம் தெரிந்திருக்கிறதாகக் கருதிக் கொண்டிருக்கும் எனக்குள் பெரும் வியப்பு. ஏசு ஒரு மனிதர். புரட்சிக்காரர். தீர்க்கதரிசி

கள் புரட்சியை வேண்டியவர்கள். இப்படி விரிந்து செல்லு கிறது அவரது ஆய்வு. தன் இருப்பிடத்தில் தான் இயங்கும் தளங்களில் இவர் எப்பொழுதும் ஒரு கலகக்காரர். மத எல்லைக்குள்ளிருந்து வெளிப்படுவது இவரது கலகக்குரல் இவரது ஆய்வேடு அச்சில் வரவேண்டும்.

○

வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை. வ.உ.சி பூங்காவில் களம் நண்பர்கள் சந்தித்துக் கொள்கிறோம். இரண்டொரு முறை எங்களுக்கு நெருக்கமாக வந்து அப்புறம் எங்கள் விவா தங்களிலிருந்து விலகி சற்று தொலைவில் அமர்ந்து எங்களைக் கவனித்தவர், திரு. வை.கி.துறையன் அவர்கள். இப்பொழுது எங்களோடு நெருக்கமாக இருந்து உறவாடுகிறார். இவருக்கு வயது 69-க்குமேல். நிறைய புத்தகங்கள் வாங்குகிறார். படிக் கிறார். தேவைப்படுகிற நண்பர்களுக்குக் கொடுத்துவிடுகிறார். மூளைச்சிக்கலை உருவாக்கும் நூல்களை இவர் படிக்க விரும்புவதில்லை. ஆன்மீகத்தில் இவருக்கு அக்கறை அதிகம். ஆனால் தியானத்திற்குள் தன்னைச் சிறைப் பிடித்துக் கொள்கிற ஆன்மீகம் இருவருக்கு வேண்டாம். சோதிடர் களிடம் இவர் செல்வதில்லை. அதிசயங்கள் செய்வதாகச் சொல்லும் சன்னியாசிகளிடம் இவர்க்கு மரியாதை இல்லை கோவைக்கு அருகில் ஒரு கிராமத்தில் வளமாக வாழ்ந்தவர். இளம்வயதில் திமுக தலைவர்களை தன் ஊருக்கு அழைத்துச் சென்று பேச வைத்திருக்கிறார். ஒரு முன்னோடி விவசாயி என்ற முறையில் நவீன உத்திகளைப் பயன்படுத்தி அதன் பலன் களைப் பார்த்திருக்கிறார், அதிகாரிகளிடம் தன் ஊர் மக்களை அழைத்துச் சென்று நியாயமான உதவிகளைப் பெற்றுத் தந்தி கிறார். தன் நிலத்தில் ஒரு பகுதியை ஆசிரியர் வீடுகட்டிக் கொள்ள இலவசமாகத்தந்தார். இனி தேவையில்லை என்ற நிலை வந்தவுடன் தன்நிலத்தை விற்று விட்டு கோவையில் குடியேறியிருக்கிற இவர் 40/50 ஆண்டுகளுக்கு முற்பட்ட தன் கிராமத்து/தன் சமூகத்தின் கதையை தன்வாழ்வியல் அனுபவங் களை ஒரு ராமகிருஷ்ணர் நம்முன் அமர்ந்து கதை சொல்வது போல சொல்கிறார். கற்பு என்பது புண்ணாக்கு என்று ஒரு எழுத்தாளர் பதில் தந்தபோது, 'புண்ணாக்கைப்பற்றி ஒரு விவசாயி என்ற முறையில் எனக்குத் தெரியும். உனக்கு என்ன தெரியும்' என்று எழுதியதைச் சொல்கிறார். ஒருநாள் 250 நூல் களை எடுத்துவந்து என்னிடம் தந்து 'நண்பர்களுக்குக் கொடுங்

கள். அவர்கள் படிக்கட்டும்' என்று நூல்களைக் கொடுத்து விட்டுச் சென்றார். சமூக நலத்தை நெஞ்சில் நிறுத்தி வாழ்ந்த/வாழ்கின்ற பெரியவர். இவரது கதையை நாடாக்களில் பதிவு செய்தேன். அடுத்த சில மாதங்களில் இவரது கதை அச்சில் வெளிவரும். நம் கிராமங்களின் கதைகளை நாம் பெரியவர்களின் கதைகளை நம் கால வரலாற்றை நாம் பதிவு செய்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லத்தான் வேண்டும். இப்படிப் பதிவு செய்யவேண்டிய கதைகள் ஒரு கோடி தேறலாம். நாம் செய்யத்தான் வேண்டும்.

ஈரோடு **21-3-93**இல் பார்வை சார்பில் முற்பகலில் நண்பர், வசந்தகுமாரின் 'பாரதிதாசன்-வரலாற்றுத்தேவை' நூல் வெளியீடு. பிற்பகலில் நண்பர் தேவிபாரதியின் 'பலி' சிறுகதைத் தொகுப்பு வெளியீடு. இடைநேரத்தில் பேராசிரியர் எம். கே. சுப்பிரமணியம் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தோம் கல்லூரி முதல்வராக இருந்து ஓய்வு பெற்றவர். பெரியாரைத் தன் ஒரே தலைவராக இன்றும் தன் நெஞ்சில் தாங்கியிருப்பவர் பெரியார் நினைவில் தோய்ந்து சில நிகழ்ச்சிகளைக் கூறினார். இந்திராகாந்தி அரசில் அமைச்சராக இருந்தவர் டாக்டர் சந்திரசேகர், மக்கள் தொகை ஆய்வில் உலகப் புகழ் பெற்றவர். பெரியாரைப் பார்க்க தன் 'இம்பாலா' காரில் சென்றாராம். அவரது சின்ன ஆசை.

சந்திரசேகரின் உறவினர்களை பெரியார் நினைவுகூர்ந்தார். இந்த முதுமையிலும் உடல்நலத்தோடு அவர் இருப்பது எப்படி என்று கேட்ட சந்திரசேகருக்கு பெரியார் தந்த பதில்: ''சின்ன வயசிலே சேத்துல கிடந்த நெல்லிக்காய்களைப் பொறுக்கித் தின்றிருக்கிறேன்.'' ''ராஜாஜி கூறிய அறிவுரைப் படியா மணியம்மையை பெரியார் மணந்து கொண்டார்?'' என்று கேட்டால், பேராசிரியர் சுப்பிரமணியம் சொல்கிறார்: ''ராஜாஜி வேண்டாம் என்றுதான் கூறினார், பெரியார் ஈரோடு வந்தபோதும் பார்த்திருக்கிறோம். உறவினர்கள் அவருக்கு உதவியாக இல்லை. உடனிருந்து அவருக்கு சில பணிவிடைகள் செய்யவேண்டும். மணியம்மைதான் உடனிருந்து ஊழியம் செய்தார். தொண்டர்கள் இழிவாகப் பேசினார்கள். இந்நிலையில் பெரியார் திருமணம் என்ற பெயரில் இந்த ஏற்பாடு செய்து கொண்டார்.'' மணியம்மையின் அர்ப்பணிப்பை மனம் நெகிழ்ந்து போராசிரியர் சொல்லுகிறார். மணியம்மைக்குத் தான் இந்த அர்ப்பணிப்பு இருந்ததென்று சொல்லுகிறார்.

கேட்கும்போது நம் மனமும் சேர்ந்து உருகுகிறது. ராஜாஜியை தான் திட்டலாம். மற்றவர் திட்டுவதைப் பெரியாரால் பொறுக்க முடியாது. தன் நண்பரிடம் பெரியாருக்கு அவ்வளவு மரியாதை. டி.எஸ்.எஸ். ராஜன் தனக்கு எதிராக இயக்கம் தொடங்கியபோது ஏன் அவரை நீங்கள் தாக்கவில்லை என்று கேட்டபோது பெரியார் கூறினாராம்: ''தாட்சண்யம்''. 52ல் அரசியல் சட்டத்தை எரித்து சிறை சென்ற திராவிடத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த தலித் மக்கள் பிறகு விடுதலையாகி வந்து பார்த்தபொழுது அவர்களின் ஊரில் மனைவி மக்கள் இல்லை. வறுமைக் கொடுமை காரணமாக இடம் பெயர்ந்து போய்விட்டார்கள். தொழிற்சங்கம் அழிந்தது என்று பேராசிரியர் கூறியபோது நெஞ்சம் விம்மத்தான் செய்தது. ○

தி.மு.க.—7 ஆவது மாநில மாநாடு. தமிழர் கூட்டம்—வெள்ளம்போல. கரையிலேனும் அமர்ந்திருக்க ஆவல். இரண்டு நாட்கள். அறிவனும் நானும் 10 மணிநேரம் அமர்ந்திருந்தோம். இந்திக்கு இதுவே இறுதி எதிர்ப்புப் போராக இருக்கவேண்டும். தலைவர் ஆணையிட வேண்டும். இப்படி தொடர்ந்து வேண்டுகோள். தலைமுறை மாறிவிட்டது. அண்ணாவின் 'ஆர்ய மாயை' படியுங்கள் என்று வற்புறுத்துகிறார் அப்துல்ரகுமான். சிங்காரவேலர், தியாகராயர் என்று முன்னவர்களை அறிமுகப் படுத்தவேண்டியிருக்கிறது. வை. கோ. பெயர் சொல்லுகிற பொழுதெல்லாம் உற்சாகமான கைதட்டல். தலைமைக்கு இது எதிர்ப்பா, எச்சரிக்கையா. இடைநேரத்தில் தலைவர் துதிப் பாடல்கள். திரைப்பட, குறிப்பாக, இந்தித் திரைப்பட ராகங்கள். நிறையவே கலைக்குழுக்கள் இருக்கின்றன. உரையாற்றக் கிடைத்த வாய்ப்புக்காக, தலைவர் தாளில் வணக்கங்கள். தம் மாவட்டத்திற்கே தலைவர் உரிமையுடையவர் என்ற புகழாரங்கள். இடையில் சில கதைகள். அழுகல் வியாபாரியென பெரியாரை அழகிரி கோபித்த கதை. காந்தி இந்தியில் எழுதிய கடிதத்திற்கு ராஜாஜி தமிழில் பதில் எழுதிய கதை. இறுதிப் போர் என்னவாக இருக்கும் என்ற பேரார்வம். மாநாட்டுச் செலவு 55 லட்சம். வசூல் 86 லட்சம். இடப்பட்ட தீ பற்றி எத்தனை அர்த்தங்களில் பேச்சு. இறுதியாக தலைவர் உரை. ஏப்ரல் 20ல் ரயில் நிறுத்தம். இந்திப் பலகை அழிப்பு—எப்பொழுதும் எங்கும். 75 மாநில மாநாட்டு முடிவில் ஏற்பட்ட அதே சோர்வு. ''அதிகாரத்தைப் பற்றிக்கொள்ளும் அரசியல் நாடகத்தில் அட்டைக் கத்தியோடு இன்னும் ஒரு போர். இந்த நாடகத்தில் இறுதிப் போர் என எதுவும் இல்லை.'' ○

சோமாசி

□

இரா. நடராசன்

''நகராட்சி வண்டியில்
அச்சு முறியும் ஒலியில் கசங்கி
வாயைக் கட்டிய துணியை மென்று
வளைந்து வளைந்து குறுகி
ஒரு தொலைதூர இடுகாட்டிற்கு
பாதை குறித்த பாதிப்பின்றி
அனாதைப் பிணத்தின்
அந்தி ஊர்வலம்,
அழுகிப்போன வாடை சகிதம்
ஸ்தம்பிக்கும் என் வாழ்க்கை.''

இந்தக் கவிதையைக் கிட்டதட்ட மூன்றாண்டுகளுக்குமுன் தெலுங்கில் எழுதினாள் சோமாசி. இன்று காலையிலிருந்து இத்தோடு இருபதாவது முறையாக உனது உதடுகள் சொல்லொண்ணாச் சோகத்தோடு இந்த கவிதையை உச்சரிக்கின்றன. பக்கத்தில் இன்றைய செய்தித்தாள். கையில் கடிதம். விழிகளில் கேள்விக்குறி. நீண்ட அமைதிக்குப் பிறகு உனது நெஞ்சைத் துக்கம் பாறையாகி அழுத்துகிறது. ஓ, உன் சோமாசி செத்துப் போய் விட்டாள்.

ஒரு பொட்டை நாய்க்காக, காமவெறியோடு, ஒன்றையொன்று அடித்துக்கொள்ளும் நான்கு சொறி நாய்கள். கையில் கற்களோடு அவைகளைத் துரத்தும் கிழிந்த கால்சட்டைச் சிறுவன். சுட்ட சோளத்தை வாயில் போட்டு ஓசையோடு குதப்பும் கல்லூரிக் காளையர். நீண்ட நீண்ட பழைய புத்தகக் கடை குவியல்களில் தங்கள் ஆஸ்தான எழுத்தாளர்களைத் தேடித் திரியும் ஒரு கூட்டம். ஞாயிற்றுக்கிழமை சோம்பலின்றிச் சுறுசுறுப்பாய்ப் புத்தக விற்பனை நடக்கும் ஹைதராபாத்தின் ''அபிட்ஸ்'' பகுதியில் நான்கு ஆண்டுகளுக்கு முன் ஒரு பிளாட்பார புத்தகக் கடையில் சோமாசிக்கும் உனக்கும் பரிட்சியம் ஏற்பட்டது.

சுற்றிலும் பலர் ஹெர்ரால்டு ராபின்ஸ்க்கும், ஜேம்ஸ் சேஸிக்கும் 'நிக்கார்டர்க்'கும் அலைமோதியபோது, அவர்களின் நடுவே,

டால்ஸ்டாயின் 'போரும் அமைதியும்' புத்தகத்தைக் கடைக்காரச் சிறுவனிடம் கேட்டுக்கொண்டிருந்தாள் சோமாசி. அவள் சப்தம் போட்டு அந்த நூலின் பெயரை இரண்டாவது முறை சொன்ன போதுதான் உனக்கு ''எதையெடுத்தாலும் 10 ரூபா"வில் அதைப் பார்த்த நியாபகம் வந்தது. உன்னிடமிருந்து விஷயத்தை வாங்கியவள் நன்றிகூடச் சொல்லத் தோன்றாமல் புத்தகத்திற்காக விரைந்தாள்.

'ஈநாடு' பத்திரிகை அலுவலகத்தின் வாசலில், அடுத்த நாள் அவளை நீ மீண்டும் சந்திக்க நேர்ந்தது. ஆட்டோ ஓட்டியோடு ஒரு ரூபாய்க்காக நீண்ட சண்டை. நீ கவனிக்காதது போல் நடக்கவே, ஒரு வழியாய் எட்டணாவை அவன் கையில் திணித்து விட்டு, பின்னால் ஓடி வந்து உன் முதுகில் தட்டி ''நேற்று மறந்தே போய்விட்டேன். புத்தகம் காட்டியதற்கு நன்றி. அந்த நூலை நான் மூன்று மாதமாய்த் தேடினேனாக்கும்; நீங்கள் படித்திருக் கிறீர்களோ'' என்று பேச ஆரம்பித்தாள்:

உன்னைவிட இரண்டு வயதுக்கு மூத்தவள் சோமாசி. ஆந்திர 'கடப்பா'வின் அருகில் தென்பகுதி கிராமமொன்றில் அவளுடைய தாத்தா (அப்பாவை பெற்றவர்) சிறு நிலச்சுவாந்தார். அப்பா ராணுவத்தில் மேஜர். சோமாசியின் பிறந்த கதை மிகவும் வேதனையானது. தாத்தா இறந்துபோன இரண்டு மணி நேரத் தில், இவளுடைய நோயாளித் தாய் இவளைப் பெற்றுத் தந்து விட்டுச் செத்துப் போனாள். ஈமக்கிரியைகளுக்கு மேஜர் வருவ தற்கே பதினைந்து நாட்களாயிற்று (அப்போது சீனப்போர் முடிந் திருந்த தருணம்). எல்லாம் முடிந்து இராணுவத்திற்குத் திரும்பும் போது தனது அன்பு மகளை விதவைத் தாயிடத்தில் விட்டுச் சென்றார் மேஜர். பாட்டியும் பேத்தியைச் செல்லமாய் வளர்த்தாள்.

பிறகு இந்திய பாகிஸ்தான் யுத்தத்தில் மேஜர் வீர மரணம் எய்திய செய்தியும், மெடலும் வந்தபோது சோமாசி பன்னிரண்டு வயதுச் சிறுமி. அப்போது முதல் பாட்டிதான் அவளுக்கு எல்லாமே.

தனிமையைச் சிறு வயதிலிருந்தே விருப்பினாள் சோமாசி. நீ மிகவும் ஒட்டிப் பழகிய நாட்களில்கூட, பேசிக்கொண்டேயிருக்கும் போது நடுவில் திடீரென்று எதையாவது நினைத்துக் கொண்டு மௌனமாகிவிடுவாள். அந்த நேரத்தில் அவளைப் பார்க்கையில் வினோதமாக இருக்கும். கண் கொட்டாமல் தூரத்துப் பொருள் எதையாவது முறைத்துக்கொண்டிருப்பாள். என்னவென்று கேட் டால் ஒன்றுமில்லையென்று அவசரமாய்ச் சொல்லிவிட்டுப் பெரிதாய் எதற்காகவோ சிரிப்பாள்,

எட்டு வயதிலிருந்தே தனியாக வளர்ந்து இருபத்தைந்து வயதில் வாழ்வை முடித்துக்கொண்ட மாபெரும் கவிஞன் ஜான் கீட்ஸ்ஸை மிகவும் விரும்பிப் படித்தாள் சோமாசி. ஒருமுறை அந்தக் கவிஞனின் என்டிமியன் கவிதையை விடாமல் பதினொரு முறை திருப்பித் திருப்பிப் படித்ததாக உன்னிடம் சொன்னபோது அதிர்ந்து போனாய்.

தனது கிராமத்தில் பள்ளிக் கல்வி முடிந்ததும் பாட்டியைவிட்டுப் பிரிந்து ஹைதராபாத் நோக்கிக் கல்லூரி புகுந்தாள். அவள் கல்லூரி யில் படித்ததென்னவோ இயற்பியல்; ஆனால் அவளுக்கு அதில் நாட்டம் அதிகமில்லை. ஓம்ஸ் விதியை மனப்பாடம் செய்து, கலீலியோவை ஒப்புவித்து, போர் அணு அமைப்பை பரிட்சையில் எழுதி, பிராக்டிகல்ஸ் செய்து—பட்டப்படிப்பை முடித்த கையோடு விஞ்ஞானத்தைத் தூக்கியெறிந்துவிட்டாள். அதன் பிறகு இலக் கியம்தான். மில்டன்னிலிருந்து, கிப்லிங் வரை எல்லா இலக்கிய வாதிகளைப் பற்றியும் உன்னோடு பேசியிருக்கிறாள் சோமாசி. டி. எஸ். இலியட், ஆல்பர் காம்யூ, பாப்லோநெருடா முதல் உனது ஊர் சுந்தர ராமசாமி வரை தெரிந்து வைத்திருந்தாள்.

''தாகூரை கவிஞனென்று ஏற்க முடியாது" என்பதே அவளது தீர்மானம். தாகூர் ஒரு தத்துவஞானி மட்டும்தான் என்று சண்டை பிடிப்பாள். ''சாதனாவை'' கையில் வைத்துக்கொண்டு நீண்ட, நீண்ட விவாதங்கள் செய்வாள். தாகூரின் கவிதைகளை ஏனோ அவள் அதிகம் விரும்பவில்லை.

இன்னொன்று, சோமாசிக்குக் கடவுள் பக்தியே கிடையாது. ஒருவருடைய சாதி மத விஷயங்களைத் தெரிந்துகொள்ளக்கூட விரும்பியதில்லை. அவள் சுத்தமான நாத்திகவாதியாயிருந்தாள். இந்த விஷயத்தில் அவளோடு வாதிடுவது மிகவும் கடினமான ஒன்று. ''அமெரிக்கா இந்தியாவின்மீது ஏவுகணை விட்டால், அதை உங்கள் சங்கராச்சாரியால் தடுக்க முடியுமோ?'' என்றெல் லாம் சிக்கலான கேள்விகளைக் கேட்டு நம்மைத் திக்குமுக்காட வைத்துவிடுவாள். பிறகு ''என்னை நவீன விஞ்ஞான ஆபத்துகளி லிருந்து காப்பாற்றாத மதம் எனக்கெதற்கு?" என்று ஒதுங்கிவிடு வாள். ஒருமுறை நீ வேலை பார்க்கும் வங்கியின் காஷியர் ஒருவர் அவளோடு ஆத்திகத்திற்காக வாதாடப் போய் தானே ஒரு நாத்திக வாதியாய்த் திரும்பி வந்தார்; நாத்திகத்தை வலியுறுத்தி நிறையக் கவிதை புனைந்திருக்கிறாள் சோமாசி. நீயும் படித்திருக்கிறாய்.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் மேல்படிப்பு எதற்கும் முயற்சி செய்யவில்லை அவள். ஆனால், தனியாக நிறையப் படிப்பாள்.

ஹைதராபாத் ஆஸ்டல் அறையில் தனக்கென்று ஒரு சிறு நூலகமே வைத்திருந்தாள். உன்னைக் கூட்டிக்கொண்டு போய்க் காட்டியும் இருக்கிறாள். ''இத்தன புக்கா'' என நீ அதிர்ச்சியடைந்தாய்.

பாட்டி உயிரோடு இருந்த வரையில் பேத்தியினிடத்தில் பல முறை திருமணப் பேச்சைத் துவங்கியிருக்கிறாள். எதற்கும் மசிய வில்லை சோமாசி. அதற்குக் காரணமிருந்தது. சிறு வயதிலிருந்தே பெண் விடுதலையில் அவளுக்குத் தாகம் அதிகமிருந்தது. ஒரு முறை பரிட்சைத் தாளில் தனது பெயருக்கு முன்னால் தாயின் இனிஷியலையும் சேர்த்துப் போட்டுவிட்டு ஆசிரியரின் விமரிசனத் திற்கு ஆளானாள். பிறகொருமுறை, மாதவிடாய் காலத்தில் தீண்டத்தகாதவளாய்த் தன்னை நடத்தியதற்காகப் பாட்டியோடு பெரிய சண்டை போட்டுக்கொண்டு பிடிவாதமாய்க் கிராமத்தை விட்டு வந்துவிட்டாள். அப்புறம் பாட்டி, கட்டுக்கோப்புகளைத் தளர்த்திய பிறகே ஊர் திரும்பினாள்.

திருமணத்தைச் சோமாசி மறுத்ததற்கு இன்னொரு காரண மும் இருந்தது. நமது திருமண முறையை அவள் வெறுத்தாள். பெண் ஆணைவிட வயதில் குறைந்திருக்க வேண்டும் என்கிற முதல் படியே தவறு என்று வாதிடுவாள். ஆனால் தனக்கென்று ஒரு கூட்டத்தை வைத்துக்கொண்டு உண்ணாவிரதமிருந்து, ஊர்வலம் செல்லவில்லை. தன் மட்டில் சுதந்திரமாக வாழ வேண்டுமேன்று விரும்பினாள். அவ்வளவே. உனக்கு அந்த அளவுகூடத் தைரிய மில்லை. கல்யாணம் செய்யாமல் அவளோடு வாழ நீ மறுதத்தாய்.

கிட்டத்தட்ட அந்த சமயத்தில்தான் உனக்குத் திருமணம் நடந் தது. எதனாலென்று நினைவில்லை, உனது திருமணத்திற்குச் சோமாசியால் வர முடியாமல் போனது. ஆனால் சில நாட் களிலேயே உன் மனைவிக்கு அவள் சிறந்த தோழியாக முயன் றாள். உன் மனைவியால் அவளைப் புரிந்துக்கொள்ள முடிய வில்லை. உங்கள் நட்பின் மேல்கூட உன் மனைவிக்கு அவ்வப் போது சந்தேகம் வருவதுண்டு. அதனால் நீ சோமாசியிடமிருந்து பொறுக்கித்தனமாய் ஓடிவிட முடிவெடுத்தாய்.

நீ மிகவும் கடினப்பட்டு ஹைதராபாத்திலிருந்து சென்னைக்கு மாற்றல் வாங்கிக்கொண்டு வந்தாய். (உனது புது மனைவிக்குத் தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் மூன்றையும் கலந்து பேசத் தெரி யாது!) பிறகு காலம் உருண்டோடியது. கடிதமெழுதும் பழக்கமெல் லாம் சோமாசிக்கு இல்லை. நீயாவது எழுதி இருக்கலாம். சரி யான பெண்டாட்டிதாசன் ஆகிப்போயிருந்தாய். பொட்டைமாறிப் பயல்.

நீண்ட இடைவெளிக்குப் பின், இரண்டாண்டு கழித்து ஒரு அலுவலக நிமித்தமாய் ஹைதராபாத் போன போது ''லக்டி காபூல்'' பகுதியில் மீண்டும் அவளைச் சந்தித்தாய். அதே பழைய சோமாசி. தனது தூரத்து அத்தை ஒருத்தியோடு செகன்டிராபாத்தில் வசித்துவருவதாகச் சொன்னாள். கையில் ஜே.கிருஷ்ணமூர்த்தியின் ''முதலும் கடைசியுமான சுதந்திரம்''. ''ஜே.கே. சமீபத்திய மாபெரும் சிந்தனையாளன்'' என்று புகழ்ந்தாள். வாழ்க்கையைப் பற்றித் தானெழுதியிருந்த கவிதைகளைப் படிக்கக் கொடுத்தாள். ஜே.கே.வின் பாதிப்பு எதிலுமிருந்தது. அப்பொழுதும் நீ 'அவனுடைய நீ' தான் என உணரவில்லை.

'அயோத்தியா' ஓட்டலில் மதியச்சாப்பாடு. சோமாசி வழக்கமான தனது நெகிழ வைக்கும் மௌனத்திற்குப் பிறகு திடீரென்று ''அழகு என்றால் என்ன? சொல்லு பார்ப்போம்'' என்றாள். நீ திகைப்பிலிருந்து வெளிவந்து அவளுக்குப் பிடித்தமான ஜான்கீட்ஸ்கிலிருந்தே ''உண்மைதான் அழகு, அழகே உண்மையானது'' என்றாய். கடகடவென்று நீண்ட சிரிப்புச் சிரித்தாள். பிறகு ''இப்படித்தான் மனிதன் இரண்டாம்பட்சம் ஆகிவிட்டான். தனது அறிவுக்குப் பட்டதைச் சட்டென்று சொல்லாது யாரோ சொல்லிய பழைய குப்பைகளைக் கிளறியே தெரிந்து கொள்ள விரும்புகிறான். புரிகிறதோ உனக்கு?'' என்றாள். நீ பேந்தப் பேந்த முழித்தாய். மாறிட்டாள் எனப்பட்டது உனக்கு.

ஏனோ அவளைப் பார்க்க வினோதமாய் இருந்தது. ஒரு சொல்ல முடியாத இயலாமையில் அவள் இருப்பது போலிருந்தது. கொஞ்சம் நேரம் போன பிறகு ''எனக்கு எல்லாரையும் வெறுக்க வேண்டும் போலிருக்கிறது'' என்றபடி ''எல்லாரையும்... எல்லாரையும்...'' என்று இழுத்தாள். கழுத்தில் அந்த சதைப்பிடிப்புக்கும் வெளியே நரம்பு முறுக்கேறியது அவளுக்கு, ''பாருடா நண்பா, ஒருவன் இஞ்ஜினியராக விரும்புகிறான், ஒருவன் ஆசிரியனாக விரும்புகிறான், ஒருவன் டாக்டராக வாழ விரும்புகிறான். யாருமே மனிதனாக வாழ விரும்பவில்லை...'' என்று பற்களைக்கடித்தாள். 'என்ன ஆனது இவளுக்கு' என்று மனசுக்குள் சின்னதாய் வலிக்கவே மெல்ல அவள் இடது கையைப் பற்றிக்கொண்டாய். பிறகு வெகுநேரம் கையை விடவில்லை. ''எத்தனை வேஷம் போடாறாங்க பாரு... நண்பா'' என்றாள்.

''கல்யாணம் செய்து கொள்ளணுமாம். அதுதான் வாழ்க்கையாம்: பெரிய்ய சொல்ல வந்து விட்டார்கள்... 'பெண்ணெண்றால் இப்படித்தான் வாழ வேண்டும் என்றிருக்கிறது' என்று அத்தை

மிரட்டுறாங்க நண்பா..." என்று பொரிந்தாள். உனக்கு விசயம் விளங்கிவிட்டது. ''கல்யாணம் இல்லாமல் வாழறதுகூடத் தப்பா... பாரேன் ஒருத்தர் பார்வைகூடச் சினேகமா இல்லயே... வேற ஏதோ தொழில் பண்றவளைப் பார்க்கற மாதிரி..." என்று தொடர்ந்தாள்: ''பேசாம அப்படிப் பார்க்கிறவங்களைக் கொலை பண்ணிடவா'' என்று கேட்டுவிட்டு வழக்கத்திற்கு மாறாகச் சத்தமில்லாமல் குலுங்கிச் சிரித்தாள்... இல்லை இதுதான் அவள் அழுகிற ஸ்டைல் என்பது உனக்குத் தெரியும்.

அன்றைக்கு மழை பெய்தது. அவள் கொட்டும் மழைக்குப் பயந்து ஒதுங்கிடவில்லை. நீ ஒதுங்கினாய். ''கண்டோம் கண்டோம்... இந்தக் காலத்தின் கூத்தினைக் கண் முன்பு கண்டோம்'' என ஆனந்தக் கூத்தாடினாள். அசட்டு நாகரிகத்துக்குப் பணியாத அவளது உண்மையான சொரூபம் உனக்கு அளவற்ற அச்சத்தை ஏற்படுத்தியது. ஓடிப்போய்விட முயன்றாய். கையைப் பற்றிக் கொண்டாள். மற்றவர்கள் முன் நீ கூச்சப்பட்டாய்; எல்லாரும் உன்னையே பார்ப்பதுபோல உணர்ந்தாய். அசடுமாதிரி சிரித்தாய். யார் யாரையோ பார்த்து 'சாரி' என வழிந்து கொண்டிருந்தாய்.

கஷ்டப்பட்டு உனது தங்கும் அறைக்கு அவளை அழைத்து வந்தாய். ''இந்த துணிய மாத்திடவா நண்பா'' என்றாள். ஈரம் சொட்டியது, சினிமாவில் நடப்பது போல உணர்ந்தாய். அவளை ஏதாவது செய்துவிடத் துடித்தாய். அவளோ ''உன் ஆண்'' தனத்தை மதிப்பவளாக தெரியவில்லை. அதுபற்றிய அக்கறையற்றவளாக இருந்து உன்னைப் பழிவாங்கினாள். சிறு சப்தங்கள் கூட உன்னைக் கிழித்துப்போட்டன. நீயோ உனது ஆண்மையின் மீதே குறியாக இருக்க முயன்றாய். அவளது தன்னிரக்க நிலையை உனக்கு சாதகமாக்க முயன்றாய். சரியான சாக்கடை நீ.

'எப்படி உன் கூடச் சண்டை போடாது அந்தப் பொம்பள குடும்பம் நடத்துது?' எனக்கேட்டு வைத்து உன்னை உனக்கு நியாபகப்படுத்தினாள். உன் பெண்டாட்டி மீது ரொம்பவும் இரக்கப்பட்டாள். சுதந்திரமற்ற ஜடமாய் உன் மனைவி இருப்பதை நினைவூட்டி உன் கழுத்தறுத்தாள். சோமாசியோடு உனது மனைவியை ஒப்பிடமுடியாது திணறிப் போனாய் நீ.

''உன் மனைவி ஜன்னல் வழியேவாவது தெருவைப்பார்ப்பது உண்டா... வானத்தை, தோட்டத்தைப் பார்ப்பது உண்டா... உன் துணி துவைக்கும் கல்லாகத் தன்னை உணர்ந்தது உண்டா..." எனக்கேட்டு உனது இருப்பை ஓங்கி அறைந்தாள். ''குடும்பம்

என்பது ஆணுக்கு அவ்வப்போது ஒதுங்கும் கழிவறை. பெண்ணுக்கு அது ஒரு பிணவறைதானே'' என்றாள்.

உன் கல்யாணம் நிச்சயமான போது உன் மடியில் தலைவைத்துக்கொண்டு சோமாசி குலுங்கிக்குலுங்கி அழுத நாளை நீ நினைத்துக் கொள்கிறாய். உனக்கு உடம்பு சிலிர்க்க வில்லையா. ''வேண்டா... நண்பா...ப்ளீஸ், மேரேஜ் பண்ணிக்காத இருந்திடு'' என அவள் குழந்தை மாதிரியல்லவா அழுதாள். உனக்கோ சற்றும் இரக்கம் இல்லாது போயிற்று. சரியான தொடைநடுங்கி: அப்பா அம்மாவுக்கும், தாத்தாவுக்கும் பயந்து வந்தவன், இப்போது பெண்டாட்டிக்குப் பயந்தாரி.

''யாரோ வீடியோவில் வரவேண்டும் என்பதற்காக... நான் கல்யாணம் செய்து கொள்ள முடியாதுப்பா...'' என்கிறாள் சோமாசி. இத்தனைக்குப் பிறகும் நீ மௌனம் அனுஷ்டிக்கிறாய். ''யாரோ ஒருவன். திடீரென உன் மனைவிக்குப் புருஷன் ஆகிவிட்டாய். திடீர் நொடியில் அவள் உன்னை விரும்பவேண்டும். பாசம் ரெடிமேட் பாசமாய் இருக்கிறது உங்களுக்கு. யாரோ ஒருத்தனின் உள்ளாடைகளைத் துவைத்துப்போட உன் மனைவி எத்தனை பெரிய இளிச்சவாயாகிவிட்டாள். பார்த்தாயா?" எனக்கேட்டு சோமாசி சிரித்த சிரிப்பு உனது காலை வாரிவிட்டுக் கழுத்தை நெரிப்பது உனக்கும் தெரிகிறது.

''போலித்தனமாகப் புணர்ந்து, பிறத்தியாருக்காகக் குழந்தை பெத்துக் கொண்டு, எதற்காக எனக்கேட்காது பண்டிகை சமையல் செய்து, வாழ்நாளில் ஒரே ஒரு முறை கூட உண்மையாகச் சிரிக்காத ஒரு பிழைப்பு எதற்கு நண்பா" என்று புலம்பிய சோமாசி உன்னிடம் பேசியதாக நீ உணரவில்லை. அவள் யாரிடமோ பேசுகிறாள். முகமில்லாதவனிடம். உனக்கு அங்கு என்ன வேலை என்பது போலக் கிளம்புகிறாய்.

உன்னை வழியனுப்ப, சார்மினார் எக்ஸ்பிரசுக்கு மாலையில் சோமாசி வந்தது நினைவிருக்கிறதா? ரயில் நகர்ந்த பிறகும் அவள் இறங்கவில்லை. கூடவே வந்துவிடுவாளென நீ பயத்தில் வியர்த்தாய். இறங்கியபடியே காற்றில் முத்தம் பறக்க விட்டாள். 'இனி மேல் ஹைதராபாத் போகவே மாட்டேன்' என்று உன் மனைவிக்கு நீ சத்தியம் செய்து கொடுப்பாய் என அப்போது அந்த பாவப்பட்ட ஜென்மத்துக்குத் தெரியாது.

ஆயிற்று. இந்த ஏழு வருசத்தில் அவள் பெயரைக்கூட நீ மறந்தாயிற்று. அவளனுப்பும் பிறந்த நாள் வாழ்த்துக்களுக்குப்

பதில் போடக்கூட யோக்கியதை அற்றவனாகி விட்டாய். உன் மனைவியை திருப்திப்படுத்தத்தானே? எவ்வளவு பெரிய அயோக்கியன் நீ! உன் மீது அன்பு செலுத்த வந்தவளை ஏமாற்றி நெக்குருகிப்போக வைத்துவிட்டாய். இன்னும் நூறுவருடம் உன் மனைவியோடு வாழ்ந்தாலும் உனக்குத் திருப்தி ஏற்பட வாய்ப்பு இல்லை. ஏனென்றால், இந்த அன்பு போலியானது. ஒரு நடிப்பு. மனைவியாக நடிக்கிறாள். நீயும் கணவனாக நடிக்கிறாய். எல்லாம் அடையாளத்திற்காக. உண்மையான நேசத்தை, நிஜமான அன்பை நீ கொலைசெய்து விட்டாய்.

எத்தனை இரவுகள் உன் நட்பு பறிபோனதற்காக அவள் அழுதிருக்கிறாள் தெரியுமா? ஏங்கி ஏங்கி எத்தனை சந்தர்ப்பங்களை அவள் பெருமூச்சால் ;நிறைத்திருப்பாள்? ;யார் யாரைப் பார்த்து உன் நியாபகம் வந்ததோ? யாருக்குத் தெரியும். ஏழு வருடத்தில் அவளது முயற்சிகளைக் கொன்றாய். உன்னைப் பார்க்க அவள் வந்த சந்தர்ப்பங்களில் தனியே கிடந்து ஏங்கி ஏங்கிச் சாக வைத்தாய். சரியான மரக்கட்டை நீ.

இன்று கூட அழுக்காகிப்போன இன்லேண்ட் லெட்டரில்உனது பழைய முகவரியிலிருந்து மாற்றியனுப்பப்பட்ட முத்திரைகளுடன் அவளது கடிதம் வந்தபோது சுற்றிலும் பார்த்துப் பயந்து மனைவியற்ற நிம்மதியில் கடிதத்தை நீ பெற்றுக் கொண்டதைக் கண்டு தபால்காரன் மனசுக்குள் சிரித்தான். கவிதை வாசகனாக இலக்கிய கர்த்தாவாக நீயிருந்த காலத்தை நினைத்துப் பார்த்து அவன் சிரித்து இருக்கலாம்.

சோமாசியின் எழுத்து — நினைத்தபடியே அழுத்தமாக உன்னைக் கொஞ்சி இழுத்துப்போகும் முத்துமுத்தான பிரவாகம். வழக்கத்திற்கு மாறாகத் தெலுங்கில் எழுதியிருக்கிறாள். இந்தக் கடிதத்தை நீ யாருக்கும் தெரியாமல் பயந்தாங்கொள்ளியாகக் கழிவறையில் ஒளிந்துகொண்டு வாசிக்கிறாய். செத்துப்போகும் போதுகூட நீ அவளோடு இருக்க வேண்டுமென விரும்புகிறாள். மாய காவ்ஸ்கியும், போரிஸ் பாஸ்டர் நாக்கும், ஆத்மாநாமும் பின்பற்றிய வழி, தற்கொலை.

''என்னைக் கோழைஎன்று நினைக்கிறாயா நீ. அப்படிக்கருதுவாயானால் நீ என்ன மாதிரி ஆள். ஒவ்வொரு நொடியும் சமூகச் சட்டங்களுக்குப் பயந்து பாதி வாழ்நாளைக் கழிவறையில் கழிக்கும் நீ... பிறத்தியாருக்குப் பயந்து பின்பக்கச் சதைமேட்டை சொரியக் கூடப்பயப்படும் நீ... போலித்தனமான புருஷ வாழ்க்கைக்காக

உண்மையைக் கொலை செய்து பகட்டாக வாழும் நீ... தைரிய சாலியா?" எனக்கேட்டிருந்த கேள்வியால் சோமாசி அந்த கடி தத்தை ஒரு வரலாறாக்கி விட்டாள். அதை நீ கிழிக்க முடியாது. வரலாற்றை வாசிக்க முடியும், அழிக்க முடியாது.

அவசரம் அவசரமாக இன்றைய தினசரியைக் கிழிக்கிறாய். 'இளம் பெண் தற்கொலை; காதல் தோல்வியா' என்பதை உன் மனைவி படித்துவிடக்கூடாது. இருட்டில் அவள் தூங்கிய பிறகு யாருக்கும் தெரியாமல்அழு. இனி நீ ஹைதராபாத்துக்கு ஆஃபீஸ் நிமித்தமாக செல்லலாம். உன் மனைவியிடம் சோமாசி செத்துப் போனதை எப்போதாவது சொல்லிவிடு. அப்போதுதான் அவளது சாவுக்கு அர்த்தம் இருக்கும். உன் மனைவியைக் காதலி. ஏனென் றால் அவள் உனக்காகத் துவைக்கவேண்டும், சமைக்க வேண்டும். சோமாசியின் கவிதைகள் இதற்கு மட்டுமல்ல, உன்னைப் பொறுத்த வரை எதற்கும் பயன்படாது. ●

தன்மயமாதல்

நகர் எரிகிறது.
நீரோ மன்னன் ஃபிடில் வாசித்துக் கொண்டிருக்கிறான்.
நரகவேதனையில் மக்கள்
நாற்திசையிருந்தும் நலிந்து கதறியபடி.
கண்ணெரிய நெஞ்செரிய
எண்சாண் வயிறெரிய
மண்ணிறைத்துத் தூற்றிய
எண்ணிறந்த கரங்களிலுண்டு
என்னுடையதுமிரண்டு.

நகர் எரிகிறது.
நீரோ மன்னன் ஃபிடில் வாசித்துக் கொண்டிருக்கிறான்.
நகரும் எரிகாற்றில்
தகதகக்கும் இசைப் பிரியொன்றன்
சுகந்தமென் அகமெரிக்க
நகர் மறக்க
நீரோ நிரம்பும் நீலகண்டம்
பிடித்திருக்க
லாகாது நஞ்சேறும் நெஞ்சாற
ஆற
நகர் வேக

வேகவேகமாய் நீரோ ஃபிடில் வாசித்துக் கொண்டிருக்கிறேன்.

ரிஷி

கடலோரம்

ஓ. வி. விஜயன்

வெள்ளாயி அப்பன் புறப்பட்டபோது வீடு நிறையக் கூட்டமாயிருந்தது. அம்மிணி வீட்டிலும் முத்து ராவுத்தன் வீட்டிலும் விசாரிக்கத் தொடங்கிவிட்டார்கள். ஏறத்தாழ அய்ம்பது வீடுகள் உள்ள அந்த ஊரில் இதே பேச்சாகத்தானிருந்தது.

வெள்ளாயி அப்பன் கண்ணனூருக்குப் போக வேண்டும். ரயிலுக்குப் பணம் இருந்திருந்தால் அவனோடு கூட அம்மிணியக்காவும் முத்தண்ணனும் கோபி பூசாரியும்—ஏன் ஊரிலுள்ள எல்லாருமே வந்திருப்பார்கள். கண்ணனூருக்குப் போகிற ரயில் அந்த கிராமத்தின் வழியேதான் போகும்.

ஊர் எல்லையை விட்டு வயல்புறமாக நடந்தான். அங்கிருந்து ஓர் ஒற்றையடிப் பாதை நீண்டிருந்தது.

ஒற்றையடிப் பாதையின் இரு பக்கமும் ஓங்கியிருந்த பனைமரங்களிலிருந்து காற்று வீசிக்கொண்டிருந்தது. பனைமட்டைகள் தமக்குள் பேசிக்கொள்வது போலவும் தோன்றியது. ஈரிழைத் துண்டில் கட்டிப் பொதித்த சோற்றுமூட்டை கையில் தட்டியது. அதைக் கட்டித் தரும்போது அவள் சிந்திய கண்ணீரில் ஒருசில துளிகளாவது இன்னும் அதில் இருக்கலாம்.

ரயில்வேஸ்டேஷனுக்கு இன்னும் நாலுமைல் நடக்கவேண்டும். நடையில் வேகத்தைக் கூட்டியபோது எதிரே குட்டியச்சன் வந்துகொண்டிருப்பது தெரிந்தது.

—''வெள்ளாயி...'' உடைந்தகுரலில் கூப்பிட்டார்குட்டியச்சன்.

—மரைக்காயரே...

அந்த இரண்டு வார்த்தைகளிலேயே கேட்க வேண்டியதையும் சொல்ல வேண்டியதையும் முடித்தாகி விட்டது போலிருந்தது இருவருக்கும்.

—மரைக்காயரே... நான் உங்களுக்குப் பதினஞ்சு ரூபா கடன் தரணும்...இல்ல...பதினஞ்சே கால் ரூபா...

—அதெல்லாம் இப்ப எதுக்குப்பா?...

—இல்லீங்க... இதுக்கு மேல நான் அதைத் திரும்பிக் குடுப்ப னான்னு தெரியலிங்க...

—திரும்பத் தராத கடனெல்லாம் அத்த ஆண்டவனுக்குச் சேரட்டும்...விடப்பா...

—மனசே ஒடஞ்சு போச்சு மரைக்காயரே

—படைச்சவன் துணையிருக்கட்டும். உன்னையும் என்னையும் அவனே காப்பாத்தட்டும்...

பனைமட்டைகளிலிருந்து காற்று இன்னும் ஒழுகிக்கொண் டிருந்தது. போகவேண்டிய தூரம் இன்னும் அதிகம்.

எதிரே நீலி வண்ணாத்தி வந்துகொண்டிருந்தாள்.

துவைத்த துணிகள் முதுகில் அழுந்திக் கொண்டிருந்தது அவளுக்கு.

—வெள்ளாயி அப்பா...

—நீலி...

மீண்டும் அவரவர் பாதையில்.

ஒற்றையடிப் பாதை முடிந்து ஓடை குறுக்கிட்டது. கரை ஏறி னால் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகிற வழிதான். ஓடையில் இறங்கி நடந்தான். பரல் மீன்கள் துளைந்து திரியும் ஓடை. தண் ணீரைப் பிளந்து நடக்கிறபோது குளிக்கும் ஞாபகம் வந்தது. அப்பாவின் சவத்தைக் குளிப்பாட்டியது... குழந்தையாயிருந்த மகனை குளத்தில் குளிக்க வைத்தது... இளஞ்சூடான தண்ணீர் எல்லாவற்றையும் நினைவுக்குக் கொண்டுவந்து கரையேறும்போது கண்ணீர் முட்டியது.

ரயில்வே ஸ்டேஷனில் சீட்டு வாங்குமிடத்தில் வரிசையில் நின்று வேட்டியில் முடிந்து வைத்திருந்த காசை வெளியே எடுத் தான்.

—கண்ணனூரு...

சீட்டை எடுத்து அச்சுப் பதித்து ஜன்னல் வழியாகக் குமாஸ்தா கொடுத்தபோது பயணத்தின் ஒரு கட்டத்தைத் தாண்டிவிட்டது போலத் தோன்றியது. பிளாட்பாரத்தில் நடந்து மூலையில் கிடந்த பெஞ்சில் உட்கார்ந்தான். தூரத்தில் சூரியன் மறைந்துகொண் டிருப்பது தெரித்தது. கறுப்பாகிக்கொண்டிருந்த பனைமரங்களி னூடே பறவைகள் கூடு விரைந்து கொண்டிருந்தன. வேட்டியின் முனையைப் பிடித்துக்கொண்டு அஸ்தமனப் பறவைகளை ஆச்சரி

யத்தோடு வேடிக்கை பார்த்த மகன் மீண்டும் நினைவுக்கு வந்தான். அஸ்தமனத்தில் இறங்கி நடந்த அப்பாவும்தான். இரண்டு சித்திரங்களாய் இரண்டிற் கிடையிலும் தான் நிரம்பியிருப்பதாய்த் தோன்றியது.

பெஞ்சில் மீதி இருந்த இடத்தில் வந்து உட்கார்ந்த ஒருவன் கேட்டான்.

—கோயமுத்தூருக்கா?

—கண்ணனூருக்கு...

—நான் கோயமுத்தூருக்கு...

—ஓகோ...

—கண்ணனூரு வண்டிவரப் பத்து மணியாகும்...

—ம்...

—கண்ணனூர்ல என்ன வேல...?

—விசேஷமா ஒண்ணுமில்லே...

—சும்மாதானா...

பழக்கமில்லாதவர்களிடம் பேசுவது கழுத்தில் கயிற்றைச் சுற்றி முறுக்குவது மாதிரி. சொந்த ஊரைவிட்டு வந்தால் எங்கேயும் அந்நியர். எண்ணிக்கையில்லாத கயிறுகள்.

கோயமுத்தூர் வண்டிவந்து நின்றபோது பக்கத்தில் இருந்தவன் எழுந்துபோய் ஏறிக்கொண்டான். சோற்றுமூட்டையை அவிழ்க்கவே தோன்றவில்லை. மூட்டையில் கைவைத்தபடியே உறங்கியும் போனான். கனவு வந்தது. ''மகனே...கண்டுண்ணீ...''

ரயிலின் சத்தம் உலுக்கி எழுப்பியது. மடியில் சீட்டைந் தொட்டுப் பார்த்துக்கொண்டே வண்டியை நோக்கி நடந்தான்.

—இது பர்ஸ்ட் கிளாஸ் பெரியவரே...

—அப்படியா...

—இது ரிசர்வ்டு

– ஓ...

—அந்தப் பக்கம் பாருங்க...

நடந்து அடுத்த பெட்டியில் ஏறிக்கொண்டான். உட்கார இடமில்லை. நின்றுகொள்ளலாம். நான் தூங்க வேண்டியதில்லை. இந்த ராத்திரியில் அவன் அங்கே தூங்காமல்தான் இருப்பான். ரயிலின் தாளம். இடம் மாறும்போது அதன் பேதம். வழியில் தென்பட்டு மறையும் விளக்குகள். தூரத்தே தெரியும் மணல் திட்டுகள்.

மரங்கள். ரயிலில் போய் வெகுநாளாகி விட்டது. ஆனால் அப்போது பகலில். மங்கிய சித்திரங்கள் பதித்த சுரங்கத்தில் வண்டி பாய்ந்துகொண்டிருந்தது.

கண்ணனூரை அடையும்போது இன்னும் விடியவில்லை. கட்டை அவிழ்க்காத சோற்றுமூட்டையின் கனம் வேறு. கேட்டில் சீட்டைக் கொடுத்துவிட்டு வெளியில் வந்தான். கொஞ்சமாய்க் குதிரை வண்டிகள். ஒருவனிடம் மெதுவாகக் கேட்டான்.

—ஜெயிலுக்கு எப்படிப் போகணும்...?

யாரோ சிரித்தார்கள்.

—பெரியவரே... ஒருத்தனப் போட்டுத் தள்ளுங்க. நேரா ஜெயிலுக்கே போயிரலாம்...

அந்நியரின் பரிகாசக்கயிறு இன்னும் கழுத்தில். வெள்ளாயிக்கு சுவாசம் முட்டியது.

வழி கேட்டுத் தெரிந்து நடந்த போது காக்கைகளின் இரைச்சலோடு ஆகாயம் தெளிவாகிக் கொண்டிருந்தது.

—என்னய்யா இந்த நேரத்தில... காவல்காரனின் சோம்பல் குரல். வெள்ளாயி கூசிப் போனான். வேட்டியின் முடிச்சை அவிழ்த்து கசங்கிச் சுருண்டிருந்த மஞ்சளான ஒரு கடிதத்தைஎடுத்து நீட்டினான்.

—என்னது...

—எம் மகனப் பாக்கணும்...

—அதுக்கு இந்த நேரம் யாரு வரச்சொன்னா?... கடுமை கூடிப்போன வார்த்தைகள்.

—சரி இரு... ஆபீஸ் தெறக்கட்டும்.

அலட்சியமாய்க் கடிதத்தை வாங்கிப் பார்த்த காவல்காரனின் முகத்தில் சற்றே கனிவு.

—ஓ... நாளைக்கா...

—தெரியலீங்க... அதில என்ன எழுதியிருக்கு?...

—அதா... ம்... நாளைக்குக் காத்தால அஞ்சு மணிக்கு...

கண்ணீரோடு நின்ற வெள்ளாயி அப்பனைப் பார்த்துக் காவல்காரன் சொன்னான்.

—பெரியவரே அங்க போயி உக்காருங்க

—ம்

முகப்பிலிருந்த படிக்கட்டில் உட்கார்ந்தான் — கோயிலின் கதவு திறக்கக் காத்திருப்பவனைப் போல.

—டீ வேணுமா பெரியவரே

—வேண்டா,..

இந்த நேரம் அவன் தூங்கியிருக்க மாட்டான். தூங்க வேண்டும் என்ற உணர்வே இருக்காது அவனுக்கு. வெள்ளாயி அப்பனின் கை சோற்றுக் கட்டின் மீது விழுந்தது. மகனுக்குக் கொடுக்கலாமா. அதுவும் புளித்துப் போயிருக்கும்.

பொழுது விடிந்து கொண்டிருந்தது.

ஆபீஸ் திறந்தாகி விட்டது. புதிதாய் வந்தவர்களும் சேர்ந்து கொண்டு வரிசையில் நின்றார்கள். காவல்காரர்களின் அதட்டும் சப்தம். அதிகாரிகள் காகிதங்களை வாங்கிப் படிக்கிறார்கள். உத்தர விடுகிறார்கள். நிந்தையோ பகையோ இல்லாத வெற்றுக்குரல்கள். பின் கழுத்தில் முட்டிச் சிதறும் சுவாசங்கள். வெயிலின் உக்கிரம் கூடியது.

நீண்ட காத்திருப்புக்குப் பின் அழைத்துப் போனார்கள். வெயிலின் சுவடறியாத இடைநாழிகள்.

இரும்பு அழிகளுக்குப் பின்னால் கண்டுண்ணி நின்று கொண்டிருந்தான். அந்நியனைக் கவனிப்பது போலிருந்தது அவனின் பார்வை. உறவின் நெருக்கத்தை மறந்து நிலைத்த பார்வை. பூட்டை திறந்து உள்ளே செல்ல அனுமதித்தான் காவல்காரன். தந்தையும் மகனும் நேருக்கு நேராய். மகனைக் கட்டிப் பிடித்து வெள்ளாயி கதறினான்.

—மகனே...

—அப்பா...

இரண்டே வார்த்தைகள். இருவரிடமும் மௌனம் மாறி மாறிக் கடந்து கொண்டிருந்தது.

—மகனே என்னடா செஞ்சே நீ?

—ஞாபகமில்லப்பா...

—நீதான் செஞ்சியா?

—ஞாபகமில்ல...

—விட்டுரு மகனே இனிமே ஞாபகப் படுத்திக்க ஒண்ணுமில்ல...

—அந்தக் காவல்காரனுக்கு ஞாபகமிருக்குமாப்பா?...

—மகனே...

—வேதன புரியுமாப்பா உனக்கு? என்னத் தூக்கில போட்டுடு வாங்களாம்... வேண்டாப்பா...

தொடரும் மௌனம்.

—பெரியவரே... வெளிய வாங்க... நேரம் அவ்வளவுதான்... காவல்காரனின் குரல்.

வெள்ளாயி வெளியே வந்தான். கதவைப் பூட்டியாயிற்று. ரயிலில் வழியனுப்ப வந்தவர் பிரிவதைப் பார்ப்பது போல கண்டுண்ணியின் அந்நியம் தொனிக்கும் பார்வை மீண்டும்.

ஜெயிலின் முகப்பிலேயே அங்குமிங்கும் நடந்து கொண்டு காத்திருந்தான். சூரியன் உச்சியில் நின்றது. பொழுதும் மறைந்தது. இந்த ராத்திரியில் மகன் உறங்குவானா. இரவு நீண்டு கொண்டேயிருந்தது. இந்த மதில்களுக்கப்புறம் கண்டுண்ணி இன்னும் உயிரோடியிருக்கிறான்.

பொழுது விடிந்து சங்கு முழங்குவதைக் கேட்டான் வெள்ளாயி. அதுதான் மகனைத் தூக்கில் போடக் கொண்டு போகும் நேரம் என்று அவனுக்குத் தெரியாது. அய்ந்து மணிக்கு என்றுதானே சொல்லியிருந்தார்கள். கையில் கடிகாரம் இல்லாவிட்டாலும் நேரத்தை ஒருவாறு ஊகித்தான்.

எந்தச் சலனமுமில்லாமல் சவத்தைக் காவல்காரரிடமிருந்து வாங்கிக்கொண்டான்.

—பெரியவரே...உங்க இஷ்டம்போல அடக்கம் பண்ணிக்குங்க.

—அது முடியாதுங்க...

—அப்படின்னா இங்கயே பண்ணிடலாம். செலவை ஏத்துக்கணும்...

—அய்யா...எங்கிட்ட காசு இல்லிங்க...

தள்ளுவண்டியின் பின்னாலேயே தோட்டிகளுடன் நடந்தான். கழுகுகள் மேலே வட்டமிட்டுக்கொண்டிருந்தன. மண்ணை மூடுவதற்கு முன் மகனின் முகத்தை ஒரு தடவை பார்த்து அவனின் நெற்றியில் கை வைத்தான்.

வெயிலில் நடந்து அலைந்து கடலுக்கருகில் வந்தான். அப்போதுதான் கடலை முதல்முறையாய்ப் பார்க்கிறான். கையில் ஏதோ நனைந்து கசகசத்தது. கட்டித் தந்த சோற்றுப் பொதி. மூட்டையை அவிழ்த்து சோற்றை நிலத்தில் வீசி எறிந்தான். எங்கிருந்தோ காக்கைகள் இறங்கி வந்துகொண்டிருந்தன. ●

○ தமிழில்: அவைநாயகன்

பலி

□

தேவிபாரதி

அவள் மிகவும் பயந்து போனவளைப் போலத் தென்பட்டாள். முகம் கலங்கியிருந்தது. ஒரு பூனைக்குட்டியைப் போல சுவரோடு பதுங்க, மட்கிய வியர்வை நெடி வீசும் அந்த அறையை மிரட்சியுடன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

கதவைத் தாழிட்டதும், அவளை இழுத்து இதழ்களைக் கவ்வி முரட்டுத்தனமாகச் சுவைத்தான். அவளது திரட்சியான மார்பகங்களைக் கசக்கினான்.

அவள் பெருமூச்செரிந்தாள்.

அவனது செயல்களுக்குத் தன் இசைவின்மையைத் தெரிவிப்பது போல நடுங்கினாள். எதிர்பார்த்தபடி ஒத்துழைக்காததாலோ என்னவோ அவன் அவளை விடுவித்தான். பேன்ட்டையும் சட்டையையும் கழட்டிவிட்டுக் கைலியைச் சுற்றிக்கொண்டான். இது போன்ற சந்தர்ப்பங்களில் இயல்பாக ஏற்படும் எரிச்சலும் கோபமும் அவன் முகத்தில் அப்பட்டமாகத் தென்பட்டன.

கட்டிலில் ஒருக்களித்து சாய்ந்து அவளைப் பார்த்தபடி சிகரெட் பற்றவைத்தான். அவள் இன்னும் அதே இடத்தில்தான் நின்று கொண்டிருந்தாள், அவனது நேர்பார்வையைத் தவிர்க்கும் பொருட்டுத் தலை குனிந்தது.

அவளைக் கூப்பிட முடியும்.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில் பயன்படுத்த வேண்டிய வார்த்தைகளையும், வார்த்தைகள் பயனளிக்காவிட்டால், என்ன செய்ய வேண்டுமென்பதையும் அவன் அறிவான்.

எண்ணங்களுக்கும் செயல்களுக்குமிடையேயான தவிர்க்கமுடியாத இடைவெளியைக் கடப்பதற்கான அவகாசத்தை, புகைபிடிப்பதில் செலவிட முற்பட்டவனைப் போல ஒன்றன்பின் ஒன்றாக சிகரெட்டுக்களைப் புகைத்துத் தீர்த்தான். இது தன்னுடைய யூகம் தான் என்கிறார், இந்தக் கதையைச் சொல்லிக்கொண்டிருப்பவர்.

பார்வை அசைவின்றி அவள்மேல் கவிந்திருந்தது. அந்த அறையினுள்ளேயும், அறைக்கு வெளியே தூக்கத்தில் ஆழ்த்திருக்

கும் நகரத் தெருக்களிலும் நிலவும் பீதியூட்டும் மௌனத்தை நினை வூட்டுவது போல டியூப்லைட் ரீங்காரமிட்டுக்கொண்டிருந்தது.

அந்த மௌனம் உடைக்கப்படும் பயங்கரமான தருணத்தை, பதட்டத்துடன் எதிர்பார்த்துக் காத்திருந்தாள். அவன் இதை அவ மதிப்பாகவும் எடுத்துக்கொண்டிருக்கக் கூடும். 'ஒரு பயங்கரமான ஊமை நாடகத்தின் பரிதாபகரமான பாத்திரப் படைப்புக்களைப் போல' என்று வர்ணிக்கிறார் கதை சொல்பவர்.

விடுதித் தலைவி பொய் சொல்லவில்லை. அவள் இந்தத் தொழிலுக்குப் புதியவள். அங்கு கொண்டுவரப்பட்டு ஓரிரு நாட் களே ஆகியிருந்தனவெனச் சொன்னாள் விடுதித் தலைவி. தான் ஏமாற்றப்படவில்லையென்பது குறித்து அவனுக்குச் சந்தோஷ மாகவே இருந்தது.

அனுபவப்பட்டவர்களாயிருந்தால், இதுபோன்ற சந்தர்ப்பங் களில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைத் தெரிந்து வைத்திருப்பார்கள். வாடிக்கையாளர்களைத் தக்க வைத்துக் கொள்ளும் பொருட்டும் பேசியதைவிட அதிகமாக டிப்ஸ் பெறவும் வேண்டி, சில சமயங்களில் குமட்டலெடுக்கும் அளவுக்குக்கூட நடந்துகொள்வார்கள். அறைக்குள் நுழைந்தவுடனேயே உடை களைக் களைந்துவிடுவார்கள். அநேகமாக அந்த அறைக்குள் கழிக்கும் சிலமணி நேரங்களும் அம்மணமாகவே இருப்பார்கள். சிலர் அவனோடு சேர்ந்து குடிப்பார்கள். அனுபவப்பட்ட வாசகர் கள், தான் பொய் சொல்லவில்லையென்பதை உணர்ந்திருப்பார்கள் என்கிறார் கதை சொல்பவர்.

அவர்களில் எவருமே இவற்றிலெதையும் ஈடுபாட்டுடன் செய்ய வில்லையென்பதை, இதுபோன்ற நடவடிக்கைகளைத் துவக்கிய கொஞ்ச காலத்திற்குள்ளாகவே அவன் புரிந்துகொண்டான். ஆனால் தனது நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்வதற்குப் போதிய காரணம் எதையும் அவனால் கண்டறிய முடியவில்லை.

இப்போதுகூட அவனுக்கு அவள்மீது பச்சாதாபமெதுவும் ஏற்பட்டுவிடவில்லை. பலவந்தப்படுத்தாமல் அவளை இணங்கச் செய்வதைக் குறித்தே யோசிக்க முற்பட்டான். குறைந்தபட்சம், கதை சொல்பவர் இப்படிக் கருதினார் என்று சொல்லலாம்.

அவள் நல்ல அழகி, சிவந்த நிறம். இந்தத் தொழிலுக்குப் பொருத்தமற்ற குழந்தை முகம். இன்னும்கூடக் கன்னிமையின்

எழில் சிதைக்கப்பட்டு விடவில்லை. நீண்ட கால வாடிக்கையாள னான தனக்கு விடுதித் தலைவியின் ஊக்கப் பரிசு என்று நினைத் தான் அவன்.

அப்படியானால் அவன் அவளிடம் மிகவும் போராட வேண்டி யிருக்கும். பலவந்தம் செய்ய நேரலாம். இது அவனுக்குப் பழக்க மில்லாதது. அப்படியே அவன் அதற்கெல்லாம் துணிந்தாலும் அவள் கத்திக் கூச்சலிடவோ, கதறி அழவோ—எல்லாவற்றுக்கும் வாய்ப்பிருக்கிறது.

அவள் நின்றுகொண்டுள்ள நிலையைப் பார்த்தால், எந்தக் கணத்திலும் உடைந்து அழத் தயாராயிருப்பவளென்று உறுதியாகச் சொல்ல முடியும். அப்படி அழுதால் அது ஒரு நிராதரவான குழந்தையின் அழுகையைப் போல—கடவுளே, இதை எப்படி அவனால் சகித்துக்கொள்ள முடியும்?

திடீரென தான் மிக மோசமானதொரு நெருக்கடியில் சிக்கிக் கொண்டு விட்டதாக நினைத்தான். இதுபோன்ற நெருக்கடிகளுக்கு அவன் பழக்கப்பட்டவனுமல்ல. உடனடியாக அவளை அங்கிருந்து வெளியேற்றி, பேசியபடி விடுதித் தலைவியிடம் திரும்பக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுவதன் மூலம், இதிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியுமாவென யோசிக்க முற்பட்டான்.

ஆனால் அது ஒரு அபத்தமான யோசனையென்பது எடுத்த எடுப்பிலேயே அவனுக்குப் புரிந்து போயிற்று. தான் இங்கு செய்யத் தவறியதை, செய்ய விரும்பாததை, வேறொரு வாடிக்கையாளன், தான் செய்திருக்கக் கூடியதைவிடவும் குரூரமாகச் செய்யத் துணிய லாம். சந்தேகமின்றி அதுதான் நடக்கும். உடனடியாக, இந்த இரவின் எஞ்சிய நேரத்திற்குள்......

இதுபோன்ற ஒரு சந்தர்ப்பந்தில், அவனைப் போன்ற ஒரு நபரால், இப்படியெல்லாம் யோசிப்பது நடைமுறையில் சாத்தியப் படக்கூடியதாவென வாசகர்கள் கேட்கக்கூடும் என்று அனுமானிக் கிறார் கதை சொல்பவர். இதற்குத் திட்டவட்டமான விளக்கம் எது வும் இல்லையென்றும், மனித மனங்களின் புதிரான உள்ளறை களுக்குள் இதற்கு விடை கிடைக்கலாமென்றும் கிட்டத்தட்ட மழுப்பலாகப் பதில் சொல்கிறார் கதை சொல்பவர்.

தான் அனுமதித்தால், உதவினால். தப்பி, ஓடிவிட அவள் தயாராகவே இருப்பாளெனக் கருதினான் அவன். இதனால் அவ

னுக்குச் சில சங்கடங்கள் ஏற்படக் கூடும். விடுதித் தலைவி கோபம் கொள்வாள். இழப்பீடாக ஒரு பெருந்தொகையைக் கேட்பாள். முன்பின் அறிமுகமில்லாத ஒருத்தியை முன்னிட்டு தன்னைச் சங்கடத்திற்குள்ளாக்கிக் கொள்ள வேண்டியது அவசியம்தானா வென யோசித்தான்.

விவரிக்க முடியாத துயரத்துடன், பொலிவிழந்த ஒரு புராதனச் சிற்பம் போலக் குன்றி நிற்கும் அவளைக் கண்டதும் அவன் பதட்ட முற்றான். எப்படிப்பட்ட சங்கடங்களைச் சந்திக்க நேர்ந்தாலும் சரி, அவளுக்கு உதவ வேண்டுமெனத் தீர்மானித்தான். அவளுக்கு இதை எப்படித் தெரிவிப்பதென அவனுக்குப் புரியவில்லை. அவ ளிடம் இதைப் பேசுவதற்குரிய பொருத்தமான வார்த்தைகள் இல்லாதது போல ஒருவகையில் அவமானமாக இருந்தது அவனுக்கு.

அவளைக் கூப்பிட்டுக் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து,
'இதோ பார் பெண்ணே, நீ ஒரு வேசியாய்
வாழ்க்கை நடத்துவதை என்னால் சகித்துக்
கொள்ள முடியாது. இங்கிருந்து தப்பி, எங்காவது
போய்விடு' என்று கேட்டுக் கொள்ளலாமா?'

ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொள்ளச் சொல்லி அறிவுறுத் தலாமா? அதற்கென்ன பதில் சொல்வாள் அவள்? சரி என்று அவனுக்கு நன்றி சொல்லிவிட்டுப் போய் விடுவாளா? முற்றிலும் எதிர்பாராத இந்த உதவியால், திக்குமுக்காடி, உணர்வுகள் தழு தழுக்க அழத் துவங்கிவிடுவாளா? அல்லது... சட்டென வெடித்துச் சிரித்து விட்டால்?

கடவுளே...இதற்கு வாய்ப்பே இல்லையென்று சொல்லிவிட முடியாது.

எப்படியும் அவளிடம் ஒருகதை இருக்கக்கூடும். காதலனை நம்பி, அல்லது சினிமா ஆசையால் வீட்டை விட்டு ஓடிவந்தது என்பது போன்ற தற்காலத்துக்குரிய ஏதோவொரு கதை.

அவன் அவளை அழைத்தான்.

அவள் ஆச்சரியத்துடன் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அவனது குரலில் தென்பட்ட பச்சாதாபம் நம்ப முடியாததாயிருந் தது. அந்தக் குரல் தனது கற்பனையோவெனச் சந்தேகித்து நின் றாள். ஆனால் அவன் மறுபடியும் அழைத்தான். அவனருகில்

கிடந்த ஒரு நாற்காலியைச் சுட்டிக்காட்டி, அதில் வந்து உட்காரும் படி' ஒரு விருந்தாளியை உபசரிக்கும் தொனியில் சொன்னான். ஒரு குழந்தையைப் போல, மகிழ்ச்சி ததும்ப அவள் புன்னகைத் தாள். அந்த ஒரே அழைப்பில் அவனது மனதின் எல்லாப் பக்கங் களையும் படித்து அறிந்து கொண்டுவிட்டவளைப் போலத் துள்ள லுடன், அவன் சுட்டிக்காட்டிய நாற்காலியினருகே வந்து நின்றாள்.

உன்னதமான பண்புகளுடைய கதாபாத்திரங்களைப் படைப்ப தற்கு, விரும்புகிறாரா என்று கேட்டதற்கு இல்லையென்று மறுக் கிறார் கதை சொல்பவர். நீங்களும் நானும் அந்தக் கதாபாத்திரங் களின் இடத்தில் இருந்தால், இப்படித்தான் அல்லது கிட்டதட்ட இப்படித்தான் நடந்துகொள்ள வேண்டிவரும். அது தவிர்க்க முடியாதது என்றும் சொல்கிறார்.

'உட்கார்...'

அவள் த்யக்கத்துடன் அவனைப் பார்த்தாள்.

'உட்கார்...' என்று மன்றாடுவதுபோல மீண்டும் சொன்னான் அவன். அவளுக்கு ஏதாவது சாப்பிடக் கொடுக்கலாமாவென யோசித் தான். அவனிடம் கொஞ்சம் பிஸ்கட்டுகளும், சிப்ஸ் பாக்கெட்டும், பிளாஸ்க்கில் சிறித்ளவு காபியும் இருப்பது நினைவுக்கு வந்தது. எழுந்து அலமாரியிலிருந்து அவற்றை எடுத்து அவளுக்குப் பரிமாறினான்.

'சாப்பிடு...'

அவள் மிரட்சியுடன் அவனைப் பார்த்தாள்.

'பரவாயில்லை...சாப்பிடு'

இன்னொரு நாற்காலியை இழுத்துப்போட்டு ஒரு நண்பனைப் போல அவனெதிரில் உட்கார்ந்தான். அவளுடைய சங்கோஜத் தைப் போக்குவதற்காகத் தானும் ஒரு பிஸ்கட்டை எடுத்துக் கடித்தான்.

அவள் பயம் நீங்கி, கூச்சத்துடன் சாப்பிடத் தொடங்கினாள்.

அவனுக்குச் சந்தோஷமாக இருந்தது. இனி அவனது உதவியை அவள் மறுக்கவே போவதில்லையெனக் கருதினான். த்ன்னால் இப்படிக்கூட நடந்துகொள்ள முடியுமாவென ஆச்சரிய மடைந்தான். இப்போது அவள் மிகவும் வேகமாகச் சாப்பிடத் தொடங்கியிருந்தாள். மிகவும் பசியுடனிருக்கிறாளென்பது புரிந்தது.

அவன் அவள் பெயரைக் கேட்டான்.

அவள் சாப்பிட்டபடியே சொன்னாள்.

'நல்ல பெயர்' இதுபோன்ற சந்தர்ப்பங்களில் வழக்கமாகச் சொல்லப்படுவதை அவன் சொன்னான். பிறகு அவன் அவளுடைய ஊரைக் கேட்டான். அவள் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, கலக்கமாக அவனைப் பார்த்தாள். அவன் பதட்டமுற்றான். தங்கள் உரையாடல் இதற்குமேல் தொடராமல் போய்விடுமோவெனப் பயந்தான். தான் வெறுமனே அதைத் தெரிந்துகொள்ள விரும்பியதாகவும், அவளுக்கு விருப்பமில்லையென்றால் சொல்லவேண்டாமென்றும், கிட்டத்தட்ட மன்னிப்புக் கோரும் குரலில் சொன்னான். ஆனால் கொஞ்சம் தண்ணீர் குடித்துவிட்டு அவள் சொல்லத்தான் செய்தாள். அவள் கண்களில் அவன் மீதான நம்பிக்கை ஒரு வண்ணத்துப்பூச்சி போல் படபடத்தது. பழுத்து உதிரும் ஒரு இலை போல வார்த்தைகள் பதட்டமின்றி வந்தன.

'... ... ...'

அவன் பயங்கரமாக அதிர்ச்சியடைந்தான். நம்ப முடியவில்லை. பொய் சொல்கிறாளோவென்று நினைத்தான். ஆனால் அது பொய் சொல்கிற முகமில்லையென்று திட்டவட்டமாகச் சொல்ல முடியும்.

அது அவனுடைய பூர்வீகக் கிராமம்.

அவனைச் சேர்ந்தவர்கள் இன்னும் அங்கே இருந்தார்கள். அந்த ஊரையும். அங்கே விட்டு விட்டு வந்த இழிவான கடந்த காலத்தையும் அவன் மறக்க முயன்று கொண்டிருந்தான். ஒரு பயங்கரக் கனவைப் போல அவளுடைய உருவம் கொண்டு திரும்பி வந்திருக்கிறது அது. முற்றிலும் எதிர்பாராத ஒரு குரூரமான தற்செயல் நிகழ்வு. நிலைகுலைந்து தடுமாறினான். அவளுக்குக் கொஞ்சம் அல்லது வேண்டிய மட்டும் பணம் கொடுத்து அனுப்பி விடலாமாவென யோசித்தான்.

ஆனால் தன்னை மீறியதொரு பேராவலால் உந்தப்பட்டுப் பேசத் தொடங்கினான்.

'அங்கே...' தடுமாறினான், மூச்சுத் திணறிற்று.

'யாருடைய குடும்பத்தைச் சேர்ந்தவள் நீ?'

அவள் குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள்.

'சொல்... யாருடைய மகள் நீ?' மிரட்டலைப் போலவும், வலியுறுத்தலைப் போலவும் தோன்றும்படியான குரலில் கேட்டான். ஒரு நீண்ட மௌனத்திற்கும், கசப்பான பெருமூச்சுக்கும் பின்னர் அவள் சொன்னாள்.

'........ என்று ஒருவர். அவர் என் பாட்டனார்.'

'அவரா' என்று கிட்டத்தட்டக் கத்தி விட்டான் அவன். அவன் மறந்துவிட முயன்று கொண்டிருந்த அவனது இழிவான கடந்த காலத்தின் சவக்குழியைத் தாக்கி உடைத்தது அந்தப் பெயர். 'அவரா—அவரா?' என்று ஒரு நோயாளியைப் போலவும், பைத்தியக்காரனைப் போலவும் புலம்பத் தொடங்கினான். இது நம்பவே முடியாத விஷயம். வாழ்வின் வக்கரித்த விளையாட்டு என்று இதைப்பற்றிச் சொல்கிறார், கதை சொல்பவர்.

ஒரு காலத்தில் செல்வத்தில் புரண்ட ஆசாரப் பிராமணக் குடும்பம் அது. கடவுளின் தூதரைப் போல, கிராமத்தின் இருண்ட தெருக்களில் மமதையுடன் உலா வந்தவர் அவர். அவன் தந்தையும், பாட்டனாரும் அந்த வீட்டின் மலத் தொட்டியைச் சுத்தம் செய்தவர்கள். தாயின் கருப்பையிலேயே மலத்தைச் சுவாசித்தவன் அவன். குடலைப் புரட்டும் மலநெடி அவர்களது தணிவான குடிசைகளுக்குள், அவர்களுக்கு முன்பாகவே பிறந்து, அவர்களைத் தாண்டியும் நீடித்திருக்கப் போவதைப் போல அவர்களது கனவுகளைக் கண்காணிக்கவும், அவற்றைக் கருவிலேயே நசுக்கி அழித்து விடவும் அதிகாரம் பெற்ற சர்வ வல்லமை படைத்த ஒற்றனைப் போல அகங்காரத்துடன் வீற்றிருந்தது. நினைவின் சவக்குழியிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்ட சவமாய், அவனெதிரே உட்கார்ந்திருந்தாள் அவள்.

'............ குடும்பம் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?' என்று தன் பாட்டனின் பெயரைச் சொல்லிக்கேட்டான் அவன். குரலில் வன்மம் தெறித்தது. கைகள் நடுங்கின. நெற்றியிலும் பிடரியிலும் வியர்வைத் துளிகள் பொடித்தன.

'இல்லை' என்றாள் தணிந்த குரலில், அவளுடைய குழந்தைத் தன்மை கொண்ட பார்வை திடீரெனக் கூர்மைப்பட்டது. அவனது முன்னோர்களின் சாயலை அறிய முற்பட்டவளைப்போல, அவன் முகத்தைத் தீவிரமாய் ஆராய்ந்தாள்.

'உன் முன்னோர்களின் மலத்தொட்டியைச் சுத்தம் செய்தார் அவர்' என்று ஆத்திரத்துடன் சொன்னான் அவன்.

‘எனக்கு நினைவிருக்கிறது’ என்று பீதியுடன் முணுமுணுத்தாள் அவள். அவளது நினைவின் திரைச்சீலையில் காலத்தின் புகை படிந்த ஒரு மங்கலான முகம் தென்பட்டது.

‘அவர் என் பாட்டனார்...’ என்று மகிழ்ச்சியுடன் கத்தினான் அவன்.

‘உங்கள் மலத் தொட்டியைச் சுத்தம் செய்து கொண்டிருந்தார் அவர். அவரும், என் தகப்பனாரும், ஏன் எங்களுடைய எல்லா மூதாதையர்களுமே அதைத்தான் செய்து கொண்டிருந்தனர்.’

சவமாக வெளுத்திருந்தாள் அவள். பேசும் சக்தியை இழந்து விட்டது போல பேசுவதற்கு எதுவுமே இல்லாதது போல, சலன மற்ற விழிகளாய் அவனைப் பார்த்தாள். ஆத்திரத்துடன் சிகரெட் டின் வெண்புகையை அவள் மேல் ஊதினான். ஒரு விசுவாசமான வேட்டை நாயைப் போல, அவளை முற்றுகையிட்டது சிகரெட் புகை. அவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க வந்தது போல மௌனம் அவர்களுக்கு நடுவில் சம்மணமிட்டு உட்கார்ந்து கொண்டது.

ஆனால் அந்த மௌனம் எந்தக் கணத்தில் உடைந்ததோ அந்தக் கணத்தை விளக்குவது கடினம். அங்கே நிலவிய சகிக்க முடியாத மௌனத்தில் விரிசலை ஏற்படுத்தியது அவர்களிருவரில் யாரென்பதைக்கதை சொல்பவருங்கூட அறிந்திருக்கவில்லை. இந்தக் கதையைச் சொல்ல நேர்ந்தது குறித்துக் கதை சொல்பவர் வருத்தம் தெரிவிக்கிறார். துல்லியமாகக் கவனிக்கத் தவறியதற் காக மன்னிப்புக் கேட்டுக் கொள்வதுடன், ஒரு கதை போல இதைச் சொல்லிக் கொண்டு போக முடியாததற்காகத் தன்னை எப்படிக் குறை சொல்ல முடியும் என்று பகைமையோடு கேட்கவும் செய்கி றார். ஆத்திரமான முகபாவமும், நடுங்கும் குரலுமாகக் கதையை அவர் தொடரும்போது, ஒரே சமயத்தில் அவர்மீது இரக்கமும் வெறுப்பும் ஏற்படுகிறது. ஆனால், சொல்ல வேண்டியவற்றில் மிகவும் அவசியமானவையெனக் கருதத்தக்க எல்லாவற்றையும் அவர் சொல்லத்தான் செய்கிறார்.

‘வேசியே, ஏன் இன்னும் உடைகளைக் களைந்து அம்மண மாகாமலிருக்கிறாய்?’ என்று அவளைப் பார்த்து, அவன் ஆத்திரத் துடன் கூச்சலிட்டதையும், அவள் அவனது ஆத்திரத்துக்குப் பணிந்து அல்லது வாடிக்கையாளனின் விருப்பம் எதுவானாலும் அதை நிறைவேற்றுவது ஒரு வேசியான தன் கடமையெனத் தீர்

மானித்துத் தானே முன்வந்து, அல்லது விவரிக்க முடியாது வேறு காரணங்களால் உந்தப்பட்டுத் தனது எல்லா ஆடைகளையும் களைத்து நிர்வாணம் படுத்திக் கொண்டதையும் வாசகர்களுக்குச் சொல்லத் தவறவில்லை அவர்.

'நான் உன்னைப் புணர்வேன்...' என்று குரல் நடுங்க அவன் சொன்னான்.

'நான் வேசி' என்று அழுத்தத் திருத்தமான குரலில் கூறி விட்டு, பதட்டமின்றி நடந்து, கட்டிலில் மல்லாந்து படுத்தாள் அவள். ஒரு சவம் போல அவள்மேல் கவிழ்ந்தான் அவன். அவனது சுவாசத்தில் காமமில்லை. ஒரு இரை போல பற்றியிழுத்து முரட்டுத் தனமாகத் தழுவினான்.

'நான் தீண்டத் தகாதவன்' என்று அவள் செவிகளில் வன்மமாகக் கிசுகிசுத்தான்.

'நான் வேசி—'

'என் தந்தை உன் மலத்தை அள்ளினார்'

'நான் வேசி...'

அவன் அவளுடைய வாய்க்குள் தன் உமிழ்நீரைத் துப்பிவிட்டுச் சொன்னான்.

'நாங்கள் செத்த மாடுகளின் மாமிசத்தைப் புசிப்பவர்கள்.'

'நான் வேசி' என்று அவனது உமிழ்நீரை விழுங்கினாள் அவள்.

அவளை உதறி எழுந்து ஆத்திரத்துடன் கத்தினான் அவன்.

'நீ பிரம்மனின் தலையில் பிறந்தவள்—'

'நான் வேசி...' என்றாள் துவண்ட குரலில்.

தன்னைத் தற்காத்துக்கொள்வதற்கான கேடயமாகவும், அவனைத் திருப்பித் தாக்குவதற்கான ஆயுதமாகவும் அவள், அந்த வார்த்தைகளை பிரயோகித்ததாகச் சொல்கிறார் ஆசிரியர்.

'நீ வேசி...' என்று வெறுப்புடன் தரையில் காறித் துப்பினான் அவன். இந்த முறை அவள் பதிலளிக்கவில்லை. இதுவரையிலும் அவன் கேட்ட, இனி கேட்கப் போகிறதான எல்லாக் கேள்விகளுக்குமான பதில்—நான் வேசி—அது ஏற்கனவே சொல்லப்பட்டுவிட்டது.

என்று சொல்ல விரும்புவது போல உயிரற்ற பார்வையால் அவனை வெறித்து நோக்கினாள்.

'பேசியது போலப் பத்து மடங்கு பணம் தருவேன் உனக்கு'.

அவள் விழிகள் ஆச்சரியத்தால் விரிந்தன.

'ஒரு வேளை நூறு மடங்கு... ஆமாம் நூறு மடங்கு பணம் தருவேன்...'

திட்டவட்டமாக அறிவித்துவிட்டு, பீரோவைத் திறந்து, அதிலிருந்த பணம் முழுவதையும் வாரியெடுத்துக் கொண்டு வந்து அவள் மேல் வீசினான். பைத்தியக்காரனைப் போல, அறை முழுக்கத் தேடி, ஜன்னல் விளிம்புகளில், புத்தக அலமாரியின் இடுக்குகளில், சட்டைப் பைகளில், இறைந்து கிடந்த, சில்லறைக் காசுகளையும் விடாமல்...

உண்மையில், இத்துடன் கதையை நிறுத்திவிட விரும்பியதாகச் சொல்கிறார் கதை சொல்கிறவர். திடீரென நிறுத்திவிட்டதாக விமர்சிக்கப்பட நேர்ந்தாலும், தொடர்ந்து சொல்வதன் மூலம், தனக்கு ஏற்படக்கூடிய ஆன்மீகப் பதட்டத்தைத் தவிர்க்க முடியும் என்று சொல்கிறார். ஆனால் அவர் வேறு விதமாகவும் யோசித்திருக்கக்கூடும். ஒருவேளை போதிய மனத்துணிவு அவருக்கு இல்லாதிருக்கலாம். ஆபாசமான, மிருகத்தனமான, வக்கரித்த கற்பனை என்றோ, நமது மரபான பண்பாட்டிற்கும் மனித நேயச் சிந்தனைகளுக்கும் எதிரானதென்றோ, விமர்சகர்களால் ஈவிரக்கமின்றித் தாக்கப்படலாமென அவர் அஞ்சக் கூடும், அல்லது அவருக்கேகூடக் கதையின் எஞ்சிய பகுதி ஏற்றுக்கொள்ள முடியாததாயிருந்திருக்கலாம், குற்றச்சாட்டுக்களுக்கும் அவமதிப்புக்கும் உள்ளான ஒரு கைதியின் வாக்குமூலம் போல, தணிந்த குரலில் சொல்ல முயன்றார் கதை சொல்பவர்.

எதார்த்தத்திலோ, கதைகளிலோ, உலகின் எங்கேனும் ஒரு பகுதியில், அல்லது ஏறத்தாழ எல்லாப் பகுதிகளிலும், இதையொத்த அல்லது இதை விடவும் மோசமான நடப்புக்களும் கற்பனைகளும் எப்போதுமே இருந்துவந்திருக்கின்றன என்று தனது வாசகருக்குக் காட்ட விரும்பியவரைப் போல, சிலபத்திரிகைச் செய்திகளையும் போருக்குப் பிந்திய ஜெர்மானிய மற்றும் பிரெஞ்சு நாவல்களையும் லத்தின் அமெரிக்கச் சிறுகதைகளையும், ஆப்பிரிக்கக் கவிதைகளையும், சோவியத் யூனியனிலிருந்து வெளியேற்றப்பட்டபுகழ்பெற்ற இயக்குநர்களின் சில திரைப்படங்களை

யும் ஏன் ரோமானிய நாடகங்களையும், இந்தியப் புராணங்களை யும்கூட, மேற்கோள்களாகக் காட்டி, இவற்றினூடாகவே, கதையின் எஞ்சிய பகுதியைச் சொல்கிறார், கதை சொல்பவர்.

உண்மையில் வியக்கத்தக்க சமயோசிதம் இது. அவர் குறிப் பிட்ட ஆன்மீகப் பதட்டத்திலிருந்து கதை சொல்பவர் மட்டுமல்ல வாசகர்களுமே தம்பித்துக்கொள்வதற்கு இது உதவக்கூடும்.

கதைகளிலும், திரைப்படங்களிலும் சித்தரிக்கப்பட்டிருப்பது போல்தான், எல்லாமே அசுர வேகத்தில் நடைபெற்றன. அவ ளுடைய கைகால்களைக் கட்டிலோடு பிணைத்துக் கட்டி, வாயில் துணிப்பந்தை அடைத்து, அவளெதிரே நாற்காலியில் நிர்வாண மாக உட்கார்ந்தபடி சிகரெட்டைக் கொளுத்தி, சிகரெட்டின் நுனி யில் கனல் திரண்டு, ஒரு மிருகத்தின் பழி நிறைந்த கண்களின் சாயலைப் பெறும்வரை புகையை ஆழ்ந்து உள்ளிழுத்து, நிதான மாக அவளுடைய நிர்வாணத்தின் சாத்தியப்பட்ட எல்லா இடங்களி லும், அழுத்தி எடுத்ததுமான அவனுடைய எல்லாச் செயல்களும், தாங்க முடியாத சித்திரவதையின் விளைவாக அவள் துடித்ததும், நெஞ்சுக் கூட்டுக்குள் நசுங்கி உயிரிழந்து போன அவளுடைய கதறல்களும்—அவர் மேற்கோள்களாகக் குறிப்பிட்ட கதைகளையும் திரைப்படக் காட்சிகளையும் துல்லியமாக ஒத்திருந்தன.

கதை சொல்பவர் விரும்பியிருந்தால், இந்தக் கட்டத்தில் கதையை முடித்திருக்க முடியும். ஆனால் சொல்ல வேண்டியவை இன்னும் நிறைய இருக்கின்றன என்கிறார். இது தனது சித்தத் திற்குட்பட்ட விஷயமல்ல. முற்றிலும் சுயேச்சையான முடிவை நோக்கிக் கதை தயக்கத்துடன் நடந்து செல்கிறது, எனவே வாசகர் கள் குறுக்கிடாதிருக்குமாறு கேட்டுக்கொள்கிறார்.

'உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஊருக்கு வெளியே மலச் சகதியில், நரகத்தின் முன்மாதிரி போலிருக்கும் அந்த இடம்...'

பீதியூட்டும் ஒரு கனவை நினைவுபடுத்திக்கொள்வது போல பதட்டம் நிறைந்த குரலில் சொல்லத் துவங்கினான். அவள் கண் கள் எதையோ சொல்ல விரும்பின.

'அங்குதான் நாங்கள் வாழ்ந்தோம்...' ஆத்திரத்துடன் புகை யைத் துப்பிவிட்டுச் சொன்னான்.

'பன்றிகளைப் போல... எங்கள் மூச்சுக் காற்றுக் கூடத்தீண்டத் தகாததாய்க் கருதப்பட்டது. காட்டுமிராண்டித்தனமான

காலங்களைப் பற்றி என் தாத்தா சொல்லியிருக்கிறார். கழுத்தில் மண் கலயங்களைத் தொங்க விட்டுக் கொண்டு நடந்தோம். செத்தமாடுகளின் இறைச்சியை உண்ணும் எங்கள் உமிழ்நீரால் இந்த பூமி தீட்டுப்பட்டு விடுமென்று உங்கள் சாஸ்திரங்கள் சொன்னதால், அந்த அடிமைச்சின்னங்களை, பிச்சைப் பாத்திரங்களைப் போல சுமந்து திரிந்தோம்...'

அவள் விழிகளில் நெருப்பின் சித்ரவதையைத் தாண்டிய ஒரு கழிவிரக்கம் தென்பட்டது.

'சாஸ்திரங்கள் உங்கள் மூதாதையர்களால் எழுதப்பட்டவை...' என்று வன்மத்துடன், அவள் காதுகளில் கிசுகிசுத்தான்.

'நாங்கள் உங்கள் வயல்களில் மாடுகளைப்போல உழைக்கவும் உங்கள் மலத்தொட்டிகளைச் சுத்தம் செய்யவும் படைக்கப்பட்டவர்கள்— ஹா...உங்களால் எச்சில் படுத்தப்பட்ட பழைய சோற்றைக் கொண்டு எங்கள் பசியைப் போக்கிக் கொள்ள வேண்டுமாம்...உங்களது பழைய கந்தல்களால் எங்கள் நிர்வாணத்தை மறைத்துக் கொள்ளவேண்டுமாம்... தாசிகளைப்போல எங்கள் பெண்கள் அரை நிர்வாணத்துடன் அலைகிறார்கள்... இன்னும்கூட...'

அவன் நடுங்கினான். அவன் மனதின் அடியாழத்தில் கண்ணீர் தத்தளித்தது. கண்ணீரில் நனைந்த அந்த வார்த்தைகளால் அவள் துயரமடைந்தாள்.

'வேசியின் புத்திரர்களென்று எங்களுக்குப் பெயர் சூட்டினார்கள்... உங்கள் ஆடவர்களின் முன்னே திறந்த மார்பகங்களுடன் எங்கள் பெண்கள் நின்றார்கள்...'

அவள் அதிர்ச்சியுற்றவளைப் போலக் கத்த விரும்பினாள். அவளது விழிகளிலிருந்து கண்ணீர் தெறித்து சிதறிற்று.

'இதையெல்லாம் ஏற்க மறுக்கும் ஒவ்வொரு முறையும் நாங்கள் தாக்கப்படுகிறோம்...'

அறையின் சுவர்கள் அவனோடு சேர்ந்து கூச்சலிட்டன. அவன் சொல்பவற்றை ஆமோதிப்பது போல எதிரொலி எழுப்பின.

'உயர்ந்த ஆன்மாக்களென்று உங்களைச்சொல்லிக் கொள்கிறீர்களே... பசுவுக்கும், புறாவுக்கும் நீதி வழங்கியதாகத் தம்பட்டமடித்துக் கொள்கிறீர்களே... எங்கள் குழந்தைகள் கிணற்றில் குதித்தபோது மின்சாரம் பாய்ச்சிக் கொன்றீர்களே...? கால்படி

நெல்மணி அதிகம் கேட்டதற்காக, எங்கள் பெண்களையும், குழந்தைகளையும், இளைஞர்களையும் நெருப்பிலிட்டுப் பொசுக்கினீர்களே?... எங்கள் பெண்களை அம்மணமாக்கித் தெருக்களில் விரட்டியடித்தீர்களே...' எங்கள் மக்களின் கண்களைக் குருடாக்கினீர்களே...? இதற்கெல்லாம் என்ன கை மாறு? எங்கே நீதி?"

ஆனால்கைமாறு செய்வது போல்தான் அவள் அழுதாள். அவனுக்கும் அவளது மூதாதையர்களுக்கும், தனது பாட்டனாரும், மூதாதையர்களும் இழைத்த கொடுமைகளுக்காக அழுதாள். எல்லா வற்றுக்குமான பிராயச்சித்தம் போல அவள் மேனி முழுவதும் கருகிப் போயிருந்தது. அவனுக்குத் தன்னைப் பலியிட்டு கொண்டவனைப் போல எதிர்ப்பின்றி...

ஆனால் இதற்குமேல் சொல்ல மறுத்துவிடுகிறார் கதை சொல்பவர். வேடிக்கையான கதையொன்றைச் சொல்லிமுடித்து விட்டது போல புன்னகைத்தார். கதை கேட்ட குழந்தைகளிடம் புதிர் போடுவது போல தனது வாசகரிடம் சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறார்... வேடிக்கையான ஆள்! அதாவது கதையின் முடிவு எப்படியிருக்குமென யூகிக்கச் சொல்கிறார். அல்லது எந்தமாதிரியாக முடிவை நீங்கள் விரும்புகிறீர்கள், என்று கேட்கிறார்.

சில சாத்தியப்பாடுகளை முன் வைக்கிறார்.

அவன், இறுதியாக, அவளைக் கொன்று விடுகிறான். அல்லது சித்ரவதையின் உச்சத்தாலோ மிக மிஞ்சிய மன அழுத்தத்தாலோ அவள் இயல்பாகவே செத்துப் போய் விடுதல். இந்த இரண்டையுமே விரும்பாத பட்சத்தில் அவன் ஏதாவது ஒரு கட்டத்தில், அவளது கண்ணீரின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு தன் குற்றத்தை உணர்ந்து அவளை விடுவித்தல், திரைப்படங்களிலும், நாவல்களிலும் வருவது போல அவனது செயலுக்குப் பிராயச்சித்தமாக அவளைத் தானே மணம்புரிந்து கொள்ளப் போவதாய் அறிவித்து வாசகரை நெகிழச் செய்தல், மர்ம நாவல்களில் வருவது போல போலீஸ் அல்லது ஏதாவது சமூக சேவை உறுப்பினர்கள் கதவை உடைத்து உள்ளே நுழைந்து, ஆபத்தான் நிலையிலிருந்த அவளைக் கண்டுபிடித்து...

சிரிக்கிறீர்களே...!

கதைச்சொல்பவருக்குக்கூட இதெல்லாம் நகைப்பூட்டக்கூடிய, சிறுபிள்ளைத்தனமான் வாதங்களாகத் தான் தோன்றுகின்றனவாம். இருந்த போதிலும் இந்த மாதிரியான சந்தர்ப்பத்தில் அதுபோலவெல்லாம் தவிர்க்கவியலாமல்...

ஆக, கதை சொல்பவரைப் பொறுத்தவரை எல்லாக் கதைகளையும் போல இதுவும் ஒரு கதை, இல்லையா?. ●

மழை ஓய்ந்த வேளை

□

தமிழன்பன்

முக்காடு போட்டுக் கண்களை மறைக்கிற அளவு கீழே இறங்கியிருந்த கிழிஞ்ச துப்பட்டாவைக் கையால் மேலே தள்ளியபடி கழுத்தை நெளித்துத் தலையை வெளியே நீட்டி ஆகாயத்தைப் பார்த்த பரமசிவம்:

''இந்தக் கெரகம் புடிச்ச மழை ஒரே அடியா நம்மளைத் தொலைச்சுப் போடுமாட்டத்தான் தெரியுது'' என்று தன் கண்களுக்கு முன்னால் கருத்து மந்தை மந்தையாய்த் தாழ்வாக இறங்கி வந்துகொண்டிருந்த மேகங்களைப் பார்த்துத் தலையை மீண்டும் பின்னுக்கு இழுத்துக்கொண்டார்.

வெறுப்பும் சலிப்புமாய், துப்பட்டாவை அது இடம் கொடுக்கிற அளவுக்கு இழுத்துப் போர்த்துக்கொண்டு—குந்தவச்சு உட்கார்ந்து பரமசிவம், அழுக்கும் கந்தலுமாய்ப் போன சட்டைப்பைக்குள் கையைவிட்டுத் துளாவியபோது ஒத்தைப் பீடி அந்த நேரம் அகப்பட்டது, அவருக்கு எவ்வளவோ ஆறுதலாக இருந்தது. நல்ல வேளை வத்திப்பெட்டி நமுத்துப் போகவில்லை. உதட்டில் பீடியைச் செருகிப் பற்றவைத்து இழுத்தபோது, வெதுவெதுப்பு அவர் உதட்டிலிருந்து உடம்பு முழுக்கப் பயணம் செய்ய ஆரம்பித்தது. இழுத்து அவர் வெளியே விட்ட புகை, ஈரக் காற்றுக்கு எதிராகக் கோட்டை எழுப்பிய மாதிரி படர்ந்தது.

அவர் கண்ணுக்கு எதிரில் வண்டிப்பேட்டை. சென்னிமலைக்கு மேல் இருக்கும் ஆகாயம் அகன்று போகாதபடி—அதை இழுத்துப் பிடித்துக் கண்ணுக்குத் தெரியாமல் கட்டி வைத்திருக்கும் மையப் புள்ளி என்றுதான் அதைச் சொல்ல வேண்டும். வண்டிப்பேட்டையின் நடுநாயகமாக ஆறு அல்லது ஏழடி மேடைமேல் நடுவில் பிள்ளையார் கோயில். அந்த மேடையில் சோம்பலுக்கு உற்சவம் நடப்பதுபோல் எப்போதும் வெட்டு புலியாட்டம். அதை ஒட்டிய பரபரப்பு—கைகலப்பு—எல்லாம் நடக்கும். தெற்கும் வடக்குமாய்ப் பயணம் போகப் புறப்பட்டு வந்தவர்கள், மூட்டைமுடிச்சுகளோடு காத்திருப்பார்கள். பேருந்திலிருந்து இறங்கியவர்களும், ஈங்கூர்ப் புகைவண்டி நிலையத்திற்குப் போகிறவர்களும் குதிரைவண்டிக்காரர்களிடம் பேரம் நடத்திக்கொண்டிருப்பார்கள். வண்டிப்

பேட்டையின் இரண்டு பக்கமும் எப்போதும் ஐந்தாறு வண்டி களாவது இருக்கும். அதை ஒட்டித்தான் அரசியல் கூட்டங்கள் நடக்கும் குமரன் சதுக்கம். குமரன் சதுக்கத்தைத் தனது மார்பு போல் கொண்டிருப்பது ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி.

அந்தப் பள்ளி மாணவர்கள் ஒன்றுக்குவிட்ட நேரத்தில் இந்த வண்டிப்பேட்டையில்தான் ஓடி விளையாடிக் கொண்டிருப்பார்கள். தாராபுரத்தாரின் பலகாரத் தள்ளுவண்டி சூடான பக்கடா பஜ்ஜி களைச் சுண்டியிழுக்கும் மசாலா வாசத்தோடு விற்பனையாக்கிக் கொண்டிருக்கும். பரமசிவம் அரசியல் அலசல் நிகழ்த்துவதற்குப் பயன்படும் இடங்களில் ஒன்று இந்த வண்டிப்பேட்டை. தன் நண்பர்கள் அல்லது அறிமுகமானவர்கள் அங்குத் தென்பட்டால்—அவர்களிடம் பயண அடையாளம் தெரிந்தால் 'என்ன சின்னு காங்கயத்திலிருந்தா?' என்றோ ''என்ன, ஈரோட்லேர்ந்து வராப்பலையா?'' என்றோ ஒரு விசாரிப்பையும் அவர் நடத்துவார்.

மழை காரணமாக இப்போது அவருக்குப் பழனிச்சாமியின் சோடாக்கடைப் பலகை புகலிடமாயிற்று. மூன்று குழந்தைகளுக்குத் தாயான பழனிச்சாமியின் மனைவி—தையல்கார முத்துசாமியுடன் ஊரைவிட்டுத் திடீரென்று ஓடிவிட்டாள். வெறுப்பும் அவமானமும் உள்ளத்தில் பள்ளம் தோண்டிப் பழனிச்சாமியைப் புதைத்தன. கடையை இழுத்து மூடிவிட்டுப் போன ஆசாமி எப்போது திரும்பு வார் என்று தெரியவில்லை. பன்னீர் சோடா கேட்டுவரும் பள்ளிக் கூடப் பையன்கள், சிஞ்சர் கேட்டுவரும் பேருந்துப் பயணிகள், சிகரெட், பீடி கேட்கும் நெசவுக்காரர்கள் என்று பலதரப்பட்டவர்க் கும் கடைக்குள்ளிருந்து கிசுகிசு கசிந்துகொண்டிருந்தது. பரமசிவத திற்கு, மழைக்கும் ஊதல் காற்றுக்கும்—இந்தப் பெட்டிக்கடைப் பலகைதான் முடங்கிக்கொள்ள வசதியாக இருந்தது.

'இந்த எழவெடுத்த மழை எப்போ ஓயும்? வெட்டாப்பு உடறாப்லே தெரியிலை...கொஞ்சம் ஓஞ்சுதுன்னா, தெக்காலே வேதகிரி சினிமாக் கொட்டாய்க்கு அந்தாண்டை உள்ள இராமசாமி கடையிலே ஒரு கிளாசு ஊத்திக்கலாம். நேத்து மத்தியானத் திலேர்ந்து வவுறு காலி. இந்தச் சனியன் சாராயத்தைப் பழகி யாச்சு. இனி, கட்டை போற வரையில் உட முடியாதுதான். என்ன பண்றது?'

பரமசிவம் விரக்தியும் வேதனையுமாய், எண்ணங்களிலும் ஈரமழைக் காற்றிலும் குறுகிப் போய் உட்கார்ந்திருந்தார்.

பரமசிவத்தின் அப்பாவுக்கு மளிகை வியாபாரம். அந்தக் காலத்திலேயே பையனை வெளியூர்க்கு அனுப்பிப் படிக்க வைக்கிற

வசதி அவருக்கு இருந்தது. கோபிச்செட்டிபாளையத்தில், விடுதி வசதியோடு கூடிய பள்ளிக்கூடத்தில் பரமசிவத்தைச் சேர்த்திருந் தார். கூர்மையான அறிவிருந்தும் மோசமான சேர்க்கையால் படிப்பை முடிக்காமலே சென்னிமலை திரும்பிய மகனைத் தந்தை தனக்கு உதவியாகக் கடையிலேயே போட்டுக்கொண்டார். பந்து திரும்பிவந்தது; பேசாமல் விட்டிருக்கலாம். திரும்பவும் பாண்டி சேரிக்குச் செலுத்தினார்.

தன் சகோதரின்ஆலையில் தொழிலைக் கற்றுக்கொள்ளட்டும் என்று அனுப்பிவைத்தன் விளைவு—பரமசிவம் மதுக்கோப்பை களில் காலத்தையும், தன்னையும் கரைத்துவிட்டார். இப்போது பந்து கிழிந்தும் அழுக்காகியும் திரும்பிவந்து சேர்ந்தது,

'உருப்படாதவன்' என்று முத்திரை குத்தி அப்பா உதறிவிட் டார். பரமசிவம் குடித்தார். எப்போதும் குடித்தார். அவருடைய திறமை அரசியல் கட்சி அலுவலகம் ஒன்றில் அறிக்கை எழுதவும் துண்டுச் சீட்டுத் தயாரிக்கவும், பேச்சாளர்களுக்குக் குறிப்புகள் எடுத்துக் கொடுக்கவும் பயன்பட்டது. அவரால் தலைவர் ஆனவர் களும், பேச்சாளரானவர்களும் உண்டு. ஏன்—நடந்து முடிந்த தேர்தலில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கூட, அவருடைய தயாரிப்புத்தான். எல்லாவற்றுக்கும் அவருக்குக் கிடைத்தது என்ன? காலம் தள்ளுவதற்குத் தேவையான கைசெலவுத் தொகைதான். சில வேளைகளில் சாப்பாடு—பெரும்பாலும் சாராயமே அவர் தேவையாக இருந்தது.

கட்சி அலுவலகம் விட்டால் பொன்னுசாமி ஆசாரியார் தச்சுப் பட்டறையில், பரமசிவம் விவாதங்களில் வெப்பம் ஏற்றிக்கொண் டிருப்பார். ஊரில் தேர்த்திருவிழா, மகாதரிசனம் என்று சிறப்பான நாள்கள் முகங்காட்டும் போது, இசைக் கச்சேரிகளில் முன்வரிசை யில் அமர்ந்து தன்னை மறந்து லயித்துப்போவார். நல்ல படிகள், சங்கதிகள்—சங்கீதத்தில் கொப்பளிக்கும்போது 'என்னமா வாசிக் கிறாண்டா!' என்று தனக்கு விருப்பமான கெட்ட வார்த்தையோடு சேர்த்து ரசனையை வெளிப்படுத்துவார். விடிய விடியக் கச்சேரி கேட்டுவிட்டு, எங்கேனும், கோயில் திண்ணையிலோ, கடைப்படி களிலோ போய்க் கொஞ்ச நேரம் சுருண்டு கிடப்பார். பிறகு வெறும் வயிற்றில் சாராயம் தகிக்கத் தகிக்கப் பிரவேசிக்கும்.

அனுசரணையாகப் பரமசிவத்தை அரவணைத்துப் போய்த் திருத்தியிருக்கலாம் அவருடைய அப்பா. ஆனால், பிடிவாதம், கோபம், மகனால் தனக்கு ஏற்பட்டுவிட்ட அவமானம்—இவற்றைத்

தள்ளி ஒதுக்கிவிட்டுத் தன் மகனை நெருங்க அவரால் முடிய வில்லை. எப்படியோ தொலையட்டும் என்று விட்டுவிட்டதன் பயன் பரமசிவத்தின் வாழ்க்கையில் திருமணம் இல்லறம் என்ற பரிமாணங் கள் உருவாகவே இல்லை. பரமசிவத்தின் வாலிபம் கேட்ட வினாக் களுக்கு—சென்னிமலையின் மலையடிவாரத்தை ஒட்டியிருந்த மயில்வாகனக் குறட்டருகே சில பெண்கள் விடைகளை வைத்திருந் தார்கள். அவர்களிடத்தும் பரமசிவம் நாணயமாகவே நடந்து கொண்டார். பொய் சொல்வதோ—நம்பிக்கைத் துரோகம் செய் வதோ அவருடைய மயக்கத்திலும் சரி, தெளிவிலும் சரி தலை காட்டியதில்லை.

குடிப்பவர், மோசமான பெண்களோடு தொடர்பு வைத்திருப்ப வர் என்று தெரிந்தும் அவரை அவமதிப்பதற்கு ஊரில் யாருக்கும் துணிவு கிடையாது. இன்னும் சொல்லப்போனால் கெட்டுப்போகா மல் இருந்ததாகக் கருதப்பட்ட பலரைவிடப் பரமசிவம் மதிப்பதற் குரிய மனிதராகத்தான் இருந்தார்.

தன் மூத்த மகனின் நடவடிக்கைகளாலும் தன் கணவருடைய மூர்க்கத்தாலும் உடைந்து போன மரகதம்மாள் மாரடைப்புக்குப் பலியானார். அவர் இருக்கும் வரை அவ்வப்போது ஒருவேளை உணவுக்காவது பரமசிவம் வீட்டுக்குச் சென்றதுண்டு. அதன்பிறகு, அவரை வீட்டுக்கு இழுத்துச் செல்ல எந்தச் சங்கிலியும் இல்லை.

பரமசிவத்தின் தம்பிக்கு அண்ணன்மீது பாசம் நெஞ்சில் இருந் தாலும் அது, மனைவியின் கண்பட்டுப் பொசுங்கிப் போகிறது. என்ன செய்வான்? வழியில் எதிர்ப்பட்டால் ஐந்து பத்து என்று எப்போதாவது கொடுப்பதுண்டு. தீபாவளி, பொங்கலுக்கு வேட்டி சட்டை வாங்கித் தருவதும் உண்டு. ஆனால், எல்லாமே சிதைகிற மாளிகைக்குத் தோரணம் கட்டுவது போலத்தான். சிதைவை யார் தடுப்பது? சரியும் கூரையை, முட்டுக் கொடுத்துத் தூக்கி நிறுத்து வது யார்? தடுத்து நிறுத்த முடியாதபடி சக்கரம் சுழன்று, தேர் எந்த நொடியிலும் கவிழ்ந்துவிடும் என்பது பரமசிவத்துக்குத் தெரியும். எனவே, வாழ்க்கை இறுதி அறிவிப்பை எப்போது வெளி யிடும் என்று அவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கவில்லை.

இதற்கு முன்னோட்டமான சம்பவமாகக்கூட ஒன்றைச்சொல்ல லாம். வேடிக்கையாகத் தோன்றும்—இதுவும் பரமசிவத்தின் வாழ்க்கையில் நடந்த உண்மைச் சம்பவம்தான். ஒரு தடவை, அளவுக்கு அதிகமாகக் குடித்துவிட்டு, கண்ணுக்குள் இருளும்' கால்களின் நடைக்குள் அசைக்க முடியாத கனமுமான நிலை.

ஊருக்கு அப்பாலிருக்கும் எல்லை மாகாளியம்மன் கோயிலிலிருந்து பொன்னுசாமி தச்சுப் பட்டறைக்குத் திரும்பவேண்டும். எப்படி முடியும்? அப்போது பார்த்து, பெரியசாமி, பிணவண்டியான 'சுவர்க்க ரதத்தை' இழுத்துக் கொண்டு ஊருக்குள் புறப்பட்டுக் கொண்டிருந்தான். எல்லை மாகாளியம்மன் கோயில் தாண்டி உள்ள ஓடத்துறைச் சுடுகாட்டுக்கு அன்று ஒரு கிராக்கி கிடைத்த மகிழ்ச்சியில் புறப்பட்ட அவனை நிறுத்திய பரமசிவம், அந்த வண்டியில் ஏறிக்கொண்டார்.

'சாமி! சாமி! இதென்ன இது... இறங்குங்க...'

''தோ பாரு... ஊரிலேர்ந்து மாமூலா என்ன வாங்குவையோ அதே வாங்கிக்கோ மத்தபடி ஒண்ணும் பேசப்படாது, இந்தா புடி..."

பத்துரூபா நோட்டு பெரியசாமி கையில் புகுந்தது.

சுவர்க்க ரதத்திலிருந்து இறங்கிய பரமசிவத்தைப் பார்த்த பட்டறை பொன்னுசாமி,

''டே டே! இதென்னடா பரமசிவம் அக்கிரமமா இருக்குது' என்று சொல்ல மற்றவர்கள் திகிலும் திகைப்புமாய் வாயடைத்து நின்றனர்.

சட்டைப்பையில் கையை விட்டபோது வத்திப் பெட்டி மட்டுமே அகப்பட்டது. சிகரெட், பீடி— ஒன்றும் இல்லை. மழை கொஞ்சம் விட்டிருந்தாலும் ஆகாயத்தின் அச்சுறுத்தல் அகலவில்லை. வேட்டியுள்ளே, கால்சட்டையில் நுழைத்த கை, கசங்கிய ஐந்து ரூபாய் நோட்டோடு வெளியே வந்தது. அது அவர் தேடும் சொர்க்கத்தை. ஒரு கண்ணாடித் தம்ளரில் கொஞ்சமாய்க் கொட்டினாலும் போதுமானது. சுருங்கிக் கிடக்கும் மிடறுக்குள் —நெருப்பின் ஓடை அலை விரித்தால் ஏற்படும் சுகத்திற்கு ஏங்கியவாறு பலகையை விட்டு எழுந்திருந்தார் பரமசிவம். நடுங்கும் விரல்கள், துப்பட்டாவை உடம்பு முழுக்கப் போர்த்திவிட்டு, அவசர அவசரமாகத் துப்பட்டாவுக்குள் தம்மையும் இழுத்து மூடிக்கொள்ளத் துடித்தன.

பலகையிலிருந்து இறங்கிக் கீழேகால்வைத்தால் ஈரம் வாயைப் பிளந்து முதலையைப் போல அவர் பாதங்களைப் பற்றி இழுத்தது. கடையின் ஓரம், செந்நிறமாய்த் தண்ணீர் மாரப்பன் கடை, டீ மாதிரி— சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது. குடைகள் அங்கங்கு மலர்ந்து இருந்தன. வண்டிப் பேட்டைப் பிள்ளையார்கோயில் மேடை வெறிச்சோடிக் கிடந்தது. அவிழ்த்து விடப்பட்டிருந்த குதிரைகள், குளிரின் வெடவெடப்பில், பிடரியைச் சிலிர்த்துத்

தலையை ஆட்டிக் கொண்டிருந்தன. அவற்றின் காது மடல்களிலும், மூக்குத்துவார விளிம்புகளிலும்—முத்து வைத்திருந்தன மழைத்துளிகள். தலைப்பாகையை அவிழ்த்து, முகத்தைத் துடைத்துக் கொண்டபடி — வண்டி ஒட்டுபவர்கள், சவாரி கிடைக்காதபடி சதிசெய்துவிட்ட மழையைச் சபித்தனர். பரமசிவம் கொஞ்சம் நடையை வேகப்படுத்தினார். மீண்டும் மழை பிடித்துக் கொள்வதற்குள் வேதகிரிக் கொட்டாய்ப்பக்கம் போய்த் திரும்பிவிட வேண்டும்.

இருபது முப்பது அடி தூரம் கூடப் போயிருக்க மாட்டார். எதிரில் சிறுமி ஒருத்தி கையில் புத்தகப் பையோடு அழுது கொண்டே வந்தாள். பள்ளிக்கூடம் விடும் நேரம் அல்ல அது. மழையில் நனைந்திருப்பாளோ என்னவோ, மூக்கில் வேறு— வெள்ளை அருவிகள். தேம்பித் தேம்பி விசும்பிக் கொண்டே வந்த அவளைப் பார்த்ததும்,

''பள்ளிக்கூட நேரத்திலே எங்கே போறே நீ! உனக்கு என்ன ஆச்சு?"

சிறுமி நகர்ந்து கொண்டிருந்தாள்.

''உன்னைத்தானே கேக்கறேன்... ஊமைக்கேட்டான்! பதில் சொல்ல மாட்டே?'' பரமசிவத்திற்குக் கோபம் என்று அர்த்தமில்லை. அக்கறையும் அன்பும் கூட அவரிடத்தில் இப்படி வடிவம் எடுக்கும்.

'கணக்கு நோட்டு வாங்கலே. டீச்சர் தொரத்திட்டாங்க...'

'இந்த மழையிலேயா?'

தேம்பியபடி சிறுமி தலையை அசைத்தாள்.

'அவ என்ன டீச்சரா? ராட்சசியா? வா கேக்கலாம்...'

சிறுமி கையைப் பற்றினார் பரமசிவம்.

'போய்க் கேட்டா டீச்சர் கொன்னு போடுவாங்க... என்னை உடுங்க. நான் போறேன்'

'சரி! நோட்டு என்ன வெலை?'

'தெரியாது'— மீண்டும் தேம்பல்.

''இந்தா இதெப்புடி... நோட்டு வாங்கிட்டுப்போ''

சிறுமி கைக்குள் ஐந்து ரூபாய் நோட்டும் பதிந்தது. ஆனால் அவள் வேண்டாம் என்பது போல் தலையை ஆட்டினாள்.

'இப்ப நீ இதெ வாங்கிட்டுப் போய் நோட்டு வாங்கலே... டீச்சருக்குப் பதிலா நானே உன்னைக் கொன்னுபோடுவேன்...

உம்... போ சீக்கிரம்' சிறுமியின் நடை பள்ளிக்கூடம் இருந்த திசையில் திரும்பியது.

பரமசிவம், பழையபடி தனக்கு புகலிடமான பலகைக்குத் திரும்பினார். துப்பட்டாவை நன்கு இழுத்து உடம்பை மூடிக் கொண்டு சட்டைப் பைக்குள் பீடிக்காகக் கையை விட்ட போது— அவருடைய மறதிக்காக அங்கிருந்த வெறுமை வருந்தியது. அங்கு மிங்கும் இருந்த மேகங்களைக் காற்று திரட்டிக்கொண்டு வந்தது.

பலகையிலிருந்து எட்டிப் பார்த்தால் பள்ளிக்கூடம் தெரியும்.

''இந்தப் புள்ளே உள்ளே போயிருப்பாளா?''

எட்டிப் பார்த்த பரமசிவத்தின் முகத்தில் கனிந்த மழை விரல்கள். ●

அநிகேதன் இரு கவிதைகள்

1. உன்னுடையதும்
என்னுடையதுமான
கோவணத்தை
ஆண்குறியுடன்
கந்தல் மூட்டையென நினைத்து
கவ்விக்கொண்டு ஓடிவிட்டது
நாய்

துரத்தியும் முடியவில்லை
ஒருவரையொருவர் குற்றம் சுமத்தியும்
பயனில்லை
ஒப்பாரிப்பாடல் ஒன்றைப்பாடு
கேட்போம்.

2. ஏசுவின் வரவுக்காக
காத்திருக்கிறார்கள் மக்கள்
குடத்துடனும்
தாகத்துடனும்
மீனுக்காக பிணைக்கப்பட்ட தூண்டில் இழையை
இழுத்துக்கொண்டு மணலுக்குள் சொருகிக் கொண்டது
நண்டு.
இருந்தும் தோண்டி எடுத்து பிணைத்து கடலுக்குள்
வீசிவிட்டு

காத்திருக்கிறார்கள் சிறுவர்கள்.
பாதசாரிகளை
ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருக்கின்றன
சாலை ஓர மலக்குவியல்கள்.
நான் போய்க்கொண்டிருக்கிறேன்!

போரும் தீர்க்கதரிசியும்

அதிகக் கவனமும்
மிக அதிக நிதானமும் கொள்ளுங்கள்
சலனமிடும் காற்றையும்
ஓயாது நசநசக்கும் மழையையும்
சற்று அமைதி கொள்ளச் செய்யுங்கள்

சிலுவையிலிருந்து
விசப்புகை சூழ்ந்த அறையிலிருந்து
செயலோய்ந்த கில்லட்டினிலிருந்து
தீர்க்கதரிசியின்
உடலைக் கொண்டுவந்திருக்கிறோம்

பொறுத்திருங்கள்
மரணத்தின் பின் நீளும்
வாழ்வுபற்றி அவரிடம் கேட்கலாம்
தொடரும் பட்டினிச் சாவுகளுடன்
போரின் நாட்கள் ஏவ்வாறிருந்தது?
ஒளியும் இருளும் தோய்ந்த அந்நாட்களில்
பயமற்றுச் சுடர்விடும் அமைதியுடன்
அன்பும் ஈகையும் நிறைந்து
அவர் உடலில் உயிர் தங்கியிருந்ததா?

சகாராவின் வெக்கை
தீர்க்கதரிசியின் உடலைச் சுருக்குகிறது
துரத்தப்படும் அகதிகளின் கூடாரத்தில்
அவர் கிடத்தப் பட்டிருக்கிறார்
புகையும் சாம்பல் பூத்த நகரம்
நமக்குச் சமீபத்திலிருக்கிறது
மிக மிகுந்து பொறுமையுடன்
பூட்டிய கதவின் உள்ளே
நீங்கள்
மூன்றாம் நாளுக்காய்க்
காத்திருங்கள்

மலைச்சாமி

தலித் மக்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் எது விடுதலை? எப்படி?

□

எஸ். என். நாகராசன்

இன்று முன்வந்துள்ள ஒரு பெரும் பிரச்னை — தலித் மக்களின் விடுதலை. இதுபற்றி மார்க்சியர் கொள்ள வேண்டிய பார்வையாக எதைச் சொல்ல முடியும்? தலித் என்பவர்கள் யார் என்பதில் நாம் தொடங்கலாம்.

இந்திய சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, தீண்டத்தகாதவர்களைத்தான் தலித்துகள் என்று சொல்வது பொருந்தும். மற்றவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள். இந்த மக்கள் எவ்வாறு உயர் நிலையை, அதாவது, விடுதலையை எய்துவார்கள் என்பது இன்றைய பிரச்னை. இதை ஒரு மார்க்சியவாதி எவ்வாறு அணுக வேண்டும்? மார்க்ஸ் ஐரோப்பிய சூழலில் இத்தகைய பிரச்னையைப் பார்க்கவில்லை. ஆனால், அவர் வாழ்ந்த சமூகத்தில் ஒதுக்கப்பட்ட பகுதியாக இருந்தது பாட்டாளிவர்க்கம். பாட்டாளிவர்க்கத்தின் விடுதலைதான் அவருக்கு அடிப்படையான கேள்வி. விடுதலை என்பதன் இலக்கணம் என்ன? விடுதலை என்பது பிரிக்க முடியாதது என்றார் மார்க்ஸ். இந்தக் கருத்தை அவர் ரூஸோவிடமிருந்து பெற்றார். இந்தக் கருத்து மேற்கத்திய நவீன வாதத்திற்கு உகந்த கருத்து அல்ல; அதற்கு நேர் மாறான கருத்து.

நவீன கால மேற்கத்திய கருத்து என்பதை மாக்கியவெல்லியிலிருந்து, பேக்கனிலிருந்து பெறுகிறோம். ஒரு சிறுபான்மையினரின் விடுதலை, ஆனந்தம் என்பதை, பெரும்பான்மையினரை, இயற்கையை அடிமைப்படுத்தித்தான் பெற முடியும் என்பது அவர்கள் கருத்து. உலகத்தில் பெரும்பான்மையான மக்களை மேற்கத்தியர் அடிமைப் படுத்துவதற்குமான நியாயம் இதில் உள்ளது. 14-ஆம் நூற்றாண்டிலிருந்து வலுப்பெற்றது இந்தக் கருத்து. இதற்கு நேர்மாறானது ரூஸோவின் கருத்து (விடுதலை பிரிக்க முடியாதது என்பது அவர் கருத்து). அடிமைக்கு விடுதலை வேண்டுமென்றால் ஆண்டானும் விடுதலை பெறவேண்டும். இருவரும் இணைந்திருப்பதன் காரணமாக இருவர் விடுதலையையும் ஒன்றாகத்தான் பெறமுடியும். முழு சமூகத்தையும் விடுவிக்காதவரை,

பாட்டாளிவர்க்கம் தனக்கான விடுதலையைப் பெறமுடியாது என்றார் மார்க்ஸ்.

சமுதாயம் முழுவதும் என்று அவர் குறிப்பிடுவதில் ஆண்டானும் அடங்குகிறான். மார்க்சின் இந்தக் கருத்து மாக்கியவெல்லி, பேக்கன் அவர்களை முற்றாக மறுக்கிறது.

● **இடையில் ஒரு கேள்வி:** ஆண்டானுக்கு விடுதலை என்பது, அடிமைக்கு அடிமைத்தனம். அடிமைக்கு விடுதலை என்பது ஆண்டான் மீது அதிகாரம். இப்படித்தான் இங்கு பேசப்படுகிறது. இது தவறா?

○ **பதில்:** இது தவறு. இது மார்க்சியமல்ல. பொருளுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவுதான் மார்க்சியம் கண்ட பிரச்னை. பொருளை உற்பத்தி செய்பவன், உற்பத்தி செய்யப்பட்ட அந்தப் பொருளோடு கொண்டுள்ள பகை உறவில்தான் அனைத்து விளைவுகளும், அடங்கியுள்ளன என்று மார்க்ஸ் கூறுகிறார். இந்தப் பகை உறவை மாற்ற வேண்டும். இது மார்க்சியம்.

உற்பத்தி உறவின் பகைத் தன்மையை மாற்றவேண்டும். உற்பத்தி உறவை மாற்றுவதன் மூலம், இருவரும் விடுதலை பெறுகின்றனர். பகை உறவுமாறி நட்புறவு ஏற்படுகிறது. உற்பத்தி உறவை மாற்றுவதென்பது, உற்பத்திக்கான கருவிகள் ஒருசிலரின் தனி உடைமை என்பதை மாற்றுவது. இவற்றை பொது உடைமை ஆக்க வேண்டும். அதாவது இருவரும் உழைப்பது, பகிர்ந்து கொள்வது. இப்படி, உற்பத்திக் கருவிகளை பொது உடைமைப் படுத்துகிற பணியை ஆண்டான் செய்யமாட்டான். செய்வதற்கான மனமும் துணிவும் அவனுக்கு இல்லை. முதற்காலத்தில், ஆண்டானுக்கு விண்ணப்பம் செய்வதன் மூலம் அவனை மாற்ற முடியுமென்று மார்க்ஸ் கருதினார். மிக விரைவில் ஆண்டான் தன்னை மாற்றிக்கொள்ளமாட்டான் என்பதை மார்க்ஸ் புரிந்துகொண்டார். இதைச் செய்யும்தகுதி பாட்டாளிவர்க்கத்துக்குதான் உண்டு என்பதைப் புரிந்து கொண்டார். இதன் பிறகுதான் பாட்டாளிவர்க்க இயக்கத்துடன் மார்க்ஸ் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

பாட்டாளி வர்க்கத்தை அவர் எவ்வாறு பார்க்கிறார்? ஒவ்வொரு சமுதாயத்திலும், ஒருபக்கத்தை உடன்பாடான, பழையதைப் பாதுகாக்கிற, பிற்போக்கான பக்கம் என்றும் இன்னொரு பகுதியை படைப்புத்திறன் கொண்ட பகுதி என்றும் மார்ாஸ் பார்க்கிறார். பின்னது, எதிர்மறை சக்தி. இந்த எதிர்மறை சக்திதான் படைப்புத்திறன் கொண்ட சக்தி.

சூழ்நிலையைத் தொடர்ந்து அப்படியே தக்க வைத்துக் கொள்கிற சக்திக்கு இது எதிர்மறையான சக்தி. சூழ்நிலையை இந்தச் சக்திதான் மாற்றுகிறது. மார்க்ஸ் கண்ட சமூகத்தில் இந்த எதிர்மறைச் சக்தியாக இருந்தது பாட்டாளி வர்க்கம். இதை லெனின் ஏற்றுக் கொண்டார். தன் தத்துவக் குறிப்பேடுகளில் லெனின் இதைக் குறிப்பிடுகிறார். பாட்டாளி வர்க்கம், தவிர்க்க முடியாமல் வர்க்கமற்ற சமுதாயத்தைப் படைக்க வேண்டுமானால் பூர்ஷ்வா வர்க்கத்தையும் விடுதலை செய்தே ஆகவேண்டும். ஆண்டான்களை அடிமைப்படுத்தி வைக்கிற பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை விடுதலை என்று கூற முடியாது. தனக்கு விடுதலையை விரும்பாத சமூகப் பகுதியை விடுதலையைநோக்கி எடுத்துச்செல்வதற்குத்தான் பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரம். அடிமைப்படுத்துகையில் அதனுள் அடிமைப்படுத்துகிறவனும் மாட்டிக் கொள்கிறான். இது விடுபட்ட நிலை அல்ல. விடுதலை பிரிக்க முடியாதது என்ற மார்க்ஸ் கூற்றை இப்படித்தான் பொருள் படுத்த வேண்டும். இது ஒரு நீண்டகால நிகழ்வுப் போக்கு. அவசியம்/கட்டாயம் என்ற களத்திலிருந்து விடுதலை என்ற களத்தைநோக்கிச் செல்வது என்பது இதுதான்.

● **இன்னொரு கேள்வி:** புரட்சியின் போது நில உடைமையாளர்களையும் முதலாளிகளையும் கொன்று தீர்த்துவிட வேண்டும். மிச்சமிருப்பவரை பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தின் கீழ் உழைப்பு முகாம்களில் அடைத்து கடுமையான வேலை வாங்கி அவர்களைத திருத்த வேண்டும். அல்லது ஒழித்துக் கட்டவேண்டும்.

அவர்களை இப்படி சக்கையாக்கிய பிறகு சர்வாதிகாரம் தேவையில்லை. இப்படி அர்த்தப்படுத்த முடியாதா?

○ **பதில்:** இப்படிச் செய்தால் சோவியத் ரசியாவில் நடந்தது போல இது திருத்தல் வாதத்தில் தான் போய் முடியும்.

உற்பத்திக் கருவிகள் முக்கியமல்ல. உற்பத்தி உறவுகள்தான் முக்கியமானவை. இதற்குத்தான் மாவோ அழுத்தம் கொடுத்தார். ஆதிக்கவர்க்கத்தோடு சேர்ந்திருக்கிற காலத்தில் அதன் அடிமைப்படுத்தலுக்கு, துன்புறுத்தலுக்கு உள்ளான பாட்டாளி வர்க்கம், ஆதிக்க வர்க்கத்தின் இந்த குணத்தை பெற்று விடுகிறது என்றும் சொல்ல முடியும். புரட்சிக்கு பிந்திய சமூகத்தில் ஆண்டான் அடிமை உறவின் மறு உற்பத்திக்கான வாய்ப்பு இருக்கத்தான் செய்கிறது. இது, விடுதலை பெற்ற நிலை என்று சொல்ல முடியாது. விடுதலைக்கான செயல் தொடர்ந்து நடைபெறமுடியும். முதலாளியம் தன்னை மீண்டும் உயிர்ப்பித்துக் கொள்வதற்கான

வாய்ப்பு இருப்பதை மாவோ சுட்டிக் காட்டினார். உற்பத்தி உறவில் இன்னும் பரிமாற்றம் என்பதனுள் பிரச்னை தொடர்கிறது. உற்பத்திக்கும் பரிமாற்றத்திற்கும் உள்ள முரண்பாடு களைப்பட வேண்டும். உற்பத்தியைப் பெருக்கினால் போதாது. பரிமாற்றத் தின்போது உற்பத்தியின் நலன்கள் ஒரு பகுதிக்குப் போய்ச் சேர்ந்துவிடும். இந்தப் பகுதி பூர்ஷ்வா வர்க்கம். இராணுவமும் கட்சி அதிகாரிகளும் அரசு அதிகாரிகளும் கூடுதலாக எடுத்துக் கொள்கிற போக்கு இது. ரசியாவில் இப்படித்தான் நிகழ்ந்தது.

சமூகத்திற்கு தங்கள் நிர்வாகம் அவசியம் என்று கருதி அவர்கள் எடுத்துக் கொண்டிருந்தார்கள். இந்தச் சூழலில்தான் வெளிநாடுகளில் இருக்கிற பூர்ஷ்வாக்களும் உள்நாட்டில் இருந்த இந்த பூர்ஷ்வாக்களும் கை கோர்த்துக் கொண்டார்கள்.

ஆக, பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரம் என்ற காலகட்டத்தை, விடுதலைக்கான பேரியக்கம் நடைபெறுகிற காலம் என்று பார்ப்பது தான் சரி.

நம் சமூகத்தில் தலித் மக்களின் விடுதலைக்கான வழி என்ன என்பதுதான் ஒரு மார்க்சியனுக்கான பிரச்னை. இடஒதுக்கீடு மூல மாக சட்டசபைகளில் இடம் பெறுவதன் மூலமாக கல்வி வாய்ப்பு, பதவி உயர்வு மூலமாக காலப் போக்கில் விடுதலை சாத்தியமா? இந்தக் கருத்துதான் முற்போக்குவாதிகளின் மத்தியில் உள்ளது. அம்பேத்கரும் இப்படித்தான் கருதினார். பெரியார் கருத்தும் இதுதான். இடதுசாரிகள் சொல்வதும் இதுதான். இடஒதுக்கீடு முதலியவற்றை இப்பொழுது, இவர்களில் யாரும் மறுக்கவில்லை. ஆனால் இது விடுதலையைத் தருமா?

மார்க்சைக் காட்டிலும் லெனின் விடுதலைக்கான போராட்டம் பற்றி அதிகம் சிந்தித்தார். திருத்தல் வாதம்தான் விடுதலைக்கான பெரும்தடை என்று அறிந்தார். திருத்தல் வாதத்தின் இரண்டு அம்சங்கள்; ஒன்று: சீர்திருத்த வாதம் (சீர்திருத்தம் வேண்டும் என்பது அல்ல சீர்திருத்தவாதம்). இன்னொன்று: பொருளாதார வாதம் (பொருளாதார முன்னேற்றம் வேண்டும் என்பதல்ல பொருளாதாரவாதம்). திருத்தல்வாதத்தின் மூலங்கள் என்று இவ்வி ரண்டையும் லெனின் குறிப்பிட்டார். சில ஆண்டுகளுக்கு முன்பு தோழர் ஆனைமுத்து அவர்களிடம் இதைப்பற்றி விவாதித்தேன். இடஒதுக்கல் மூலமாக பிரச்னை தீராது என்பதை ஒப்புக் கொண்ட அவர், நீங்கள் போனஸ் பிரச்னையை எப்படி பார்க்கிறீர்களோ, அதைப் போலத்தான் நான் இந்தப் பிரச்னையைப் பார்க்கிறேன்.

போனஸ் மூலம் பாட்டாளி வர்க்கம் விடுதலை பெறாது. ஆனாலும் போனஸ் தேவை. அதற்குமேல் இதற்கு மதிப்பு இல்லை.

ஆக, இட ஒதுக்கீடு தேவை. இட ஒதுக்கீட்டு வாதம், தவறு. இந்தப் போக்கு வராமல் தடுப்பது எப்படி? தாழ்த்தப்பட்ட சமூகம் முதலில் கல்வி வாய்ப்பைப் பெற வேண்டும். அரசுப் பதவியில் அமர வேண்டும். அரசுப் பதவி என்பதன் மூலம் தங்களுக்கு விடுதலை சாத்தியமில்லை என்பதை அனுபவ பூர்வமாக அறிய வேண்டும். இப்படி சொல்கிற போக்கில், என்ன தவறு?

தொழிற்சங்கம் என்ற வரையறைக்குள் பாட்டாளிவர்க்கம் பூர்ஷ்வாவர்க்கத்தை விட படுமோசமாகும் என்றார் லெனின். தொழிற்சங்கத்திற்குள் தன்னைச் சுருக்கிக் கொள்கிற போது, பணத்திற்குப் பாட்டாளி இரையாகிறான். ஆகவேதான் சோசலிசக் கருத்தை பாட்டாளிக்கும் செலுத்து என்றார் லெனின். அதுபோல 'தலித்' மக்களுக்கு இட ஒதுக்கீடு தேவைதான். ஆனால் இந்த வாதத்திற்கு தலித் மக்கள் இரையாகக் கூடாது. இது பெரும் பிரச்னை. தலித் இயக்கத்தினுள் இப்படி இதுவரை இந்தப் பிரச்னை எழவில்லை. தொழிற்சங்க இயக்கத்தினுள் சோசலிச கருத்து இடம் பெறாததைப் போலத்தான் இதுவும்.

பாராளுமன்றப் பாதை அதாவது சட்டமன்றம் நாடாளுமன்றம் ஆகியவற்றுக்குள் செல்வது என்ற பாதை —எப்பொழுது சரி, எப்பொழுது தவறு? இதுபற்றி இங்கு நாம் பார்க்க வேண்டும். ஐரோப்பாவில் முதற்காலகட்டத்தில் நிலஉடைமையாளரை ஒழிக்க பூர்ஷ்வா வர்க்கம் பாட்டாளிவர்க்கத்தை சட்டசபைக்குள்வா என அழைத்தது. பிற்போக்காளனை அடிக்க இருவரும் சேரவேண்டியிருந்தது. அப்பொழுது பூர்ஷ்வா வர்க்கம் ஜனநாயக சக்தியாக இருந்தது. பிறகு நிலை மாறி விட்டது. இன்றைய நிலையில் ஏகாதிபத்தியத்தையும் நில உடைமை ஆதிக்கத்தையும் அழிப்பதற்காக தனக்குத் துணை சேர்த்துக்கொள்ள பூர்ஷ்வா வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தை இன்று அழைக்க வில்லை. கிராமப்புறங்களில் நில உடைமை ஆதிக்கத்தையும் நகர்ப்புறங்களில் ஏகாதிபத்திய ஊடுருவலையும் ஒழிப்பதற்காக பூர்ஷ்வா வர்க்கம் அழைத்தால் பாட்டாளி வர்க்கம் ஏற்கலாம். இன்று நிலைமை முற்றாக மாறியிருக்கிறது. இந்தியாவில் பூர்ஷ்வாவர்க்கம் நில உடைமை ஆதிக்கத்தை ஒழிக்கவில்லை. இதை எம்.என்.ராய் தொடக்கத்திலேயே கூறினார். இன்றும் அதே நிலைதான். இன்றுள்ள பாராளுமன்றத்தில் புரட்சிகர உள்ளடக்கம் அறவே இல்லை. இந்தக் கேள்வி பாட்டாளிவர்க்கத்துக்கும்,

அதைப் போலவே தலித் மக்களுக்கும் தேவையான கேள்வி. பூர்ஷ்வா வர்க்கத்தோடு சமரசம் செய்து கொள்வதற்காகப் பாராளு மன்றத்தினுள் செல்லலாம். இந்தச் சமரசத்தின் மூலம் பூர்ஷ்வா வர்க்கம்தான் தன்னை வலுப்படுத்திக் கொள்ளும்.

இனி அரசுப் பதவி பற்றி: நாற்பதாண்டு காலத்தில் படிப்பாளி கள், தொழிலாளிகள் அனைவரும், இருக்கிற ஆதிக்கக் கட்டமைப் பினுள் பங்காளிகளாக மாறியதுதான் நடைபெற்றிருக்கிறது.

அரசுப் பதவிக்குள் செல்வதை நாம் மறுக்கவில்லை. அந்தப் பதவியை எவ்வாறு பயன்படுத்துவது என்பதுதான் பிரச்னை. பதவிக்குள் செல்லும் பொழுது, சமூக மாற்றத்திற்காக உழைக்கிற ஒரு புதிய மனிதனாக நீ செயல்பட வேண்டும்.

சில பதவிகளில் இருக்கும் பொழுது அரசு நிர்வாகம், மக்கள் மீது திணிக்கிற ஒடுக்குமுறையை சட்ட ரீதியாகக் கூட உன்னால் தடுக்க முடியும். மேலதிகாரி சொன்னால் கேட்டுத்தான் தீர வேண் டும் என்பது இல்லை. வங்கி ஊழியராக இருக்கிற ஒருவர் ஏழை களுக்கு உதவி செய்ய முடியும். இட ஒதுக்கீட்டின் மூலம் இதுவரை சென்றவர், இப்படிச் செய்கிறார்களா? என்று நாம் கேட்க வேண்டும். வெளியில் இருக்கிற இயக்கம், இந்தக் கருத்தை இவர் களுக்குள் ஏற்படுத்தவில்லை/ஏற்படுத்த வேண்டும். இப்படி செய்தி ருந்தால், பார்ப்பான் வேண்டாம், பறையன் வேண்டும் என்று மக்கள் சொல்லியிருப்பார்கள்.

● **ஒரு கேள்வி :** 'இப்பொழுதுதான் எங்கள் மக்கள் அரசுப் பதவிக்கு சென்று வாழ்க்கை வசதிகளை அனுபவிக்கிறார்கள். வாழ்க்கை வசதிகள் எங்கள் மக்களுக்கு வேண்டாம் என்றா சொல் கிறீர்கள்' இப்படி சிலர் கேட்கிறார்கள்.

○ **பதில் :** வேண்டாம் என்றா நான் சொன்னேன். வாழ்க்கை வசதிகளுக்குள் மூழ்கி தன்னை இழந்துவிடக்கூடாது. வாழ்க்கை வசதி, ஒரு வாய்ப்பு. வாழ்க்கை வசதியை பிறரோடு பகிர்ந்துகொள்ள வேண்டும். நீ ஒரு புதிய மனிதன் என்பதை உணர வேண்டும். தலித் மக்கள் மட்டுமல்ல, பிற்படுத்தப்பட்ட மக்களும் அரசுப் பதவிக்குள் செல்லும்பொழுது இதைத்தான் செய்யவேண் டும். தலித் இயக்கம், தன் திட்டத்தின் ஒரு பகுதியாக இதைக் கொள்ள வேண்டும்.

இன்று, தி.க/தி.மு.க./அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் அரசு பதவியில் இருக்கிறார்கள். இவர்கள் இப்படிச் செய்கிறார்

களா? இல்லை! கிடைக்கிற வசதிகளை அனுபவிக்கிறார்கள். எந்த ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டுமோ அந்த ஆதிக்கத்தின் பகுதியாக இவர்கள் மாறிவிட்டார்கள். பூர்ஷ்வா வர்க்கத்தைக் காப்பாற்றுகிற செயலை அவனைவிட இவர்கள் சிறப்பாகச் செய்கின்றனர். பார்ப்பனன் செய்யும் வேலை எதுவோ அதை இவர்கள் உறுதியாகச் செய்கின்றனர். வெளியில் பார்ப்பனன் பற்றி கடுமையான தாக்குதல். உள்ளேயிருந்து அதை வலுப்படுத்துகிற செயல்.

இனி, கல்வி பற்றி: தலித் மக்களுக்கு இன்னும் கூடுதலாகக் கல்வி வாய்ப்பு தேவை. கல்வியை இலவசமாக இன்னும் அதிக அளவில் அவர்களுக்குத் தர வேண்டும். ஆனால் கல்வி ஆங்கிலத்தில் இருக்கக் கூடாது. ஆட்சிமொழி, கல்வி மொழி அனைத்தும் தமிழ்தான் இருக்க வேண்டும். இப்படி தமிழில் இருந்தால்தான் உயர்சாதிக்காரனோடு இந்த மாணவர்கள் போட்டிக்குச் செல்ல முடியும். தலித் மாணவர்களுக்கான கல்வித் திட்டமென்றும் தலித் இயக்கம் பேச வேண்டும். ஏற்கனவே இருக்கிற கல்வித் திட்டம் மற்ற மாணவர்களைப் போலவே தலித் மாணவர்களையும் கெடுக்கத்தான் செய்யும். இருக்கிற கல்வித் திட்டம் மாணவர்களை மடையர்களாக, மலடுகளாகச் செய்கிறது. நிபுணர்களைத் தயாரிக்க 10/15 ஆண்டுக் கல்வி தேவைப்படுகிறது. 20 ஆண்டுகள் கூடத் தேவைப்படும். கல்வித் திட்டத்தில் செயல்படும் கருத்தியல் பற்றி நமக்கு அக்கறை வேண்டும். தாய்மொழியில்தான் கல்வி. தாழ்த்தப்பட்ட மக்களும் பிற்படுத்தப்பட்டவர்களும், வைக்கிற முதல் முழக்கமாக இதைத்தான் சொல்ல வேண்டும். என்றைக்கும் ஆங்கிலம், இந்திக்கு இடமில்லை என்ற முழக்கம் தலித் மக்களுக்கு, பிற்படுத்தப்பட்டவர்களுக்குத் தீங்கு செய்யும்.

● **இன்னும் ஒரு கேள்வி:** ஏகாதிபத்தியத்திற்கு எதிர்ப்பு என்பதில் தொடங்கி மக்கள் விடுதலைக்கான ஒரு பொதுத்திட்டம் தேவை. இது சமூகத்தின் பல பிரிவினர்க்குமான செயல் திட்டமாக அமைய வேண்டும். இந்தத் திட்டத்தில் தலித் மக்களுக்கான திட்டம் என்னவாக இருக்க முடியும்?

○ **பதில்:** இது பற்றி சிந்திக்கும்பொழுது இஸ்லாமிய மக்கள் பிரச்னையையும் சேர்த்துப் பேசவேண்டும். கடந்த நாற்பதாண்டுகளில் இந்தப் பிரச்னை மெல்ல மெல்லப் பெரிதாகி பூதாகாரமாக மாறியுள்ளது. அவர்கள் இடஒதுக்கீடு கேட்பதில்லை. சிறுபான்மையினர் என்ற முறையில் அவர்கள் உரிமை கேட்கிறார்கள். இவர்களது பிரச்னை, சிறுபான்மையினர் பிரச்னை. கடந்த நான்காண்டு

களாக இவர்களோடு விவாதம் நடத்துகிறேன். இங்கும் விடுதலை என்பதுதான் பிரச்னை. அச்சமற்ற ஒரு சமூகம் தேவை. இந்தியா வின் பெருந் தொழில், வேளாண்மை. இதில் உழைக்கும் சக்தியாக இருப்பவர்களில் ஒரு பெரும் பகுதி தலித் மக்கள். இவர்கள் இல்லா மல் வேளாண்மை இங்கு நடைபெறாது. வேளாண்மைக் களத்தி லிருந்து இவர்களை எந்தச் சக்தியும் விரட்டிவிட முடியாது. இந்தியாவில் சமூகம் வாழ்வதற்கு தலித் மக்கள் என்ற உறுப்பு இன்றியமையாதது. இந்த உறுப்பு இல்லாமல் சமூகம் என்ற உயிர் வாழ முடியாது. இஸ்லாமியர் வேளாண்மை என்ற களத்தில் இல்லை. கேரளாவில் உழவர்களாக இஸ்லாமியர் இருந்தனர். மாப்பிள்ளைமார் கலகம் செய்தவர் இவர்கள்தான். பீகாரில் ஒரு பகுதியிலும், உத்திரப்பிரதேசத்தில் ஒரு பகுதியும் நில உடைமை யாளராக சிறிய அளவில் இஸ்லாமியர் இருக்கின்றனர். இஸ்லாமி யரில் பெரும் பகுதியினர் நகரத்தில் வாழ்கின்றனர். போட்டிகளுக்கு அதிகம் இடம் தரும் தொழிற்சூழலில், நகரங்களில் இஸ்லாமியர் இருக்கின்றனர். கிராமங்களில் இவர்கள் இல்லை. இஸ்லாமியர் இயக்கங்கள் இதுவரை உழவர் பிரச்னை என்று பேசவில்லை. நிலம், நீர், ஆறு, சூழல் சீர்கேடு என்று இவர்கள் பேசுவதில்லை. ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பதில் சூழல் சீர்கேடு என்பது முதன்மை யான பிரச்னை. நகரங்களில் சூழல் சீர்கேடு, என்று தொடங்கி நில, நீர், ஆறு என்று இவர்கள் பேசவேண்டும். மக்களின் பொது வான பிரச்னை என்பதிலிருந்து இஸ்லாமியர் அன்னியப்பட்டு நிற்க முடியாது. தோல் பதனிடும் தொழிலில் இஸ்லாமியர் பெருவாரி யாக ஈடுபட்டுள்ளனர். ஏகாதிபத்தியம் செயல்படும் முக்கிய முனை களில் இந்தத் தொழில் குறிப்பிடத்தக்கது. இதில் சூழல் சீர்கேடு மலிந்துள்ளது. இந்தத் தொழிலில் பெருத்த லாபம் சம்பாதிப்பவர் இஸ்லாமிய முதலாளிகள். இந்தத் தொழிலில் ஈடுபடுவதன்மூலம் பெரும் பாதிப்பை அடைபவர் ஏழை இஸ்லாமியர். இஸ்லாமியர் இதை ஒரு முக்கியப் பிரச்னையாக எடுக்க வேண்டும். இஸ்லாமியத் தலைவர்கள் இந்த இயக்கத்தை எடுத்துச் செயல்பட வேண்டும்.

சூழல் சீர்கேடு என்று தொடங்கி ஏகாதிபத்திய எதிர்ப்புத் திட்டத்தை மார்க்சியர் செயல்படுத்தியிருக்க வேண்டும். தோல் பதனிடும் தொழில் போன்ற தொழில்கள்மூலம் ஏகாதிபத்தியத்திற்கு அனுசரணையாக இருக்கும் இஸ்லாமியரை மார்க்சியர் அணுகி யிருக்க வேண்டும். முதலாளிகளுக்கு எதிராக உழவர்களை, உழைக்கும் மக்களைத் திரட்டியிருக்க வேண்டும்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பதில் இன்று இஸ்லாமியர் பெரு மளவில் முனைப்புக் கொள்வதற்கான காரணங்கள் உலக அளவில்

இருக்கின்றன. மத்தியக்கிழக்கிலுள்ள அரபு நாடுகள் இன்று ஏகாதிபத்தியத்திடம் சிக்கி உள்ளன. ஏகாதிபத்திய நாடுகளுக்கு பெட்ரோலியம் தேவை. பெட்ரோலியத்தின்மீது அரபு நாடுகள் அமர்ந்துள்ளன. சுடுகாட்டின்மீது இவர்கள் அமர்த்திருந்தால் ஏகாதிபத்தியத்தின் தாக்குதல் வந்திருக்காது. பெட்ரோலியம் என்ற சக்தியை தனக்கு வசப்படுத்திக்கொள்வதன் மூலம்தான் உலகத்தை ஏகாதிபத்தியம் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். இந்தப் பெட்ரோலியத்தைக் கைப்பற்றத்தான் ஏகாதிபத்தியம் இஸ்லாமியர் மீது தாக்குதல் தொடுத்திருக்கிறது. ஷேக்குகள் ஏகாதிபத்தியத்திடம் சரணடைத்துள்ளனர். ஏகாதிபத்தியத்திடம் பெற்ற நவீன ஆயுதங்களைக் கொண்டு சதாம் உசேன் ஏகாதிபத்தியத்தை வெற்றி கொள்ள முடியாது. போரைத் தீர்மானிப்பது ஆயுதமல்ல. இறுதி மக்கள் சக்திதான் வெற்றியைத் தீர்மானிக்க முடியும். ஷேக்குகளோ, சதாம் உசேனோ இஸ்லாமியருக்கு விடுதலை தரமுடியாது. ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முற்றாக அழிப்பதன் மூலம்தான் மத்திய ஆசிய மக்களுக்கு விடுதலை கிடைக்கும். ஆகவே, மூன்றாம் உலக நாடுகளிலுள்ள தாழ்த்தப்பட்ட, அடிமைபடுத்தப்பட்ட மக்களோடு சேர்ந்து நின்று இஸ்லாமியர் ஏகாதிபத்தியத்தை எதிர்க்க வேண்டும். இந்தியாவிலுள்ள இஸ்லாமியரும் இதனைத் தம் கடமையாக ஏற்றுச் செயல்பட வேண்டும். இஸ்லாமியருக்கு ஷேக் ஒரு பகைவன். ஏகாதிபத்திய எதிர்ப்பில் இஸ்லாமியர் ஈடுபடும் பொழுது ஷேக்குகளுக்கும் இஸ்லாமியர்க்கும் முரண்பாடு ஏற்பட்டே தீரும். இந்தப் பிளவு ஏற்பட்டால்தான் இஸ்லாமியருக்கு விடுதலை என்ற பாதை புலப்படும்.

இந்தியாவைப் பொறுத்தவரை, இஸ்லாமியரின் தலைமை யாரிடம் உள்ளது? இஸ்லாமியரில் முதலாளிகள், பெரும் படிப்பாளிகள், மௌல்விகள் ஆகிய சிலரிடம்தான் தலைமை உள்ளது. டெல்லியில் உள்ள இமாம் இவர்களோடு சேர்ந்தவர். அத்வானி வளர்க்கும் மூடத்தனத்தைத்தான் இவர்களும் வளர்க்கிறார்கள். ஒருவரின் மூடத்தனம், இன்னொருவரிடம் மூடத்தனத்தை வளர்க்கிறது. இவர்கள் இருவரும் மக்களின் பகைவர்கள். இவர்களால் மக்களுக்கு விடுதலை சாத்தியமில்லை, இவர்களை நம்பிச் சேவை செய்வதன் மூலம் ஏழை இந்துக்களும் முஸ்லீம்களும் இன்னும் அதிக அளவில் அடிமைத்தளையில் மாட்டிக்கொள்கிறார்கள். இந்துக்கள் எனப்படும் ஏழை மக்களும் இஸ்லாமியரும் ஒன்று சேர்ந்தால்தான் விடுதலையைப் பெற முடியும். பாரதீய ஜனதாக் கட்சிக்கு ஏகாதிபத்திய எதிர்ப்புக் கண்ணோட்டம் இல்லை.

● **தொடர்ந்து ஒரு கேள்வி :** ஏகாதிபத்திய எதிர்ப்புக்கான திட்டம் என்பதன் அம்சங்களாகப் பல தெரிகின்றன. இவற்றை நாம் தொகுத்துக்கொள்ள வேண்டும். அவை என்ன?

○ **பதில் :** மகளிர் இயக்கம்—பெண்ணியம், இயற்கைச் சூழல் பாதுகாப்பு இயக்கம், சமாதான இயக்கம், பசுமைப் புரட்சி எதிர் இயக்கம், காடுகளைக் காப்பாற்றும் இயக்கம், உடல் நலத்துக் கான இயக்கம், தொழில்துறையில் சிக்கனச் சீரமைப்பு என்ற பெயரில் தொழிலாளிகளை வெளியேற்றுவதற்கு எதிர்ப்பு இயக்கம், நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம், மக்கள் நலத்தைப் பாதிக்கும் தொழில்கள் கூடாது. சந்தைப் பொருளாதாரம் கூடாது, வேளாண் மைக்கு ஒத்துச் செல்லும் தொழில்துறைதான் தேவை. நவீன தொழில் நுட்ப கல்வி தேவையில்லை. இப்படி பல முனைகளில் செயல்படும் இயக்கங்கள் தேவை. மையத்தில் அதிகாரம் குவியும் எந்த அமைப்பையும் நாம் ஏற்க முடியாது.

● **கேள்வி :** முஸ்லீம்களுக்கும் தலித்துகளுக்கும் பொது வான பிரச்னை என்று எதைப் பார்க்கலாம?

○ **பதில் :** ஒடுக்கப்பட்டவர்கள் என்ற வரையறைக்குள் இவர்கள் எல்லோரும் வருகின்றனர். பிற்படுத்தப்பட்டவர்களும் ஒடுக்கப்பட்டவர்கள்தான். பெண்களும், ஆதிவாசிகளும் ஒடுக்கப் பட்டவர்கள். இவர்கள் பிரிந்து நிற்கக்கூடாது. பாரதீய ஜனதா என்பது இஸ்லாமியர்க்கு மட்டுமல்ல தலித் மக்களுக்கும் எதிரிதான். ஏகாதிபத்தியம், நிலவுடைமை ஆதிக்கம், முதலாளியம் இவற்றோடு பாரதீய ஜனதாவுக்கு பகை இல்லை. இதைப்போலத் தான் காங்கிரஸ் கட்சியும் பிற கட்சிகளும்.

● **கேள்வி :** நிலம் கிடைத்தால் தலித் மக்களின் பிரச்னை தீரும் என்று சொல்கிறார்கள். இது சரிதானா?

○ **பதில் :** இன்று சிறு விவசாயிகளிடமும் நிலம் இருக்கி றது. இவர்களுக்கு விடுதலை வந்துவிடவில்லை. ஏகாதிபத்தியமும் அதன் தொங்கு சதைகளாக உள்ள பல்வேறு சக்திகளும் இவர்களை ஒடுக்கி வைத்திருக்கின்றன. தவிர, தலித் மக்களுக்குக் கொடுப்பதற் கான நிலம் இல்லை. உபரி நிலம் தலித் மக்களுக்குப் போய்ச் சேராது. சேர்ந்தாலும், ஏற்கனவே சொன்னபடி அதனால் அவர் களுக்கு விடுதலை வந்துவிடாது.

○ **கேள்வி :** தலித் மக்கள் தாங்கள் விடுதலை பெறுவதற் குத் தம் கிராமங்களை விட்டு நகரங்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்றும் சிலர் கூறுகிறார்கள். இது சரிதானா?

○ **பதில் :** இன்றுவரை கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் இப்படித்தான் கூறுகிறார்கள். நாட்டைத் தொழில்மயப் படுத்தினால், அதாவது தொழிற்புரட்சியின் மூலம் சாதியம் முதலிய பிரச்னைகள் தீரும் என்கிறார்கள். இது தவறான கருத்து. நகர்ப்புறங்களில் சாதி ஒழிந்துவிடவில்லை. நகர்ப்புறங்களில் ஒடுக்கும் சக்திகளின் பகுதியாக மாறுவதனால் விடுதலை கிடைத்து விடாது. நகரங்களில் உள்ள சேரிகளில்தான் இவர்கள் வாழ்கிறார்கள். இவர்கள் ஆதிக்கச் சக்திகளாக மாற முடியுமா? மாறத்தான் வேண்டுமா?

○ **கேள்வி :** பார்ப்பனீயம்தான், சாதி என்ற ஏணியின் கீழ்ப்படியில் இவர்களை வைத்திருக்கிறது. பார்ப்பனீயத்தை ஒழித்தால் இவர்களுக்கு விடுதலை கிடைக்கும். இக்கருத்து சரியா?

○ **பதில் :** இன்று கிராமங்களில் பார்ப்பனன் இல்லை. அவன் நகரத்திற்கு வந்துவிட்டான். முதலாளியோடும், ஏகாதிபத்திய வாதிகளோடும் அவன் இப்போது சேர்ந்திருக்கிறான். பார்ப்பனீயம் என்பது அடிப்படையில் சாதியம்தான். இன்று கிராமங்களில் சாதியத்தைக் காப்பவர் யார்? ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கு உயர் சாதியினர்க்கு சாதி பயன்படுகிறது. உண்மையில் தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த சமுதாயத்தின் முழுமையான விடுதலையில் எப்பொழுது பங்கு பெறுகிறார்களோ அப்பொழுதுதான் சாதி ஒழியும்.

ஏகாதிபத்தியம் இன்று காடுகள், தண்ணீர், நிலம் முதலிய அனைத்து மூல வளங்களையும் நாசமாக்கிக் கொண்டிருக்கிறது. இதனால் தலித் மக்கள் இன்னும் ஓரங்களுக்கு ஒதுக்கப்படுகிறார்கள். முன்பு இருந்ததைவிட இன்னும் மோசமான சூழலில் இன்று சேரிகள் இருக்கின்றன. இன்று இவர்களை இப்படித் தள்ளிவைத்திருப்பது ஏகாதிபத்தியம்தான். இதை இன்று தலித் இயக்கத்தினர் சரியாகத் தெரிந்துகொள்ள வேண்டும். சமூகத்தின் விடுதலை என்ற கண்ணியில் இவர்களும் இணைந்துகொள்ள வேண்டும். விடுதலை பிரிவு படாதது என்று மார்க்சு கூறியதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

[கேள்விகள் : ஞானி]

நிகழ் வெளியீடு ஜீ. சித்தார்த்தனின் நாவல்

மின்மினிகளின் கனவுக் காலம்

விலை: ரூபாய் இருபது ★ விற்பனை உரிமை: திலீப்குமார்
25, 3வது ட்ரஸ்ட் கிராஸ் தெரு, மந்தைவெளி, சென்னை–28.

காலத்தில் மாலை கோர்

கறுப்புத் துணியால் கண் கட்டி விட்டுக்
காலத்தில் வருவேன் கதை சொல்லி மறைந்தான்
அகாலத்தில் வருவான்
அந்தரிக்கும் இருளிற் கண் திறப்பான் போவான்
அவன் கூடு விட்டுக் கூடு பாயுங் கோமாளி.

நேரம் ஒருமித்து வளராத இக்கட்டில்
கறுத்த பூனையின் மஞ்சட் கண்கள் வழிநடத்தப்
புல்விதையைத் தூவப் போனேன்.
மேளங்கள் உடைந்தன, திருவிழா, மின்னல் கீறி ஒளிந்தது.
'குருடனே உனக்காய்க் குடலையாய்ப் பிரித்தேன்'

ஒருமிப்பு தூரங்கள் அண்மிக்கும் வேகங்கள் காணில்,
ஒரு கடிகாரமாகில்,
காணாத வீணில், பாழில்,
எதுவரினும் எட்டிப் பாய்ந்தாலும்
மதி வேலிக்கரையில் அநாதரவாய் நிற்கும்.
அத்தெருப்பிள்ளை சொன்னது
'காலை பிரகாசன் வருவான்
துக்கிப்புத் தொக்கின் காகங்கள் சொல்லும் மறக்கா'

அண்டங்காகம் அலரியில் சொன்னது.

சீவிதங் காலக்கணிப்பு, விளக்கம், முத்தாய்ப்பு
புல்வளர நீர்தெளித்தல் கர்மம்
கர்மத் தொடர்ச்சி விளக்கம்.
கரிபூசிக் கொண்டு கோமாளி வந்தான்
கண் திறந்தான்

'என்னடா பேதைக் கதைகள்
எங்கேயுன் யுகதர்மம்
காலத்தில் மாலை கோர்
கண்ணீரைத் துடை, உன்கன்னச் சுவடும் காயும்.'

—சேந்தன்

யுலிசெஸ்

□

'சிட்டி' பெ. கோ. சுந்தரராசன்

ஆங்கில நாவல்களில் மிகச் சிறந்த நாவலாக ஜேம்ஸ் ஜாய்ஸ் எழுதிய The Ulysses நாவலைக் கருதுகிறார்கள். ஆங்கில இலக்கியத்தில் இந்த நாவல் ஒரு பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியது. மாடர்னிசம் என்ற நவீனத்துவக் கோட்பாட்டுக்கு இது சான்றாகக் கருதப்படுகிறது. இந்த நாவலில் ஆசிரியர் பயன்படுத்திய நனவோடை என்ற உத்திக்காக இந்த நாவல் பெரிதும் பாராட்டப்படுகிறது.

நனவோடை என்பதை முதலில் குறிப்பிட்டவர் வில்லியம் ஜேம்ஸ் என்ற உளவியல் அறிஞர். ஒரு மனிதன் அறிவோடு பேசுகின்ற பொழுதே, முன்னர் நிகழ்ந்த பல அனுபவங்களையும் நினைத்துக் கொண்டே பேசுகிறான். முன்னைய நினைவுகள் மனநிலை மட்டத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன. ஆனால் ஜேம்ஸ் ஜாய்சுக்கு முன்னரே டாரதி ரிச்சர்ட்சன் என்பவர் பதினான்கு தொகுதிகளில் **பில்கிரிமேஜ்** என்ற நாவலை நனவோடை உத்தி முறையில் எழுதியிருந்தார். வெர்ஜினியா உல்ஃப்-ம் இதே முறையில் ஒரு நாவல் எழுதியிருந்தார். இவர்களுக்கும் முன்பே எடுவார்டு டுஜார்டின் என்ற ஃபிரெஞ்சு நாவலாசிரியர் இந்த உத்தியைக் கையாண்டிருந்தார். யுலிசெஸ் அதன் இலக்கியத் தரத்திற்காகவும் புகழ் பெற்றது. பாலியல் முதலியவற்றை மிகவெளிப்படையாக எழுதியிருந்தார்.

இதன் காரணமாக இந்த நாவல் பலரது கடும் தாக்குதலுக்கு உள்ளாகியது. 1922-இல் வெளிவந்த இந்த நாவலை அமெரிக்காவில் தடை செய்தார்கள். பிறகு 1933-இல் நீதிமன்றத்தில் தடை விலக்கப்பட்டது. கடந்த எழுபது ஆண்டுகளாக பல்கலைக்கழகம் முதலிய வட்டாரங்களில் விரிவான ஆய்வுகளு இந்த நாவல் உள்ளாகப்பட்டது. இதை ஆங்கில இலக்கியத்தின் சிகரம் என்று பலர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

1984-இல் இந்த நாவலின் திருத்தப்பட்ட புதிய பதிப்பு வெளிவந்தது. அச்சகத்திலிருந்து பெற்ற நகல் படிகளில் ஆசிரியர் நீண்ட திருத்தங்களைச் செய்திருந்தாராம். இந்த நகல் படிகளைத்

தொகுத்து, நான்கைந்து பேராசிரியர்கள் இந்தப் புதிய பதிப்பைத் தயாரித்துள்ளனர். 1922-இல் வெளியிடப்பட்டபோது இந்த நாவ லின் பக்க அளவு 600. இப்பொழுது புதிய பதிப்பு 1919 பக்கங்கள். விலை 200 டாலர். 1904 ஆம் ஆண்டு ஜூன் 16 ஆம் நாளின் ஒரு நாள் நிகழ்ச்சியை, பாத்திரங்களின் மன ஓட்டங்களைப் பதிவு செய்வதாக இந்த நாவல் எழுதப்பட்டது. இதை நினைவுபடுத்தும் முறையில் 1984 ஜூன் 16-இல் இந்த நாவல் வெளியிடப்பட்டது.

கிரேக்க மகாகவி ஹோமரின் படைப்பாகிய ஒடிஸி என்ற காவியத்தில் கதாநாயகன் யுலிசெஸ் எதிர்கொள்ளும் பல அனுபவங் களின் அடிப்படையில் இந்நாவலின் அத்தியாயங்கள் தலைப்பிடப் பட்டுள்ளன. உண்மையில் இந்த நாவலின் கரு ஜாய்ஸ் எழுத நினைத்த 'மிஸ்டர் ஹண்டர்ஸ் டே' என்ற சிறுகதையிலிருந்துதான் தோன்றிற்று. ஒருமுறை ஜாய்ஸ் ஒரு தெருச் சண்டையில் ஈடுபட்டு வீழ்த்தப்பட்டபோது இந்த ஹண்டர் என்பவர்தான் அவரை மீட்டு, வீட்டுக்கு அழைத்துச் சென்றார். ஹண்டரின் நடவடிக்கைகளை இந்தச் சண்டை வரை வர்ணித்து, ஒரு சிறுகதை எழுதுவது என்ப துதான் ஜாய்ஸின் திட்டம். அந்த எண்ணம் நிறைவு பெறாமல், அச்சம்பவம் ஒரு பெரிய நாவலுக்கு வித்திட்டது.

முதல் மூன்று அத்தியாயங்களில் ஸ்டீபன் டெடாலசின் எண் ணங்களும், செயல்களுமே விளக்கப்படுகின்றன. பாரிசிலிருந்து திரும்பிய டெடாலஸ் தன்னுடைய வாழ்க்கையை டப்ளினில் கழிப்பதா, மீண்டும் வெளிநாட்டுக்குப் போவதா என்ற பிரச்னையை சமாளிக்க முயல்கிறான். அவனுடைய தாயார் அண்மையில் கால மாகிவிட்டதால் ஒடிசியில் காணும் டெலிமாக்கஸ் என்ற பாத்திரம் போல, அவன் தான் ஒரு அனாதை என்று உணர்கிறான். கதை நிகழும் இரவில் அவன் லியோபால்ட் ப்ளூமின் வீட்டிற்கு வருகி றான். தன்னுடைய குழந்தையை இழந்துவிட்ட ப்ளூம்தான் கதையின் நாயகன் என்ற முறையில் படைக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது அத்தியாயத்தில் ஸ்டீபன் ஒருபள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி விட்டு மூன்றாவதில் டப்ளினுக்குத் திரும்புகிறான். இத்த மூன்று அத்தியாயங்களிலும், ஆன்மீகம், வரலாறு, தத்துவம் கருப் பொருளாகின்றன. அந்நியப்படுத்தப்பட்ட கலைஞனான டெடாலஸ், சரியாக வாழத்தெரியாத ப்ளூம், இருவருடைய நட வடிக்கைகளும் இணைந்து, குறுக்கிட்டு, நாள் முழுவதும் நீடிக்கின் றன. இறுதியில் அவர்கள் சந்திக்கும்போது பிரிந்து விடுகின்றனர்.

நாவலின் முக்கியபகுதி ப்ளூம் காலை உணவு தயாரிப்பதுடன் துவங்குகிறது. அன்று அவன் ஒரு நண்பனின் ஈமச்சடங்குக்குப்

போய்விட்டு, ஒரு விளம்பரம் காரணமாக ஒரு நாளிதழ் அலுவலகத்திற்கும் போக வேண்டும். பின்னர், நூலகத்திற்குச் சென்றுவிட்டு, தெருக்களில் சுற்றுகிறான். ஒரு இசை நிகழ்ச்சி, அதையடுத்து நண்பன் ஒருவனுடன் அரசியல் பற்றிய விவாதம். ஒரு மதுக்கடையில் ஒரு பெண்ணைப் பார்த்தவுடன் அவனுக்குத் தோன்றும் பாலியல் உணர்வுகள், இந்த நடவடிக்கைகளுக்கிடையில் அவன் ஒரு மருத்துவமனையில் டெடாலஸைச் சந்திக்கிறான். இறுதி அத்தியாயங்களில் இருவரும் பல பகுதிகளில் அலைந்துவிட்டு ப்ளூமின் வீட்டில் கூடுகிறார்கள். ப்ளூமின் மனைவி மாலி வேறொருவனுடன் சோரம் போவது ப்ளூமின் அடிமனத்தில் உறுத்திக் கொண்டிருக்கிறது.

யுலிசெஸ் கதையின் போக்கு சிக்கலற்றது என்றாலும், ஜாய்ஸ் கையாளும் விதம் அதைப் பல சிக்கல்களுக்குள்ளாக்குவது போல் தோற்றமளிக்கிறது. மருத்துவமனையில் டெடாலஸைச் சந்தித்த ப்ளூம், சில மருத்துவர்களுடன் பெண் கருவுறும் சம்பவத்தைப் பற்றி விவாதித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறான். இந்த விவாதத்தில் ஜாய்ஸ் ஒரு பெண்ணின் கருப்பையில் நடந்தேறும் வளர்ச்சியை மிகவும் விரிவாக விளங்குவதில் ஆங்கில மொழியின் சாத்தியக் கூறுகள் எட்டப்படுகின்றன. ஆங்கிலமொழியின் ஆரம்ப கால பயன்பாடுகளிலிருந்து நவீன சொற்சேர்க்கைகள் வரை ஜாய்ஸின் எழுத்து விரிவடைகிறது.

ஸ்டீபன் டெடாலஸ், லியோபால்ட் ப்ளூம், மாலி ப்ளூம் மூவரின் நடவடிக்கைகளும் எண்ணங்களும் 1904 ஜூன் 16-ஆம் தேதியாகிய ஒரே நாள் அளவில் நிகழ்வதாக ஜாய்ஸ் நனவோடை உத்தியைப் பயன்படுத்தியதில் அற்புதமான வெற்றி பெற்றிருக்கிறார். ஹோமர் எழுதிய ஒடிஸியின் கதாநாயகன் பல பிரதேசங்களில் பயணம் செய்து பல இடர்ப்பாடுகளை எதிர்கொண்ட காவியப் பொருளை இன்றைய மனிதனின் ஒருநாள் சிந்தனை ஓட்டமாக மீண்டும் படைத்துக்காட்டியதுதான் ஜாய்ஸின் இலக்கியச் சாதனை. இந்த நாவலில் பல இடங்களில் பாலியல் வர்ணனைகள் அப்பட்டமாக நிறைந்திருக்கின்றன.

டெடாலஸ் என்ற எழுத்தாளர், ப்ளூம் என்ற விளம்பரத்துறை அலுவலர், இவருடைய மனைவி மாலி-இம்மூவரின் மன இயக்கங்கள், இதுவரையில் இலக்கியம் தொட்டிராத உயர் அளவில் சொல்லப்படுகின்றன. மனிதர்களுக்குள் விலங்கின் காம உணர்வு சித்தரிக்கப்படுகின்றது. அயர்லாந்தின் டப்ளின் நகரம், ஒரு நகரமாக

விவரிக்கப்படாமல், வாசகன் அந்த நகரத்தில் வாழ்கிற உணர்வோடு சொல்லப்படுகிறது. ஒருநாள் வாழ்வின் இயல்பான நிகழ்வுகள் மனித வாழ்வை பிரதிநிதித்துவம் செய்வது போல சொல்லப்படுகின்றன. இலக்கியம் நூலகத்தில் விவாதிக்கப்படுகிறது. பொது இடத்தில் அரசியல் விவாதிக்கப்படுகிறது. ஒரு மரண ஊர்வலம், ஒரு பிறப்பு ஆகியனவும் இடம் பெறுகின்றன. இத்தகைய விவாதங்களின் மூலம் அப்பட்டமாக பல உண்மைகள் சொல்லப்படுகின்றன. தூய்மை வாதிகளுக்கு இது குற்றமாகப்பட்டது.

1984-இல் வந்துள்ள புதிய பதிப்பு, கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது. நூலில் இடது பக்கத்தில் 1922-ஆம் பதிப்பின் ஒருபக்கம். எதிர்ப்பக்கத்தில் அவ்வப்பொழுது ஜாய்ஸ் செய்த திருத்தங்களோடு புதிய பிரதி. இரண்டு ஆண்டுகள் கழித்து 1986-இல் திருத்திய பக்கங்கள் கொண்ட பதிப்பு வெளியாயிற்று. இதுதான் இப்பொழுது கிடைக்கும் பதிப்பு.

இந்த நூல் 1922-இல் வெளிவந்தது பற்றி சிலமுக்கிய விவரங்கள் சொல்லவேண்டும். அமெரிக்காவிலிருந்து சில்வியாபீச் என்ற பெண்மணி பிரான்சுக்குச் சென்றார். பயணியாகச் சென்ற அவருக்கு பிரான்சில் தேடியபொழுது ஆங்கிலப் புத்தகம் எதுவும் கிடைக்கவில்லை.

ஆகவே ஆங்கிலப் புத்தகக் கடை வைத்தால் என்ன என்று கருதினார். சில நண்பர்களோடு சேர்ந்து ஷேக்ஸ்பியர் கம்பெனி என்ற புத்தகக் கடையை ஆரம்பித்தார். அதாவது ஆங்கிலப் புத்தகக் கடை என்பதற்கு இந்தப் பெயர். எஸ்ராபவுண்ட், ஜான்மாடக்ஸ், போர்டு, டபிள்யு. பி.யீட்ஸ், ஜேம்ஸ் ஜாய்ஸ், டி. எஸ். இலியட், ஸ்காட்பிட்ஸ் கெரால்ட் என்று பல ஆசிரியர்கள் இந்தப் புத்தகக் கடைக்கு அடிக்கடி வந்து இலக்கியம் பற்றி விவாதித்தனர். ஆங்கிலப் பத்திரிகைகள் நேச்சர், பிளேபாய், ஈகோயிஸ்ட் ஆகிய அமெரிக்க இதழ்களும் கிடைத்தன.

இந்தப் புத்தகக் கடை நாளடைவில் இலக்கிய அரங்கமாயிற்று. ஷெர்உட் ஆண்டர்சன் அங்கு வந்தபோது, தன் புத்தகம் அங்கு கிடைத்ததற்காக வியந்தாராம். ஜேம்ஸ் ஜாய்ஸ் இந்தப் புத்தகக் கடையில் வில்லியம் பிளேக்கின் ஓவியங்களைப் பார்த்து பெரிதும் மகிழ்ந்தாராம். ஜாய்ஸிடம் அப்போது பணம் இல்லை. ஏற்கனவே அவர் இளம் ஓவியர் ஒருவரைப் பற்றிய நாவலை வெளியிட்டிருந்தார். எங்காவது ஆங்கிலம் கற்றுக் கொடுத்து வருவாய் தேட விரும்பினார். அவரை ஒரு நாவல் எழுதித்தரும்படி சில்வியாபீச் கேட்டுக் கொண்டாராம். அவருக்குக் கண்ணில்

குளுகோமா. தானே எழுதுகிற பழக்கம் அவருக்கு. கிடைத்த தாள்களில் எல்லாம் அவர் எழுதுவார். சிறிய பென்சிலில், முனை மழுங்கிய சீவப்படாத பென்சிலில் எழுதுவார். இந்தத் தாள்களை ஒழுங்குபடுத்தித் தட்டச்சு செய்யவேண்டும். இப்படிச் செய்து அமெரிக்காவுக்கு அனுப்பினார். அமெரிக்காவில் 'க்வின்' என்ற வழக்கறிஞர் அவ்வப்போது பணம் கொடுத்து வாங்கிக் கொண்டார். 'ஹாரியட் வீவர்' என்பவர் அமெரிக்காவில் 'லிட்டில் ரெவியூ' என்ற பத்திரிகையை வெளியிட்டார். அதில் இந்த நாவல் வெளிவந்தது. வெளிவந்த இந்த நாவல் தான் யுலிசெஸ். நான்கு இதழ்கள் வெளிவந்தவுடன் அஞ்சல் துறையினர், இந்த நாவலைப் பறிமுதல் செய்தனர்.

இந்த நாவல் படிக்க ஆபாசமாக இருக்கிறது. பொதுமக்கள் இதைப் படிக்கக்கூடாது என்பது இவர்கள் கருத்து. அதன்பிறகு, 'க்வின்' இந்த வழக்கை நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்றார். 100 டாலர் தண்டம் விதிக்கப்பட்டது. இதற்கு முன்பு இங்கிலாந்தில் 1919-இல் 'ஈகோயிஸ்ட்' என்ற பத்திரிகையில் வெளிவந்தது. அதிலும் தொடர்ந்து வெளிவரவில்லை. குடும்பங்களில் படிக்கக் கூடிய கதையல்ல என்ற எண்ணம் பரவியது. நூலாக வெளியிட்டு விடலாம் என்று 'சில்வியா பீச்' முடிவு செய்தார். பாரிசில் அச்சுக் கோப்பாளருக்கு ஆங்கிலம் தெரியவில்லை. ஆனால் நூல்எப்படியோ வெளிவந்தது. நிறைய எழுத்துப் பிழைகள். இதைக்கூட ஜேம்ஸ் ஜாய்ஸின் விநோதமான நடை என்று ஏற்றுக் கொண்டனர். ஜாய்சும் நூல் வெளிவந்தால் சரியென்று இருந்து விட்டார்.

அமெரிக்காவில் தடை செய்யப்பட்ட இந்த நூலின் படிகளை அங்கு எடுத்துச் செல்ல முடியாது. ''எர்னெஸ்ட் ஹெமிங்வே'' யின் நண்பர் ஒருவர் தன் ஒவ்வொரு பாக்கெட்டிலும் இரண்டிரண்டு பிரதிகளாக கனடா நாட்டைக் கடந்து எடுத்துச் சென்று விற்று வருவாராம். கனடாவில் அப்போது தடை இல்லை. இதே பதிப்புத் தான் 1936-இல் வெளிவந்தது. மாடர்ன் லைப்ரரி பதிப்பு இது. இது இப்பொழுது கிடைப்பதில்லை.

இந்தப் புத்தகம் வந்தவுடன் 'வர்ஜினியா உல்ஃப்' கூறினார். ''இது நல்ல நாவல் தான். ஆனாலும் தாமஸ்ஹார்டியின் ஜூட் தி அப்ஸ்கியூர் நாவலுக்கு நிகராக இது இல்லை. ஆசிரியர் எழுத்தில் வறுமை தெரிகிறது''. ''மிகவும் ஆபாசமான, நாகரிக மற்ற, அழுக்கு நிறைந்த கதை'' என்று டி. எச். லாரன்ஸ் கூறினார். டி. எஸ். எலியட் ''ஜாய்ஸின் அறிவு, மிகக் கூர்மை

யானது. மனத்தின் ஆழமும், கனமும் நன்கு தெரிகிறது" என்றார். ரிச்சர்ட் ஆல்டிங்டன் கூறியது: ''வியத்தகு உளவியல் நாவல். இந்த நாவலில் எல்லாமே சேர்ந்திருக்கின்றன. கவிதை இருக்கிறது. முரண்பாடுகளும் நிறைய உள்ளன. குறியீடு இருக்கிறது. அவதூறுகளும் நிறைய இருக்கின்றன.'' இப்படிப் பலர் கடுமையாகத் தூற்றினர். சிலர் போற்றினர்.

ஆனால், நாளடைவில் இந்த நாவலுக்கு இலக்கிய மதிப்பு ஏற்பட்டது. பிசாசுத்தனமான இந்தப் பெரிய நாவல் பற்றிய முதல் அதிர்வலைகள் எழுந்தன. ஒழுக்க நெறியைக் காப்பது தங்கள் கடமைதான் என்று தம்மைத்தாமே நியமித்துக் கொண்டவர்கள் வழிவிட்டு ஒதுங்கினர். கடத்தப்பட்ட பிரதிகளைத்தான் படிக்க வேண்டியிருந்தது. இதில் இடம்பெற்ற ஆபாசவர்ணனை வாய் மொழியாகப் பரவியது. இப்படி நூல்வெளிவந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நாவல் புகழ்பெற்றது. எலியட், எஸ்ராபவுண்ட் முதலியவர் பாராட்டிக் கூறியதை முதலில் யாரும் ஏற்றுக்கொள்ள வில்லை; அவர்களுக்கு அப்பொழுது இலக்கியப்புகழ் ஏற்படவில்லை. 1924-இல் இந்த நாவலைத் தூற்றிப்பயனில்லை, சரியாகப் படிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது. 1931-இல் பிபிசி-யில் இந்த நாவல் பற்றிய சொற்பொழிவு ஒலிபரப்பப்பட்டது. இந்த மட்ட எழுத்தாளரைப் பற்றி எதற்கு விரிவுரைகள் என்று 'ஆல்ஃபிரெட் ராய்ஸ்' எழுதினார். 1934வரை இத்தகைய தாக்குதல் இருந்தது. அதன்பிறகு இது மிகப்பெரிய இலக்கியம்தான். இதைச் சந்தேகிக்க வேண்டிய அவசியமில்லை. ஆங்கில இலக்கியத்திற்கே இந்தப் பெரிய நாவல் மூலம் மரியாதை ஏற்பட்டிருக்கிறது என்ற முறையில் இந்த நாவலுக்கு இலக்கியப் புகழ் சேர்ந்தது.

'மனித ஆளுமையின் உள்ளார்ந்த இயக்கத்தை ஜேம்ஸ் ஜாய்ஸ் பயன்படுத்திய நனவோடை உத்தி வெளிக்கொண்டு வருகிறது. ஈகோவின் ரகசிய அறைகளுக்குள் உள்ள உண்மைகளை இது அம்பலத்துக்குக் கொண்டுவருகிறது. சிந்தனையின் அதன் உரு வாக்கக் கணத்திலேயே இது படம்பிடிக்கிறது.'—இவ்வாறு ஒரு திறனாய்வாளர் கூறுகிறார். ஹேரிலெவின், 'பிரக்ஞை என்ற களத்தின் எல்லைகளை ஜாய்ஸ் விரிவு படுத்துகிறார்' என்றார். மனித பிரக்ஞையின் கடைக்கோடி ஆழத்தை ஜாய்ஸ் வெளிப்படுத்துகிறார். பல அடுக்குகளாக அமைந்திருக்கிற பிரக்ஞையின் கன பரிமாணத்தை நேர்கோட்டு முறையில் அமையும் எழுத்தால் வெளிப்படுத்த முடியாது. ஜாய்ஸ் இதற்குப் பயன்படுத்தும் உத்தி

மிகப் பொருத்தமானது. இவ்வாறெல்லாம் திறனாய்வுரைகள் கூறப்பட்டன.

புதிய பதிப்பைப் பல விமர்சகர்கள் எளிதாக ஏற்றுக்கொள்ள வில்லை. இதை எதிர்த்தவர்களில் மிகவும் முக்கியமானவர் 'ஜான்குட்' என்பவர். ஜாய்ஸின் இலக்கியம் முழுவதையும் ஆராய்ந்து தேர்ச்சி பெற்ற ஜான்குட், வர்ஜீனியா பல்கலைக்கழகப் பேராசிரியர். 1988இல், நியூயார்க் ரெவ்யூ ஆஃப் புக்ஸ் இதழில் இவர் 'யுலிசெஸ் விவகாரம்' என்ற தலைப்பில் புதிய பதிப்பைக் கடுமையாக விமர்சித்திருந்தார். 1930இல் இந்த நாவல் இதே தலைப்பில் இதே இதழில் முதலில் விமர்சிக்கப்பட்டிருந்தது. ''இந்த பதிப்பில் பல ஆயிரக்கணக்கான துரதிர்ஷ்டவசமான அம்சங்கள் இருக்கின்றன'' என்று குறிப்பிட்டார். மற்றும், இவ்வாறு புதிய பதிப்பைக் கொண்டு வந்தது, ஜாய்ஸ் வாரிசுதாரர் நிறுவனத்தார், மீண்டும் 75 ஆண்டுகளுக்குப் பதிப்புரிமை கொண்டாடுவதற்காகவே மேற்கொள்ளப்பட்ட செயல்என்றும் சொன்னார். ஜாய்ஸ் உயிருடன் இருந்தபோதே வெளியான பதிப்பை, மீண்டும் திருத்துவது முறை யல்ல என்றும் அவர் கருதினார். பழைய பதிப்பில் காணப்பட்ட பிழைகள் திருத்தப்பட்டபோது அந்தப் பிழைகளெல்லாம் ஜாய்ஸின் விருப்பப்படி இப்பொழுது திருத்துவது சாத்தியமில்லை என்பது அவர் கருத்து. 1941இல் ஜாய்ஸ் மறையும்வரை, நடைமுறையில் இருந்த பழைய பதிப்பைத் திருத்த வேண்டிய அவசியத்தை ஜாய்ஸ் எப்பொழுதும் குறிப்பிட்டதில்லை என்பதையும், அவர் வலி யுறுத்துகிறார். இந்தப் புதிய பதிப்பு 1984இல் வெளிவந்தபோது பழைய பதிப்புகள் கிடைக்கவில்லை. ஜாய்ஸ் நிறுவனத்தார் அவற்றை வெளியிடாமல், திருத்தப்பட்ட புதிய பதிப்பையே விற்பனைக்கு வழங்கினர். ஆனால் 1992 துவக்கத்திலிருந்து பழைய பதிப்புக்கான பதிப்புரிமை செல்லுபடி ஆகாதாகையால், அந்தப் பதிப்புகளும் இலக்கியவாதிகளுக்குக் கிடைக்கும் வாய்ப்பு இருக் கிறது. ஆங்கில இலக்கிய வரலாறில் ஒரு முக்கியமான திருப்ப மாக அமைந்த ஜேம்ஸ் ஜாய்ஸின் யுலிசெஸ் நாவல் முதலில் எழுதப்பட்ட தோற்றத்திலும், இலக்கிய வல்லுநர்களால் திருத்தப் பட்ட வடிவிலும் கிடைப்பது இலக்கிய ஆய்வாளர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாகும். ●

நிகழ் 24-ன் தொடர்ச்சி

பெண்ணியல் திறனாய்வு

ஆங்கில மூலம்: ரெமன் செல்டன் மொழியாக்கம்: பஞ்சு

பெண்களின் எழுத்தும் அவ்வெழுத்தைப் பற்றிய திறனாய்வாளர்களும்

எலைன் ஹோவால்டர் தம்முடைய 'அவர்களுக்குச் சொந்தமான இலக்கியம்' (A literature of their own—1977) என்ற நூலில் பெண்களின் அனுபவ அடிப்படையில் இங்கிலாந்து நாட்டின் பெண் நாவலாசிரியர்களை ஆராய்கிறார். பெண்களுக்கென்றே நிலையான—தனிச் சிறப்பான—பாலியலோ அல்லது அவர்களுக்கென்றே கூறத்தக்க தனியான கற்பனைகளோ கிடையா எனினும் பெண்களின் எழுத்துக்களுக்கும் ஆண்களின் எழுத்துக்களுக்கும் ஆழமான வேறுபாடுகள் உள்ளன; அப்படியிருந்தும் பெண் எழுந்தாளர்களாலான ஒரு பெரிய மரபு, ஆண் திறனாய்வாளர்களால் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. இத்தகைய கோணத்தில் இருந்து ஹோவால்டர் மதிப்பீடு செய்துள்ளார். (தமிழிலும் இந்த மரபைக் கண்டெடுத்து எழுத வாய்ப்பிருக்கிறது) இங்கிலாந்தில் பெண் எழுத்தாளர்களின் இலக்கிய மரபை மூன்று பகுதிகளாகப் பிரித்துக்கொள்கிறார்.

1. 1840—1880: இந்த இடைப்பட்டகாலத்தை முதல் பிரிவாகக் காண்கிறார். இக்கால கட்டத்தில் எலிசபெத் காஸ்கெல், ஜியார்ஜ் எலியட் ஆகியோர் அடங்குவர். இக்கால கட்டத்தைச் சார்ந்த பெண் எழுத்தாளர்கள் ஆதிக்கம் செலுத்திய ஆண் எழுத்தாளர்களின் அழகியல் குணத்தை அப்படியே போலச் செய்தனர்; தங்களுடையதாக உள்வாங்கிக் கொண்டனர். இக்காலப் பெண் எழுத்தாளர்கள் எழுத்தின் உள்ளடக்கம், மிக நெருக்கமாக பரிச்சயமான தனிப்பட்ட / சமூகம் சார்ந்த வட்டத்தை ஒட்டி அமைந்திருந்தது. இக்காலப் பெண் எழுத்தாளர்கள் 'மிகக் கண்ணியமான எழுத்தாளர்கள்' என்ற பேர் பெற்று விளங்கினார்கள். தங்கள் படைப்பிற்கான உரிமை கோருவதற்குக்கூட 'குற்ற உணர்வில்' தவித்தனர்.

எழுத்தில் எல்லாவற்றையும் எழுதிவிட முடியாது. சில எல்லைகள் உண்டு என்பதை ஏற்றுக்கொண்டனர். வேகமாகவும் உணர்ச்சிகர மாகவும் படைப்புத்தளத்தில் ஈடுபடுவதைக்கூடத் தவிர்த்தனர்.

2. 1880—1920: இந்த இடைப்பட்ட காலத்தை இரண் டாவது பிரிவாகப் பிரித்துக் காணகிறார். எலிசபெத் ரோபின்ஸ் போன்றவர்கள் இக்காலக் கட்ட எழுத்தாளர்கள் ஆவர். இவர்கள் புரட்சிகரமானவர்களா விளங்கினர். பெண்களுக்காகத் தனிக்

கருத்துலகயையும், தனி மொழியுரிமையையும் உருவாக்க வேண்டும் என வாதாடினர்.

3. 1920க்குப் பிறகுள்ள காலகட்டத்தை மூன்றாவது பிரிவாகப் பிரித்துக் காண்கிறார். இக்காலக்கட்டம், முதலிரண்டு காலகட்டங்களில் உருவான குணங்களைத் தனக்குள் உள்வாங்கிக் கொண்டு பெண்களுக்கே உரிய தனியான எழுத்துக்கள், அவர்களுக்கே உரிய சிறப்பான அனுபவங்கள் என்ற கருத்தாக்கங்களை வளர்த்துக்கொண்டது. ஹோவால்டர் கருத்துப்படி, ரேபிக்கா வெஸ்டு, காத்திரையின் மேன்ஸ்பீல்டு, டோரோத்தி ரிச்சர்ட்சன் ஆகியோர் இக்கால கட்டத்தின தொடக்ககால நாவலாசிரியர் ஆவர். இதே காலகட்டத்தில் ஜாய்ஸ், பிரௌஸ்ட் ஆகியோர், தனிமனித அக உலக நாவல்களை மிக நீளமாக எழுதினர். இதைப் பின்பற்றி **டோரோத்தி ரிச்சர்ட்சன்,** பெண்ணின் அக உலகைச் சித்தரிக்கும் நாவலை (Pilgrimage) எழுதினார். இப்பெண் எழுத்தாளரின் படைப்புப்பற்றிய அணுகு முறையானது, நவீன பெண்ணியல் கொள்கைகள் உருவாவதை முன்னறிவிப்பதாக விளங்கியது. இவர் பெண்களுக்கு இருக்க வேண்டிய ஒருவகையான எதிர்மறை ஆற்றலை ஆதரித்துப் பேசினார். ஆண்களின் தன்மையென இவர் கருதுகிற நிலையான, மாறாத ஒன்றாக ஒன்றை வரையறுக்கும் பார்வைகளையும், அப்படியான கருத்துகளையும் இவர் புறக்கணித்துப் புறம் தள்ளினார். ‘பன்முகப் பட்ட ஏற்பு நிலை’ என்ற கோட்பாட்டையே ஆதரித்தார். மேலும் பெண் எழுத்தில் விளங்குகின்ற ‘வடிவமின்றிக் கொட்டுகின்ற’ பிரச்னையைக் காரண காரியத்தோடு விளக்கினார். இவ்வாறு கொட்டுவது பெண்ணின் இயல்பான வெளிப்பாட்டு முறையாகும் என்று கண்டு, அதை ஒரு கோட்பாடு என்ற அளவிற்கு வளர்த்தெடுத்தார். மேலும் நீள்வட்ட வடிவமாகவும், துண்டு துண்டாகவும் வாக்கியங்களை வேண்டுமென்றே அமைத்து எழுத முயற்சி செய்தார். ஏனென்றால் பெண்களின் மனமும் அவ்வாறுதான் வடிவமைக்கப் பட்டிருக்கிறது, நெய்யப்பட்டிருக்கிறது என்ற தம்முடைய கருத்தை நிறுவ அவ்வாறு எழுத முயன்றார். மேலும் இவ்வாறு எழுதினார்:

‘‘வெர்ஜினியா வுல்ப்க்கு பிறகு சமூக அங்கீகாரமற்ற உறவு, ஓரினப் புணர்ச்சி முதலிய பாலியல் வடிவங்கள் பெண் எழுத்தாளர்களின் புனைகதைகளில் புகத் தொடங்கின. [சிறப்பாக (Jean Rys) எழுத்துகளில்]. பிறகு பல்கலைக் கழகத்தில் படித்த பெண்களின் வருகை மூலம் ஒரு புதிய தலைமுறை உருவாயிற்று.

இவர்கள் பெண்களின் அமைதியின்மையை/நிறைவின்மையைத் தங்கள் எழுத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்ற தேவை இருப்பதைச் சிறிதும் உணர்ந்து எழுதியாகத் தெரியவில்லை. ஆனாலும் எழுபதுகளின் தொடக்கத்தில் ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டது. இக்காலப் பெண் எழுத்தாளர்களின் எழுத்துக்களில் கோபக்குரல் வெளிப்படையாக வெளிப்பட்டது.''

ரிச்சர்ட்சன் போலவே, பெண் எழுத்தாளர்களின் எழுத்தைப் பற்றி வெர்ஜினியா வுல்ப்-ம் ஆழமான கருத்துக்களை முன்வைத்துள்ளார். நவீனப் பெண்ணியல் திறனாய்வில் ஒரு முக்கியமான முன்னோடியாக விளங்குகிறார். பெண்ணியல்வாதி போல அவர் இயங்கவில்லை என்றாலும் கூட, பெண் எழுத்தாளர்கள் எதிர் கொள்ளுகின்ற பிரச்னைகளின் மேல் தொடர்ந்து கவனம் செலுத்தி வந்தார். பெண்களின் இலக்கிய ஆர்வத்திற்குத் தொடர்ந்து தடையாகவும் பிரச்னையாகவும் இருந்து வருபவை அவர்களுடைய சமூகம், மற்றும் பொருளாதார நிலைமைகள் தாம் என்று அவர் நம்பினார். தமக்குக் கிடைத்த கல்விகூட, பெண்ணாக இருந்ததால் தான் குறிப்பிட்ட எல்லைக்குள் உட்படுத்தப்பட்டு விட்டது என்றும் அறிந்திருந்தார் (எ.கா: அவருக்கு கிரேக்க மொழி தெரியாது). புளூம்ஸ்பரி-யினுடைய (Bloomsbury) பாலியல் கருத்துக்களைப் பின்பற்றியதால் ஆண்/பெண் இடையிலான பாலியல் போராட்டத்தை அமைதியான முறையில் தீர்த்துக் கொண்டார்.

பெண்ணியல்வாதிகளின் மனநிலையை/பார்வையை உதறித் தள்ளினார். மேலும் ஆணின் சுய இருப்பு உணர்விற்கும் (Male self realisation), பெண்ணின் சுய அழிவுணர்விற்கும் (female self annihilation) இடையிலான ஓர் நடுநிலைப்பாட்டைச் சாதிக்க முடியும் என நம்பினார். தம்முடைய பெண்மை எப்பொழுதும் நனவிலி நிலையிலேயே இருக்க வேண்டுமென விரும்பினார். அப்பொழுதுதான் பெண்மையை அல்லது ஆண்மையை எதிர்த்து நிற்க நேர்வதிலிருந்து தப்பிக்க முடியும் என்றார்.

பெண்களின் எழுத்தைப் பற்றி எழுதியதில் வெர்ஜினியா வுல்ப்-னுடைய செல்வாக்குமிகுந்த, ஆர்வம் தருகின்ற கட்டுரை ''பெண்களுக்கான வேலைப்பாடுகள்'' (professions for women) என்ற கட்டுரையாகும். அதில் தம் சொந்த அனுபவங்களையே பதிவு செய்துள்ளார். முதலில், 19ஆம் நூற்றாண்டு எழுத்தாளர்களைப் போலவே இவரும் ''பெண்களுக்கே உரிய சிறப்பம்சம்'' (Womenhood) என்ற கருத்தாக்கத்தால் பெரிதும் கவரப்பட்டுள்ளார்.

வீட்டின் தேவதை, ''பெண்'' என்ற கருத்துடைய இவர், பெண்கள் இரக்கமிக்கவர்களாக, சுய நலமற்றவர்களாக, தூய்மையானவர்களாக விளங்க வேண்டும் என்கிறார். தங்கள் எழுத்தில் தங்களைப் பற்றிய சுய விமர்சனங்களை முன்வைப்பதற்கும் நேரமும் இடமும் ஒதுக்கவேண்டும் என்கிறார்.

இரண்டாவதாக, பெண்கள் தங்கள் உணர்ச்சிப் பெருக்குகளை அப்படியே வெளிப்படுத்தலாகாது என்ற சமூகத தடை (Taboo), இவர்தம் உடல்சார்ந்த சொந்த அனுபவங்களைச் சொல்லவிடாமல் தடுத்துவிட்டது. இவ்வாறு பெண்களின் பாலியல் உணர்வுகளையும், நனவிலி மன ஓட்டங்களையும் சொல்லவிடாமல் தடுக்கின்ற சமூகத் தடையை இவர், தமது சொந்த வாழ்விலோ அல்லது படைப்புகளிலோ என்றுமே மீறியது கிடையாது. எனவே உண்வமயிலேயே பெண்களின் 'நனவிலி உலகம்' பற்றிய நம்பிக்கை இவருக்குக் கிடையாது. ஆனால் பெண்களின் சிந்தனை ஆற்றலில் நம்பிக்கை வைத்திருந்தார். மேலும் பெண்கள் ஆண்களைவிட வேறுபட்ட முறையில் எழுதுவதற்குக் காரணம் ஆண்களைவிட வேறுபட்ட உளவியல் கூறு உடையவர்கள் என்பதல்ல; மாறாக பெண்களின் சமூக அனுபவம் வேறாக இருப்பதுதான் என்றார். பெண்களின் அனுபவம் பற்றி எழுதுவதற்கு இவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாம் சுயசிந்தையுடனும் மிகவும் விழிப்புணர்வுடனும் மேற்கொண்டவையாகும். இவ்வாறு முயற்சி செய்து, ஒரு எல்லைக்குள் உட்பட்ட பெண்களின் வாழ்க்கையை விளக்குவதற்கு அதற்கே உரிய தனிச் சிறப்பான மொழி நெறியைக் கண்டுபிடிப்பதே இவருடைய நோக்கமாக இருந்தது. என்றைக்குப் பெண்கள், சமூகம் பற்றும் பொருளாதார நிலைகளில் ஆண்களுக்குச் சமமான நிலையை அடைகிற சாதனையைப் பெறுகிறார்களோ அன்றைக்கு, பெண்கள் தங்களுக்கான கலை-இலக்கியத் திறமையைச் சுதந்திரமாக வளர்த்துக்கொள்வதை எந்த ஒரு சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்று நம்பினார்.

பெண் எழுத்தாளர் பற்றிய திறனாய்வில் குறிப்பிடத்தக்க மற்றொரு நூல், மேரி எல்மான் (Marry Ellmann) எழுதிய பெண்களைப் பற்றிய சிந்தனைகள் (Thinking about women—1968) என்ற நூலாகும். பெண் எழுத்தாளராகிய இவர் நவீன பெண்ணியத்தின் ஆரம்பகால எழுத்தாளராவார். இவர் லிங்கமையவாதத்தை மிகவும் அறிவு ஆற்றலுடன் தாக்கினார். வால்டர் பேட்டரின் ''கலையின் ஆண் தன்மை'' என்ற அபத்தமான கருத்தைக் கேலி செய்தார். மேலும் இவர் ஹோவால்டர் போல்

பெண்கள் எழுத்துக்களைப் பெண்களின் அனுபவங்களோடு மட்டும் அடையாளம் காணுவதை மறுத்தார். அவைகளைச் சில இலக்கிய நடைகளோடு உறவுபடுத்தி ஆராய்ந்தார். பெண் எழுத்தாளர்கள் சிலர் ஆண்களின் ஒரு புள்ளியில் குத்திட்ட நிலையான அணுகுமுறை களைப் புரட்டிவிடுகின்றனர். சிலர் அதிகமான அதிகாரத்தொனி யோடு எழுதுகின்றனர். சிலர் மிகத் தீவிரமான உணர்ச்சிப் பெருக் கோடும் செயல் நோக்கோடும் எழுதுகின்றனர். பாலியல் வர்ணனைகளில் பழமையான மரபுகளைத் தகர்க்கின்றனர். ஆண் களின் மதிப்பீடுகளைத் தலைகீழாக மாற்றுகின்றனர். தடுக்கப் பட்டவைகளின் மேல் அதிக ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர். ஏனென்றால் ஆண்களின் அதிகாரத்தை இங்கேதான் தகர்க்க முடியும் என நம்புகின்றனர். இவ்வாறு மேரி எல்மான் பெண் எழுத் தாளர்களின் எழுத்துக்களை அடையாளம் காண்கின்றார்.

பிரெஞ்சு நாட்டுப் பெண்ணியமும் திறனாய்வுக் கொள்கைகளும்

இந்நாட்டுப் பெண்ணியல் திறனாய்வு பெரிதும் ஆழமாக உளப் பகுப்பாய்வுக் கொள்கையின் செல்வாக்கிற்கு உட்பட்டிருக் கிறது. குறிப்பாக, பிராய்டின் கொள்கைகளின் மேல், லக்கான் நடத்திய மறு ஆய்வுகள் மூலம் பெரும் செல்வாக்கிற்குள்ளாகி உள்ளது. லக்கான் நடத்திய இவ்வாய்வுகள் காரணமாக, பிரெஞ்சுப் பெண்ணியல் திறனாய்வாளர் பலர், பிராய்டின் மேல் கொண்டிருந்த பகையுணர்வை விலக்கிக் கொண்டுள்ளனர். லக்கா னுக்கு முன்பு பிராய்டின் கொள்கைகளை (குறிப்பாக அமெரிக்கா வில்) வெறுமனே மிகவும் குறுகிய அளவில் அதாவது இயற்கை யான உயிரியல் கூறு கொண்டவை—என்ற அளவில் அணுகினர்.

ஒரு பெண் குழந்தை, ஆண் குழந்தையின் பிறப்புறுப்பைப் பார்த்து தனக்கு அது இல்லை என்பதால், தன்னைப் பெண் என்று அடையாளம் கண்டுகொள்கிறது. இவ்வாறு தனக்கு அந்த உறுப்பு இல்லை என்று எதிர்மறையின் மூலமாகத் தன்னை அடையாளம் கண்டுகொள்வதால், தவிர்க்க முடியாதபடி, ஆணுறுப்பின்மேல் உருவாகும் பொறாமை உணர்வினால் துன்புறுகிறது. பிராய்டின் கொள்கைப்படி, இந்தப் பொறாமைக் குணம் உலகப் பொது வானது. இந்தக் குணம்தான் பெண்களிடம் உருவாகும் பிறப் புறுப்பை இழந்துவிடுவோம் என்ற பயச்சிக்கலுக்கு (castration complex) காரணமாகும்.

இந்தச் சிக்கலின் காரணமாகத்தான் பெண்களே தங்களை ஆண்மை இழந்தவர் (Hommes manqne's) எனக் கருதுகின்றனர். பிராய்டின் இத்தகைய பார்வைக்கு எர்னஸ்டு ஜோன்ஸ்தான் ''ஆண் பிறப்புறுப்பு மையவாதம்'' (அ) லிங்கமையவாதம் (phallo centrie) என்ற பெயரைச் சூட்டினார். இந்த சொல்லாட்சியைத் ஆணாதிக்கத்தைப்பற்றிப் பேசும் போது எல்லா பெண்ணியல் வாதிகளும் பொதுவாகப் பயன்படுத்துகின்றனர்.

ஜூலியட் மிட்செல் (Juliet Mitchell) தம்முடைய உளப்பகுப் பாய்வும் பெண்ணியமும் (psycho analysis and Feminism-1975) என்ற நூலில் பிராய்டிற்கு ஆதரவாகப் பேசுகிறார். பிராய்டினு டைய உளப் பகுப்பாய்வுக் கொள்கைகள் ''தந்தை வழி அதிகார அமைப்பை''ப் பரிந்துரைப்பதல்ல; மாறாக அந்த அமைப்பைப் பகுத்தாய்பவை ஆகும். பிராய்டு சமூக உண்மைகளின் மன வெளிப்பாட்டைத்தான்) mental representation) விளக்குகிறாரே ஒழிய, அந்தச் சமூக உண்மைகளையே அல்ல என ஜூலியட் நம்புகி றார். ஆனாலும் இவ்வாறு பிராய்டினுடைய லிங்க மையவாதத் திற்கு ஜூலியட் கூறுகிற சமாதனக் கருத்துக்களால் பல பெண்ணி யல் திறனாய்வாளர்களைத் திருப்திப்படுத்த முடியவில்லை, ஏனென்றால் பிராய்டை மறுசீரமைப்புச் செய்யும் இவரது முயற்சி, லக்கானின் முயற்சியோடு ஒத்து இருந்தாலும், லக்கான் சசூரின் மொழியியல் கோட்பாட்டைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது போலத் தானும் பயன்படுத்திக் கொள்ளத் தவறியது தான்.

கீழ்ப்படிந்தது போதல் (passive), சுய காதல் மேற் கொள்ளு தல் (narcissistic), தன்னைத் துன்புறுத்தும் கொடுமையில் இன்பம் காணும் தன்மை (masochistic), ஆண் பிறப்புறுப்புப் பொறாமை-ஆகிய குணங்களை இயல்பாகவே பெண்கள் கொண்ட வர்கள் என்ற அணுகுமுறைக்கு எதிராகப் பெண்ணியல் வாதிகள் தவிர்க்க முடியாதவாறு இயங்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளா கின்றனர். உண்மையில் இக்குணங்கள் எல்லாம் பெண்களிடையே இயற்கையாகவே ஒன்றும் அமையவில்லை, ஆண்களின் அளவு கோலினால் இத்தகைய குணங்கள் கற்பிக்கப்படுகின்றன என எடுத்துக்காட்டுகின்றனர். மேலும் சில பிரெஞ்சு பெண்ணியல்வாதி கள், பிராய்டின் ஆண் பிறப்புறுப்பு (அ) ''லிங்கம்'' என்ற சொல் லாட்சி குறியீட்டுக் குணம் கொண்டது; நேரடியாக அந்த இயற்கை உறுப்பைக் குறிப்பது அல்ல என வலியுறுத்திப் பேசு கின்றனர். இதற்கு ஏற்ப லக்கானும், செழிப்பைக் குறிக்கக்

‘குறியீடாக’ வேளாண்மைப் பண்பாட்டில் பயன்படுத்தப்பட்டிருக்கும் இச்சொல்லை அங்கிருந்து எடுத்து, அதே பொருளில் பயன்படுத்துகிறார். மேலும் இதே சொல், ‘‘அதிகாரம்’’ என்பதை குறியீடாகச் சுட்டுவதற்கு இறையியலும், மானுடவியலும் பயன்படுத்தப்படுகிறது.

கீழே உள்ள லக்கானின் வரை படம், தெளிவற்று விளங்கும் பாலியலின் இடத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ளப் பெண்ணியல் வாதிகளுக்குப் பயனுள்ளதாக விளங்கும்.



முதல் குறி இயற்கை வடிவமாகும். அது பொருளுக்கும் சொல்லுக்குமுள்ள இயற்கையான தொடர்பை விளக்குகிறது. இந்தக்குறி, சசூருக்கு முந்திய பழைய மொழியியல் கருத்தாக்கத்தின் சாரமாக அமைந்திருக்கிறது. அதாவது அதன்படி, பொருளுக்கும் சொல்லுக்குமிடையே உள்ள உறவு (அ) ஒருமை இயற்கையானது, உலகப் பொதுமையானது:

இரண்டாவது படம் இந்தப் பழைய ஒருமைக்கருத்தாக்கத்தை அழித்து விடுகிறது. குறிப்பான்களாகிய (signifiers) தலைவிகள்/ தலைவர்கள் என்ற இரண்டு சொற்களும், ஒரே மாதிரியான ‘கதவுகளோடு’ இணைக்கப்பட்டுள்ளன.

(இங்கே இரண்டு குறிப்பான்களுக்கு ஒரே மாதிரியான குறிப்பீடு (signified—அதாவது ஒரே மாதிரியான கதவு) அமைந்ததுள்ளது.)

ஒப்புமையுடைய ஒரே மாதிரியான கதவுகள்தாம் வேறுபட்ட பல மொழி அமைப்புகளுக்குள் நுழைய ஆரம்பிக்கின்றன. இவ்வாறு பலமொழி அமைப்புகள் நுழைவதைக் கொண்டு, அவைகள் வேறுவேறு கதவுகள் என நாம அறிய நேர்கிறது. இந்த அடிப்படையில்தான் ''பெண்'' என்ற சொல்லும் ஒரு 'குறிப்பானாக' விளங்குகிறதே ஒழிய, உயிரியல் அடிப்படையில் அவள் பெண்பாலாக விளங்குகின்றாள் என்பதனால் அல்ல! (அதாவது பெண் என்ற சொல் இடுகுறிப் பெயர்! அவ்வளவு தான்; எந்த விதமான காரணகாரியத் தொடர்போடு அச்சொல் விளங்கவில்லை என்கிறார்! (பஞ்சு)) இந்தப் பெண் என்ற குறிப்பானுக்கும் அது குறிக்கின்ற அந்தக் குறிப்பிட்ட குறிப்பீடாகிய இயற்கை உடலுக்கும் ஒரு சின்னஞ்சிறு காரணகாரியத்தொடர்பு கூட கிடையாது. ஆனாலும், இந்த 'பெண்' என்ற குறிப்பானின் ஏடாகோடமான வடிவத்தை நீக்கி விட்டால், இவ்வாறு குறியீடு செய்வதற்கு முன்பிருந்த உண்மையான இயற்கையான—'பெண்' வெளிச்சத்திற்கு வந்து விடுவாள் என்பது பொருளல்ல. **இவ்வாறு குறிப்படுத்துகின்ற அமைப்பு முறையிலிருந்து நாம் ஒரு போதும் வெளியே வந்துவிட முடியாது.** லிங்கமையவாதத்தை (அதாவது ஆணின் பிறப்புறுப்பு என்ற குறிப்பான் ஆதிக்கம் செலுத்துகிறது என்ற பார்வையை) எதிர்க்கின்ற ஒரு பெண்ணியல் வாதியும்கூட இந்தக் குறிப்படுத்துகின்ற அமைப்புக்குள்ளிருந்துதான் இயங்கியாக வேண்டும். **ஏனென்றால் பெண் என்ற பொருளைவிட, அவளுக்கென்று அமைந்த குறிப்பான் மிகவும் ஆற்றல் வாய்ந்ததாகும்.**

லக்கானைப் பொறுத்தவரை, லிங்கமையப் பிரச்னை, குறிகளின் (sign) அமைப்புமுறையிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாத ஒன்றாகும். ஆணின் பிறப்புறுப்பு (லிங்கம்) என்ற இந்தக் குறிப்பான் முழுமையான இருப்புடைய, சக்தி வாய்ந்த ஒன்றாக விளங்குவதாலும் கைப்பற்ற முடியாத இடைவெளியுடன் விளங்குவதாலும் எங்கே உயிர் உறுப்பை இழந்து விடுவோமோ என்ற அச்சம் மிகு மனச்சிக்கலை ஏற்படுத்தி (castration complex) ஆண்/பெண் இருவரையும் பயமுறுத்துகிறது.

மேலும் மேற்கூறிய இந்த மனச்சிக்கல் ஓர் அமைப்பாகவே ஆகிவிட்டது. எப்படியென்றால் மொழியும் நனவிலி மனமும் எந்த முறையில் ஓர் அமைப்பாகிவிட்டதோ அதே முறையில்.

தனிப்பட்ட மனிதனுடைய அகக்கூறுகளான ''இழப்பு உணர்வுகள்'' மொழிக்குள் பதிவாகியதால் பிளவுகள் தோன்றின. இந்த

''இழப்பு உணர்வுகள்'' குறிப்பான்கள், தங்களுடைய முழுப்பொருளையும் வெளிப்படுத்துவதில் தோல்விகாணும்போது தோன்றுகின்றன. ஆணிடமும் பெண்ணிடமும் பல்வேறு முறைகளில் காணப்படும் பாலியலின் முழுமைக் குறைவு, இந்த ''லிங்கம்'' மூலமாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சமூகப் பொருளாதார உண்மைகள், நனவிலி மனத்திலுள்ள இந்தப் பாலியல் பற்றாக் குறையின் விளைவுகளைக் கூட்டவோ குறைக்கவோ செய்கின்றன. என்பதும் உண்மை. எனவே இந்த 'லிங்க உருவகம்' முழுமையாக எங்கும் நிறைந்ததைக் குறிப்பதற்கான ஒரு குறிப்பானாகத்தான் விளங்குகிறதே ஒழிய, உடல் உறுப்புக்களின் ஒன்றைக் குறிக்க அல்ல. இவ்வாறு உயிர் உறுப்பை இழந்து விடுவோமோ என்ற பய உணர்வு உருவாவதற்கு உலகம் முழுவதும் மூல ஊற்றாக விளங்குகின்ற உறுதியான இந்தக் குறிப்பானை (லிங்கத்தை) லக்கான், ''தந்தையின் பெயர்'' (name of the father) என்று அழைக்கின்றார். இவ்வாறு சில நேரங்களில் அழைப்பதன் மூலம், 'லிங்கம்' என்ற இந்தக் குறிப்பான், உண்மையில் இல்லாத ஒன்றாகவும், எந்த விதமான உயிரியல் கூறு அற்ற (non-biological) ஒன்றாகவும் இருக்கின்ற ஒருவிதமான போக்கை வலியுறுத்தி விடுகிறார்.

எல்லா மனிதர்களும் தங்களிடையே அமைத்துக்கொள்ளும் விருப்பு/வெறுப்பு ஆகிய மனித உறவுகளை, லிங்கத்தின் இருப்பு (அ) இன்மை என்பதை அடிப்படையாக வைத்தே அமைத்துக் கொள்ளுகின்றார். இதை ஓர் உலகப் பொதுவான அமைப்பாக வலியுறுத்துவதன் மூலம் அமைப்பியல் வாதத்தின் சரியான மாதிரியாக இது விளங்குகிறது.

ஆண்மை/பெண்மை என்று பண்பாட்டுப் பின்னணியில் தனிப்பட்டவர்களுக்கு முக்கியத்துவம் உருவாகின்றபோது, தந்தையின் இடம் தனிச் சிறப்பைப் பெற்றது. பிராய்டினுடைய ஈடிபஸ் சிக்கலை லக்கான் எடுத்துக்கொண்டு மூன்று கட்டமாக விளக்குகிறார்.

1. ஓர் ஆண்குழந்தை தன்னை முழுமையாகத் தன் தாயுடன் இணைத்து அடையாளம் கண்டு கொள்கிறது. மேலும் தன்னை அறியாமலேயே தாயிடம் நிலவுகின்ற பற்றாக்குறைஒவ்வொன்றையும் நீக்கிப் பூர்த்தி செய்ய அவாவுகிறது: அதனால் தாயின் ஆசையாக விளங்குகின்ற 'லிங்கத்துடன்' தன்னை இணைத்து அடையாளம் கண்டு கொள்கிறது. இவ்வாறு செய்வதன்மூலம், தனக்கென ஒன்றும் இல்லாமல், வெறுமனே தன்னிருப்பை வெளிப்படுத்துகிறது.

2. இவ்வாறு லிங்கத்துடன் இணைத்துக் குழந்தை தன்னை அடையாளம் கண்டு கொள்வதையும், அவ்வாறு அடையாளம் காண்பதைத் தாய் ஒருவாறு ஒத்துக் கொள்வதையும், தந்தை தடுக்கிறார். இதனால் பிறப்புறுப்பை இழந்து விடுவோமோ என்ற அச்ச உணர்வினால் உருவான 'தந்தையின் விதிகளுக்கு' எதிராக குழந்தை வினை புரியத் தொடங்குகிறது.

3. பிறகு ஒரு கட்டத்தில் குழந்தையானது தன்னைப் போலவே ''லிங்கமுள்ள'' (உண்மையில் யாருமே இந்த லிங்கத்தைப் பெற்றிருக்கவில்லை) தந்தையுடன் இணைத்துத் தன்னை அடையாளம் கண்டுகொள்கிறது. ஒரு கட்டத்தில், தான் தந்தையின் இடத்தை வகிக்க வேண்டியது வரும் என்ற நிலையிலும், தந்தையிடம் தன் அடையாளங்களைக் காண்கிற உணர்வுகளை உருவாக்கிக்கொள்கிறது. இவ்வாறு தாயுடன் அடையாளம் காணும் தன் மூல ஆசையை அடக்கி ஒடுக்கிவிட்டு, அதற்குப் பதிலாக, 'தந்தை விதிகளை' ஏற்றுக்கொள்கிறது. (பிராய்டு இதை ''நடப்பியல் விதி'' என்கிறார்.)

இவ்வாறு தன்னை அடையாளம் காணும் உணர்வைக் குழந்தையானது, குறியீட்டு ஒழுங்குடைய மொழி உலகிற்குள் நுழைந்த பிறகுதான் அடைகிறது. **இந்த மொழியானது ஒற்றுமைக்கு வேறுபாட்டிற்கும் இடையிலுள்ள உறவுகளினால் செய்யப்பட்ட ஒன்றாகும்.** இது என்றால், பிறகு அது ஏன் என்ற முறையில் திணிக்கப்பட்ட தந்தையின் விதிகளை ஏற்றுக்கொண்ட பிறகுதான், அடுத்தகட்டமாகக் குழந்தை, மொழி அமைத்துக் கொடுத்த ஆண்மை, பெண்மை என்ற வேறுபாட்டு உலகிற்குள் நுழைவதன் மூலம் தந்தையின் உருவகப் படுத்தும் குணத்தைக் குழந்தை அடையாளம் கண்டுகொள்கிறது. இவ்வாறு குழந்தையானது 'விதி வழங்குபவர்' என்றபாணியில் தந்தையை ஏற்றுநிலை நிறுத்திக்கொள்ளக் காரணம் வெறுமனே மொழி அமைப்பின் விளைவாகத்தானே ஒழிய, பழங்கால மக்கள் நம்பியது போலத் தந்தை என்பவர் தலைமையான படைப்புத் தொழிலைச் சார்ந்தவர் என்பதால் அல்ல. மேலும், தாயும் தந்தையின் செயல்பாட்டை ஏற்றுக் கொள்வதற்குக் காரணம் தன் ஆசையை நாகரிக முறையில் (அதாவது அடங்கி ஒடுங்கிப் போகுமாறு) ஒழுங்குபடுத்துகிற 'ஓர் அமைப்பியல் ரீதியாக' வினை புரிகின்ற இந்த குறிப்பானோடு (லிங்கம்) தன்னையும் இணைத்து அடையாளம் காண்பதுதான். மேற்கண்டவாறு ஆசைகளை அடக்கி ஒழுங்குபடுத்திக்கொள்வதும், பாலியல் வேறுபாட்டின் தேவையை ஏற்றுக்கொள்வதும் தாம், ஒரு குழந்தையைச் சமூகமயப்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

''லிங்கம்'', விரிந்த ஒரு பொருளில் குறியீடாகத்தான் பயன் படுத்தப்படுகிறது என்ற அடிப்படையில் (லக்கான் கூறுவதுபோல) மிகவும் கறாராக அணுகினாலும் கூட, லக்கானுடைய இந்தக் கோட்பாட்டிலும் ஆண் சலுகை மிக்கவனாகவே விளங்குகிறான். இருபாலர்க்கும் சமமான நிலை அமைந்துவிடவில்லை. இவ்வாறு சில பெண்ணியல் வாதிகள் லக்கானின் இந்த விளக்கத்தையும் எதிர்க்கின்றனர். ஜானே கல்லோப் (Jane Gallop) கருத்துப்படி, பாலியல் வேறுபாட்டை விளக்குவதற்கு லக்கானின் பார்வையைப் பயன்படுத்தும் போதும், தவிர்க்க முடியாதபடி, மீண்டும் பெண் ணின் பாலியல், கீழ்ப்படிந்தே கிடக்க நேர்கிறது. லிங்கமானது, முழுமையாக நிறைவு நிலை உடையது அல்ல என்று, எங்கே இதை யும் இழந்துவிடுவோமோ என்று ஆண் மகன் மனச்சிக்கலில் உழலும்போது, தான் ஆணாக இல்லையே என்று பெண்ணும் அதே மனச்சிக்கலில் உழலுகிறாள்.

மேலும் ஈடிபஸ் சிக்கலை ஒரு பெண் குழந்தை எவ்வாறு கடந்து செல்லுகிறது என்பது தெளிவாக இல்லை. முதலில் 'தகாத உறவுகள்' எனக் கருதப்படுகின்ற உறவுகளைத் தந்தையின் விதி தடுப்பதற்கு முன்பாகவே, பெண் குழந்தை தான் தாய்மேல் கொண் டிருந்த அன்பை, தந்தைமேல் மாற்றியாக வேண்டும். பெண் குழந்தையைப் பொருத்தவரை, இது ஒரு அதிகப்படியான பிரச்னையாக இருக்கிறது; இரண்டாவது, ஏற்கனவே பெண் குழந்தை லிங்க இழப்பு உணர்வில் வருந்திக்கொண்டிருக்கிறது. அந்நிலையில் லிங்க இழப்பு உணர்வு என்ற இந்த பயமுறுத்தல், ஓர் ஆண் குழந்தை வளர்ச்சியில் என்ன இடம் வகிக்கிறது என்பதைக் கண்டுகொள்ள எளிதாக இருப்பதுபோல, பெண் குழந்தை மனத் திற்குள் அந்த பயமுறுத்தல் எத்தகைய இடத்தை வகிக்கிறது என்பதைக் கண்டுகொள்வது மிகவும் அரிய செயலாக இருக்கிறது. மேலும் ''தந்தையின் விதிகளை'' ஆண்குந்ழதை ஏற்றுக்கொள்ளக் காரணம் இருப்பதுபோல, பெண்குழந்தை ஏற்றுக்கொள்ள என்ன காரணம் இருக்கிறது?

லக்கான் பார்வையின் மேல் இத்தகைய விமர்சனங்கள் இருந் தாலும், அவருடைய அணுகுமுறையினால் ஏற்பட்ட நல்ல விளை வாக, பாலியல் வேறுபாட்டிற்கு, உயிரியல் அடிப்படையில் காரணம் பார்க்கின்ற பார்வையைத்துரத்திவிட்டு அந்த இடத்தில், பிராய்டின் உளப்பகுப்பு ஆய்வு அடிப்படையில் மேலும் சிந்தித்து, சமூக அமைப்பைக் (மொழி அமைப்பு மூலமாக) காரணமாகக் காட்டியதைக் கூறலாம்.

மேலும், லக்கானின் இத்தகைய அணுகுமுறை, மொழிமைய வாதத்திற்கு எதிரான ஒரு சொல்லாடலைப் பெண்ணியல் வாதிகள் வளர்ப்பதற்கும் தூண்டுகோலாக அமைந்தது. லக்கான், தான் ஒரு பெண்ணியல்வாதி என்ற மனநிலையோடு இயங்கவில்லை. பெண்ணியல் வாதிகளோடு பிணக்குக்கொள்பவராகவும், கவித்துவக் குணம் மிக்கவராகவும் விளங்கியிருப்பதோடு 'முடிவு மேற்கொள் வதையும்', 'உண்மைகள்' என்று சிலவற்றை நிறுவுவதையும் தவிர்த்திருக்கிறார். அதனால்தான், ''பெண் என்னதான் விரும்பு கிறாள்?'' என்ற பிராய்டின் விடை கூறப்படாத வினாவை, லக்கான் மீண்டும் எடுத்துக்கொண்டு ஆராயும்போது, பெண் என்பவள், நிலையாக நிற்காத திரவப் பொருளாக இருப்பதால், அந்த வினா விற்கு எந்த முடிவும் கூறாமல், அதை இன்னும் விடையற்ற வினா வாகவே விட்டு வைத்திட வேண்டியதுதான் என்கிறார்.

''பெண் ஒருபோதும் ஒன்றுபோல் (அ) ஒரே சமமாக (அ) ஒரே மாதிரியாகப் பேசுவதில்லை; உள்ளே பொங்குவதை அப்படியே வெளியே கொட்டிவிடுகிறாள்; ஏமாறுவதும் ஏமாற்றுவ தும் அவளிடமே பிறப்பெடுக்கின்றன''—இவ்வாறு பேசப்படுகிறது. இத்தகைய பார்வையினால், மீண்டும் பெண்ணை நிலையற்றவள், எந்தவிதக் கணிப்பிற்குள்ளும் அடங்காதவள், சலனம் மிக்கவள் என்று பேசுகின்ற லிங்க மையவாதத்திற்குள் தள்ளி, அவளை அறவே ஒதுக்கித் தள்ளப் பார்க்கிற விபத்திற்குள் போய் மாட்டிக் கொள்ள நேர்கிறது.

உண்மையில் ''பெண் வெளிப்படையாக'' இருப்பதில் உள்ள சில அனுகூலமான நல்ல அம்சங்கள்தாம், தந்தை அதிகார அமைப் பில், அவள் இழந்துபோன தன் பழைய வலிமையை மீண்டும் பெறுவதற்குத் தடையாக உள்ளன.

''பெண்ணின் பாலியல்'' என்பது கவிதை உற்பத்தித் தன்மை யோடு நேரடியாக ஒத்து இயங்குகிறது. உணர்வுச் சுழியில் இழுத் துச்செல்லுகின்ற இந்தப் படைப்பாக்கக் குணமானது, லிங்கமையச் சொல்லாடலை – மொழியில் ஆணாதிக்கம் நிறுவியுள்ள சொல்லா டலை—உடைத்து வேரோடு தகர்த்தெறிகிறது. இத்தகைய உணர்வுமையக்கோட்பாட்டை பெரிதும் வலியுறுத்துபவர்களாக ழூலியோகிறிஸ்தெவா, ஹெலன் சிக்ஸீ (He'len Cixous) ஆகிய இருவரும் விளங்குகின்றனர்.

காரண காரியத்திற்கு உட்பட்ட, மூடிய அமைப்பு, காரண காரியத்தைத் தகர்தெறிகின்ற—திறந்தவெளி அமைப்பு-ஆகிய

இரு ஓரங்களும் இடைப்பட்ட ஒரு தளத்தில்தான் கிறிஸ்தெவாவின் கோட்பாட்டு மையம் அமைந்துள்ளது. மேற்கூறிய இரண்டு அமைப்பிற்கும், நடுவில் கவிதைதான் நிற்கிறது என்பதால், அது தான் பெண்ணைப் பகுத்தாராய்வதற்கு வசதியான களமாக உள்ளது எனக் கருதுகிறார். மேலும் சில நேரங்களில், கவிதைதான், காரணகாரியத்துக்கு அப்பால் வெளியே இழுத்துச் செல்லுகின்ற ஆசை, பயம் என்கிற இரண்டு அடிப்படை உணர்வுகள் வந்து குவிவதற்குரிய திறந்த களமாகவும் உள்ளது.

அவந்த்-கார்டு இலக்கியத்தில்தான் முதன் முதலில் காரண காரியத்திற்கு அப்பாற்பட்ட தன்மை, ஒழுங்கு நெறிப்படுத்தப் பட்ட மொழிக்குள் நுழைந்து, இணைக்கப்பட்டுள்ள பேசுபவன் (அ) படைப்பாளி/கேட்பவன் (அ) வாசகன் என்ற எழுவாய் களைத் தகர்த்தெறிந்திடுவேன் என்று பயமுறுத்துகிறது.

பொருள் பிறப்பதற்கு எழுவாய் தேவையில்லை; ஆனால் பொருள் இயங்குகிற களமாக இருக்க எழுவாய் தேவைப்படுகிறது. எனவே எழுவாயை அடையாளம் காணும் அணுகுமுறை, மாற்றத்திற்கும் சிதறலுக்கும் உள்ளாகிறது; மரபான தொடர்ச்சியை இழக்கிறது. இந்த மொழியைப் போலவேதான், ஈடிபஸ் சிக்கலுக்கு முந்திய கட்டத்தில் குழந்தைகளிடம் உருவாகும் 'தூண்டல்கள்' (drives) அமைந்துள்ளன. இவ்வாறு இயல்பாகப் பொங்குகின்ற, சந்தம் மிகு தூண்டல்களை அமுக்கி வைக்க நேரும் போது, குறியியல் பொருட்கள் (Semiotic materials) தோன்றுகின்றன. பிறகு அவை குறியீட்டுப் பொருட்களாக (Symbolic) ஆகி, நிலைபெற்று விடுகின்றன. ஈடிபஸ்சிக்கலுக்கு முந்திய குழந்தையின் மழலைப் பேச்சு, குறியியல் முறையிலான சொல்லாடல் போலவே மிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது. எனவே வளர்ந்தபிறகும், மொழி தனக்குத் தானே இந்தக் குறியியல் முறையிலான இயக்கக் கூறுகள் சிலவற்றைத், தன்னுள் பிடித்து வைத்துக் கொள்கிறது. இவ்வாறு மொழிக்குள் ஓடநேர்ந்த இந்தக் குறியியல் கூறுகளின் எதிரொலிகளைத்தாம் கவிஞன் ஒன்றாகக் கூட்டி இசைவுபடுத்தி பொருத்தமாக வடிவமைக்கிறான்.

மேற்கூறிய உடலால் வெளிப்படும் உளக்கூறுத் தூண்டல்கள் (psychosomatic) ஈடிபஸ் சிக்கலுக்கு முந்தியவைகளாக இருப்ப தால், அவைகள் தாயின் உடலோடு மிகவும் நெருக்கமான இணைப்புக்கொண்டுள்ளன. சுதந்திரமாக மிதப்பதற்கமைந்த கட லெனச் சொல்லத் தக்க கருப்பை, ஆழமான புலன் நுகர் ஆற்றலை

வழங்கும் தாயின் முலைகள் ஆகியவை ஈடிபஸ் சிக்கலுக்கு முந்திய குழந்தையின் அனுபவங்களில் முதலிடம் வகிக்கின்றன. எனவே மேற்கூறியவாறு இம்முதல் தூண்டல்களோடு இணைந்து உருவாகும் குறியியல், தவிர்க்க முடியாதபடிப் பெண் உடம்போடு மிகவும் நெருக்கமாக இணைந்து கிடக்கிறது; அதே நேரத்தில் குறியீட்டிலோ இக்குறிகளை வெட்டியும் அமுக்கியுமாக அவைகளின் மேல் வினைபுரிகின்ற (இத்தகைய வினை புரிதலினால் தான் மொழி எனும் சொல்லாடல் பிறக்கிறது) தந்தையின் விதியோடு மிகவும் நெருக்கமாக இணைந்து கிடக்கிறது.

சொல்லாடலுக்கு (அ) மொழிக்கு வழி காட்டியாகிய நனவிலி மனத்தின் மௌனம்தான் ''பெண்'' என்பவள். 'நான்-நீ-மற்றவை' (I—thou —other) என்ற உறவாக்கத்தில் பெண் ''மற்றவை'' என்ற இடத்தை வகிக்கிறாள், இவ்வாறு அவள் கட்டுப்படாத வெளியில் நின்று கொண்டு காரண—காரியத்திற்கு உட்பட்டு இயங்கும் சொல்லாடலைச் சிதறடிப்பேன் எனப் பயமுறுத்துகிறாள்.

மற்றொரு பார்வையில் குழந்தையின் ஈடிபஸ் சிக்கலுக்கு முந்திய காலகட்டம், ஆண்/பெண் என்ற பாலியல் வேறுபாடற்ற காலமாதலால் மேலே கூறியதுபோல இந்தக் குறியியல் பெண்ணியலோடு மிகவும் நெருக்கமானது என்று கொள்வதும் ஐயப்பாட்டிற்கு இடமில்லாத ஒன்றாகவும் இல்லை. ஒருவர் இப்படிக் கூறலாம்: ''கிறிஸ்தெவா பெண்ணாக இருப்பதால், பெண்களின் சார்பாக, அமுக்கப்படாத, தன்னிச்சையாகப் பொங்கி நிறைகின்ற சுதந்திரமான இந்தச் சக்தியைப் பெண்களுக்குரியதாக உரிமை கொண்டாடுகிறார்.''

அவந்த்—கார்டு இலக்கியத்தின் கவிஞர்கள் ஆண்/பெண் யாராக இருந்தாலும் தாயின் உடலுக்குள் புகுந்து கொள்கின்றனர். தந்தையின் அதிகாரத்தலைமையை எதிர்த்து நிற்கின்றனர். எடுத்துக்காட்டாக, மல்லார்மே வாக்கிய விதிகளைத் தலைகீழாகப் புரட்டிப் போடுவதன் மூலம், தந்தையின் விதிகளையும் தலைகீழாக மாற்றுகிறார். மேலும் தாய்மையோடு இணைந்து குறியியல் முறையை (semiotics) திரும்பவும் பெறுவதன் மூலம், தாயுடன் இணைத்துத் தன்னை அடையாளம் காண்கிறார். கிறிஸ்தெவா, இத்தகைய கவிதைப்புரட்சியைப் பொதுவாக அரசியல் புரட்சியுடனும், குறிப்பாகப் பெண்ணியல்வாதிகளின் உரிமைப்புரட்சியுடனும் மிகநெருக்கமாக இணைத்துப் பார்க்கிறார். மேலும் பெண்ணியல்வாத இயக்கங்கள், அவந்த்கார்டு இலக்கியச் சொல்லாடலுடன்

தொடர்பு கொள்ளும்படியான ஒழுங்கற்ற வடிவத்தை (form of Anarchism) கட்டாயம் கண்டு பிடித்தாக வேண்டும் என்கிறார். லிங்கமையவாதத்தின் ஆதிக்கப் போக்கை அழிப்பதற்குத் தவிர்க்க முடியாதபடி தங்களுக்குத் தேவையான தத்துவமாகவும் அரசியல் நிலைப்பாடாகவும் இந்த ஒழுங்கற்ற வடிவம் என்ற கோட்பாடு விளங்கும் என்கிறார்.

சந்தால் சவாப் (Chantal Chawaf), சவியேர் காதியே (xavier Gauthier) லூயிஇரிகாரே (Luce Irigary) உள்ளிட்ட பல பிரெஞ்சு பெண்ணியல் வாதிகள், பெண்ணின்பாலியல் ஆழமான நிலவறை போன்றது: அறிந்து கொள்ள முடியாத ஒருகூறு என்றும் வாதிடுகின்றனர். ஹெலன் சிக்ஸி (He'le'ne Cixous) வின் 'மேடுசாவின் புன்னகை' (The laugh of Medusa) என்ற கட்டுரை, பெண் எழுத்தாளர்களுக்கான கொள்கைச் சாசனமாகக் கொண்டாடப்படுகிறது. அக்கட்டுரை, பெண்கள் தங்கள் எழுத்தில் தங்கள் உடம்பை முழுமையாகப் பெய்து வைக்கும்படி பெண் எழுத்தாளர்களுக்கு அழைப்புவிடுக்கிறது. ஹெலன் சிக்ஸீ பெண்ணின் நனவிலி மனத்தில் நிறைந்தோடுபவற்றை பெருங்களிப்புடன் வெளிப்படுத்துகின்றார்:

''உன்னையே நீ எழுது; உன் உடம்பின் குரல்களுக்குச் செவி சாய்! அப்பொழுதுதான் வகுத்துரைக்க முடியாத உனது நனவிலி மனத்திலுள்ள மூலவளங்கள் எல்லாம் பொங்கிப் புறப்பட்டு வெளிவரும்".

உலகத்திற்கெல்லாம் பொதுவான ''பெண்மனம்" என ஒன்றும் கிடையாது; மாறாக, பெண்ணின் கற்பனை ஆற்றல் எல்லையற்றது, வகைதொகைக்குள் அடங்காதது; அதனாலேயே அழகானது. உண்மையிலேயே முழுமையாக விடுதலை கண்டு விட்ட ஒரு பெண் எழுத்தாளர் இங்கே வாழ நேரும் போது, அவர் இவ்வாறு கூறுவார்:

''நான் பொங்கி வழிந்தோடுகிறேன்; என்னுடைய ஆசைகள் புதிய ஆசைகளைக் கண்டு பிடித்திருக்கின்றன. என்னுடைய உடம்பு இதுவரை கேட்கப்படாத பாடல்களை அறிந்து வைத்திருக்கிறது.........

என்னால் உடைத்துத் திறந்துவிடப்பட்ட ஒளி வெள்ளத்தின் ஓட்டத்தை நான் முழுமையாக உணர்கிறேன். இந்த ஒளிவெள்ளம், வெட்கங்கெட்ட அதிர்ஷ்டம் என்ற பேரில் சட்டம் போட்டுச் சந்தை

யில் விலை போய்க் கொண்டிருக்கும் எந்த ஒரு வடிவத்தை விடவும் அழகான வடிவங்களில் நிறைந்து வெளிப்படுகிறது".

எனவே தலைகீழாகப் புரட்டுகின்ற சிந்தனைகள் முளைவிட்டு வளர்வதற்கு எழுத்துலகம்தான் சரியான களமாகும். எனவே எழுத்துலகில் இன்னும் லிங்க மைய மரபில் பெண்களுக்குக் கற்பிக் கப்பட்ட குணங்கள் தூக்கி எறியப்படாமல் இருப்பது வெட்கப்படத் தக்க ஒன்றாகும். பெண், அவளுக்கே உரிய பொருட்களையும் அவளுக்கே உரிய உறுப்புக்களையும் ஆழமாகப் புதையுண்டு முத்திரையிட்டுக் கிடக்கும் அவளது உடம்பு சார்ந்த மிகப் பெரிய ஆட்சிப் பரப்பையும் மீண்டும் ஆதி வலுவோடு திரும்பப் பெற வேண்டும். தன்னைத்தானே "தணிக்கை" செய்துகொள்வ திலிருந்து கட்டாயம் விடுதலை பெற வேண்டும்; கோபச் சூரிய னாகவோ (அ) குளிர் நிலவாகவோ இருப்பதையும், அளவுக்குமீறி தாய்மை உணர்வோடோ (அ) அளவுக்குமீறி தாய்மை யுணர்வின்றியோ இருப்பதையும் குற்றமாக உணர்ந்து குமைவதைத் தூரத் தூக்கி எறிந்துவிட வேண்டும். ஹெலன் சிக்ஸி கொள்கையின் அடிப்படை இதுதான். அதாவது பெண்ணியல் வாதி களின் எழுத்துக்கள், எப்பொழுதும் லிங்கமைய வாதம் அமைந் திருக்கும் அமைப்பை ஒழுங்குபடுத்துகின்ற சொல்லாடலை மேலும் படுத்தி அமைய வேண்டும் என்ற கொள்கையை ஓரங்கட்டி ஒழித்துக் கட்ட முயல்வதுதான்.

வெர்ஜினியா வுல்ப் அழுத்தமாக வலியுறுத்தும் ஆண் / பெண் இருபாலர்க்கும் நடுநிலையான பாலியல் ஒன்றை இவர் கடுமை யாக எதிர்க்கிறார். ஆனால் அதற்குப் பதிலாக "வேறான இரு பால் பாலியல்" (the other bisexuality) என ஒன்றை ஆதரித்துப் பேசுகிறார். இது இருபாலர்க்கும் இடையே உள்ள வேறுபாடு களைப் பொருட்படுத்தாமல் தள்ளிவிட முயல்வதை எதிர்க்கிறது. ஆனால் இரு பாலர்களையும் கலக்கிவிட்டு, முக்கியத் தளம் நோக்கி நகரும்படித் தூண்டுகிறது. சிக்ஸி (cixous) இவ்வாறு எழுது கிறார்: "ஒரு பெண்ணின் உடம்பு, தன்னுடைய ஆயிரக்கணக் கான உணர்ச்சி வெப்பத்தை மூல நெருப்பாகக் கொண்டு, பலப்பல மொழிகளை ஒலி அதிர்வுகளாய் உருவாக்கிவிடக் கூடிய தனிச் சிறப்புமிக்க தாய்மொழி என்னும் மூலமொழியை உருவாக்கும்".

இவர் பேரின்பம் (பரவசம்)—(Jouissance) பற்றியும் குறிப் பிடுகிறார். பர்த், கிறிஸ்தெவா ஆகியோர் எழுத்தில் பேரின்பம் (Jouissance) என்ற இந்த சொல், காமசுகத்தின் உச்ச உயர்

நிலையையும் (orgasm), பலதரப்பட்ட அர்த்தக் குறியீடு நிறைந்த சொல்லாடலையும் இணைத்துக் குறிக்கிற ஒன்றாகப் பயன்படுத்தப் படுகிறது. ஒரு மூலப் பிரதியிலிருந்து பிறக்கும் பேரின்பம் எல்லா விதமான அடக்குமுறைகளையும் அறவே ஒழித்துவிடுகிறது. ஒரு கட்டத்தில் நெருக்கடியான—இக்கட்டான—நிலையை அடைகிறது; அதாவது அர்த்தங்களின் சரிவையே எதிர்கொள்கிறது. எனவே பெண் எழுத்தாளர்களின் முக்கியமான கடமை, லிங்க மைய வாதத்தால் விளைந்த சொல்லாடல்களை மறுத்து மீறிச் செல்வதே ஆகும்! ஆணாதிக்கம் நிறைந்த சொல்லாடல்களுக்குள்ளேயே எப்போதும் இயங்கிக் கொண்டிருக்கும் நிலையில், தனக்குள்ளே இருப்பதைப் பிடிப்பதற்கு தனக்கே உரிய ஒரு மொழியைக் (சொல்லாடல்) கண்டுபிடித்துக்கொள்வது பெண்ணின் கட்டாயத் தேவையாகிறது.

சிக்ஸினுடைய அணுகுமுறை, இருக்கின்ற ஒன்றை விளக்கிக் கொண்டிருப்பதைவிட, பெரும்பாலும் சாத்தியப்பட வாய்ப்புள்ள ஒரு மொழியை உருவாக்குவது பற்றிக் கற்பனை பண்ணிப் பார்ப்பது சிறந்தது என்ற பார்வையுடையதாகும். இத்தகைய அணுகுமுறை ஆபத்தானதாகும். மௌனம் மட்டுமே ஆட்சி செலுத்துகின்ற, கருப்பைக் குழந்தையின் குழப்பமான ஒலி மட்டுமே குறுக்கிடுகின்ற இருண்மையான நனவிலி உலகிற்குள் மீண்டும் பெண்களைச் செலுத்துகின்ற ஆபத்தில் போய் முடியும்! இத்தகைய ஆபத்து இருப்பதை கிறிஸ் தெவா நன்றாகவே புரிந்துகொண்டுள்ளார். இவர் பெண் எழுத்தாளர்களை, தந்தை/தாய் ஆகிய இருவர்க்கும் நடுவில் வைத்துக் காண்கிறார். ஒருபக்கத்தில் பெண் எழுத்தாளர்கள், எழுத்தாளர் என்ற நிலையில் தவிர்க்க முடியாதபடி, ஆணாதிக்கச் சூழலோடு சேர்ந்து, ஒரு ரகசியப் புரிதலுடன் செயல்புரிகின்றனர். பெண்ணுக்குச் சலுகை நிறைந்த தந்தை-மகன் உறவு என்ற அடிப்படையில் செயலாற்றுகின்றனர். இத்தகைய செயல்முறை உத்திமூலம், இப்பெண் எழுத்தாளர்கள், அறிவியல், தத்துவம், பேராசிரியர் தொழில் முதலிய பிறதுறைகளிலும் தலைமை தாங்கிச் செலுத்தும் மனப்பக்குவத்தை வளர்த்துள்ளனர். மற்றொரு பக்கத்தில், ''ஆணாதிக்கம் நிலவுகின்ற ஒவ்வொன்றிலிருந்தும் தப்பித்து அகதிகள் போலப் புகலிடம் தேடி ஓடுகின்றோம்; அவ்வாறு ஓடி நீருக்குள்ளே வாழ்கின்ற உடம்பாய் மௌனமாக நிற்குமாறு தள்ளப்படுகிறோம்; இதனால் மனித வரலாற்றில் எங்களைப் பதிவு செய்துகொள்ளும் உரிமையை இழந்து நிற்கிறோம்''—என்றும் பெண் எழுத்தாளர்கள் பேசுகின்றனர்.

சமீப காலமாகப் பெரிதும்பேசப்படும்பெண்ணியம், பெண்ணியல் வாத இலக்கியக் கொள்கைகள் ஆகியன பற்றிய வேறுபட்ட அணுகு

முறைகளும், செல்வாக்குகளும் இதுவரை ஓரளவு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. பெண்ணியல் வாதிகள், ஆண்களின் கோட்பாடுகளை மேற்கொள்ளாமல், தங்களுக்கான கோட்பாடுகளை உருவாக்கி வளர்த்துக்கொள்வது கடினம் என்பது நிரூபணமாகியுள்ளது. ஆனால், போதுமான அளவிற்குப் பெண்ணியக் கோட்பாடுகள் பெண்களின் அனுபவங்களிலிருந்தோ அல்லது அவர்களின் நனவிலி மனத்திலிருந்தோ உருவாக முடியும். எனவே பெண்கள் தங்களுக்கான மொழியைத் தாங்களே உற்பத்தி செய்தாக வேண்டும்; இவ்வாறு உருவாக்கப்படும் மொழியும் கருத்தாக்கங்களும் ஆண்களின் பார்வையில் பகுத்தறிவிற்குட்பட்டதாகத் தோன்றாமல் போகலாம் என்றாலும் பெண்கள் தங்களுக்கான கருத்தாக்கங்களை உருவாக்கியே ஆகவேண்டும் எனப் பல பெண்கள் வாதம் புரிந்துள்ளனர்.

பெண்ணியத்தின் பேரறிஞராகக் கருதப்படும் ஹெலன்-சிக்ஸீ (He'le'n Cixous), பர்த், லக்கான் ஆகியோரின் கொள்கைகளை ஆராய்ந்து குறிப்பிடத்தக்க கருத்தாக்கங்களை உருவாக்கியுள்ளார். பெண்களுக்கான கொள்கைகளை உருவாக்குவதில் எவ்வளவுதான் கஷ்டங்கள் இருந்தாலும், பெண்கள் தங்களுக்கான சொந்த மதிப்பீடுகளை ஆணித்தரமாக நிறுவுவதற்கும், தங்களின் சொந்த மன உலகைத் தேடிக் கண்டடைவதற்கும், அவைகளை வெளிப்படுத்துவதற்கும் அவைகளுக்கேற்ற புதிய வடிவங்களை உருவாக்கி வளர்த்தெடுப்பதற்கும் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. பழைய இலக்கியக் கொள்கைகள், கட்டாயம் மறு மதிப்பீடுகளுக்கு உள்ளாக்கப்பட வேண்டும்; புதிதாக வடிவமைக்கப்பட வேண்டும். ஆண்/பெண் இருவர்க்குமிடையே உள்ள அதிகார உறவு நிலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு ஏற்ப அவைகள் அமையவேண்டும். எல்லாத் துறையிலும் கோட்பாட்டு விவாதங்களில் ஆண்மை/பெண்மை என்ற வேறுபாட்டு உணர்வுகள் முக்கியத்துவம் பெற்றுவிட்டன. டெரிஈகிள்டன் (Terry Eagleton) பெண்களின் இயக்கம், அரசியல் நடவடிக்கைகளையும் பண்பாட்டு நடவடிக்கைகளையும் ஒன்றிணைத்துச் செல்கின்ற சாதனையில் குறிப்பிடத்தக்க வெற்றியை அடைந்துள்ளதாகக் குறிப்பிடுகிறார். எல்லாவிதமான திறனாய்வுக் கோட்பாடுகளும் அரசியல் பண்புள்ளவைதாம்; எந்தப் பொருளில் என்றால், இக்கோட்பாடுகள் எப்போதும் ''சொல்லாடல்களை''க் குறிப்பிட்ட நோக்கிற்கு ஏற்பக் கட்டுப்படுத்த முயல்கின்றன. இத்தகைய சூழலில், பெண்ணியல்வாதிகள், ஆண்களிடமிருந்து (தங்களுக்குரிய பங்காக)

அதிகாரத்தை வலுக்கட்டாயமாகத் திருகிப் பறிப்பதற்கு முழுவதும் சுய உணர்வோடு முயலுகின்றனர். இம்முயற்சியில் தங்களுக்குச் சாதகமாக எங்கிருந்து வந்தாலும், அக்கோட்பாடுகளைத் தங்களுக்குரிய உத்திகளாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இதன் காரணமாக, கோட்பாட்டு உலகில், இப்பெண்ணியம் மிக நுட்பமான உயிர்த்துடிப்புள்ள ஒன்றாக விளங்குகிறது. இவ்வாறு அதிகாரத்திற்கான போராட்டம் முழு ஆற்றலுடன் தொடர்கிறது.

(Raman Selden, 'A Reader's Guide to Contemporary literary theory', Britain, The Harvest press ltd, 1985. என்ற நூலிலுள்ள ''Feminist Criticism—ப. 128'' என்ற கட்டுரையின் தமிழ்மொழியாக்கம்.)

புனரபி கிழவி

அக்கக்காய் கழற்றிப் போட்டு
கடைவிரித்து அடுக்கி வைத்த அவள்...
இன்று ஒரு
புதிய கிழவி.

ஆடுகளிடையே காணாமற்போன
தேவதூதர்களைப் போல்
அவளும் தன்னை அடிக்கடித்
தொலைத்திருக்கிறாள்.

வெள்ளை நரைக்கடலில்
சிவப்பு முதுகெலும்பு
பின்வரைக்கும் 'தலை' காட்டும்.

தூரத்து ஒவ்வொன்றும் அவள் பார்வைக்கு
கிட்ட கிட்ட வந்திருந்து...
ஆவல் முடிந்து அயரப் பார்த்த போதுதான்
ஆங்காங்கே அவளுக்கு
அபினி ஆட்டம்.

தேவரசிகன்

டால்ஸ்டாயா, தாஸ்தாயேவ்ஸ்கியா?

□

க. பூரணசந்திரன்

ஜார்ஜ் ஸ்டைனர் எழுதிய நீண்ட விமரிசனக் கட்டுரை இது. டால்ஸ்டாய், தாஸ்தாயேஸ்வ்கி இருவரையும் மேதைகள் என ஐயத்துக்கிடமின்றி நிறுவும் ஸ்டைனர், இருவர்க்கும் இடையிலான வேறுபாடுகளைக் குறிப்பாக இலக்கிய அணுகுமுறை, சமய நெறி ஆகியவற்றின் வேறுபாடுகளை ஆராய்கிறார். இருமேதைகளிலும் தாஸ்தாயேவ்ஸ்கியே மேலானவர் என்பதையும் நிறுவுகிறார். இக் கட்டுரையினின்றும் சில பகுதிகள் கீழே சுருக்கித் தரப் பட்டுள்ளன.

1

செவ்வியல் கால மறுமலர்ச்சிக்கால அவல நாடகங்களுக்கு இணையான முறையில் அவல வடிவங்களைப் படைக்க வேண்டும் என்ற ஆவலில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கனவு, இசையில் மட்டுமே நிறைவேறியது. இப்சென், செகாவ், தோன்றியபோது, பழைய, 'வீரயுக' நோக்குநிலை முற்றிலும் மாறிவிட்டது. இருப்பினும் அவல நாடகத்தின் தலை சிறந்த மேதையாக தாஸ்தாயேவ்ஸ்கியை அந்த நூற்றாண்டு அளிததது. பேதை (The Idiot), பீடிக்கப்பட்டவன்(The possesed), கரமசோவ் சகோதரர்கள் ஆகிய படைப்புகளைக் கண்ட அளவிலேயே அவற்றைப் பெரும் அவல நாடகங்கள் என நம் மனம் அறிந்துகொள்கிறது. ஒரு விமரிசகர், தாஸ்தாயேவ்ஸ்கியை 'ரஷ்ய ஷேக்ஸ்பியர்' என்றே கூறியுள்ளார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிடைத்தற்கரிய கருப்பொருளாகவே அவல நாடகம் இருந்தது. எனினும் பாதலேர், நியட்சே போன்ற ஆசிரியர்களிடம் அவல நோக்கின் கூறுகள் உள்ளன. இரண்டே இரண்டு இலக்கிய ஆசிரியர்களிடம்தான் வாழ்க்கை பற்றிய முதிர்ந்த, வெளிப்படையான அவல நோக்கினைக் காண்கிறோம். அவர்கள் மெல்வில், தாஸ்தாயேவ்ஸ்கி இருவர் மட்டுமே.

2

ஹெகல், நாடகத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது சொல்லும் 'இயக்கத்தின் முழுமை' தாஸ்தாயேவ்ஸ்கியின் நாவல்களுக்கு

முற்றிலும் பொருந்துவது. தாஸ்தாயேவ்ஸ்கியின் எல்லா நாவல் களிலும் நாடகப் பாங்கு நிறைந்துள்ளது என்றாலும், நாடக மதிப்புகள், மரபுகள் முதலியவை முற்றிலும் கடைப்பிடிக்கப் பட்டுள்ள தன்மையை முழுமையாகப் 'பேதை' நாவலின் தொடக்க இயல்களில் காணலாம். இந்த இயல்கள் இருபத்திநாலு மணி நேர நிகழ்ச்சிகளைக் கொண்டவை. 'பீடிக்கப்பட்டவன்' நாவலின் பெருமளவு நிகழ்ச்சிகள் 48 மணி நேர எல்லையில் நிகழ்பவை; 'கரமசோவ் சகோதரர்'களில் விசாரணை முழுவதும் ஐந்து நாட் களில் நிகழ்வது — இவை, தாஸ்தாயேவ்ஸ்கியின் நோக்குக்கும் உள்விருப்புக்கும் மிக மையமானவை.

இலக்கியத்தில் காலம் பற்றிய பிரச்னைகள் சிக்கலானவை. இதிகாசமும் காவியமும் நீண்ட கால உணர்வைத் தோற்றுவிக் கின்றன. நாடகம் இதற்கு மாறுபட்டது. நாடக நிகழ்ச்சிகள் இயங்கும் கால எல்லை 'சூரியனின் ஒரு சுற்றாக' (இருபத்திநாலு மணி நேரமாக) இருக்க வேண்டும் என்று அரிஸ்டாட்டிலிய கால ஒருமைப்பாடுக் கட்டுப்பாடே இருக்கிறது. கால ஒருமைப்பாடு பற்றிய இக்கட்டளை, 'நிகழ்ச்சி ஒருமைப்பாட்டை' வலியுறுத்துவ தற்காக ஏற்பட்டதே.

தாஸ்தாயேவ்ஸ்கி, ஒரு நாடகாசிரியரின் கோணத்திலிருந்தே காலத்தை உணர்ந்தார். மிகக் குறுகிய கால வட்டத்திற்குள் எண்ணற்ற சிக்கலான நிகழ்ச்சிகளைத் திணித்தலும் அவற்றை இசைவுபடுத்தலும் அவருக்குக் கைவந்த கலை. இந்தச் செயல் திணிப்புகள், அவர் நாவலுக்கு ஒரு பயங்கரக் கனவுத் தோற்றத் தைத் தந்துவிடுகின்றன. டால்ஸ்டாய் ஒரு அலைபோல, மெது வாக, உயர்ந்தும் தாழ்ந்தும் தன் நாவலை நடத்துகிறார்; தாஸ்தாயேவ்ஸ்கியோ, காலத்தைக் குறுக்கி வளைக்கிறார். பகலைப் போல இரவையும் கதாபாத்திரங்களின் முழு மோதல்கள், வெறுப்புகள் ஆகியவை திணிந்ததாக அமைக்கிறார். மயக்க பிம்பங்களைத் தருகிற பகல்களும், பீட்டர்ஸ்பர்க்கின் வெள்ளை இரவுகளும், தாஸ்தாயேவ்ஸ்கி தருபவை. டால்ஸ்டாய் காட்டுவன போல ஆண்ட்ரூ இளவரசன் கிடக்கும் விஸ்தாரமான பகல்பொழுது களும், லெவின் அமைதியைக் காணும் நட்சத்திர இரவுகளும் அல்ல.

''நாடகக் கோணத்திலிருந்து பார்த்தால், மோதல் இயக்கத் திற்கு உதவாத எந்த ஒரு நாடகக் கதாபாத்திரமும், அல்லது கதா பாத்திரத்தின் பண்புக் கூறும் தேவையற்றவை'' என்கிறார் ஜார்ஜ்

லூகாக்ஸ்—தாஸ்தாயேவ்ஸ்கியின் எழுத்துத் திறனை ஆள்வது இந்த விதிதான்.

3

அமைப்பு ரீதியாக, 'பேதை'தான் தாஸ்தாயேவ்ஸ்கியின் நாவல்களில் மிக எளிமையானது. மிஷ்கின், அழிவு பற்றி முன்னுரைத்தல் தொடங்கி, உண்மையான கொலைவரை, ஒரு வரைபடத் திட்ட எளிமையோடு கதை நேராகச் செல்கிறது. பழைய கால முதலாக வரும் துன்பியல் நாயகனின் புதிர்த் தன்மையை நேரடியாக முன்வைக்கிறது. இள்வரசன், கள்ளமற்றவனும்தான், அதே சமயம் குற்றமுள்ளவனும்தான்... இளவரசன் மிஷ்கினின் குற்றம், அவனிடம் அன்புக்கும் அதிகமாகக் கருணை இருப்பதுதான். ஏனெனில் அன்பிலும் குருட்டுத்தனம் உண்டு. இளவரசன் அக்லேயா, நாஸ்டாசியா—இருவரையும் காதலிக்கிறான். எனினும் அவனது அன்புப் பிடிக்குள் இருவருமே வரவில்லை. துன்பியல் போக்குக்கு ஏற்றவாறே, மூவருக்கிடையிலான காதல் தாஸ்தாயேவ்ஸ்கியை வசீகரித்த ஒரு கருப்பொருள்... தாஸ்தாயேவ்ஸ்கி, இரண்டுபேரை —இருவரில் ஒருவரையும் விலக்காமல்—காதலிக்க முடியும் என்று நம்பினார். இதில் பிறழ்வு ஏதுமில்லை. மாறாக, அன்பு செலுத்தும் ஆற்றலை இது மிகுவிக்கிறது என்பது அவர் கருத்து.

நாவலின் பல இடங்களில் மிஷ்கின் பாலியல் உறவுக்குத் தகுதியற்றவன் என்று சொல்ல முற்படுகிறார்...'பேதை' நாவலின் முடிவு என்ன என்பது பற்றி தாஸ்தாயேவ்ஸ்கிக்குப் பல நாட்கள் நிச்சயிக்க இயலவில்லை. ஒரு பிரதியில் நாஸ்டாசியா, மிஷ்கினை மணக்கிறாள்; மற்றொன்றில் திருமண நாளுக்கு முன்னிரவு அவள் தப்பிச் சென்று ஒரு வேசையர் விடுதிக்கு ஓடுவிடுகிறாள். இன்னொரு பிரதியில் அவள் ரோகாஜினை மணந்து கொள்கிறாள். இன்னொன்றில், அவள் அக்லேயாவை மிஷ்கினின் வைப்பாட்டியாக ஆக்கிவிடும் சாத்தியம் உண்டா என்றும் அவர் ஆராய்ந்து கொண்டிருந்தார். இந்த மாதிரித் தடுமாற்ற நிலை, தாஸ்தாயேவ்ஸ்கியின் கற்பனையின் பரப்பைக் காட்டுகிறது. டால்ஸ்டாயின் படைப்பு நிலை, அவரது கதாபாத்திரங்கள்மீது இடைவிடாத, சர்வஞானக் கட்டுப்பாட்டினை உடையது. கடவுள் மனிதர்மீது செலுத்தும் முழு ஆதிக்கம் போன்றது. இதற்கு மாறாக, தாஸ்தாயேவ்ஸ்கி உண்மையான நாடகாசிரியர்களைப் போலவே கதாபாத்திரங்களின் தன்னிச்சையான, எதிர்பாராத செயல் இயக்கத்

தினைத் தனக்குள்ளாகவே ஒரு மனக் காதினால். கேட்டு முடிவு செய்தார்.

4

'குற்றமும் தண்டையும்', 'பேதை', 'பீடிக்கப்பட்டவன்', 'பண்படா இளைஞன் (Raw Youth)' 'கரமசோவ் சகோதரர்கள்', இவையும் பிற முக்கியக் கதைகளும், காதிக் (Gothic) மரபினைச் சேர்ந்தவை. காதிக் மரபிலிருந்தே தாஸ்தாயேவ்ஸ்கியினுடைய சூழலமைப்பு, சிற்றறைகளில் நிகழும் கொலைகள், தெருக்களின் இரவுக் காட்சிகள், இவையடங்கிய தாஸ்தாயேவ்ஸ்கியினது உலகம், அதன் கைவிடப்பட்ட எளிமை நிலை, வலிந்து பிறர் பொருள் கவரும் காமுகத்தன்மை, அதன் மறைவான குற்றங்கள், நகரின் பேரிரவில் ஆன்மாவினை அழிக்கிற செயல் ஆகியவை எழுகின்றன.

காதிக் இயல்போடு தொடர்புடையதுதான் உணர்ச்சிமயச் செயலமைப்பு (மெலோடிராமா). 'குழந்தைப்பருவம்', 'சிறுவயதுப் பருவம்', 'இளமைப்பருவம்' ஆகியவற்றில் டால்ஸ்டாய்க்கு யூஜின்-சூ-வின் பாதிப்பு உண்டு. தாஸ்தாயேவ்ஸ்கியும் 'பாரிஸ் நகரப் புதிர்கள்', 'அலைந்து திரிந்த யூதன்' போன்ற படைப்புகளை அறிந்திருந்தார். அவர் காலத்திய முக்கிய ரஷ்யப் படைப்பாளிகள் எவரையும் விட, அவர் ஒருவரே ஐரோப்பிய இலக்கியத்திற்கு வாரிசாகவும் திகழ்ந்தார். நரகத்தன்மை வாய்ந்த நகரத்தின் படைப்புக்கு அடித்தளமாக விளங்கியவை இவர்களது படைப்புக்களே.

தாஸ்தாயேவ்ஸ்கி, காதிக் மரபுக்கும், மெலோட்ராமா மரபுக்கும் கடன்பட்டவர் என்பதை மனத்திற்கொண்டு, அவரது தொடர்ந்த கருப்பொருளான, 'குழந்தைகள் மீது வன்முறை செலுத்தல்' என்பதனைக் காணவேண்டும். 'குற்றமும் தண்டனையும்' நாவலில் ஸ்வித்ரிகேலோல்' இளஞ்சிறுமியர் மீது தான் இழைத்த கொடுமைகளை ஒப்புக் கொள்கிறான். தாஸ்தாயேவ்ஸ்கி காதிக் மரபிலிருந்து சற்றும் வழுவாமல் இரு கதைகளைப் படைத்தார். 'போபோக்', 'இகழப்பட்ட மனிதனின் கனவு' தற்கொலை செய்துகொள்ளும் நிலையில், 'இகழத் தக்க மனிதன்' தான் சிறு பெண் ஒருத்திக்கு இழைத்த கொடுமையை நினைவு கூர்கிறான். இந்தக் கருப்பொருள் அவரது கடைசி நாவல் முழுதும் விரவிக் கிடக்கிறது.

குழந்தைகளைக் கொடுமைப்படுத்தல்—குறிப்பாக, அவர்களைப் பாலியல் சித்திரவதைக்குள்ளாக்குதல் தான் முழுத் தீமையின் அடையாளம், அதற்கு மாற்றே கிடையாது என்று தாஸ்தாயேவ்ஸ்கி கருதினார். இறைமைவாதம் (Theodicy) பேசும் டால்ஸ்டாய், கடவுள் பழிவாங்குவார் தண்டிப்பார் என்கிறார். தாஸ்தாயேவ்ஸ்கியோ, இந்தக் குழந்தைகள் இவ்வாறு சித்திரவதைப்பட்ட பின் எந்தவிதமான பழிவாங்கல் அல்லது தண்டிப்பிலும் அர்த்தம் உண்டா? என்று கேட்கிறார்.

5

ரஷ்ய நாவலின் மிக முக்கியமான கடமை, **யதார்த்தப் போக்கு.** ரஷ்ய வாழ்க்கையின் சமூக, தத்துவ தர்மசங்கட நிலைமைகளை சரியான முறையில் சித்தரித்துக்காட்டுதல் என்றார் பெலின்ஸ்கி. இந்த ஆணையை தாஸ்தாயேவ்ஸ்கி ஏற்றுக் கொண்டார். ஆனால், அவரது யதார்த்தப் படைப்பு, டால்ஸ்டாய், டர்ஜனீவ், கோங்கரோவ் போன்றோரது யதார்த்தப் படைப்பினின்றும் வேறுபட்டது.

டர்ஜனீவ், கோங்கரோவ் படைத்த யதார்த்தம் மேலோட்டமானது; டால்ஸ்டாயினது யதார்த்தமோ, ‘காலஞ்சென்றது, சமகாலத்தின் வேதனைகளுக்கு அப்பாற்பட்டது’. தாஸ்தாயேவ்ஸ்கீய—யதார்த்தம் (அவரே, ‘பேதை’ நாவலுக்கான குறிப்புகளில் பயன்படுத்தியது இச்சொல்) ‘துன்பியல் புனைவியலானது’ ரஷ்யச் சிக்கல் நிலைமைகள் பிறக்கும் போதே, அவற்றை நாடகக் கணங்களுக்குள் —தீவிர வெளிப்பாட்டுக் கணங்களுக்குள் பொருத்தி, ஆழ்ந்து கவனிப்பதன் மூலம், முழுமையான, உண்மையான சித்திரத்தை அளிப்பது. இவ்வாறான ஆழ்ந்து கவனித்தலுக்கு தாஸ்தாயேவ்ஸ்கி கையாண்ட உத்திகள் பெருமளவு கடைத் தெருக்களில் தொங்கும் கிளர்ச்சி நாவல்களிலிருந்து எடுக்கப்பட்டவை.

தாஸ்தாயேவ்ஸ்கியின் ‘துன்பியல்—புனைவியல்’ யதார்த்தம், அதன் காதிக் உட்கூறுகள் ஆகியவை, நாவல் பற்றிய டால்ஸ்டாயின் கருத்திலிருந்து அவருடையதை முழுவதும் வேறுபடுத்தின. டால்ஸ்டாயின் நாவல்கள் பொதுவாக இயல்பான மனித உருக்களைக் கொண்டவை; ஆரோக்கியமான பிம்பங்கள் நிரம்பியவை. திட்டமான ஒளிநிரம்பியவை. நாட்டுப்புற வாழ்க்கை சார்ந்தவை. டால்ஸ்டாயின் ‘நாட்டுப்புற வாழ்க்கைப் பார்வை’, சமகால

மெலோடிராமாவைப் புறக்கணித்தது. அவருடையது ஒருஇதிகாசப் பாணி. இதிகாசப் பாணி எழுத்து நாட்டுப்புற வாழ்க்கையோடு தொடர்புடையது.

டால்ஸ்டாயின் கலைக்கும் தாஸ்தாயேவ்ஸ்கியின் கலைக்குமான வேறுபாடுகள், உத்தி வேற்றுமைகள், உலகக் கண்ணோட்ட வேற்றுமைகள் — யாவுமே, நகரம் X நாட்டுப்புறம்என்னும் காலங் கடந்து வரும் இருமை முரண்களுக்குள் அடங்குபவை என்று விமரிசகர்கள் கருதுகிறார்கள்.

6

தாஸ்தாயேவ்ஸ்கியின் பாத்திரப்படைப்புகளில் முக்கியமானது, '**கீழுலக மனித**ன்' தாஸ்தாயேவ்ஸ்கி, மனித ஆன்மாவின் பன்முக பிம்பம் பற்றிய கருத்துக்கு வந்தவர் - அடிநிலை மனத்தின் மொழியைக் கையாள்வதில் மிகத் தேர்ந்தவர். மனிதனின் இரண்டு ஆளுமைகளில் ஒன்று, பகுத்தறிவானது: மனிதனின் சமூகப்பாத்திரம். மற்றொன்று, அவனுக்குள் ஆவியுலகு, அடிமனம், போன்றவற்றைக் கொணர்வது—தர்க்க அறிவுக்குப் புறம்பானது, குற்றங்கள் புரிவது—மிஷ்கின், ரோகோஜின் போன்ற பாத்திரங்களில், இரண்டு தனித்த, வேறான ஆளுமைகள் உடனுறையும் நிலையையே காட்டுகிறது. கோலியாத்-கின் பாத்திரப்படைப்பு, இவான் கரமசோவ் பேயுடன் நடத்தும் உரையாடல் போன்றவற்றில் தாஸ்தாயேவ்ஸ்கி 'பிளவுபட்ட ஆளுமை' (ஸ்கிஸோஃப்ரினியா) பற்றிய அறிவில் தலைசிறந்தவராக இருக்கிறார்.

எனினும் 'கீழ் உலகிலிருந்து கடிதங்கள்' என்ற படைப்பில் தான், அவர் மனித உணர்வு நிலையின் பல நாக்குகள் கொண்ட குழப்பநிலையை, ஒரே குரலில் நாடகப்படுத்தி வடிக்கும் பிரச்னையில் வெற்றி பெற்றார்.

கீழுலகிலிருந்து கடிதங்கள்—இரு பகுதிகளால் ஆனது. முதல் பகுதியில் சுதந்திர இச்சைக்கும் இயற்கையின் ஒழுங்குக்கும் இடையிலான முரண்பாட்டைப்பற்றிய தனிமொழி; பயன்வாத—அனுபவவாத மகிழ்நோக்கை எதிர்ப்பதே இதன் நோக்கு. கதைசொல்பவன் கொண்டுள்ள 'கீழுலகம்' குறித்த இலக்கிய—வரலாற்று—உள்ளர்த்தங்களை அடக்கியது. ஆன்மிக வெறுமை வாதத்தை எதிர்க்கும் தாஸ்தாயேவ்ஸ்கியின் கருத்துக்களைத் தொகுத்துக் கொண்டுள்ளது இந்நூல்.

இதில் ஆன்மாவும், அ-தர்க்க அறிவும் முனைப்போடு ஒரு தீவிர எல்லையில் எதிர்க்கின்றன. தாந்தே நரகத்தில் ஒட்டுக்கேட்டது போன்ற அதிர்ச்சி தரக்கூடிய உண்மைகளை வாசகன் ஒட்டுக் கேட்கிறான். இதற்கு முன் இப்படிப்பட்ட பாத்திரப்படைப்பு இலக்கியத்தில் இருந்ததில்லை. ''மேன்மக்களே, நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்: (நீங்கள் அதைக் காது கொடுத்துக் கேட்டாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி) — நான் ஏன் இன்னும் ஒரு பூச்சியாக மாறவில்லை என்பதை. நான் அடிக்கடி ஒரு பூச்சியாக மாற விரும்பியிருக்கிறேன்—ஆனால் என் ஆசையை அடைய முடியவில்லை'', என்கிறான் கீழுலக மனிதன். காஃப்காவின் 'உரு மாற்றம்' கதைக்கான குறிப்பைக் கொண்டிருக்கும் இக்கருத்து, படைப்பு முழுதும் திரும்பத் திரும்ப வருகிறது. மற்ற ஆட்கள், கதை சொல்பவனை ஒரு 'ஈ' எனக் கருதுகிறார்கள். அவன் தன்னைத்தானே ''பூமியிலுள்ள மிகக் கேவலமான ஒரு புழு'' என வருணித்துக் கொள்கிறான். பூச்சியாக ஆதல் என்னும் குறியீடு, பால்சாக்கிடமிருந்து தாஸ்தாயேவ்ஸ்கி பெற்றது என்கிறார்கள். இதில் நாம் காணும் புதுமை, இப்படிமத்தைத் தொடர்ந்து கையாண்டு மனிதனைக் கீழிறக்கும்—மனிதத் தன்மையற்றவனாக மாற்றும், அ—மனிதனாக்கும் உத்திதான். கீழுலக மனிதன், மனித நிலையிலிருந்து ஓடிவந்து விட்டவன். நவீன இலக்கியம் இன்றைய நமது உலகப் பார்வைக்குத் தந்திருக்கும் ஒரு முக்கிய பங்களிப்பு, இந்த 'மனிதத்தன்மை-இழப்பு'.

'கீழுலகினின்றும் கடிதங்கள் ' நூலுக்குப்பின், நாம் மனிதன் மீது பூச்சிகள் ஆதிக்கம் கொள்ளத் தொடங்கிவிட்டன என்பதை அறிகிறோம். பழைய புராணங்கள், பாதி தெய்வங்களைப் பாத்திரங்களாகக் கொண்டன. தாஸ்தாயேவ்ஸ்கிக்குப் பின்னரான புராணவியல், பாதி-மனிதர்களாக இருக்கும் கரப்பான் பூச்சிகளைக் கொண்டுள்ளது.

ரொமாண்டிக் கலையின் வாயிலாக வேகம் பெற்று வந்த தூய அறிவுக் கொள்கை மீது மிகத் தெளிவான விமரிசனத்தை வைக்கிறது என்பது, கீழுலகினின்றும் கடிதங்கள் நூலின் பெரும் முக்கியத்துவம். ஹெகலிய இலட்சியவாதத்தைத் தகர்த்தெறிகிறது இது. இருத்தலியல்வாதிகள் தோற்றம் கொள்ளும் முன்னரே கீழுலக மனிதன் அபத்த நிலையின் மேன்மையைப் பிரகடனம் செய்கிறான். இதனால்தான் சுதந்திர அனுபவவாதிகளை எதிர்க்கும் எழுச்சிக்காரர்களான பாஸ்கல், ப்ளேக், கீர்க்கெகார்ட், நீட்சே வரிசையில் தாஸ்தாயேவ்ஸ்கியும் இடம் பெறுகிறார். நீட்சேவின் ஜராதுஷ்

டிான், கீர்க்கெகார்டின் சமயவியல் தொடர் உருவகங்கள் ஆகிய வற்றை விட மேம்பட்டதான இலக்கியச் சுவையோடு இருப்பது இதன் சிறப்பு. தாஸ்தாயேவ்ஸ்கி இப்படைப்பின் மூலம், கவித்துவ தத்துவ ஆற்றல்களுக்குள் மிக அரிதாகிய ஒரு படைப்புச் சமநிலை யினை அடைந்து விட்டார்.

கொடிய வறுமையிலும், டால்ஸ்டாயினுடைய மனிதன், மனித னாகவே இருக்கிறான். கொடுமைக்குள்ளாகும் போது, அவனது மானிடப் பண்பு ஆழமடைகிறது. டால்ஸ்டாய் மனிதனை 'மாறாத பகல் ஒளியில்' பார்த்தவர். மனிதன் விலங்காக வீழ்ச்சியடையும் மயக்கநிலை அவருக்கு அந்நியமானது. மிகக்கொடிய துயர்நோக்கி லும் டால்ஸ்டாயின் பாத்திரங்களுக்கு ஒரு மைய நம்பிக்கை உண்டு. மானிடர்கள் வெறுமனே ''தாங்கிக் கொள்வதுமட்டுமல்ல., உயர் வார்கள்'' என்பது டால்ஸ்டாயின் நம்பிக்கை. டால்ஸ்டாயின் தத்து வம், பகுத்தறிவு அடிப்படையிலானது. தாஸ்தாயேவ்ஸ்கியின் 'அபத்த வழிபாடு'' சாதாரண வாழ்வு இயக்கங்களுட்பட்டனவற் றைத் தாக்குதல் ஆகியவை டால்ஸ்டாய்க்கு பைத்தியக்காரத்தன மாகத்தான் தோன்றியிருக்கும்.

''தாஸ்தாயேவ்ஸ்கி, கன்ஃபூசியசின் சிந்தனைகளையும் புத்தர் கொள்கைகளையும் அறிமுகப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். — அது அவரைச் சாந்தப்படுத்தியிருக்கும்'' என்று டால்ஸ்டாய் கார்க்கிக்குக் கூறினாராம். அப்போது 'கீழுலக மனிதன்' தனது வளையிலிருந்து ஏளனமாகச் சிரித்திருப்பான். நம்காலம் அவனது ஏளனத்திற்கு உருக்கொடுத்திருக்கிறது. சாவுக்கிடங்குகளும் சித்திர வதைக் கூடாரங்களும் நிறைந்த உலகு, தனிப்பட்டும், கூட்டமாக வும் மனிதர்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளும் மனப் பான்மை — விலங்குத்தன்மை இவற்றில் தாஸ்தாயேவ்ஸ்கிக்கு இருந்த உள்ளொளியைக் காட்டுகிறது.

7

டால்ஸ்டாய் - தாஸ்தாயேவ்ஸ்கி இருவரது மெய்யியல்களும் எதிரெதிர்நிலையில் வேறுபடுகின்றன. இந்த உலகு, இதில் அவத ரித்துள்ள மனிதன் இவைபற்றிய டால்ஸ்டாய்—தாஸ்தாயேவ்ஸ்கி மாறுபாடு, அவர்களது மாறுபட்ட புனைவு முறைகளின் மூலம் வெளிப்படுகிறது. இருவேறுபட்ட கலை வடிவங்களை உருவாக்கு

கின்றன. உணர்ச்சியனுபவ எல்லைப் பரப்பில், கலைப்பொருள் மீதான ஆதிக்கத்தில் இடமகன்ற தன்மையில், வளத்தில், மனிதாபிமானத்தில் டால்ஸ்டாயின் மேதைமை சிறந்து விளங்குகிறது. ஆனால் அவருடைய புராணீக உலகம் குறைபாடுடையது. இக் குறைபாடு அவரது படைப்பிலும் எதிரொலிக்கிறது. குறித்த சில பகுதிகளில் நாவல் கட்டுமானம் மங்கி, எடுத்துரைக்கும் முறை தடுமாறுகிறது. அந்த இடங்களில் எல்லாம், டால்ஸ்டாயின் தத்துவம் வெறுக்கும் எதிர்முனைகள், சரிவர எதிர்கொள்ளாத பிரச்னைகள், இவற்றைக் கதைப்போக்கு சந்திதிப்பதையும் காணலாம். இம் மாதிரி இடங்களில்தான் தாஸ்தாயேவ்ஸ்கி சிறப்படைகிறார்.

8

டால்ஸ்டாயின் நாவல்களில் வரும் பாத்திரங்கள் அவரது சிந்தனைகளின் அவதாரங்கள், என்ற குற்றச்சாட்டு அடிக்கடி முன்வைக்கப்படுகிறது. இப்பாத்திரங்கள், டால்ஸ்டாய் ஆட்டி வைக்கும் பொம்மைகள். டால்ஸ்டாய் தம் இதயத்தில் காணாத எதையும் நாம் நாவலில் காணப் போவதில்லை. இப்படிப்பட்ட சர்வசக்தி வல்லமை, தங்கள் செய்நேர்த்தியின் அடிப்படைக் கோட்பாடுகளையே அழித்து விடுகிறது. கடவுளைப் போலவே, டால்டாய் தமது சொந்த உயிர்ப்பையே தம் படைப்புகளுக்கு அளித்தார். ஆனால் இதற்கு படைப்பாழத்தில் அவர் கொடுத்த விலை அதிகம். ஆயினும் டால்ஸ்டாய் தமது பாத்திரங்களுக்கு வலுவான சூழல்களையும் வகுத்துக் கொடுத்து, நமக்கு அவர்களது வாழ்க்கையில் நிகழ்ந்தவற்றை மிகப் பொறுமையான பாசத்தோடு விளக்கிச் சொல்லும் வகையில் சிறந்து நிற்கிறார்.

டால்ஸ்டாயின் முழுமை பெற்ற பாத்திரங்களும் எட்ட முடியாத விளைவுகளும், காண முடியாத உள்ளொளிகளும் உண்டு. இவை நாடகப்பாங்கின் விளைவாக வருபவை. ஒரு நாடகப் பாத்திரத்தின் முழுமையில் எப்போதுமே ஒரு எதிர்பாராத நிகழ்ச்சிக்கான சாத்தியமும், ஒழுங்கின்மைக்கான கொடையும் உள்ளன. செறிவு, நாடகத்தின் உயர் அழுத்தம். இவை ஒரு பகுதி அறிந்தும் ஒருபகுதி அறியாமையிலும் ஆசிரியன் இருப்பதனால் உருவாகுபவை. தாஸ்தாயேவ்ஸ்கி தனது பாத்திரங்களை ஒரு ரசிகன் காணுவது போன்ற நிலையிலேயே (அடுத்து என்ன நிகழ்வதற்கு இருக்கிறது என்று தெரியாமல்) பார்க்கிறார். நிகழ்ச்சிகள் தாமாக விரியும் முறையில்

நம்மைப் போலவே அவரும் குழம்புகிறார். அதிர்ச்சி அடைகிறார். டால்ஸ்டாய்க்கு இந்தத் 'தொலைவு' இருப்பதில்லை.

9

டால்ஸ்டாயின் படைப்புத்தன்மையில் மிகப்பெரிய குறையாகச் சொல்லப்படுவது அவருடைய நீதிபோதனை. அவருடைய எழுத்துக்கள் யாவும் ''ஒரு திட்டவட்டமான" நோக்கம் உடையவை.

இதை மீறியும் அன்னாகரீனினா சிறந்த ஒரு அழகியல் படைப்பாக அமைந்துள்ளது. அதற்குக் காரணம், அதன் கவித்துவமான வடிவம், ஒழுக்க போதனையினை மறுப்பதுதான். இக்கவித்துவமான வடிவத்திற்கும் நீதி போதனைக்கும் இடையே, இடையறாத சமநிலையும் ஒழுங்கிசைவான இழுவிசையும் அமைகின்றன. டால்ஸ்டாயின் பாத்திரங்களிலேயே அன்னா மட்டும்தான் ஆசிரியரின் கட்டுப்பாட்டிற்கும் முன்னறிவிற்கும் உட்படாமல் வெவ்வேறு திசைகளில் வளர்ந்து செல்கிறாள். இரு—கதைப்பின்னல் அமைப்பினால் அன்னாகரீனினாவின் சமநிலை பிழைக்கிறது. அன்னாகரீனினாவிற்குப் பிறகு, டால்ஸாடாயினுள்ளிருக்கும் அறவியல், நீதி போதனையியல் தன்மை, அவரது படைப்புக்களில் முதன்மை பெற்றது 'இவான் இலிச்சின் மரணம்', 'க்ராய்ட்சர் சோனாடா' என்ற அவரது இறுதிக்காலப் படைப்புகள்-ஐயமின்றித் தலைசிறந்தவை. இவற்றின் அதீத அழுத்தம், கற்பனை மேலோங்கியிருப்பதனால் அல்ல. கற்பனைக் காட்சியின் குறுக்கத்தினாலேயே ஏற்படுகிறது. பாஷ்-சின் ஓவியங்களில் வரும் குள்ள உருவங்களைப் போல இவற்றிற்கு அதீத அழுத்தத்தினாலான ஆற்றல்கள் நிரம்பியிருக்கின்றன. 'இவான் இலிச்சின் மரணம்', தாஸ்தாயேவ்ஸ்கியின் 'கீழுலகினின்றும் கடிதங்கள்' படைப்பின் மறுபாதியாக இயங்குவது. டால்ஸ்டாயின் மேதைமை, ஒரு தீர்க்க தரிசி—சமயச் சீர்திருத்தவாதியினுடையது போன்றது. இறையியலாளருடையதன்று. ''கிறித்துவ போதனை" என்னும் தமது நூலில், டால்ஸ்டாய் எழுதுகிறார்: ''ஒவ்வொரு மனிதனுக்குள்ளாகவும், பாய்லரின் அடைப்பட்டிருக்கும் நீராவி போல அன்பு நிறைந்திருக்கிறது. இந்த நீராவி, விரிவடைகிறது. பிஸ்டன்களை இயக்கி வேலை செய்கிறது." விசித்திரமான இந்த உவமை, ஒரு மீட்பியக்கவாதியின் போதனை மொழியைப் போல, எளிமையாக உள்ளது.

தாஸ்தாயேவ்ஸ்கியின் மெய்யியலும் இறையியலும் கடுமை மிகுந்தவை. நவீன தத்துவத்தின் நோக்கில், குறிப்பாக இருத்தலி

யல் நோக்கில், தாஸ்தாயேவ்ஸ்கியின் படைப்புகள் மிக முக்கிய மானவை. பெர்தியேவ் சொல்லுவது போல், ''கரமசோவ் சகோதரர் களின் ஆசிரியர், ஒரு பெரும் சிந்தனையாளர், ஒரு ஞானி. அதே சமயம் ஒரு மிகச் சிறந்த கலைஞர்... மேதைமை நிறைந்த ஒரு இயங்கியலாளர்.'' ''வாசகன் ஒரு மிகப்பரந்த விசித்திரமான புதிய சிந்தனைப் பிரபஞ்சத்திற்குள் முழுகிப் போகத் தயாராக இருந்தா லன்றி, தாஸ்தாயேவ்ஸ்கியைப் புரிந்து கொள்ள முடியாது''.

10

தாஸ்தாயேவ்ஸ்கியின் உலகம், தனித்த அமைப்பைத் தன் னுள் கொண்டுள்ளது. சுவர்க்கம்-நரகம், கிறித்து—எதிர்க் கிறித்து [சாத்தான்] ஆகியவற்றிற்கு ஊடாக, மனிதனின் அனுபவத் தளம், குறுகிய இடைவெளியில் தகர்கின்றது. வீழ்ச்சியின் தூதர்களும் அருளின் முகவர்களும் நம் ஆன்மாவை அலைக்கழிக்கின்றனர்— இவற்றின் அன்பின் அலைக்கழிப்பும் தாக்குதலும் நம்மை மிகுதி யாக உட்கொள்கின்றன. தாஸ்தாயேவ்ஸ்கியின் வார்த்தைகளிலே, மனிதனின் மீட்பு என்பது அவனது 'வடுப்படும்' (புண்படும்) நிலை யைச் சார்ந்தது. துன்பங்களோடு எதிர்நிற்றலும், மனச்சாட்சியின் சங்கடங்களும் மனிதனைக் கட்டாயமாகக் கடவுள் என்னும் தர்ம சங்கட நிலையைச் சந்தித்தே ஆகவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துகின்றன.

தாஸ்தாயேவ்ஸ்கியின் உலகில், கிறிஸ்துவின் பிம்பமே, ஈர்ப்பு விசையின் மையம். உண்மையை அல்லது பகுதித்தறிவைவிடக் கிறிஸ்துவே அவருக்கு முக்கியமானவர்—எல்லையில்லா அளவு மேன்மையுடையவர் என்பதனை எடுத்துக்காட்டியிருக்கிறார். கடவுளின் குமாரன் உருவத்தின் மீது அவருடைய பார்வை உணர்ச்சி மயமான ஆழத்துடன் பதிந்திருந்தது—ஆகவே, தாஸ்தாயேவ்ஸ்கியின் நாவல்களின் பெரும்பகுதியை புதிய ஏற் பாட்டிற்கு எழுதப்பட்ட உரை நூலாகவே வாசிக்க இயலும்.

தாஸ்தாயேவ்ஸ்கியின் இறையியல், மனிதன்பற்றிய அறிவியல் ஆகியவை முழுச் சுதந்திரம் என்னும் அடிப்படைக் கருதுகோள்மீது கட்டப்பட்டவை. மனிதன் பயப்படுத்தும் அளவுக்கு முழு சுதந்திர னாக இருக்கிறான். நல்லதையும் தீயதையும் கண்டறிவதற்கும், அவற்றில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துத் தனது சுதந்திரத் தைச் செயல்படுத்துவதற்கும் அவனால் முடியும். ''பீடிக்கப்பட்ட

வன்" நாவலில் ஷிகலாவ் முழுமை பெற்ற ஒரு சமூகத்திற்கான திட்டத்தை வெளியிடுகிறான். 'அது ராட்சஸத் தனமானது', என்று தாஸ்தாயேவ்ஸ்கி காண்பது, சட்ட, தனிமனித குடியுரிமைகளை அது அழித்துவிடும் என்பதனால் அல்ல; (இவைபற்றி தாஸ்தாயேவ்ஸ்கி கவலைப்பட்டதில்லை)—அது, மனிதர்களைத் திருப்தி—மனநிறைவு கொண்ட விலங்குகளாக ஆக்கிவிடுகிறது என்பதனால்தான். அவர்களது வயிறுகளை நிரப்பிவிட்டு, அவர்களது ஆன்மாக்களைத் திணறவைக்கிறது அது.

தனித்த அருள்வெளிப்பாடுகள், ஒளிக்காட்சிக்கணங்கள், மானிட ஆன்மாவுக்குள் நிகழ்கின்றன—அதனால் அது தூயதாகிறது. இந்தக் கணங்களில், ராஸ்கோல்னிகாவ் போன்ற கொடியவர்களும் பிரபஞ்சப் பேரன்பினில் முழுகி நனைகின்றார்கள்; அருள் முழுக்கில், அல்யோஷா சந்தேகத்தின் பெருந் துன்பங்களிலிருந்து விடுபட்டு, எல்லா மனிதர்களையும், எல்லா உணர்தன்மையுள்ள இயற்கைப் பொருள்களையும் புகழ்ந்து தரையில் விழுந்து வணங்குகிறான். இந்த இயங்கியிலிலிருந்து, தாஸ்தாயேவ்ஸ்கியின் தீமை பற்றிய கொள்கை எழுகிறது. தீமை இல்லாவிட்டால், மனிதனுடைய 'சுதந்திரத் தேர்வு', செயல்பட இடமில்லை. கடவுளை அறிவதில் அவனை முன்னோக்கித் தள்ளுகின்ற அலைக்கழிப்பும் இல்லை. தாஸ்தாயேவ்ஸ்கியின் கருத்தினை நன்குணர்ந்த பெர்தியேவ் கூறுகிறார்:

''கடவுளின் இருப்பினை நிரூபிப்பதற்குச் சான்று, தீமை இருப்பதாகும். உலகில் முழுதும் நன்மையும் நேர்மையுமே நிறைந்திருந்தால், அங்கு கடவுளுக்கு அவசியம் ஏதும் இல்லை. ஏனெனில் அப்போது உலகமே கடவுளாக இருக்கும். தீமை இருக்கிறது, அதனால் கடவுள் இருக்கிறார். இதற்கு அர்த்தம் என்னவென்றால் சுதந்திரம் இருக்கிறது, அதனால் கடவுள் இருக்கிறார் என்பதே."

கடவுளைத் தேர்ந்தெடுப்பதில் ஏதேனும் அர்த்தம் இருக்குமானால், அதுபோலவே கடவுளை மறுப்பதும் சமமான யதார்த்தத்தில் நிகழ வேண்டும். கிரிலோவ் காட்டுவதுபோல, யாருக்குச் சுதந்திரம் இருக்கிறதோ—ஆனால் கடவுளின் இருப்பினை ஒப்புக்கொள்ள முடியவில்லையோ—அவர்கள் சுய அழிவுக்குள் செலுத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு இவ்வுலகம், ஒரு குழப்பமான அபத்த நிலை; மனிதத் தன்மையற்ற நிலை; பெருஞ்சேதம் விளைவிக்கும் கொடுமையான கேலிக் கூத்து.

தாஸ்தாயேவ்ஸ்கிய பிரபஞ்சக் கோட்பாட்டில், தீய ஆவிச் சக்திகளுக்குத் தனித்ததோர் இடமிருக்கிறது. தாஸ்தாயேவ்ஸ்கி தனது

கதாபாத்திரங்களை ஒரு மாயச் சக்தி வலையால் சூழச் செய்தார். இவான் கரமசோவ் பேயுடன் (சாத்தானுடன்) உரையாடுதல், போன்ற மீயியற்கை நிகழ்ச்சிகள், தாஸ்தாயேவ்ஸ்கியின் 'உடை படக்கூடிய ஆன்மா' கொள்கைக்கும், காதிக் உத்திகளுக்கும் உள்ள நெருங்கிய ஒருமைப்பாட்டினைக் காட்டுகின்றன.

தாஸ்தாயேவ்ஸ்கி, புலனுணர் சார்ந்த உலகிற்கும், பிற உலகு களுக்கும் கடுமையான எல்லை எதனையும் வகுக்கவில்லை. மெரேஷ்கோவ்ஸ்கி கூறிகிறார்: ''டால்ஸ்டாய்க்கு, வாழ்க்கை— சாவு என்னும் என்றுமுள்ள எதிர்நிலையே இருந்தது. தாஸ்தா யேவ்ஸ்கிக்கு அவற்றின் ஒருங்கிணைவே கண்ணில் பட்டது. டாஸ்ல்டாய், இந்த உலகின் நோக்கிலிருந்து, இவ்வுலக வாழ்க்கை யிலிருந்து சாவை நோக்குகிறார். தாஸ்தாயேவ்ஸ்கியோ ஆவி யுலகின் கண்களோடு, இங்கு வாழ்பவர்களுக்குச் சாவு என்று தோன்றுகின்ற எல்லையில் நின்று கொண்டு, வாழ்க்கையைக் காண்கிறார்." அனாதைகள், உடல் வலுவற்றோர், வலிப்புக் காரர்கள் போன்றவர்கள் முக்கியமான நன்மை ஒன்றைப் பெற்றி ருக்கிறார்கள். அவர்களது லோகாயத நிர்வாணத்துவமும், வலிப் பின் பிடிகளும், காமவுலகு உடல்நலத் தன்மை ஆகியவற்றின் கோட்டையைக் கிழித்து அவற்றினூடே புலக்காட்சியின் முழுமை யைத் தருகின்றன. மிஷ்கினும் கிரிலொவும் வலிப்பு நோய் உடையவர்களே.

தாஸ்தாயேவ்ஸ்கியின் இறைமை நீதிவாதத்தில் வலிப்புக் காரர்களைப் போன்றே, குற்றம் செய்தோர், நாத்திகர்கள் ஆகி யோர்க்கும் முக்கிய இடம் இருக்கிறது. சுதந்திரத்தின் வெளி விளிம்பில் அவர்கள் நிற்கிறார்கள். அவர்களது அடுத்த அடி, கடவுளிடமோ அல்லது நரகிற்கோ அவர்களைக் கொண்டு சேர்க்க வழியமைக்கும்.

11

டாய்ல்ஸ்டாய்க்கும் தாஸ்தாயேவ்ஸ்கிக்கும் உள்ள முரண்பாடு கள் அவர்களது இறப்புடன் மறையவில்லை. மாறாக, தொடர்ந்து வந்த நிகழ்ச்சிகளால் அவை கூர்மையடைந்தும் நாடகப் படுத்தப் பட்டும் உள்ளன.

மார்க்சிய இலக்கிய விமரிசனம் ஒரளவு வளமான வகையில் டால்ஸ்டாயின் மேதைமை பற்றி ஆராய்ந்திருக்கிறது. தாஸ்தா யேவ்ஸ்கியின் படைப்புகளை அது பெரும்பாலும் கண்டனம் செய் துள்ளது. அல்லது ஒதுக்கி வந்துள்ளது. மார்க்சிஸ்டுப் புரட்சி

யாளன் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு உலகப் பார்வையினை தாஸ்தாயேவ்ஸ்கிய நாவல்கள் கொண்டுள்ளன. ஆனால், ரஷ்யாவுக்கு வெளியில் இதற்கு எதிர்மாறாக நிகழ்ந்துள்ளது. சமகாலச் சிந்தனையை, டால்ஸ்டாயைவிட தாஸ்தாயேவ்ஸ்கி ஆழமாகப் பாதித்துள்ளார். நவீனக் கூருணர்வின் முக்கியத் தலைவர்களில் அவர் ஒருவர். இரண்டாம் உலகப்போருக்குப் பிந்திய நவீன புனைகதையின் உளவியலும், அபத்தத்தின் மெய்யியலும், துன்பியல்சார் சுதந்திரத்திலும், தாஸ்தாயேவ்ஸ்கியின் சிந்தனைக் கூறுகள் நிறைந்துள்ளன.

இவ்வாறு இறப்புக்கு அப்பாலும் இந்த இரு நாவலாசியர்கள் முரண் நிலையில் நிற்கிறார்கள்.

(1) டால்ஸ்டாய், இதிகாச மரபுகளின் தலைமை வாரிசு. தாஸ்தாயேவ்ஸ்கி, ஷேக்ஸபியருக்குப்பின் விளைந்த நாடக உணர்வுடையோருள் சிறந்தவர்.

(2) டால்ஸடாய், தர்க்க அறிவு, மெய்ம்மை இவற்றால் திளைப்பவர்: தாஸ்தாயேவ்ஸ்கி, பகுத்தறிவு வாதத்தை மறுப்பவர், முரண்நிலையை நேசிப்பவர்.

(3) டால்ஸ்டாய். நாட்டுப்புறச் சித்திரிப்பாளர், முல்லை நில மனப்பாங்கைச் சித்தரிப்பவர்.

தாஸ்தாயேவ்ஸ்கி, நவீனப் பெருநகரங்களை மொழிப் பிராந்தியத்தில் சாதித்தவர்;

(4) டால்ஸ்டாய், உண்மையின் தாகத்தில் தன்னையும், தன்னைச் சேர்ந்தவர்களையும் ஒருங்கே அழித்துக்கொண்டவர்.

தாஸ்தாயேவ்ஸ்கி, கிறிஸ்துவிற்கு எதிராக இருப்பததைவிட உண்மைக்கு எதிராக நிற்பவர். முழுமையான புரிதல் இயலுமா எனச் சந்தேகம் கொண்டவர். அறிய இயலாததின் பக்கம் சார்பவர்.

(5) டால்ஸ்டாய், கோல்ரிட்ஜின் தொடரில் சொன்னால், 'வாழ்க்கையின் நெடுவழியில் எப்போதும் தொடர்ந்து செல்பவர்'.

தாஸ்தாயேவ்ஸ்கி, இயற்கை இறந்ததன் ஏமாற்று வழிகளுக்குள், ஆன்மாவின் உள்ளறைகளுக்குள், சதுப்பு நிலங்களுக்குள் முன்னேறுபவர்.

(6) டால்ஸ்டாய், புலன்களால் அறியக்கூடிய உலகினை சில எட்டுக்களால் கடந்துவிடக் கூடிய பேருருவம், பருமையான அனுப

வத்தின் மெய்ம்மை, தொட்டுணரும் தன்மை, புலன்களால் உணரும் முழுமை இவற்றைத் தருபவர்.

தாஸ்தாயேவ்ஸ்கி, மாயக் காட்சிகளின் விளிம்பில் நிற்பவர். ஆவியுலகு சார்ந்த மனித இயல்புக்கு அப்பாற்பட்ட குறுக்கீடு களுக்கு இடம் தருபவர் (இவை இறுதியில் வெறும் கனவுகளின் மென்திரையாகவே முடியக்கூடும்.)

(7) டால்ஸ்டாய், ஒலிம்பிய ஆரோக்கியம், உயிர்த்தன்மை இவற்றின் உருவம்.

தாஸ்தாயேவ்ஸ்கி, நோயும், பீடித்தலும் தாக்கும் சக்திகளின் மொத்த உருவம்.

(8) டால்ஸ்டாய், வரலாற்றின்—காலத்தின் இயக்கத்தில் மனிதரின் விதிகளைக் கண்டவர். தாஸ்தாயேவ்ஸ்கி, சமகாலத்தில் வைத்தும், நாடகத்தின் துடிப்புள்ள நிலைத் தன்மை கொண்ட கணத்தில் நிறுத்தியும் மனிதர்களைப் பார்த்தவர்.

(9) டால்ஸ்டாய், ரஷ்யாவில் முதன்முதல் நிகழ்ந்த சமயச் சார்பற்ற, பொது மரணச் சடங்குக்கு உரியவர்; தாஸ்தாயேவ்ஸ்கி, அலெக்சாந்தர் நெவ்ஸ்கியின் மடத்தில் (செயின்ட் பீட்டர் ஸ்பெர்க் நகரில்), பாரம்பரியமான திருச்சபையின் சடங்குகளோடு கல்லறையில் இருத்தப்பட்டவர்.

(10) தாஸ்தாயேவ்ஸ்கி—முதன்மையாக, கடவுளின் மனிதர். டால்ஸ்டாய்—கடவுளின் மறைமுக எதிர்ப்பாளர்களில் ஒருவர்— இப்படி முரணிநிற்கிறார்கள்.

(டால்ஸ்டாயா அல்லது தாஸ்தாயேவ்ஸ்கியா?—ஜார்ஜ் ஸ்டைனரின் நூல் மூன்றாம் நான்காம் பாகங்களின் தொகுப்பு)

கடவுளே!

ஒரு புதுக்காற்று ஒன்று
அறைக்குள் சுழன்றடித்திருக்கிறது.

ஊதுபத்தி, பூமாலை, இன்னபிற பூஜாப்பொருள் திகைக்க,
தன் முதுகின் வெற்று வெளியைக் காட்டியபடி,
திரும்பியிருந்தார் காலண்டர்தாளிலுள்ள கடவுள்
கோபமா?
சுயமறுப்பா?
காட்டும் புதிய தரிசனமா?

வறண்டு இருண்டு விறைத்த முகம் ஒன்று
வந்தது நான்கு ஆணிகள் மற்றும் சுத்தியலுடன்

—தேவதேவன்

மூன்று கவிதைகள்

□

எம். வி. வி.

மகாமகம் வந்தது

மகாமகம் இன்று வந்தது—ஆஹா!
மனம் மிகக் குளிர்ந்தது

பாசியிற் புதைந்திருந்த
புஷ்கரணி புனிதமாம்!
நாசி மூடும் நாற்றமின்று
மோட்சவாசல் திறக்குதாம்!

பன்னீராண்டு முயன்று சேர்த்த
பாபம் இன்று போக்கடிக்க
கொத்துக் கொத்தாய் மனிதப்பிஞ்சு
காய்த்துக் காய்த்துத் தொங்குது!

எங்கெங்கே இருந்தவர்கள்
இங்குவந்து குதித்தனர்
வேண்டாமென்று வழிமறித்தும்
விழுந்தடித்து வந்தனர்!

உள்ளநோய்கள் போதாவென்று
'உறவு' நோய்கள் வந்தன!
கள்ளப்பயல் 'கூட்டத்திற்கு'
நல்ல விருந்து அளித்தனர்

கண்ணால் கல்லில் மூழ்குவர்!
குளத்தில் உடலை அலசுவர்!
பண்ணும் பாபம் போக்குதற்குப்
பார்த்திருந்த சந்தர்ப்பம்!

மகாமகம் இன்றுவந்தது—ஆம்!
மடமை மிகவும் மலிந்தது!

எம். விக்ரஹவிநாசன்

(26-2-1945 அன்று மகாமகம். அன்றைய தினம் 'சிவாஜி' யில் வெளிவந்தது.)

கணப்பு

பிச்சைக்காரன்

யாரம்மா நீ? எங்கிங் குவந்தாய்?
இரவும் பகலும் ஊடல் ஒழிந்து
காதல் புரிந்து கலக்கும் காலம்,
நிலவும் மீனும் கலக்கம் பெற்று
இருளின் குட்டையில் மருளும் தருணம்,
நாயும் பூனையும் கூகையும் வண்டும்
கூரையும் தரையும் அதிரத் தாக்கிக்

காமக்கூத்துப் பயிலும் நேரம்,
ஆணும் பெண்ணும் எண்ணம் ஒன்றி
மயலின் மடியில் மயங்கும் சமயம்,
இரவுக்கு ஒதுங்கி இங்கு நான் நின்றால்
நீயும் வந்து நிற்கிறாய் ஒண்டி;
என்னைக் கண்டதும் கண்ணை விரித்தாய்
என்ன எண்ணி இங்கு நீ வந்தாய்?

பிச்சைக்காரி

மண்ணின் மேனி பனியில் நனையுது
காற்றுக் கரியும் பற்றது போச்சுது
வானப் புடவை மக்கி மடிந்து
பஞ்சாய் மாவாய்க் கீழே கொட்டுது
கணப்பூட்டக் கரியும் காணோம்
அடுப்புப் போட மண்ணும் ஈரம்
உடலை மூடும் உடையும் கந்தை
துணைக்கு நிற்கும் கணவனும் இல்லை;
என்ன செய்வாள் இரவுக் கன்னி?
பிறந்த மேனியில் புரண்டு விழுந்துத்
தனியாய்த் தவியாய்த் தவிக்கும் தருணம்
பேதைக் கன்னியின் கதியை மறந்தாய்
எதையோ சொன்னாய் இதனை மறைத்து!
பசியால் என்னுடல் அசதி கொள்ளுது
ஊதலும் வாடையும் உதைக்குது மேலை!
மாயாஜாலம் செய்யுது குளிரும்
பனியால் என்மனம் கனலாய்க் காயுது!
குளிருக்கஞ்சி சுவற்றில் பதுங்கி
ஒடுங்கி ஒடுங்கியும் நடுங்குது உடலும்
நேற்றுநான் எங்கோ தனியாய்த் தவித்தேன்
கணப்பினை வேண்டிக் காலாற வந்தேன்
கண்டுளம் கண்டதில் கணப்பு நீ கண்டேன்
(கணப்பு நீ கண்டேன்—களிப்பு நான் கொண்டேன்.)

(எம். விக்ரஹவிநாசன் ‘சிவாஜி’ 3-6-1945)

அன்னபூரணி சன்னிதியில்

சிலாசுந்தரி, தேவி, அன்னபூரணி!
'எனது நகைமுகமும் நிறைகலசமும்
கலைக்கு ஓர் இலக்கு ஆயின;
காவியரும் ஓவியரும் எழுத முயன்று
எழுதுகோல் தேய்ந்தது!' என்று
மமதையுடன் நிமிர்ந்து நிற்கிறாயல்லவா?
நில்!

'மண்ணையும்
எங்கொ உள்ள விண்ணையும்
ஒன்றாகப் பிணைப்பேன்' என்று
அன்று சிற்பி கண்ட கனவைத்தான்
கண்ணும், எங்கோ கிடந்த கல்லும்,
கரமும் கொண்டு,
சிலையாக்கி—உன்னைக்
கடவுளாக்கினான் எனில்—

காரணம்?
கலையன்றி வேறன்று என்றறி!

கலையை இகழ்வாரும்,
கலையே அறியாரும்,
கல்மிதித்து நடந்து வந்து,
கல்லே! உன்னைப் பணிகிறார் என்னில்-
காரணம்?

கலையன்றி வேறன்று என்றறி!
கலையும் அழகும் மனமுவந்து
கலவி கொண்டதால்
விளைவான தேவி!
அன்று சிரித்தாய்,
நாளை சிரிப்பாய்,

இன்றும் சிரிக்கின்றாய் எனில்—

காரணம்?
கலையின்றி நீ இல்லை என்றறி!

(எம். விக்ரஹவிநாசன் — 'கிராம ஊழியன்' 16-2-1945)

நிகழ் 24-ன் தொடர்ச்சி

கொலம்பஸ் முதல் புஷ் வரை (காலனியாதிக்க வரலாறு)

□

ரவிசீனிவாஸ்

மாற்று உண்டா என்ற கேள்வி எழுந்திருக்கிறது. இதை ஆராய்ந்து கலிபோர்னியா பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் புத்தகம் எழுதியுள்ளார். மூன்றாம் உலகநாடுகளின் கவனத்திற்குரியது இந்தப் புத்தகம். 'ரமேசான் குன்சாலசிஸ்' என்ற மெக்சிகோ உழவனின் மரணத்தைப் பற்றிய ஆய்வோடு இந்த நூல் தொடர்கிறது. The Death of Ramon Gonzalez-The Modern Agricultuaral Dilemma என்பது இந்த நூலின் பெயர். ஆசிரியர் **அக்னஸ் ரைட்**. வடமேற்கு மெக்சிகோவில் குலிக்கான் வெளி என்ற பகுதியில் தன்கள ஆய்வை அக்னஸ் செய்கிறார். பசுமைப் புரட்சி அறிமுகப்படுத்தப்பட்ட இருபது ஆண்டுகளில் சுற்றுச்சுழல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது பற்றிச் சொல்கிறார். இப்பகுதிகளில் வேண்டுமென்றே திட்டமிடப்பட்டு இரசாயனங்கள் தெளிக்கப்பட்டன. நிலச் சீர்திருத்தம் இங்கு செயல்படுத்தப்படவில்லை. பல ஆயிரம் ஹெக்டேர் நிலப்பகுதியில் ஒரு குறிப்பிட்ட பயிர் மட்டுமே பயிர் செய்யப்படுகிறது.

உரங்களாலும் பூச்சிக் கொல்லிகளாலும் சுற்றுச்சூழல் நாசமடைகிறது. உண்மையில் இது அரசியல் பிரச்னை என்கிறார் ஆசிரியர். உழவர்களுக்கு இருக்கும் நிலப்பசி இங்கு புறக்கணிக்கப்படுகிறது. மிஸ்டெக் இனத்தைச்சார்ந்த உழவர்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பசுமைப்புரட்சி, மக்கள் மத்தியில் நிலவுகிற ஏற்றத் தாழ்வுகளை அதிகப்படுத்துகிறது. இந்த உழவர்கள் இனி பாரம்பரிய முறைக்கு திரும்பக்கூட முடியாது. பூச்சி கொல்லிகளைப் பயன்படுத்துவதற்கு பாதுகாப்பான முறைகூட இவர்களுக்குக் கற்றுத் தரப்படவில்லை. ஏற்றுமதித் தேவைக்காக இவ்வளவும் நடைபெறுகிறது. பணக்கார விவசாயிகளுக்கு மட்டுமே நல்ல இலாபம் கிடைக்கிறது. 1940-ல் லேஸோ கரண்டல்ஸ் விவசாயிகளுக்கு நிலத்தைப் பங்கிட்டுக் கொடுத்தார். அடுத்து வந்த அதிபர் அவிலோ கமாசோ நிலச் சீர்த்திருத்தத்தை முற்றிலும்

மாற்றினார். ராக்ஃபெல்லர் நிறுவனத்தினர் ஆதரவோடு பசுமைப் புரட்சியை ஆரம்பித்தார். தொழில் மயமாக்குவதற்காகத்தான் பசுமைப்புரட்சி பயன்படுகிறது. வறுமை, சுற்றுச்சூழல் சீர்கேடு இவற்றிலிருந்து பாதுகாப்பின்மை தொடர்கின்றன. இவரது ஆய்வுகள் இந்தியச் சூழலுக்கும் பெரிதும் பொருந்தும். வந்தனா சிவாவின், ‘பசுமைப் புரட்சியின் வன்முறை’ இங்கு குறிப்பிடத் தகுந்தது.

பாரம்பரிய வேளாண்மை முறை உற்பத்தித் திறனுக்கு எதிரானதா என்றும் இந்த நூலில் ஆராய்கிறார். உற்பத்தித் திறனை மட்டும் முக்கியமாகக் கவனிக்க வேண்டுமா என்றும் ஆராய்கிறார். பசுமைப்புரட்சி வேளாண்மையை ஒரு தொழில் துறையாக மாற்றுகிறது. தொழில்மயமாக்குதலுக்கு உதவியாக பசுமைப்புரட்சி உழவர்கள் மீது திணிக்கப்படுகிறது. இதை அக்னஸ்ரைட் தெளிவுபடுத்துகிறார். இவரது ஆய்வு முடிவுகள் லத்தீன் அமெரிக்கா முழுவதற்கும் பொருந்தக்கூடியது.

பிரேசிலில் காடுகள் அழிக்கப்படுவதற்கும் நிலச் சீர்திருத்தத்திற்கும் இடையிலுள்ள தொடர்புகள் பற்றியும் அங்கு சிக்கோ மேண்ட்ஸ் போன்றவர்கள் ஏன் கொல்லப்படுகிறார்கள் என்பது பற்றியும் **மனித உரிமை கண்காணிப்பு** (Human rights watch) வெளியிட்டுள்ள அறிக்கைகள் முக்கியமானவை.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் எண்பதுகளில் ஏற்பட்ட கடன் சிக்கல் என்பதற்கும் காடுகள் அழிப்புக்கும் உள்ள தொடர்பை நாம் கவனிக்க வேண்டும். லத்தீன் அமெரிக்காவில் செயல்படும் சில திட்டங்களை மனத்தில் கொண்டு **பேட்ரிசியா ஆடம்ஸ்** ஆய்வு செய்து The Odious debts என்ற நூலை எழுதியுள்ளார். அதாவது தார்மீக ரீதியில் திருப்பித் தரவேண்டியதில்லை என்பதான கடன்கள் பற்றியது இந்த புத்தகம். ஜார் காலத்தில் அவர்வாங்கிய கடன்களை அவர்க்குப்பிறகு வந்த அரசுகள் திருப்பித்தரவில்லை. இதைப் போலவே உலக வங்கி மூலம் லத்தீன் அமெரிக்கா பெற்ற கடன்கள் எவ்வகையிலும் மக்கள் நலன்களுக்காகப் பயன்படுத்தப்படவில்லை. மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காகப் பயன்படவில்லை. ஒவ்வொருமுறையும் அரசு செய்த பெரும் திட்டங்கள், ஏற்றுமதித்திட்டங்கள் ஆகியவை குறுகிய நோக்கிலேயே செய்யப்பட்டன. ஆகவே இந்தக் கடன்கள் மக்களால் திருப்பிச் செலுத்தப்படவேண்டியதில்லை. இவ்வாறு இந்த ஆசிரியர் விவாதிக்கிறார். இந்தப் பெரும் திட்டங்களில் மக்களுக்குப் பங்கு என்பது சிறிதும்

இல்லை. திட்டங்களால் மக்கள் பாதிப்புக்கு உள்ளாவது பற்றியும் மக்களுக்குக் கவலை இல்லை. தலைநகரங்களிலிருந்து, வாஷிங்டனிலிருந்து திட்டங்கள் தீட்டப்படுகின்றன. இயற்கையின் சீர்குலைவு பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை. தவிர, மேற்கத்திய நாடுகள் தங்களுக்கிடையில் போட்டி போட்டுக்கொண்டு இத்திட்டங்களை இந்த மக்கள் மீது திணிக்கின்றன. பிரிட்டனின் தொழிற்சாலைகளின் நலன்களை மேம்படுத்துவதற்காக பிரேசிலுக்கு கடன் கொடுக்கப்படுகின்றன. கடன் என்ற பெயரில் பிரிட்டிஷ் தொழிற்சாலையின் இயந்திரங்களும் இதர கருவிகளும் பிரேசிலுக்குத் தரப்படுகின்றன. இதே நோக்கில் நிபுணர்கள் அனுப்பப்படுகிறார்கள்.

பிரிட்டனிலிருந்து பெறப்படும் கடனில் பெரும்பகுதி பிரிட்டனுக்கே போய்விடுகிறது. உதவித்தொகையில் 90 சதம் இயந்திரக் கருவிகளை வாங்குவதற்காகவே இப்படி பயன்படுத்தப்படுகிறது. கடன் தருவது என்பதன் நோக்கம் கடன் தரும் நாட்டின் நலன்களைப் பாதுகாப்பதுதான். பிரேசிலுக்கு மட்டுமல்லாமல் பிற லத்தீன் அமெரிக்கநாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இந்த உண்மைகள் பொருந்தும்.

லத்தீன் அமெரிக்காவில் காடுகளுக்கும் கடன்களுக்கும் உள்ள தொடர்பை **சூசன் ஜார்ஜ்,** The debt Boomerang என்ற நூலில் எழுதியுள்ளார். கடன்களை அதிகமாகப் பெற்ற நாடுகள் காடுகளை அதிகமாக அழித்துள்ளன என்றார். தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா ஆகியவற்றில் உள்ள எல்லா நாடுகளுக்கும் இது பொருந்தும். கடன் பெற்றுள்ள நாடுகளுக்கு, பெரும் திட்டங்களை உலக வங்கி முன்வைக்கிறது. ஏற்றுமதிக்கானவை இந்தத் திட்டங்கள். ஏற்றுமதிப் பயிர் விளைச்சலுக்காக காடுகள் அழிக்கப்படுகின்றன. தென் அமெரிக்காவில் நிலச்சீர்திருத்தம் என்ற பிரச்னை வரும்போதெல்லாம் அமெரிக்கா தலையிடுகிறது. அரசு தூக்கி எறியப்படுகிறது. நிலச் சீர்திருத்தம் செயல்பட்டிருக்குமானால் பிரேசிலில் காடுகள் அழிந்திருக்க முடியாது.

காடுகள் அழிவுக்கு பெரும் நில உடைமையாளர்கள்தான் காரணம். இவர்கள் குட்டி அரசர்கள். இவர்கள் சிறு படையை வைத்துக் கொள்கிறார்கள். ஏழை உழவர்களை இப்படை கொண்டு துரத்துகிறார்கள். அமேசான் பகுதியில் இந்தப் பிரச்னையை **மார்க்யுஸ்**உட்பட எட்டு உறுப்பினர்கள் கொண்டகுழு ஆராய்ந்தது. தேவையின்றித் திணிக்கப்படுகின்ற பெருந்திட்டங்கள் மறுக்கப்பட்டாலொழிய காடுகளையும் சுற்றுச் சூழல்களையும் காப்பாற்ற

முடியாது என்பது இக்குழுவின் கருத்து. சிறுவுழவர்களுக்கு அரசு உதவி செய்யவேண்டும். தவிர, இவர்களுக்கு நிலம் தரவேண்டும். நில உடைமையாளர்களால் துரத்தப்படும் ஏழை உழவர்கள் காட்டின் இன்னொருபகுதிக்குச் சென்று அதை அழிக்கிறார்கள். காடுகளில் பூர்வீக இன மக்களின் உரிமையை அரசு அங்கீகரிக்க வேண்டும். அவர்களின் பாரம்பரியத் தொழில் நுட்பத்தை ஊக்குவிக்க வேண்டும். பெருந்திட்டங்கள் கூடாது. இவ்வாறு பரிந்துரைக்கிறது இந்தக் குழு.

தென் அமெரிக்காவில் 70/80 களில் மக்கள் மத்தியில் பெரும் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. அரசியல் சட்டங்களிலேயே பூர்வீக இனமக்களின் உரிமைகள் இடம் பெறும் முறையில் மாற்றங்கள் செய்யப்படுகின்றன

கொலம்பியாவில் காடுகளின் ஒருபகுதியை பூர்வீக இனமக்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். நிகராகுவாவிலும் இத்தகைய உரிமை ஏற்கப்பட்டிருக்கிறது. **காயிக்கா** என்ற அமைப்பு பூர்விக இனமக்களின் உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்ற முறையில் செயல்படுகிறது. தென் அமெரிக்க அனைத்து பூர்வீக இனமக்களின் அமைப்புக்களைக் கொண்டது இந்த அமைப்பு. உலக வங்கியின் திட்டங்களின் மீது இந்தக் குழு தன் கருத்துக்களையும் கண்டனங்களையும் தெரிவிக்கிறது. லத்தீன் அமெரிக்கக் காடுகளை அழிப்பதில் உலக வங்கிக்கும் அமெரிக்காவுக்கும் மட்டுமே பங்கு உண்டு என்பதில்லை. ஜப்பானிய நிறுவனங்களுக்கும் இதில் பங்கு உண்டு. பிரேசில், கௌதமாலா போன்ற நாடுகளில் பல்லாயிரம் சதுரமைல்களில் காடுகளை அழித்து மரங்களை ஜப்பானுக்கு இந்த நிறுவனங்கள் எடுத்துச் செல்கின்றன. ஜப்பானைப் பொறுத்தவரை அங்குள்ள காடுகளைப் பாதுகாப்பதில் அரசு கவனமாக இருக்கிறது இலத்தீன் அமெரிக்காவில் முன்பு போல் மாட்டுப் பண்ணைகள் அமைப்பதற்கான உரிமைகள் தரப்படுவதில்லை. 1990-ல் பிரேசிலில் முற்றிலும் இந்தத் திட்டம் நிறுத்தப்படும். பிரேசிலில் மாட்டுப் பண்ணைகள் அமைப்பதற்கு மாறாக அங்குள்ள இயற்கை வளங்களைப் பாதுகாத்திருந்தால் பிரேசில் தன் கடன் சுமைகளைப் பெரிதும் குறைத்திருக்கும் என்கிறார் **ராபர்ட்குட்லான்ட்** என்ற ஆய்வாளர். ஒரு காடு தொடர்ந்து 150 வருடம் பலன் தரும். மாட்டுப்பண்ணை 20-30 ஆண்டுகளில் பலனற்றுப் போகும். மாட்டுப்பண்ணை வளர்த்ததன் மூலம இறைச்சி ஏற்றுமதி நடைபெற்றது. இந்த இறைச்சியின் விலை அமெரிக்காவில் இறைச்சியின் விலையைவிடக் கூடுதலாகிறது. சலுகை கொடுக்கப்பட்டு இறைச்சி

ஏற்றுமதியாகிறது. பெரும் பொருளாதாரக் கண்ணோட்டம். தீமையைத்தான் செய்கிறது என்கிறார் குட்லன்ட்.

1492 முதல் 1992 வரையிலான 500 ஆண்டுக்கால அளவில் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் காலனியாதிக்கம், புதிய காலனியா திக்கம், தொழில் மயமாக்கல் ஆகியவற்றின் தீயவிளைவுகள் என்று நாம் பார்க்கிறோம். காலனி ஆதிக்கம் பல்வேறு பெயர்களில் இன்றும் காணப்படுகிறது.

அண்மையில் அமெரிக்கா, கனடா, மெக்சிகோ ஆகிய நாடு களுக்கிடையில் ஒரு **பொருளாதார ஒருங்கிணைவு ஒப்பந்தம்** செயல் பட்டு வருகிறது. மூன்று நாடுகளுக்கிடையில் பொருள் ஏற்றுமதிக் குத்தடை இல்லை. கனடா ஒரு பெரும் மின்சக்தித் திட்டத்தை செயல்படுத்துகிறது. அமெரிக்காவுக்கு மின்விசை தருவதன்மூலம் கனடாவுக்கு பெரும்தொகை கிடைக்கும் என்கிறது. கனடாவி லிருந்து மின்விசை கிடைப்பதனால் அமெரிக்காவில் மின் உற்பத்தி தேவை இல்லை. தவிர மின்விசையைக் குறைத்துக் கொள்வதற் கான திட்டங்களும் ஆய்வுகளும் தேவை இல்லை.

மெக்சிகோவில் கூலி மிகக் குறைவு. அமெரிக்காவில் இருப்ப தைவிட இங்கு பத்தில் ஒரு பங்கு கூலி. ஆகவே அமெரிக்க நிறு வனங்கள் மெக்சிகோவில் தங்களுக்கான உற்பத்தியை மாற்றிக் கொள்கின்றன. மெக்சிகோவின் சுற்றுச்சூழல் கடுமையாக பாதிப் புக்கு உள்ளாகும். மெக்சிகோவின் ஆறுகளில் கொட்டப்படும் கழிவுகள் கலிபோர்னியா வரை தீங்கு செய்யும். இந்த ஆற்றின் கரைகளிலும் கடல் பகுதிகளிலும் இங்கு யாரும் குளிக்க வேண்டாம் என்று எச்சரிக்கை செய்யப்படுகிறது. மெக்சிகோவில் சுற்றுச்சூழல் காப்புக்கான சட்டங்கள் எழுத்தளவில் மிகச்சிறப்பாக உள்ளன. ஆனால் அவை நிறைவேற்றப்படுவதில்லை. மெக்சிகோவில் தொழிற்சாலைகளை மாற்றிக்கொண்டதால் அமெரிக்காவில் பலர்க்கு வேலை இல்லை. மெக்சிகோவில் தொழிலாளர் உடல் நிலை பாதிக்கப்படுகிறது. ஜப்பானியர்களும் கூட இப்பொழுது மெக்சிகோவில் முதலீடு செய்கிறார்கள். சுற்றுச்சூழல் பாதுகாப் புக்கு செலவு அதிகம். இவ்வாறு செலவு செய்தால் ஏற்றுமதி பாதிக்கப்படும். இவ்வளவு செய்த பிறகும் மெக்சிகோவுக்கு அதிக வருவாய் கிடைக்கிறதா என்றால் அப்படியும் இல்லை. மெக்சிகோ மக்களின் வறுமை குறையவில்லை. தனது மக்களுக்கான திட்டங் களை மெக்சிக்கோ அரசு செயல்படுத்தவில்லை. ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட அரசு தன் மக்கள் நலன்களைப் புறக் கணிக்கிறது, மக்களை நாசமாக்குகிறது.

அமெரிக்க அரசும் அமெரிக்க நிறுவனங்களும்தான் இதனால் அதிகப் பயன்பெறுகின்றன. அமெரிக்க நிறுவனங்கள் கனடாவில் ஏற்படுத்தியுள்ள தொழிற்சாலைகள் மூலம் கனடாவின் சுற்றுச்சூழல் நாசமாகிறது. இவை தவிர கடற்கரையில் மீன்பிடித்தும் காடுகளில் பயிர் செய்தும் வாழ்கிற பூர்வீக இனமக்களின் வாழ்க்கை பாதிப்புக்கு உள்ளாகிறது. பெருந்திட்டங்கள் இவர்கள் வாழ்க்கையை அழிக்கின்றன.

ஒரு ஆற்றை அணைகட்டித் தேக்கும்பொழுது பூர்வீகமாக அங்கு வாழ்ந்த மக்கள் வேறு இடங்களுக்குக் குடிபெயர்கிற நிலை நேரிடுகிறது. ஜேம்ஸ் பீப் திட்டத்தை நிறைவேற்ற கனடா அரசு முயற்சி செய்கிறது. அமெரிக்கா இன்னொரு திட்டத்தை முன் வைக்கிறது. ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் ஒருங்கிணைந்த பொருளாதாரத் திட்டம் போல அமெரிக்கப் பகுதியிலும் ஒரு பொதுப் பொருளாதாரத் திட்டத்தை அமெரிக்கா செயல்படுத்த விரும்புகிறது. இதில் மெக்சிகோ மட்டுமல்லாமல் லத்தீன் அமெரிக்க நாடுகள் பலவும் சேரக்கூடும். இப்பகுதி முழுவதும் சுதந்திர வர்த்தகப் பகுதி என அறிவிக்கப்படும். பொருள் ஏற்றுமதிக்கும், தொழிற்சாலை நிறுவுவதற்கும் வணிகம் செய்வதற்கும் இந்த நாடுகளுக்கிடையில் தடை இல்லை. அமெரிக்காவிலும் கனடாவிலுமுள்ள பெரும் நிறுவனங்கள் பிற நாடுகளின் இயற்கை வளங்களைச் சுரண்டுவதுடன் அவற்றை நாசப்படுத்தவும் செய்கின்றன. எஞ்சியிருக்கும் சில காடுகளும் அழிக்கப்படும். இவ்வாறு சூழல் பாதுகாப்பு இயக்கங்கள் அச்சம் தெரிவித்துள்ளன. சர்வதேச அளவில் தயாரிக்கப்படும் திட்டங்களை தேச அரசுகள் ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கின்றன. இதனால் அந்த நாடுகளுக்கும் மக்களுக்கும் பயன் இல்லை. அந்த நாடுகளின் தொழில் வளர்ச்சியையும் தற்காப்பையும் இந்தத் திட்டங்கள் அழித்துவிடும். முதலீடு செய்யும் நாடு அல்லது நிறுவனம் இலாபத்தை எடுத்துச் செல்வதோடு தன் முதலீட்டையும் எடுத்துக்கொள்கிறது. எனவே முதலீடு செய்யப்பட்டுள்ள கடன்சுமைக்கும், தீர்வு கிடைக்கப்போவதில்லை. தொழில் வளர்ச்சி பெற்ற நாட்டின் இலாபத் தேவைக்காக இந்த ஏழை நாடுகள் தமக்குள் கொட்டப்படும் கழிவுப் பொருள்களை ஏற்க வேண்டி வருகிறது. சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கான திட்டங்களை ஏன் நிறைவேற்றவில்லை என்று யாராவது கேட்டால் முதலில் அவர்களுக்கு மென்மையான முறையில் அச்சுறுத்தல் தரப்படும். அச்சுறுத்தலை மீறி இதுபற்றிப் பேசினால் நீங்கள் அரசுடன் சேர்ந்து கொள்ளுங்கள் என்று அறிவுறுத்தப்படும். நாங்கள் அனு

மதிக்கும் அளவு நீங்கள் பேசலாம் என்பார்கள். அதற்கு மீறினால் அவர்கள் உயிருக்கு பாதுகாப்பில்லை. இந்த உண்மைகளை பல அறிக்கைகள் தெளிவாக எடுத்துச் சொல்லுகின்றன. அண்மைக் காலத்தில் ஜப்பான், மெக்சிகோவில் முதலீடு செய்து காடுகளை அழித்து பொருட்களை உற்பத்தி செய்து அமெரிக்காவுக்கு ஏற்று மதி செய்யும் போக்கு அதிகரித்து வருகிறது. சுதந்திர வர்த்தகம், பொதுப் பொருளாதார பிரதேசம் என்ற திட்டங்கள் இவ்வாறெல் லாம் செயல்படுகின்றன. அமெரிக்காவிலும், மெக்சிகோவிலும் உள்ள சுற்றுச் சூழல் இயக்கங்கள் அவ்வப் பகுதியிலுள்ள மக்களை யும் இயற்கையையும் காப்பாற்றுவதற்கான உத்தரவாதங்களைக் கோருகின்றன.

நிகராகுவாவில் செய்யப்பட்ட சில பரிசோதனைகளை சுருக்க மாக இக்கட்டுரையில் குறிப்பிடுகிறேன். சமோசாவின் ஆட்சியில் சுற்றுச் சூழல் பெரிதும் பாதிக்கப்பட்டது. வனவிலங்குக் காடுகள் கூட அப்போது அழிக்கப்பட்டன. பின்னர் வந்த சார்டினிஸ்டாக்கு கள் சுற்றுச் சூழல் பாதுகாப்பினை தேசிய வளர்ச்சியின் ஒரு முக்கிய பகுதியாக்கினர். மிகக் குறுகிய காலத்தில், கடுமையான போர் களைச் சந்திக்க நேர்ந்த சந்தர்ப்பங்களிலும்கூட தங்கள் கொள்கை களை அவர்கள் கைவிடவில்லை. காடுகளைப் பாதுகாத்தல், வேளாண்மையில் சில புதிய பரிசோதனைகளைச் செய்தல், பூச்சிக் கொல்லிகளை பெருமளவு தடைசெய்தல் ஆகியவற்றை முன்னிறுத்தினர். மேலிருந்து திட்டங்களை நிறைவேற்றுவது என்பதற்குப் பதிலாக இத் திட்டங்களை நிறைவேற்ற வெகுஜன மக்கள் திரள்களை உருவாக்கினார்கள். ஒவ்வொரு பகுதியிலுள்ள வெகுஜன இயக்கங்கள், காடுகளைப் பாதுகாத்தல் முதலிய திட்டங் களை தமக்குள் விவாதித்தார்கள். முடிவெடுத்தார்கள். அமைப்பு களிலும், திட்டத்தை நிறைவேற்றுவதிலும் பெண்களின்அமைப்பு களுக்கு முன்னுரிமை தந்தனர்.

கட்டுரைக்கான ஆதாரங்கள்

1. A Bitter Sweet Tale - S. W. Mintz–Report on the Americas - sep 91
2. A Sea of poison-Daniel Faber–Report on the Americas–sep 91
3. Amazonia without myths-commission on environment & development for amazonia-IAB/UNDP/ACT, New York, 1992

4. Ancient alternatives to Peru's commercial Pesticide Crisis - J. M. Veerland JR - Global pesticide Campaigner - May 92 Vol. 2 No 2
5. Breaking the Circle of Poison - Patrick Lehay - Roll Call - Sep. 12, 91
6. Debt and Ecological Disaster in Latin America, E. Dore-Race & Class, Jul-sep 92
7. Defending the earth - Humanrights Watch/NRDC-New York-1992
8. New Internationalist - December 91
9. Open Wounds - Elizabeth Dore - Report on the Americas, Sep. 91
10. Pesticides, Nontraditional Agriculture and Social Equity-D. L. Murray, P. Hoppin-Global Pesticide Campaigner - Oct. 90, Vol 1 No 1
11. Race to save the Tropics : (ED) Roport Goodland-Island Press, Washington, 1990
12. Review (The death of Ramon Gonzaelz-The Modern Agriculture Dilema-By A. Wright)-David Campbell, Sustainable Agriculture-Fall 92
13. Shattering-Pat Mooney & Cary Fowler-University of Arizona Press, 1990
14. The Biological, Consequences of 1492 - Alfred W. Crosby JR, Report on the Americas-Sep 91
15. The Debt Bommerang-Susan George Pluto Press/IPS-1992
16. The Odious Debts-Patricia adams-Earthscan - 1991
17. To the Last Drop-William Roseberry-Report on the Americas, Sep. 91
18. We are not Conservationists-Nicanor Gonzalez-Cutural Surivival Quarterly, Fall 92
19. Susan Wood (Executive Director, NACLA)
20. Patricia Adams (Probe International)
21. Hope Shand (RAFI-USA)
22. A. Sivanandan (IRR, UK)
23. Julie Buckles (IPS)
24. Robert Goodland (World Bank)

உண்மை, அதிகாரம், தான் (எனும் தனித்தன்மை)

(மிசேல் ஃபூக்கோவுடன் ஒரு பேட்டி - அக்டோபர் 25, 1984)

□

ரக்ஸ் மார்டீன்

● கே: நீங்கள் ஏன் வெர்மோன்ட் பல்கலைகழகத்திற்கு மாற்றலாகி வர முடிவு செய்தீர்கள்?

○ ப: நான் அங்கு மாற்றலாகி வரக் காரணம், நான் எவ்வகையான வேலையை செய்கிறேன், அங்குள்ளவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டவும், அங்குள்ளவர்களுடன் நிரந்தரமான உறவை உருவாக்கிக் கொள்ளவும்தான்.

நான் ஓர் எழுத்தாளனோ, தத்துவவாதியோ, அறிவு ஜீவியோ அல்ல. நான் ஒரு சாதாரண ஆசிரியனே. சமூக நிகழ்வின் காரணிகளே என்னைப் பெரிதும் பாதித்துள்ளன.

சில அடிப்படையான காரணங்களுக்காக 1960 இல் சில ஆசிரியர்கள் முக்கியமான தகுதியுடைய மனிதர்களாக பொதுவாழ்வில் மாறியிருக்கின்றனர்.

நான் ஓர் தீர்க்கதரிசியாக இருக்க விரும்பவில்லை. எல்லோரையும் கீழே அமர வைத்து, நான் சொல்வதைக் கேளுங்கள் என்ற தொனியில் பேசுவதும் என் வேலையில்லை.

ஓர் பொதுக் காரணத்தை முன்னிட்டு உங்களோடு பேச வந்திருக்கிறேன்.

● கே: நீங்கள் பொதுவாக தத்துவவாதியாகவும் வரலாற்றாசிரியராகவும், அமைப்பியல்வாதியாகவும், மார்க்சியராகவும் அழைக்கப்படுகிறீர்கள். ஆனால் பிரான்ஸ் கல்லூரியோ உங்களை சிந்தனைகளின்— வரலாற்று அமைப்பு முறையின் பேராசிரியர் என்ற இடத்தை வழங்கியுள்ளது. இதற்கு என்ன அர்த்தம்?

○ ப: நான் யாரென்பது குறிப்பாக தெரிய வேண்டிய அவசிய மில்லை. என் வாழ்வின் குறிக்கோள், நான் யாராக இருந்தேனோ அந்நிலையிலிருந்து வேறொருவனாக மாறுவது.

நீங்கள் எழுதப் போகும் புத்தகம் முழுமையும் என்னவாக இருக்கும் என்பதை முன்பாகவே அறிந்து கொண்டால், அதை எழுத உங்களுக்கு தைரியம் வருமா?

எழுதுவதற்கும், வாழ்வன்பின் உறவு முறைக்கும் எது முக்கியமாக தேவையோ, அதுவே வாழ்தலுக்கும் மிக அவசியம். கடைசியில் என்ன நடக்கப் போகிறது என்பதை அறிய முடியாதவரை இந்த விளையாட்டு தகுதி வாய்ந்ததே.

என்னுடைய துறை சிந்தனை முறைமைகளின் வரலாறு தான். மனிதன் சிந்திக்கும் உயிர். அவன் சிந்திக்கும் முறைமையில். சமூகம், அரசியல், பொருளாதாரம், வரலாறு இவையோடு உலகம் முழுமைக்குமான அமைப்பு கள் தொடர்புடையவை.

சிந்தனையென்பது சமூகத்தை மட்டுமே சார்ந்தது அல்ல. மக்களின் சிந்தனை இதுவரை உலகமுழுமைக்குமான தர்க்க முறைமையில் ஆராயப்படவில்லை. சமூக வர லாற்றுக்கும், சிந்தனை முறைமையை புறச்சார்போடு ஆராய்வதற்கும் இடையே ஓர் பாதையுள்ளது. அது மெல்லிய குறுகிய சந்து. அந்த வழிதான் வரலாற்றாசிரிய னின் பாதை.

● கே: ‘பாலியலின் வரலாறு’ என்ற நூலில்; நிறுவப்பட்ட ஒழுங்குமுறைகளை உடைக்கும் மனிதனே இனி வரப் போகின்ற விடுதலையை முன்மொழிபவன் என்று நீங்கள் கூறியுள்ளீர்கள். உங்களின் பிரதிகள் அவ்வழியானது என்று கூறுவீர்களா?

○ ப: இல்லை.

வெகுநாட்களாகவே பலர் என்னிடம் வருங்காலத்தில் என்ன நடக்கும் என்பதைக் குறித்த சரியான அமைப்பு திட்டத்தை (அட்டவணை) தருமாறு கேட்டுவருகின்றனர். நமக்குத்தான் தெரியுமே, மேன்மையான நோக்குடன் தயாரிக்கப்பட்ட அமைப்புத் திட்டங்களும்கூட ஒருவகை யில் ஒடுக்கும் ஆயுதமாக மாறிவிடுகிறது.

ரூசோ விடுதலையை நேசித்தவர். ஆனால் பிரெஞ்சு புரட்சியில் ஒடுக்குமுறைக்கான சமூக கட்டமைப்பை நிறுவ அவர் பயன்படுத்தப்பட்டார்.

மார்க்ஸ், ஸ்டாலினியத்தையும், லெனினியத்தையும் கண்டிருந்தால் வெகுண்டிருப்பார்.

இதில் என்னுடைய பங்கு என்னவென்றால், மக்கள் நினைப்பதைக் காட்டிலும் அவர்கள் சுதந்திரமானவர்கள் என்பதை மக்களுக்கு உணர்த்துவதே.

ஓர் அறிவு ஜீவியின் பணிகளில், மக்கள் நம்பிக் கொண்டிருக்கும் உண்மைகள், அதனைச் சார்ந்த சாட்சியங்கள், வரலாற்று கட்டங்களில் நடந்தவைகளின் காட்சியாக தோற்றமளிப்பதை, விமர்சித்தும்/உடைத்தும் அவர்களின் மனதில் பதிந்துள்ள கட்டமைப்புகளை மாற்றுவதே முக்கியமானதாகும்.

● கே: உங்களின் எழுத்துக்களில்—சமூகத்தின் விளிம்பில் உள்ளவர்கள், பைத்தியக்காரர்கள், தொழுநோயாளர்கள், குற்றவாளிகள், சமூகக் கட்டமைப்புகளிலிருந்து விலகியவர்கள், பாலியல் பிறழ்வுக்குட்பட்டவர்கள், கொலைகாரர்கள், இருண்மைச் சிந்தனையாளர்கள் இவர்களைக் குறித்தே அதிகம் அக்கறை கொண்டதாக தோன்றுகிறதே?

○ ப: நான் இயல்பான சிந்தனை ஓட்டத்திலுள்ளவர்களை எடுத்துக் கொள்ளாமல், சமூகச் கட்டமைப்புகளிலிருந்து விலகியவர்களை எடுத்துக் கொள்வதற்காக நிரம்பவும் விமர்சிக்கப்பட்டிருக்கிறேன். அதற்கு என்னுடைய பதில் ‘ஸ்நாப்பிய’ மதிப்புடையதாக இருப்பினும் பரவாயில்லை. ஏனெனில் ரிக்கார்டோவையோ, பாப் போன்றவர்களையோ என்னால் இருண்மைச் சிந்தனையாளர்களாய் காண முடியவில்லை.

● கே: சமூகக் கட்டமைப்புகளிலிருந்து விலக்கப்பட்டவர்கள் குறித்த உங்களின் சிறப்பு அக்கறையென்ன?

○ ப: நான் இருண்மையானவர்களைக் குறித்து எழுதுவது இரண்டு காரணங்களுக்காக. அண்மைக் காலங்களில் மேற்கு ஐரோப்பாவின் சமூக— அரசியல் நிகழ்வுகளின் மூலம் ஒருவித கட்டமைவுக்கு அச்சமூகம் நகர்ந்துள்ளதை நாம் மறந்துவிட்டோம், பழக்கப்படுத்தபட்டிருக்கிறோம். அப்படி பழகிவிட்ட நிலையில், அந்த நிலப்பரப்பு நமக்கு

மிகவும் அருகாமையானதே. ஆனால் நாமோ அதைச் சரியாக உள்வாங்கிக் கொள்ளவில்லை. அங்கே இருப்ப வர்களில் பெரும்பாலோர் ஒரு காலத்தில் ஒழுங்குணர்ச்சி யற்றவர்கள்.

என்னுடைய முக்கியமான இலக்குகளில் ஒன்று. மக்களி டம் ஒன்றாக உள்ள சில கூறுகள், உலகம் முழுமைக்கு மானது அல்ல. மாறாக அவைக்குறிப்பிட்ட வரலாற்று மாற்றங்களினால் ஏற்பட்ட ஒழுங்கமைவே.

என்னுடைய எல்லா ஆராய்ச்சிகளுமே மனிதனின் இருத்த லுக்கான ஒழுக்க அமைவுகளையும் அதன் ஒருமைகளை தகர்த்தெறிவதே.

இவையெல்லாம் நிறுவனங்களின் குறுகிய தன்மையை வெளிப்படுத்துவதாகும். மனிதன் இன்னும் எத்தகைய சுதந்திரச் சூழலை அனுபவிக்க முடியுமென்பதையும், எத்தனை விதமான மாற்றங்கள் அவனுக்கு தேவையாக இருக்கிறது என்பதையும் வலியுறுத்துவதே என் வேலை.

● கே: மேதாவித்தனமான ஆய்வாக இருந்தாலும், உங்கள் எழுத்துக்களில் ஒரு உண்மையான உணர்வின் இழை அடிநாதமாக ஓடுகிறது.

உங்களின் 'ஒழுங்கும் தண்டனையும்' என்ற நூலில் கடுமையான துயரம் நிறைந்துள்ளது?

'பொருள்களின் ஒழுங்கு' என்ற நூலில் வெறுப்பும் நம்பிக் கையும் கலந்துள்ளன?

'நாகரீகமும் பைத்தியகாரத்தனமும்' நூலில் அவமதிப்பும் சோகமும் காணக்கிடக்கின்றன.

○ ப: என் ஒவ்வொரு எழுத்தும் நூலும், என் சுயசரிதத்தின் ஒரு பகுதியே. ஏதோ ஒரிரு காரணங்களுக்காக நான் அப்படிப்பட்ட வாழ்க்கையை நடத்த வேண்டியிருந்தது. உதாரணத்துக்கு சொல்ல வேண்டுமெனில் 1950-இல் மனநோய் விடுதியில் வேலை செய்ததைச் சொல்லலாம்.

தத்துவம் படித்தபின்பு 'பைத்தியம்' என்ற கருத்தாக் கத்தை ஆராய்ந்து பார்க்க ஆர்வம் எழுந்தது. பைத்தியத் தின் காரணியை அறிந்து கொள்ளும் அளவுக்கு என்னிடம் பைத்தியக்காரத்தனம் நிறைந்திருந்த்து. அதை கற்கத் தேவையான எல்லாத் தகுதியை உடையவனாக இருந்தேன்.

தன்னிச்சையாக மன நோயாளிகளுடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது: ஏனெனில் எந்தவொரு குறிப்பிட்ட பாத்திரத்தையும் நான் வகிக்கவில்லை.

நரம்பியல் அறுவைச் சிகிச்சையும், மனவியல் மருத்தவமும், அந்த நேரத்தில்தான் மலரத் துவங்கியிருந்தன. அது மரபான ஸ்தாபனமாகவும் உருப்பெற்றது. முதலில் தேவையான அளவுக்கு அவைகளை ஏற்றுக்கொண்டேன். மூன்று மாதங்கள் கழித்துதான், இவற்றிற்கெல்லாம் எத்தகைய தேவையுள்ளது என்று யோசிக்கத் துவங்கினேன். [நான் கொஞ்சம் மந்த புத்திக்காரன்]

மூன்று வருடங்களுக்குப்பின் அந்த வேலையை விட்டு விட்டு ஸ்வீடன் சென்றேன். மிகுந்த அசௌகரியங்களுக்கு இடையே மேற்சொன்னவற்றின் வரலாற்றை எழுதத் துவங்கினேன்.

'நாகரீகமும் பைத்தியக்காரத்தனமும்' என்ற நூலானது நான் எழுதக் கருதியதின் முதல் பாகமே. எந்த நூலின் இரண்டாவது பாகத்தை எழுதுவதையும் நான் வெறுக்கிறேன்.

நான் எழுதிய நூலை ஒரு உளவியல் சார்ந்தது எனப் பலர் கருதினாலும் அது வரலாற்றின் சித்தரிப்பே. உங்களுக்கு தெரியுமோ என்னவோ...

உண்மையான விஞ்ஞானத்திற்கும் போலியான விஞ்ஞானத்திற்குமுள்ள வித்தியாசம்,

உண்மையான விஞ்ஞானம் தனது சுயசரிதத்தை ஏற்றுக்கொள்ளும், அது தன்னையே தாக்கியபோதிலும். ஆனால் நீங்கள் ஒரு உளவியல் நிபுணனிடம் அவனுடைய மன இருப்பின் கட்டமைப்பானது லாசரின் வீட்டிலிருந்து தோன்றியது என்றால் கடுமையான கோபம் கொள்வான்.

● கே: 'ஒழுக்கமும் தண்டனையும்' என்ற நூலின் தோற்றம் குறித்துச் சொல்லுங்கள்...

○ ப: நான் உங்களிடம் உண்மையை சொல்லியே தீர வேண்டும்.

எனக்கு சிறைகளுடனோ, கைதிகளுடனோ, நேரடியான தொடர்பு என்றைக்குமே இருந்ததில்லை பிரான்சு

சிறையொன்றில் மனோதத்துவியலாளனாக பணியாற்றி யிருந்ததைத் தவிர.

மக்கள் அரசியல் தகுதி வாய்ந்தவர்களாக இருந்த ஒரே காரணத்துக்காக சிறைகளில் அடைக்கப்பட்டனர். நான் டுனீசியாவில் இருந்தபோது. அந்த நிகழ்ச்சி என்னைப் பெரிது பாதித்தது.

● கே: செவ்வியல் காலம் என்பது உங்கள் எழுத்துக்களை முடுக்கு வதாகத் தெரிகிறதே!

உங்களுக்கு அத்தகைய காலத்தின் மீது ஒருவித நஸ்டால் ஜியா (நாட்டம்) தெரிகிறதே.

எல்லாமே இணைந்து ஒருமையுற்றிருந்த காலத்தை நீங்கள் மறுமலர்ச்சிக் காலமாகக் காணுகிறீர்களா?

○ ப: கடந்த காலத்திய அழகு என்பது ஒரு தாக்கமே; தவிர நஸ்டால் ஜியாவுக்கான காரணமல்ல. இவை நம் முடைய கண்டுபிடிப்புதான் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் நஸ்டால்ஜியாவை தக்கவைத்துக் கொள்வது நல்லதுதான். குழந்தைகள் தமக்கு இருந்தால், நம் முடைய இளமைக் காலத்துடன் தொடர்பொன்றை இருத்திக்கொள்வது நல்லதே.

சில முக்கியமான கணங்களையும், காலத்தையும் நஸ் டால் ஜியாவாக நினைவுகூர்வது சமகாலத்தை யோசனை யோடும், நம்பிக்கையோடும் எதிர்கொள்ள உதவும். ஆனால், அதே நஸ்டால் ஜியா வன்மத்திற்கோ, தீங் கான ஒன்றுக்கோ காரணமாய் இருக்குமெனில் அதைக் களைவதே சரியானதாகும்.

● கே: நீங்கள் எவ்வகையான எழுத்துககளை மகிழ்ச்சிக்காக படிப்பீர்கள்?

○ ப: எந்தப் புத்தகம் என்னுள் கடுமையான உணர்வை எழுப் கிறதோ அவ்வகையான புத்தகங்களையே படிப்பேன். உதாரணத்துக்கு பாக்னர், தாமஸ்மன், மால்கம் லௌரி யின் ''எரிமலையின் கீழ்'' போன்ற புத்தகங்களைக் கூறலாம்.

● கே: எத்தகைய சிந்தனைப்போக்கு உங்கள் எண்ணப்போக்கில் தாக்கத்தை உண்டாக்கியது?

○ ப: பெர்க்லியில் வாழும் சில நண்பர்கள், ஹைடேகர் என்மீது தாக்கம் செலுத்தியுள்ளதாக—இருப்பதாக கூறியபோது, எனக்கு ஆச்சர்யமாக இருந்தது,

அது உண்மைதான். இதுவரை பிரான்சில் யாருமே கண்டுபிடிக்கவில்லை.

1950இல் மாணவனாக இருந்த பருவத்தில் எட்மண்ட் ஹுசரல், சார்த், மாரிஸ் மெர்லோ பாண்ட்டி போன்றவர்களைப் படித்தேன். நாம் தாக்கத்திற்கு உள்ளாகும் போது புதிய ஜன்னல் ஒன்றைத் திறக்க முற்படுகிறோம். ஹைடேகரைப் புரிந்துகொள்ள ஒரு பிரெஞ்சுக்காரனுக்கு எந்தச் சிரமும் இருக்காது.

ஒவ்வொரு வார்த்தையும் புதிராக உள்ளபோது ஹைடேகரைப் புரிந்துகொள்ள கடினமான நிலையில் நாம் தள்ளப்படுவதற்கான சாத்தியமில்லை.

'இருத்தலும் காலமும்' என்ற நூல் கடினமானதுதான் புரிந்துகொள்ள. ஆனால் அவருடைய சமீபத்திய புத்தகங்கள் தெளிவாகவே உள்ளன.

'நீட்சே' எனக்கு புதிய வெளிப்பாடாக அமைந்தார். வழக்கமாக கற்றுத்தரப்பட்டவர்களிலிருந்து அவர் பெரிதும் வித்தியாசமானவராக தெரிந்தார். அவரை பேரவாவுடன் படித்ததில், என் வாழ்க்கையிலிருந்து நான் என்னையே முறித்துக் கொண்டேன். பைத்தியக்கார விடுதியை விட்டு நான் வெளியேறினேன். பிரான்சையும் துறந்தேன். நான் எதிலோ சிக்குண்டிருப்பதாக உணர்ந்தேன்.

நீட்சேயின் வழியாக பிரெஞ்சு சமூக, அறிவுநிலை வாழ்விலிருந்து அந்நியனானேன். நான் இன்னும் இளைஞனாகவே இருந்திருந்தால் பிரான்சைவிட்டு அமெரிக்காவிற்கு குடியேறியிருப்பேன்.

○ கே: எதற்காக?

○ ப: குடியேற்றத்தில் புதிய சாத்தியப்பாடுகளைக் கண்டேன். அந்நியனாக இருந்தால் ஒரே வகையான அறிவாற்றல் நிலையும், கலாச்சாரச் சூழலும் நமக்கு இருக்காது.

நான் எதனோடும் ஒன்றியிருக்க தேவையிருக்காது.

மற்றும் பெரும்பாலான புற/அக அழுத்தங்கள் என்மேல் தாக்கம் செலுத்தா.

அமெரிக்காவில் நிறைய பல்கலைக்கழகங்கள் பல்வேறு ஆர்வங்களின் மையமாக இயங்குகின்றன, ஆனால்

ஒன்று, அப்படியே நான் குடியேறியிருந்தால், அந்தப் பல்கலைக்கழகங்கள் என்னை தூக்கியெறிந்திருக்கும்.

● கே: ஏன்?

○ ப: சிலர் என்னை மாணவர்களின் அறிவாற்றலுக்கு அபாயமானவன் என எண்ணுகிறார்கள். நான் அதைப் பெருமையாக நினைக்கிறேன்.

மக்களின் அறிவாற்றலில் சமநிலை குறித்து கவலைப்படுவதைக் காணும்போது அவர்களின் சிந்தனையில் தவறிருப்பதாகவே நான் கருதுகிறேன்.

நான் அபாயகரமானவன்தான், ஏனெனில் நான் ஓர் மறைமுகமான மார்க்சிய அனுதாபி, அறிவுக்கு முரணானவன். நிகிசிலிஸ்ட்.

● கே: 'பொருள்களின் ஒழுங்கு' என்ற நூலை படிப்பவர்கள் தனித்தனியான முயற்சிகளால் எவ்வித சீர்திருத்தத்தையும் கொண்டுவர முடியாது என்று அந்நூலின் முடிவான கருத்தாக்கமாக புரிந்துகொள்வார்கள். ஏனெனில் புதிய கண்டுபிடிப்புகள் எல்லாவற்றிலுமே அதன் கண்டுபிடிப்பாளர்கள். யோசித்திராத அர்த்தங்களும், குறைகளும் நிறைந்துள்ளன.

'ஒழுங்கும் தண்டனையும்' என்ற நூலை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், நீங்கள் சங்கிலித் தொடரானக் குழுவிலிருந்தும், மூடப்பட்ட போலீஸ் வண்டியுள்ளிருந்தும், ஒரு மாறுதல் நிகழ்வதை, மரபான தண்டனையிலிருந்து ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனமுறைமையின் தண்டனைக்கு மாறியுள்ளதை குறிப்பிடுகிறீர்கள்.

இந்த மாறுதல் என்பது தன்னை நிறுவிக்கொள்ளும் சமூகத்தின் உடன் நிகழ்வே என்று கூறுகிறீர்கள். அப்படியெனில் பிரக்ஞை பூர்வமான மாறுதல் சாத்தியமில்லையா?

○ ப: மாறுதல் நிகழாது என்று எப்படி நீங்கள் ஒரு முடிவுக்கு வரமுடியும்? என்னுடைய எல்லா ஆய்வுகளுமே 'அரசியல் ரீதியான மாறுதலையே உட்கிடையாக கொண்டது'.

'ஒழுங்கும் தண்டனையும்' என்ற நூல் முழுவதுமே அத்தகைய போக்கையே ஆய்வதாகும். புதிய சிந்தனை முறைமையின் நிகழ்வாகவே நான் இதைக் காண்கிறேன். நாமெல்லோருமே சிந்திக்கக் கூடிய பொருள்கள்தான்.

இப்பிரச்சனைகள் எதிர்கொள்ளும் விதத்திலேயே அது தெரியவில்லையா?

சமூக வரலாற்றுக்கும்—சிந்தனை முறைமைகளின் வரலாற்றுக்கும் இடையே ஓர் எதிர்நிலை உள்ளது.

மக்கள் எவ்வாறு சிந்திக்காமல் இயங்குகிறார்கள் என்பதை விளக்குவதே சமூக வரலாற்றாசிரியரின் கடமையாகும்.

மக்கள் எவ்வாறு சிந்திக்கிறார்கள் (இயங்காமல்) என்பதை விளக்குவதே சிந்தனை முறைமைகளின் வரலாற்றாசிரியனின் கடமையாகும்.

ஆனால் உண்மையிலோ! மக்கள் எல்லோருமே இயங்கியும், சிந்தித்துக் கொண்டுமோ இருக்கிறார்கள்.

எந்தவொரு நிகழ்வையும் மக்கள் எவ்வாறு எதிர்கொள்கின்றனர்—எதிர்வினையாற்றுகின்றனர் என்பதெல்லாம் அவர்களின் சிந்தனையை சார்நதது. சிந்தனையென்பது அவர்களின் மரபைச் சார்ந்தது.

இப்படிப்பட்ட சிக்கலான காரணியை ஆராய்ந்தபோது தான் தெரியவந்தது. ஏன் மக்களிடையே குற்றங்களையும்— குற்றவாளிகளையும் வித்தியாசமான முறையில் எதிர்கொள்கிறார்கள் என்பதும் புரிந்தது.

நான் இரண்டு விதமான புத்தகங்களை எழுதியுள்ளேன். ஒன்று ‘பொருள்களின் ஒழுங்கு’ என்ற நூல் விஞ்ஞான சிந்தனை முறைமையை அடிப்படையாகக் கொண்டது.

அடுத்தது ‘ஒழுங்கும் தண்டனையும்’ என்ற நூல் சமூக ஒழுங்குகளின் நிறுவனங்களையும் குறித்தது.

விஞ்ஞான வரலாறு என்பது சமூக உணர்வுதளத்தில் வளர்வது அல்ல. ஓர் விஞ்ஞான சொல்லாடலை அங்கீகரிக்க, சிந்தனையில் சில குறைபாடுகளுக்கு அடிபணிய வேண்டியுள்ளது.

மக்களும் / ஒழுங்கும் / தண்டனையும் / பிரதிகளும் / பழக்க வழக்கங்களும் ஒன்றோடு ஒன்று போராடத் துவங்குகின்றன.

என் நூல்களில் மக்களின் உடன் நிகழ்வையும்—எதிர்நிகழ்வையும் உருவாக்க எது காரணியாக இயங்கியது என்ப

தைக் குறித்த பொருண்மையான ஆதாரங்களில்லாத மற்றவையை காணுவதே என்னுடைய நோக்கமாகும். நான் மக்களின் சுதந்திரத்தில் நம்பிக்கையுள்ளவன். அந்த சூழ்நிலையிலோ மக்கள் மிக விசித்திரமான முறையில் பல்வேறு வகையில் எதிர்வினையாற்றுகின்றனர்.

● கே: நீங்கள் 'ஒழுங்கும் தண்டனையும்' என்ற நூலில் ஒழுங்கமைவுகளும்—அறிவின் அதிகாரத்தையும் நவீன சமூகத்தில் அறிந்துகொள்ள பின்புலமாக உதவும் என்று முடிக்கிறீர்கள்.

அப்படியென்றால் ஒழுங்கமைவுக்கும்—மனிதன் என்ற கருத்தியலுக்கும் இடையிலான உறவும் அறிவும் எத்தகையது?

○ ப: உளவியல், மருத்துவம், செய்கை இரக்கம், கல்விமுறை ஆகிய துறைகளினால் மனிதன் என்ற கருத்துருவம் ஒற்றை முறையிலேயே வார்க்கப்பட்டுள்ளது. அந்த கருத்துருவமானது இப்போது உலக முழுமைக்குமான ஒழுங்கமைவாக கட்டமைக்கப்பட்டுள்ளது.

அதேபோல்தான் மனிதாபிமானம் என்ற கருத்துருவமும் கூட உலக முழுமைக்குமானது அல்ல, ஒரு குறிப்பிட்ட சூழலுக்கேற்ற பயன் சார்ந்த கருத்தியல் கொண்டது.

நாம் எதை மனிதாபிமானம் என்றழைக்கிறோமா அதையேதான் மார்க்சியர்கள், தாராளவாதிகள், நாஜிகள், கத்தோலிக்கர்கள் பயன்படுத்துகின்றனர். அதற்காக அந்த கருத்துருவத்தை விட்டுவிட முடியாது. ஏனெனில் அதைத்தான் நாம் 'மனித உரிமைகள்' என்ற கருத்துருவமாக கொள்கிறோம்.

நீங்களே பாருங்கள் எண்பது ஆண்டுகளுக்குமுன் ''பெண்ணிய ஒழுக்கம் (கன்னிமை)" என்ற கருத்துருவமானது உலக முழுமைக்குமான ஒன்றாகவே இருந்தது. இப்போதோ அந்த கருத்துருவத்தின் கட்டமைவு மாறியுள்ளது. நான் எதைக் குறித்து கவலைப்படுகிறேன் என்றால் மனிதாபிமானம் என்ற கருத்துருவம்—விடுதலை என்ற அர்த்ததொனியில் உலக முழுமைக்குமானதாக மாறியுள்ளது குறித்துதான். இதிலே நிறைய பூடகங்களும்—சுதந்திரங்களும் மறைவாக உள்ளன.

வருங்காலத்தில் நாம் நினைத்ததற்கு மாறான கண்டுபிடிப்புகளினால் மனிதாபிமானம் என்ற மரபு சார்ந்த

கருத்துருவமானது அரசியல் வானவில்லின் இடது—மையம் —வலது என பலபக்க அமைவுகளாக இயங்கியது தெரியவரும்.

● கே: இதைத்தான் 'தான்' என்பதன் நுணுக்கங்கள் என்ற நூலில் கூறியுள்ளீர்களா?

○ ப: ஆமாம். சிறிதுநேரத்திற்கு முன்பு நீங்கள் என்னைப்பற்றி கூறியது உண்மைதான்.

நான் மிக ஒழுங்கமைவானவனாகவும்—இறுக்கமானவனாகவும் இருப்பதாய் தோன்றுகிறது.

நான் மூன்று மரபான சிக்கல்களையே கற்றறிந்திருக்கிறேன்.

(அ) நமக்கு உண்மையுடன் எவ்வகையான உறவுமுறை விஞ்ஞான அறிவினால் வளர்ந்துள்ளது. பருண்மைப் பொருளின் அடிப்படையில் இந்த "உண்மையில் சொல்லாடல்கள்" என்பது கலாச்சாரத்தின் தளங்களில் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதும்;

(ஆ) சகமனிதர்களுடனான உறவுமுறை எப்படி அதிகாரத்தின் முறைமைகளின் வாயிலாக நிறுவப்பட்டது;

(இ) உண்மை, அதிகாரம், 'தான்' என்ற மூன்றுவகையான கட்டமைவுகளின் இடையே எத்தகைய உறவு உள்ளது என்பது.

மேற்கூறிய எல்லாவற்றையும் ஒரு கேள்வியுடன் இந்த உரையாடலை முடிக்கிறேன்.

எது செவ்வியலாகவும்—கட்டமைவாகவும், ஒழுங்கமைவாகவும் இருக்குமோ... என்பதோடு, கேள்விகள் ஒன்று, இரண்டு, மூன்று என மறுபடி 'ஒன்றுக்கே' திரும்பிப்போய் முடிகிறது.

நான் அந்த 'ஒன்றின்' முதலாவது நிலையிலேயே இருக்கிறேன். ●

தமிழாக்கம்: எஸ். சண்முகம்

நூல் மதிப்புரை

□

ஒரு பெண்ணின் கதை

கணவனின் ஆணாதிக்கம் நிலவுகிற குடும்பச் சூழலில் பல வகையில் அடிமைத் தனத்துக்கும் துயரங்களுக்கும் உள்ளாகி, இறுதியில் சகிக்க முடியாமல் உமா குடும்பத்தை விட்டு வெளியேறுகிறாள். ஒரு பெண்ணின் கதை எனச் சொல்லும் இந்த நூல் உண்மையில் நாவல் அல்ல, நாவல் வடிவில் இது ஒரு விவாத நூல். பாத்திரங்கள் மாறி மாறி விவாதிக்கிறார்கள். குடும்ப அமைப்பு, குடும்பத்தை உருவாக்குகிற ஆணாதிக்கம், குடும்பத்திற்கு ஆதாரமாக உள்ள தனி உடைமை முறை முதலியவை நாவலில் மாறி மாறி விமர்சனத்துக்குள்ளாகின்றன. 'தனி உடைமை மாதிரியே குடும்பமும் தேவையில்லை'. மார்க்சியருக்குப் பெண்ணியப்பார்வை இல்லை என்ற குறையைத் தவிர்த்து விடலாம், என்பது ஆசிரியர் கணேசலிங்கன் அவர்களது நோக்கம். உமாவும், அசோகனும் தம் கருத்துக்களைச் சொல்ல அவர்களுக்குக் குரல் தந்திருக்கிற ஆசிரியர், அவர்களின் கூச்சலுக்கிடையில் அழிந்து கொண்டிருக்கிற குழந்தைக்குக் குரல் தரவில்லை. குடும்பத்தை உடைத்து எறிந்து விடுகிற பார்வைக்குள் மார்க்சியன் தன்னை இன்னும் எளிதாக இணைத்துக்கொள்ள முடியாது. சன்னல் வழியே தூக்கி எறிந்து விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிற தனி உடைமை, முன் கதவின் வழியே நுழைந்து மார்க்சியனை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற காலம் இது. ஆசிரியர் கூறுவது போல பெண்ணியத்தையும் மார்க்சியத்தையும் அவ்வளவு எளிதாக ஒட்டுப் போட்டு விட முடியாது. ஆசிரியர் துணிவைப் பாராட்ட முடியவில்லை.

—அறிவன்

பாலையில் ஒரு சுனை

பனிரெண்டு சிறுகதைகளும், ஒரு குறுநாவலும் இடம்பெற்ற இன்குலாப் அவர்களின் இத்தொகுதியில் — முதிர்ந்த வயதிலும், மனதைக் காயவிடாமல் வெயிலின் கொடுமையில் ''ஆளுக்கொரு செருப்பாய்ப் போட்டுக்கிட்டுப் போங்கடி'' — என்று மனித உறவை வளப்படுத்தும் மூதாட்டியும்—விபத்துக்களில் மனித அடையாளங்களை இழந்த சமூகமும், சாதிய முடிச்சுகளில் தம்மை உதிர்க்கும் மனிதர்களும், இந்திய அரசியலின் தேர்தல் கூத்தில் மம்மு

ராசாக்களும், ஆதிக்கம் எந்த வகையில் இருந்தாலும் அதை எதிர்க்கும் போராட்டகுணம் தேவை என்பதும், சித்தாந்தம் பேசுகிற மனிதர்கள் தனது போலித்தனத்தை உரித்து தன்னிலிருந்து சித்தாந்தத்தை நோக்கி இயக்கம் பெற வேண்டிய அவசியமும் அதிகார பீடத்திற்குப் பலியாகும் சின்னசாமிகளும், அதிகாரத்திற்குத் துணைபோகும் அரசு இயந்திரங்களும், தன்னாசிகளுக்குள் மனிதத்துவம் விரிவதும் 'செடிக்கும் கொஞ்சம் பூ வேணாமா?'-வில் முகிழ்க்கும் தாயுள்ளமும், ஒடுக்கு முறைக்கு எதிராகச் சித்தர்கள் போட்ட பரம்பரைச் சத்தமும், மனித உறவின் நீட்சி எல்லா உயிர்களையும் கடக்கும் என்பதும், மதம் என்பது மனித நாகரிக வளர்ச்சிக்கு துணை செய்திருந்தாலும், இன்றைக்கு அரசியல் விளையாட்டின் பகடைக் காயாய் ஆகி மனித சமூகத்தைப் பந்தாடுவதும்—யதார்த்தமாகச் சித்திரம் பெற்றிருக்கின்றன.

மொழியை 'மண்வாசனை'யின் பக்கமே நிறுத்தி வைத்துக் கொண்டு பெரும்பாலான கதைகளை நகர்த்திச் செல்கிறார். யதார்த்த சித்திரிப்பின் அழுத்தத்தில் சில கதைகளில் மொழியின் மூச்சு திணறுகிறது. கதைகளின் உட்கரு இன்றைய தேவையாயிருப்பினும்–சிறுகதை இன்று நகரும் வார்ப்புத் தளங்களில் இல்லை. இயல்பு மீறினமரபு மயக்காக இருக்கிறது. இன்குலாபின் அரசியல் விமரிசனமும், மனித உறவுகளை மறுபரிசீலனைக்கு உள்ளாக்குவதும், அரசின் ஆதிக்க நெருக்கில் நைந்து போகும் சமூகத்தின் அவலமும்—அதற்கு எதிராக நிமிரும் போராட்டத்தேவையும் நம் கவனத்திற்கு உரியவை. இதில் சிறந்த சிறுகதைகளாக-பாலையில் ஒருசுனை, மம்முராசா காக்காவின் ஜனநாயக அனுபவம், புதிய மனிதன், தனிமையில் ஒரு தோழமை, மதம் இவற்றைக் குறிப்பிடலாம். தமிழில் இன்று வெள்ளமாகப் புரண்டெழும் சிறுகதைகளின் போக்கில், உயிருள்ள பாத்திரப் படைப்புகள் கொண்ட இச்சிறுகதைத் தொகுதிக்கு இடமுண்டு.

—அபுபக்கர்

'அன்னம்' வெளியீடு, சிவகெங்கை; பக்:230; ரூபாய் 30.00

காப்பிய நோக்கில் கம்பராமாயணம்

'தேவபாடையில் செய்த நூலை, தமிழில் கம்பர் செய்யலாமா?' என ஒரு காலத்தில் கேட்டவர்கள், கம்பராமாயணத்தை மதிக்கவில்லை. இருபதாம் நூற்றாண்டுச் சூழலில் தான் கம்பரின் இராமாயணம் இலக்கியம் எனத் தகுதி பெற்றதோடு ஆய்வுக்குரிய பெறு நூலாகவும் கருதப்படுகிறது. இலக்கிய நோக்கில் கம்பர் நூல்,

எவ்வாறு காவியம் எனச் சிறக்கிறது— என்பதைப் பேராசிரியர் அ.பாண்டுரங்கன் மிக விரிவாக ஆராய்கிறார். வால்மீகியிலிருந்து கம்பர் வேறுபடும் இடங்களை விரிவாகத் தொகுத்து உரைக்கிறார். தண்டியின் பாவிகம் என்ற கருத்தாக்கத்தின் மூலம் இக்காப்பியத்தின் உள்ளுறையை, கவிக்குரலை நுட்பமாக எடுத்துரைக்கிறார். அரிஸ்டாடில் முதல் ஆபர் கிராம்பி வரையிலான காவியம் பற்றிய மேற்கத்தியர் கோட்பாடுகளையும், தண்டி முதல் வ.சுப.மாணிக்கம் வரையிலான நம்மவர்களின் கோட்பாடுகளையும் தக்க முறையில் பயன்படுத்தி, கம்பர் காவியத்தின் கட்டமைப்பு, பாத்திரப்படைப்பு, கவிக்குரல் முதலியவற்றைத் தெளிவுபடுத்துகிறார். இராவணன் மட்டுமல்லாமல் மேலும் சில அவல வீரர்களையும் ஆசிரியர் சுட்டுகிறார். இம்முறையில் சிறப்பான ஆய்வு நூல் என இந்நூலை மதிப்பிடலாம்.

இருபதாம் நூற்றாண்டில் இலக்கியமாக கம்பர் நூல் மதிக்கப்படுவதைக் குறிப்பிடும் ஆசிரியர், பக்தி உணர்விலிருந்து இலக்கியத்தை விலக்கிப் பார்க்கவில்லை. இதுபோலவே, கம்பரின் காப்பிய ஆக்கத்தினுள் பரவலாக உள்நுழைந்திருக்கிற புராணக் கூறுகளிலிருந்து காப்பியத்தை விலக்கிப் பார்க்கவில்லை.

கவித்துவ இயக்கத்தினுள் பக்தியும் புராணிகமும் பகுதிகளாவதைத் தவிர்க்க இயலுமா என்ற கேள்வியோடு கம்பர் காவிய ஆய்வை ஆழமாகத் தொடர்வதற்கு இடம் இருக்கிறது. கம்பர் காப்பிய ரசனையைப் பாதித்திருக்கிறது என ஆரிய திராவிடச் சிக்கல் பற்றி ஆசிரியர் குறிப் பிடுகிறார். வரலாற்றுச் சூழலிலிருந்து, இலக்கிய ரசனை ஆய்வை விலக்கிச் செய்ய முடியுமா என்பதும் கேள்வி. இந்தத் திசைகளில், கம்பர் காவிய ஆய்வை ஆசிரியர் தொடர வேண்டும்.

வரப்பெற்றோம்:

நாட்டார் வழக்காற்றியல்—மானிடவியல் சிறப்பிதழ்; பண்பாட்டு படிமலர்ச்சிக் கோட்பாடு, பரவலியல் கோட்பாடுகள், செயற்பாட்டியற் கொள்கை, தமிழரின் உறவு முறை, மானிடவியலும், நாட்டார் வழக்காற்றியலும் ஆகிய ஐந்து கட்டுரைகள் இந்த நூலில் உள்ளன. பக்கங்கள்: 12+206; விலை ரூபாய் தொண்ணூறு; நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுக்கழகம், பெருமாள் புரம், திருநெல்வேலி-7.

காலடியில் ஆகாயம்

மதம், கடவுள், கோயில், சடங்கு என மனிதன் சுற்றிவந்தது ஒரு காலம். இவை பொய்யாகிறபோது, கடைவீதி, பொருட்கள், கட்சிகள், கொடிகள், கூச்சல், அதிகாரம் என மனிதன் திரிவதும் நேர்கிறது. இவையும் பொய்யாகி, காலை, மாலை, பகல், இரவு, கடல், நதிகள், மரங்கள் என இவற்றை மெய்யாகக் கண்டு இவற்றின் கவிதை அழகில் மயங்குவது இன்னொரு காலம், இவை மனிதனுக்கு கனக்கின்றன. மனிதனைப் பற்றிக்கொள்கின்றன; மனிதனுக்கு விடுதலை இல்லை. காலத்தில் மனிதன் கட்டுப்படுகிறான். இவனுக்கு விடுதலை வேண்டும். இனி என்ன செய்யலாம்? பொருள் மட்டுமா மனிதனைக் கட்டுப்படுத்துகிறது? பொருள் தோன்றுவதற்குமுன்னர் சொற்கள் தோன்றின. சொல்லைக் கட்டுப் படுத்த முடியுமா? சொல்லுக்குள் மனிதன் கட்டுப்பட்டிருக்கிறான். சொல் இருக்கும்வரை பகலும் இரவும், கடவுளும் தத்துவமும், காற்றும் மழையும் கூட இருக்கும். சொல்லை உதறிக்கொள்ள வேண்டும். இப்பொழுது அவை விலகும். காலமற்றுப் போகும். சூரியன் நிரந்தரமாய்ப் பிரகாசிப்பான். பறவை இயங்கும். எப்படிப் பறக்கிறாய் என்ற கேள்வி எழுவதில்லை. அந்த மரத்தில் பூக்கும் ஒரு பனிமலர். மலையடிவாரத்தில் ஆடுகள் சுற்றும். அந்தப் பகுதியில் அந்த மலர் அழகாகப் பூத்திருக்கும். அந்த மலரின் அழகை மேகம் பார்த்து மகிழும். காலமற்றுப் பூத்திருக்கிறது, இந்த மலர்/ இந்த மனிதன் /மேகம் /இந்தக் காற்று. இது ஆனந்தின் கவிதை. ஆனந்தின் கவிதையோடு நமக்குச் சர்ச்சை இல்லை. அதற்கடியில் ஒரு தத்துவம், சொல் முதலில், உணர்வு முதலில் என்ற தத்துவம். இதிலிருந்து மனத்தைத் திறந்துவிடு / இழந்துவிடு; உன்னை உதறிக்கொள் என்ற தத்துவம். ஜே.கே.வை நெருங்குகிற சிந்தனை. ஏதாவது ஒருபுள்ளியில் எந்த ஒரு தத்துவத்திற்கும் நியாயம் உண்டு. ஆனந்தின் கவிதையும் இந்தப்புள்ளியில் மிதக்கிறது. இந்த மிதப்பிலிருந்து கவிதைகளுக்குள் கதையாக்கமும் நாடகப் பாங்கும், புராணீகமும் இயல்பாய் எழுகின்றன.

மௌனியோடு கொஞ்சம் தூரம்

இன்று மௌனியைச் சுற்றித் தீவிரமாக எழுந்துள்ள சர்ச்சைகளிலிருந்து நிதானத்தோடு திலீப்குமார் விலகி நிற்பவராகத் தோன்றினாலும், தம் நிலைபாட்டை அவர் சொல்லாமல் இல்லை. மௌனி சனாதனவாதி அல்ல. மௌனிக்குச் சமூக உணர்வும்

எதார்த்த உணர்வும் உண்டு. மௌனியை அத்துவைதவாதி என்றோ இருத்தலியல் வாதி என்றோ ஒற்றைத் தத்துவச் சிறைக் குள் அடைத்து விட முடியாது. ஒரு கலைஞனுக்குள் இறுக்கமான ஒரு தத்துவத்தைத் தேடவேண்டியதில்லை. மௌனியின் கலை உணர்வைக் கிளறி அதற்குள் வாசகன் தன்னைப் புதைத்துக் கொள்ள வேண்டாம். மௌனியிடமுள்ள கதைகளை நாம் வாசிக்க வேண்டும். தமிழுக்கு மௌனியும், புதுமைப் பித்தனும் இவர்களைப் போலவே வண்ண நிலவனும், பூமணியும் தேவை. தத்துவத்திலும் அழகியலிலும் இவர்களிடம் வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும்.

ஆனால் இவர்களை ஓரிடத்தில் இணைப்பது இவர்களின் அற உணர்வு, மௌனியிடமும் செறிந்துள்ளது அற உணர்வு. எப்படி யென்று விளக்காவிட்டாலும் திலீப்குமார் பார்வையின் தனித் தன்மையை இங்கு காண்கிறோம். மௌனியோடு கொஞ்சதூரம் என்று சொல்லி எல்லாகதைகளுக்கும் தம்குறிப்புகளைத் தருகிறார். பெண் பாத்திரங்களின் அமானுஷ்யத் தன்மைபற்றிச் சொல்கிறார். பாத்திரங்கள் பிரவாகத்தில் உள்ளன என்கிறார். மௌனியின் அக உலகத்தினுள் நம்மை ஈர்ப்பது இந்தப் பிரவாகம் தான்.

திலீப்குமாரின் வாசிப்பிலிருந்து இன்னும் வேறுபட்ட முறை யில் மற்றவர் வாசிப்பதற்கான தூண்டுதலை இவர் தருகிறார். முயன்றால் மௌனிக்குள் நீண்ட தூரம் செல்ல முடியும். அதற்கான தூண்டுதலாக இந்நூலைக் கொள்ளலாம்.

முகம் கொள்

கி.பி அரவிந்தன் இப்பொழுது அவரே சொல்கிறபடி அகதி முகத்தோடு இழிசினர் தொழில் செய்து பிரான்சில் வாழ்கிறவர். (அவருக்கு அகதிமுகம். நமக்கு எந்தமுகம்? அவர் செய்வது இழிசி னர் தொழில். நமக்கு எந்தத் தொழில்?) ஈழத்தில் போராளியாய் இருந்த இவர், போராளிக்குழுவில் ஏற்பட்ட முரண்பாட்டால் நாட்டை விட்டு வெளியேறியவர் (இந்த அரசியல் நமக்குத் தரு வது வேதனை). தமிழகத்தில் சுற்றிததிரிந்து உறவுகள் வளர்த்துக் கொண்டவர். தேசமிழந்து உறவுகள் இழந்து, தம் தேசத்தோடும், நண்பர்களோடும் இக்கவிதைகளில் ஊன் உருக, உயிர் உருகப் பேசுகிறார். ஆகவே உயிர் வாழ்கிறார். கவிஞர் பற்றிச் சொல்லச் கூடிய விவரங்கள் இவை. 'வரைபடத்தில் இல்லை. தேசமும் மக்களும்) என்பன போன்ற விவரங்கள் இவை: கனலில் பிறந்தவை இவர் கவிதைகள். இவரது கவிதைகளில் வெளிப்படும் அகண்ட,

ஆழ்ந்த பரிமாணங்கள் தமிழில் அன்றும் இன்றும் அரியவை. நாடுகளை நரகமாக்கி தங்களுக்குச் சொர்க்கம் படைத்துக் கொண்டவர் (ஏகாதிபத்தியவாதிகள்) பற்றி இவர் தெரிந்து வைத்திருக்கிறார். அரிதாரம் பூசி ஆண்ட உயர்சாதிப் பரம்பரையின் ஆணவம் பற்றிச் சொல்கிறார். 'வடலி வளர்த்தா கள் குடிக்கப் போகிறீர்' என்று கேட்கும் மண்உரம் அறியா மூடர்களை ஏசுகிறார். ஆயுதங்களோடு சேர்த்து ஆணவத்தையும் வளர்த்துக் கொள்ளும் மனிதர்களின் இயல்பு பற்றிச் சொல்கிறார். அவர்களை நோக்கி 'தசைப்பிண்டத்தைத்தான் குண்டு எட்டும். உயிர்த்தலத்தை அல்ல' என்று நேர் முகத்தில் பேசுகிறார்.

எரியும் நெருப்பு எங்கள் பாவச்சுமைகளைக் கொளுத்தட்டும் என்கிறார். அஞ்சல் தொடர் ஓட்டத்தில் தன் கைக்கு வந்து அணையாது சுடர்விடும் நெருப்பை தன் குழந்தையின் கைக்கு மாற்றுவது பற்றிச் சொல்லுகிறார். தனது நாட்டில், தனது மண்ணில் பனை விடலிக்கிடையில் ஊடியும் உராய்ந்தும், தென்னை மரங்களுக்கிடையில் நழுவியும் செல்லும் நிலாவின் பேரழகு பற்றி நினைந்து உருகுகிறார். சூரியனைப்பார்த்து 'நீரிடை நெருப்பென, தீப்பந்தமென, செம்மணிச் சுடலை எனவேகும் என் தேசம்; சினம் தணிந்து மழைக்கரங்களால் என் தேசத்தை நீராட்டு' என்று வேண்டுகிறார். நீர்மையும் அன்பும், நிறைந்ததனால் காவிரியும் வைகையும் வற்றியதோ என கவிதை மொழியில் பேசுகிறார். 'வரலாற்றின்/வீரத்தின் வேர்களை ஏன் வெட்டிக் கொண்டீர்' என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறார். ஆழ்ந்து நினைக்கும் பொழுது, வரலாறும் வைரமும் எங்கு எப்படி உருவாகின்றதோ, அப்படி உருக் கொண்டவை இக்கவிதைகள். மீண்டும் சொல்லலாம். மண்ணும் மரபும் சுற்றிப் பிறந்தவை இக்கவிதைகள். கனலில், துயரில் அன்பில் பிறந்தவை இந்தக் கவிதைகள். இந்த ஆண்டின் மிகச்சிறந்த கவிதைத் தொகுப்பாக இது இருக்கமுடியும்.

ஸ்நேகா; 7, லஸ்சர்ச்ரோடு சென்னை-4; ரூபாய் இருபது.

'நீலக் கனவு'

தனக்குள் சுற்றுப் புறத்திலிருந்தும் வரலாற்றின் வழியிலும் வந்து சேர்ந்து தன்னை அடைத்துக் கொண்டிருக்கிற குப்பைகளும், இடிபாடுகளுமாகக் குவிந்துள்ளவை பல. இவற்றை வெளியில் எடுத்து எறிந்து, காற்றும் வெளிச்சமும் வானமும் பறவைகளும் வந்து செல்கிற மாதிரி தன்மனத்தின் அடைப்புக்களை முற்றாக

மனிதன் நீக்கிக் கொள்ள வேண்டும். இவன்தான் பரவசத்தையும் விடுதலை உணர்வையும் அனுபவிக்க முடியும். 'நீலக்கனவு' கதையில் இடம் பெறும் பிரேமின் கடிதங்கள் வழியே தெரியவரும் இந்த மனிதனை, 'உதயசங்கர்' கண்டு பிடித்து தொகுதியின் சில கதைகளில் உலவ விட்டிருக்கிறார். அருவருக்கத்தக்கவராகத் தோன்றும் அய்யன் பெருமாள், தனக்குள்ளிருந்து அடைப்புக்களை முற்றாக திறந்து கொள்கிற போது, புனிதராகிறார். பெரியப்பாவுக்கு தன் வீட்டைத் திறக்க முடியவில்லை. பல கதைகளில் இளைஞர்கள் குடலைத் தின்னும் பசியோடு, ஆனாலும் மனசைத் திறந்து கொள்ளும் உணர்வோடு அலைகிறார்கள். இது நம் காலத்தின் சோகம். புதிய, முற்றிலும் புதிய கவிதைகள் அங்கங்கே கொட்டிக் கிடப்பதற்காகவும் இத்தொகுப்பிலுள்ள கதைகளை நாம் படிக்க முடியும். இலக்கணம், தேடுபவர்க்கும் சில நல்ல கதைகள் இத் தொகுப்பில் கிடைக்கும்.

சமயம் கடந்த வாழ்க்கை

அரசுக்கு, மதச் சார்பு இல்லை என்று கூறிக்கொள்கிற செக்குலரிசம் என்ற கோட்பாட்டை நூலாசிரியர் வீ.ப.சதாசிவம் மறுத்துரைக்கிறார். உண்மையில் சமயத்திற்கு / சமயங்களுக்கு இடம் கொடாத அறிவியல் வாழ்க்கைதான் செக்குலரிசம் என்று இந்த நூலில் விரிவாக விவாதிக்கிறார். தோன்றிய காலத்தில் மதம் மக்களுக்குப் பயன்பட்டிருக்கலாம். இன்று அறிவியலும் தொழில் நுட்பமும் மக்களாட்சி முறையும், சமநிலையும் வளர்ந்திருக்கிற உலகச் சூழலில் சமயத்திற்கு அவசியமில்லை. மக்களாட்சி முறையின் மூலம் எழுச்சி பெறுகிற சாதிமத உணர்வுகள் சமூக வாழ்வில் அழகையும் அமைதியையும் அழிக்கின்றன. இந்தியாவின் அரசியல் சட்டத்தில் இடம்பெற்றிருக்கிற கொள்கைகள் அறிவியல்வாழ்வுக்கு ஆதாரமானவை. அரசியல்வாதிகள் இத்தகைய அறிவியல் வாழ்க்கைக்கு வழிகாட்டமாட்டார்கள். அறிவாளிகளும் கலைஞர்களும்இப் புதிய வாழ்க்கைமுறையை மக்கள்மத்தியில் கொண்டுசெல்ல வேண்டும். இப்படிஆசிரியர் இந்த நூலில் ஆணித்தரமாக விவாதிக்கிறார்.

நேருவைப் பலபட ஆசிரியர் பாராட்டுகிறார். எம்.என்.ராயின் ஆக்கச்சிந்தனைகளின் சாயலில் ஆசிரியர் சிந்திக்க முயன்றிருக்கிறார். இன்று அறிவியலையும் தொழில் நுட்பத்தையும் ஆசிரியர் விரும்புகிற மாதிரி மக்கள் சார்பில் மாற்றிவிட முடியாது. சமதர்மம் என்ற பார்வை ஆசிரியரிடம் ஆதாரமான பார்வையாக இல்லை.

அரசின் மதச் சார்பின்மை பற்றிச் சொல்லிக் கொண்டாலும் மதங்களோடு சேர்ந்துதான் நம் அரசு வாழ்ந்து கொண்டிருக்கிறது.

அரசியலுக்குள்ளும் இறுக இடம்பெற்றிருக்கும் மதத்தை விமர்சனத்தின் மூலம் வெளியேற்றிவிட முடியாது. மனிதனை முற்றாக அறிவியல் பார்வையின் அடிப்படையில் மாற்றி விடவும் முடியாது. இம்மாதிரிச் சிக்கல்களில் ஆசிரியரின் கவனம் பதியவில்லை. எனினும் ஆசிரியரது சமூக அக்கறையும், சுயமான தேடல் முயற்சியும் சுயமான சிந்தனைத் திறனும் பாராட்டுக்குரியவை. செக்குலரிசம் என்ற சொல்லாடலுக்கு அடியில் அமுக்கப்படுகிற சில முக்கிய உண்மைகளை வெளிக் கொண்டு வந்து இதன் விவாதக் களத்தை ஆசிரியர் விரிவு படுத்தியிருக்கிறார். செக்குலரிசம் பேசும் பொய் முகங்களை அடையாளம் காட்டுகிறார்.

பட்டினி இந்தியாவில் பாபர் மசூதியும் இராமர் கோயிலும்

பாபர் இராமர் கோயிலை இடிக்கவில்லை. இப்ராகிம் லோடி தொடங்கி முடிக்காத மசூதியை பாபர் கட்டி முடித்தார். விடுதலைப் போராட்டத்தின்போது காங்கிரஸ் தலைவர்கள் விதைத்த இந்து மத வாதம்தான், ஜனசங்கமாய்க் கிளைத்து இப்பொழுது பாரதிய ஜனதாவாய், இந்துத்துவமாய், வளர்ந்திருக்கிறது. பாபர் மசூதியை இடித்துத்தான் இராமர் கோயிலைக் கட்ட வேண்டும் என்பது மதவாத அரசியல். இந்த அரசியலுக்கடியில் இருப்பது பொருளாதார சக்திகள். பிர்லா முதல் இந்தியாவின் பெரும் தரகு முதலாளிகள் இந்துமத வாதத்திற்குள் இணைந்து ஆதிக்கத்தை மறைத்துக்கொள்கிறார்கள். இப்படி விவாதிக்கும் ஆசிரியர் கார்த்தி, இந்தக் கூட்டு எதனால் எப்படி வந்தது என்பதையும் விளக்குகிறார். இந்தப் பெரு முதலாளிகளுக்கு இந்தியா முழுமையாக வேண்டும். இந்தியத் தேசியம் பேசுவதற்கு இதற்காகத்தான். புத்த விகாரைகளும் சமண மடங்களையும் அழித்து இந்துக் கோயில்கள் கட்டி இந்து மதத்தை நிறுவிய பார்ப்பனீயம், பாரதம் ஒரு தேசியம் என்று இன்று பேசுகிறது. காஷ்மீர், பஞ்சாப் எனத் தொடரும் தேசிய இன விடுதலை இயக்கங்களை ஒடுக்க வேண்டும். சந்தைப் பொருளாதாரம் என்ற பெயரில் ஏகாதிபத்தியத்திற்கு இடம் தந்து இந்தியத் தரகு முதலாளியம் தன்னை வளர்த்துக்கொள்ள வேண்டும். இதற்கென அரசு அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். இந்த அரசியலை மறைக்கத்தான், இதற்கு மக்கள் ஆதரவைத் திரட்டத்தான் இந்துமத வாதம் எழுந்துள்ளது. உலக அளவிலும் இந்தியாவிலும் போசலிச சக்திகள் தகர்ந்து சிதைந்த நிலையில் மதவாத அரசியலை செயல்படுத்துவது எளிது.

நூல் முழுவதும் தாறுமாறாக விரவிக்கிடக்கும் கருத்துக்களின் தொகுப்பு இது. சில விமர்சனங்களோடு இவற்றை நாம் ஏற்கலாம். மக்களுக்கு, வாழ்வும், வாழ்வுக்கான ஆதாரங்களும், விடுதலையும் தேவை. தனி உடைமையை ஒழிப்பதும், மக்களின் அரசியல் அதிகாரத்தை ஏற்படுத்துவதும்தான் இதற்கான நெறி. இதைச் செயல்படுத்துவதற்கான சக்திகள் திரளாதபோது / தகர்கிற பொழுது மக்கள் யாரை நம்பமுடியும்? இவர்களுக்கு நம்பிக்கை தருவது மதம்/கடவுள்/ராமன். இந்துமத வாதம் பெருகிவிட்டதென பிரச்சாரம் செய்யும் இடதுசாரிகளின் சீர்குலைவுதான் இன்றைய நிலைக்கு முதற்காரணம்: மதம் என்பது அபின் என்ற ஒற்றை வரியை முழக்கி இவர்கள் தம் குற்றத்தை மறைக்கிறார்கள். கார்த்தி கருதுவதுபோல, பனியாக்களுக்கு நிகரான முதன்மைச் சக்தியல்ல பார்ப்பனீயம். இந்திய பனியாக்கள் / முதலாளிகள்கூட இன்று இந்தியப் பொருளாதாரத்தை/அரசியலை நிர்ணயிப்பவர்கள் அல்ல. இவர்களுக்குள், இவர்களைக் கொண்டு ஆதிக்கம் செய்வது ஏகாதிபத்தியம். அங்குமிங்கும் கிடைக்கும் இடைவெளிகளில் தன்னைச் செருகிக்கொள்கிறது பார்ப்பனீயம். இராமர் கோயிலைக் கட்டி முடிப்பதால் இந்துக்களின் வறுமை தீரப்போவதில்லை. இந்தியாவில் அனைத்து மக்களின் (கிறிஸ்துவர், முஸ்லிம்கள்கூட) இனம், மொழி, பண்பாடு, சடங்கு முதலிய அனைத்தினுள்ளும் ஊடுருவியிருக்கும் ஒருமைபற்றி சொல்வது இந்துத்துவம். இன்று பேசப்படும் இந்துத்துவத்தினுள் பார்ப்பனனையும் பனியாவையும் மட்டும் கண்டு பயனில்லை. இவையனைத்தும் இன்று ஏகாதிபத்தியத்திற்கு எளிதாக விரிந்து இடம் தருகின்றன. இவை தவிர தமிழக அரசியல் என்ற முனையிலிருந்து இந்திய இந்து அரசியலை நாம் மதிப்பிட வேண்டும். கார்த்திக்கு நிறைய வேலைகள் காத்திருக்கின்றன.

சித்தார்த்தா வெளியீடு; 11, பாட்ராச்சாரியார் தெரு,
கும்பகோணம்-1; ரூபாய் 28.00

கூடுகளை விட்டு

கவிஞர் போப்பின் இதயத்தைச் சதா அரித்துக்கொண்டிருப்பது இக்கவிஞனுக்கும் சமூக யதார்த்தத்துக்கும் இடையே விரிந்து கிடக்கும் பரந்த இடைவெளி. மனிதன் சாதியாய்...மதமாய்... விதியாய்... வீடாய் சுருங்கிச் சுருங்கி இறுகிப்போய்ப் பட்டுப்புழுவைப் போல தன்னை மட்டும் சுற்றிப் பாதுகாப்பாய்க் கூடு பின்னும் சூழலே சமூகயதார்த்தம் எனினும் கவிஞர் வலி நிரம்பிய குறும்

புன்னகையோடு வாழ்வின் முரண்களைக் கவிதையாக்கிவிடுகிறார். இவரது பல கவிதைகள் (நேர்மை, தொல்உயிர், திரை, முத்திரை, உறவு, எல்லை) எளியவை, நம் இதயத்தை வருடுபவை. இன்னும் மீதியிருக்கிற நம் கிராமத்து மனிதர்கள், மரங்கள் ஆகியவற்றின் அழகுகளை இவை சொல்லுகின்றன. வறுமையிலும், வாழ்க்கை முரணிலும், கோடை வெப்பத்திலும் காய்ந்து, காயம்பட்டு இன்னும் அன்பை நம்பியிருக்கிற, அன்பைத் துளிர்க்கிற மனிதர் பற்றிச் சொல்லுகின்றன. சிக்கலில் தவிக்கிற கவிதைகளாக இவை இல்லை என்பது நமக்கு ஆறுதல். செம்மலர் வட்டத்தில் இவை பூத்திருக்கின்றன என்பதனால் ஒரு மன நிறைவு.

—அகிலன்

ஈரம் கசிந்த நிலம்

வெடிவேலாக் கவுண்டரின் ஆதிக்க மனோபாவத்தையும், அரசின் கேலிக்கூத்தான போக்குகளையும், அதில் புதைந்துபோகும் விவசாய சமூகத்தின் நெருக்கடிகளையும்—பாத்திரப் படைப்புகளின் பின்னலில் யதார்த்தமாக (கிராமத்து) மக்கள் மொழியில் படைத்திருக்கிறார். பொருளின் வழி சிடைக்கும் அதிகாரத்தினால் சுரண்டப்படும் பலிகடாக்கள் விவசாயிகளே என்பது இந்நாவலின் மையம். காளியப்பன் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துப் பாடுபட்டுப் பண்படுத்தித் தன் உழைப்பில் கொஞ்சம் நிமிர, நிலத்திற்கு உரியவனின் அதிகாரம் — அவன் உழைப்பையும், உயிரையும் பறிக்கிறது. அந்தக் கிராமத்தின் வறண்ட மனங்களிலிருந்து பொச்சரிப்புகளாக வருகிற இயலாமை, டீக்கடை வெட்டி நியாயமாக—செங்கண்ணன், தங்கப்ப கவுண்டர், ஊர்க் கவுண்டர் போன்ற பாத்திரங்களின் மூலம்,

''பஞ்சம் பொழக்க வந்த பசங்க, ஊரையே ஆட்டிப்படைக்கலாம்னு நெனச்சுட்டாங்க. எங்க போய் முடியுமோ''

''அவனுகளுக்கு ஊர்ல யாரும் சப்போட்டு பண்ணல. ஊர அடிச்சு உலைய்ல போடற பசங்கதான் எக்குத்தப்பா நடக்கறானுக" என்பதில் மக்கள் மனங்களிலும் ஈரம் கசியவில்லை என்பதைப் பேசுகிறார் ஆசிரியர். நாவல் எதார்த்த தளத்தில் இயங்கியபோதிலும், நாவலுக்குள் பேசப்படுகிற வாழ்க்கைச் சிக்கலும், குத்தகைப் பண்ணையத்தின் நெருக்கடிகளின் சீரழிவும்—தனிமனிதர்களை அல்லது ஓரிரு குடும்பங்களை மட்டும் சீரழிவுக்கு உள்ளாக்குவதல்ல, அது நிலத்திலிருந்து, எப்போது தொழில் மையத்தை

நோக்கி முதலாளித்துவம் புரட்ட ஆரம்பித்ததோ, அப்போதே விவசாயக் குடும்பங்களின் சமூகம் சீரழிவை நோக்கித் தள்ளப்பட ஆரம்பித்துவிட்டது என்பதை நாவலின் முழுமைக்குள் கொண்டுவரவில்லை. எனினும், கொங்குநாட்டு விவசாய சமூகத்தின் எழுபதுக்கு பிறகான வாழ்க்கையை — அதன் ஒற்றைப் பரிமாணத்தில் வைத்து, சில கலையம்சங்களோடு வெளிப்படுத்த இந்த நாவல் முயலுகிறது. சி. ஆர். ரவீந்திரன் தம்மை இந்த நாவலுக்குள் ஒரு விவசாயியாகவும், விவசாய சமூகச் சூழல் தம்சூழலாகவும் இனம் கண்டு கொண்டிருக்கிறார்.

—அபுபக்கர்

'தாகம்', 58, தெளிசிங்க பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 விலை: ரூபாய் 26/-

தனிமையில் தவிக்கும் குழந்தைகள்

து. மூர்த்தியின் தீவிர முகம் தெரிந்தவர்கள் இந்நூலின் மூலம் அவரது அன்பான இன்னொரு முகத்தைக் கண்டு வியக்க முடியும். தந்தையைப் பிரிந்து வாழ்கிற தாயின் குழந்தையின் தனிமைப் பற்றிய ஆய்வு இந்த நூலின் பொருள். ஆய்வாளர் என்ற முறையில் ஆசிரியர் முறையாக, தேவையான அளவுக்கு விவரங்கள் கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை. தனிமையில் தவிக்கும் இந்தத் தாய்க் குழந்தையை, தாய் வளர்க்கவேண்டிய முறைபற்றி விரிவாகச் சொல்லுகிறார். இது புதிய குடும்ப முறை என்று சொல்லுகிறார். பள்ளியும் சமூகமும் இந்தக் குழந்தையின் வளர்ச்சிக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய பொறுப்புகள் பற்றிச் சொல்லுகிறார். இந்தக் குழந்தையின் சோகத்திற்கு ஆணாதிக்கம் தான் காரணம் என்கிறார். தனிச் சொத்து, அரசு, அதிகாரம் ஆகியவற்றின் ஆதாரத்தில் அமைந்திருக்கிற சமூக முறை பற்றிய தமது தீவிரமான பார்வையை, தேவையான இடங்கள்தோறும் சொல்லுகிறார். மார்க்சியராகவும் மனநல மருத்துவராகவும் இருந்து செய்ய வேண்டிய ஆய்வு தடுமாறுகிறது; மார்க்கியம் தன் எல்லையை விரித்துக்கொள்வதில் ஆசிரியரின் அக்கறை வரவேற்கத்தக்கது.

சமூக ஆராய்ச்சி நிறுவனம்; 13/2, கசபதி தெரு, சென்னை-5
ரூபாய் ஆறு/-

தூய்மைக் குறைவான ஒரு பயணம்

தூய்மைக்குறைவான தெருவின் வழியாக
என்றாவது விரும்பி நடப்பதுண்டு
கழிவுமுகத்து பிளாட்பாரவாசிகளை
அனுதாபத்துடன் நோக்கி விசாரிக்க நினைப்பேன்—
தூய்மை குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன?
அவர்களிடம் நிச்சயம் ஏதாவது பதிலிருக்கும்.
அல்லது என்னிடமும் கேள்விக் கேட்கலாம்
தூய்மைகுறைவு குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன?
நான் தயக்கமின்றி பதிலளிப்பேன்
சுற்றுச்சூழல்; நோய்கிருமிகளின் ரகம்,
அணுமின் கதிரியக்கம் பாதிப்புகள் பற்றி
ஒருவேளை அவர்கள் இதுகுறித்து அலட்சியப்படுத்தலாம்
வாழ்க்கை அர்த்தமற்றது, சுகாதாரமற்றது என
மிக சுருக்கமான, ஆனால் அர்த்தபூர்வமான பதில் அது.
மனிதக்கிருமிகள் பற்றியும்
பசி அவலம் பற்றியும் அவர்கள்
விவரிக்கும்போது நான் பதில் கூறமுடியாது
உருவ ஒற்றுமையும், சூழல் வேற்றுமை திரிபுமாய்
நாமிருக்கிறோம் என்ற பதில் தோன்றும் எனக்கு.
எல்லாம் வல்ல இறைவனின் படைப்பு குறித்து
எல்லாம்வல்ல இறைவியின் நேசம் குறித்தும்
மலமூத்திர நாற்றங்களுக்கிடையேயான கடவுள் குறித்தும்
தூய்மைக் குறைவான அந்த தெருபயணத்தில்
தோன்றும் ஏனோ
வாழ்க்கைக் குறித்தும்.

ஆத்மாஜி

முன் வெளியீட்டுத் திட்ட விலை அறிவிப்பு

தகழி சிவசங்கர பிள்ளை குறித்து

ஓர் இலக்கிய தொகுப்பு

தொகுப்பாசிரியர்கள்: அய்யப்பபணிக்கர், குறிஞ்சிவேலன்

வெளியீடு: மே'93 பக்கங்கள்: 240 விலை:ரூ.35

★ பணம் அனுப்பவேண்டிய முகவரி: **வேர்கள் இலக்கிய இயக்கம்**
12-டி, தந்தை பெரியார் சாலை, வட்டம்-7, நெய்வேலி-607 803

தனிமையில் உறங்கும் அரசி

இன்றும் உனது வீட்டிற்கு
நீ பட்டும் திரும்புகையில்
உனக்காகக் காத்திருக்கும் உன் வாழைக்கன்றுகள்

எங்கிருந்தாலும் உணர்கிறேன்
உன் விளக்கை நீ ஏற்றி
உன்முகத்தை நீ பார்ப்பதை

வெளியுலகின் நாசங்களுடன்
வீடு திரும்புகிறாய் ஒவ்வொரு மாலையிலும்
வித்தியாசங்களுடன் வீடுகள் திறக்கப்படுகின்றன.
சில உள்ளேயிருந்து சில வெளியேயிருந்து
உனக்கு நீ வழங்கும் தேனீரில்
உபசரிப்பின் அன்போ — இல்லை.
இருக்கிறது தேனீர் மட்டும்.

எல்லாப் பயணங்களின் இலட்சியம் போலவே
உன்னுடைய விருப்பமும் வீடு திரும்புதலே.
இளைப்பாறுதல் தராத வீட்டை விட்டுச் செல்ல
ஒரு இடம் இல்லாத மாலைகளிலேயே
உணர்கிறாய் நடந்து கொண்டே
பூமியின் விளிம்புக்கு வந்து விட்டதை

கேசட்டில் பாடல்கள்
புத்தகங்களில் எழுத்துக்கள்
வானத்தில் நட்சத்திரங்கள்
தெருவில் வேடிக்கைக் குரிய மனிதர்கள்

இதில் எதையுமே... தேர்ந்தெடுக்க முடியாமல் போகும்போது
மனதைத் திடப்படுத்திக் கொண்டு
எதிர்கொள்வாய் உன்னை நீ.

உன் உணவை நீ சமைத்து
உண்ண உட்காருகையில்
துணைக்கு வருகின்றன
கல்லறையிலிருந்து பசித்த அழுகுரல்கள்.

எனக்குப் பதில் பகிர்ந்து கொள்ள
பின்புறம் காத்திருக்கும்
ஆதரவற்ற நாய்க்குக் கொடு
சாப்பிடமுடியாமல் போன மீதி உணவை.

பாதுகாப்பான உறவுகளின்
இரும்புக் கொக்கிகள் உன்முகத்தைக் கிழித்தன.

எல்லா ஆதரவுகளிலும்
கறாரான விலைச் சீட்டுகள் ஒட்டப்பட்டுள்ளன.
உண்மையான பாதுகாப்பு— இருள்,
மிளிரும் மரங்கள், வாகனங்களின் ஓசை,
ஜன்னலில் ஒழுகி வரும் தெரு விளக்கு.

காற்றில் கதவுகள் அடித்துக் கொள்ளும் வீட்டில்.
திடீரென மேலே வந்து ஒரு பூனை
விழக்கூடிய சாத்தியப் பாட்டில்
ஒரு மூலையில் நீ சுருண்டு தூங்குவதை
எங்கிருந்தோ உணர்கையில் தடுப்பது
நான் கைவிடப்பட்ட சோகமா?
உன்னைக் கைவிட்ட சோகமா?

இந்த இரவுகளில் மனத்தின் மூலைகள் பெருகி
பேச்சுக்கான வலி அதிகரித்து விட்டாலோ
நினைவுகளின் ஆதரவுகள் நீர்த்துப் போய்
ஒரு வெதுவெதுப்பான கரத்திற்காக
கண்ணீர் சிந்தினாலோ
ஒரு எதிர்பாராத மரணத் தறுவாயில்
ஒரு மிடறு தண்ணீருக்கு
தவிக்க நேர்ந்து விட்டாலோ
அக்கணங்களில் ஒரு கணத்தில்
நமக்கு யாருமில்லையென
நீ நினைத்துவிட்டால்
துடிதுடித்து மண்ணில் விழும்
எங்கேயோ பறந்து கொண்டிருக்கும்
உனக்கான என் நேசப்பறவை.

மனுஷ்யபுத்திரன்

இறையியல்

''ஆண்டவர் முதலில் ஆதாமையும்
அப்புறம் அவனுக்குத் துணையாகவே ஏவாளையும்...''
என்பது ஓர் ஆணாதிக்கப் பொய்.
ஆண் கடவுள் ஆதாமையும்
பெண்கடவுள் ஏவாளையும் படைத்தனர்.

தத்தமது ஏகாந்தநிலை சலிப்புற்று
ஆதாமும் ஏவாளும் காதலிக்கத் தொடங்கிய
மண்ணின் அழகுகண்டு உண்டான தாபம் உந்தவே

ஆண்கடவுளும் பெண்கடவுளும் காதலிக்கத் தொடங்கினர்.
கடவுளர்கள் ஒரு குழந்தையைக் கருவுறுவதற்குமுன்
ஓராயிரம்கோடி மக்களைப் பெற்றுவிட்டனர் ஆதித்தம்பதியர்.

துன்பச் சூழலிலிருந்து விடுபட ஆதாமும் ஏவாளும்
தத்தமது கடவுளை நோக்கித் திரும்பியபோது,
ஆட்சிபீடத்தைச் சாத்தானுக்கு விட்டுவிட்ட
கடவுள் தம்பதியினர், கலவியிலிருந்தே இன்னும் விடுபட
வில்லை.

மீட்சிக்கு இனி எங்கே போவது? ஆதாமும் ஏவாளும்
தங்கள் காதலுக்கு முன்னாலுள்ள ஏகாந்த
வானிலிருக்கக்கூடும் தங்கள் கடவுளர்களின் சொற்களைத்
தேடிக்கொண்டிருந்தனர், கவிஞர்களைப் போல.

வானத்திலுள்ள சொற்கள்
பறவைகள் ஏந்திச்கொண்டதைக் கண்டனர்.
மேகங்களை உருவாக்கி
மழையைப் பொழிந்ததைக் கண்டனர்.
உயிர்காக்கும் உணவாகித் தங்கள் இரத்தத்தில்
காலங் காலமாய்த் துடித்துக்கொண்டிருப்பதையும்,
இன்னும்...அவர்கள் முடிவற்றுப் பார்த்துக்கொண்டிருத்தனர்,
வானத்துச் சொற்களின் முடிவற்ற வேலைகளை.

தேவதேவன்

பின்-நவீனத்துவம்

பிரடெரிக் ஜேம்சன் நூல் அறிமுகம்

□

இரவி கண்ணன்

புகழ்பெற்ற அமெரிக்கா மார்க்சியர் ‘பிரடெரிக் ஜேம்சனின் நூல் அறிமுகம்’ என்ற இந்தக் கட்டுரை மூன்று பகுதிகளைக் கொண்டது. முதற்பகுதி கடந்த இருபது ஆண்டுகளில் மேற்கத்திய/ஜப்பான் நாடுகளில் பொருளாதாரம் அரசியல் கலாச்சாரம் முதலிய களங்களில் ஏற்பட்டுள்ள மிக முக்கியமான சில மாற்றங்களைச் சொல்கிறது. ஃபோர்டிய தொழில்துறை உற்பத்தி முறை மாறி நெகிழ்வு உற்பத்தி முறை வளர்ச்சி பெறுகிறது. தேசிய அரசு களைக் கடந்து அனைத்துலக அளவில் நிதி மூலதனம் ஆதிக்கம் பெறுகிறது. அரசியல் சனரஞ்சக சர்வாதிகாரமாக மாறுகிறது. கலாச்சாரம், தொழில்துறை உற்பத்தியின் ஒரு பகுதி. பொருள் உற்பத்தியை ஆதாரமாகக் கொண்ட அரசியல் பொருளாதாரம் இன்று குறிகளின் அரசியல் பொருளாதாரமாக மாறுகிறது. டேவிட் ஹார்வி முதலியவர்களை ஆதாரமாகக் கொண்டு அமை கிறது இந்த முதற் பகுதி.

இரண்டாம் பகுதியில் ஜேம்சனின் நூல் அறிமுகம் செய்யப்படு கிறது. ஓவியம், கட்டடக்கலை, நாவல், வீடியோ படம், கவிதை, கலாச்சாரம் ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்களை பின்-நவீனத் துவம் என்ற நோக்கிலிருந்து ஜேம்சன் எடுத்துரைக்கிறார். பழமைக்குத் திரும்புதல்/பழமையில் பூரிப்பு, பொருளாதார உற்பத்தியில் குடும்பம் ஒரு அலகு, கற்பனை உலகின் அர்த்தம்; காலம் ஒரு மூலப் பொருள்; வரலாற்றை எப்படிப் பொருள்படுத்து வது; பேரியக்கத்தின் இடம் பின்-நவீனத்துவத்திற்கு மையம் உண்டா? இது பற்றி மார்க்சியரின் அணுகுமுறை என்ன— இவற்றை ஜேம்சன் தன் நூலில் விரிவாக விவாதிக்கிறார். இவை பற்றிய சுருக்கம், கட்டுரையின் இரண்டாம் பகுதி.

மூன்றாம் பகுதியில் இரவி கண்ணன் மூன்றாம் உலக/இந்தியச் சூழலில் வாழும் நமக்கு, பின்-நவீனத்துவம் எந்தக் காரணங்களுக் காகத் தேவை என்பதுபற்றி தன் கருத்துக்களைச் சொல்கிறார். விரி வாக எழுதப்பட்ட இந்தக் கட்டுரை, அங்கங்கே சில பகுதிகள் விடப் பட்டு இங்கு வெளியாகிறது. — **ஆசிரியர் ‘நிகழ்’**

பகுதி 1

கடந்த 20 ஆண்டுகளில் ஐரோப்பிய/அமெரிக்க சமூகத்தின் அரசியல், பொருளாதார, கலாச்சாரத் தளங்களில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இந்த மாற்றங்களைப் பற்றி விவாதிப்பவர்கள் பயன்படுத்தும் ஒரு சொல்தான் பின்-நவீனத் துவம்.

போர்டிசம் என்ற தொழிற்சாலை இயக்கத்தில் இன்று அசெம் பிளிலைன் என்பதன் முக்கியத்துவம் குறைந்துவிட்டது. 'ஃபிளக் சிபிள் புரொடக்சன் லைன்' என்ற போக்கு இன்று ஏற்பட்டிருக் கிறது. இதில் பொருள் உற்பத்தி சிறுசிறு குழுக்களாய்ச் செய்யப் படுகிறது. சந்தைத் தேவையைக் கணக்கிற்கொண்டு செய்வதற்குப் பதிலாக, உற்பத்தியாளனை மையமாகக் கொண்டு இந்த மாற்றம் செய்யப்படுகிறது. இதன் விளைவாக சேவைத் துறையில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. உற்பத்தியில் நிரந்தரத் தொழிலாளர் களின் பங்கு குறைகிறது. உற்பத்தியின் பல்வேறு பகுதிகள் பல்வேறு இடங்களில்/நாடுகளில் செய்யப்படுகின்றன. பிறகு, ஓர் இடத்தில்/ஒரு நாட்டில் இவை கொண்டுவரப்பட்டு முழுப்பொருள்/ இயந்திரம் இணைக்கப்படுகிறது. பகுதி நேரத் தொழிலாளர் களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. வீடுகளில் இருந்தே பொருள் தயாரிக்கப்படுகிறது. ஒன்றிணைந்த தொழிலாளர் இயக்கம் இதனால் குறைகிறது. பொருள் உற்பத்தி உலக அளவில் நடை பெறுகிறது. அண்மைக் காலத்தில் இத்தகைய மாற்றங்கள் அதிகரித்துள்ளன.

நிதித்துறை இன்று முக்கியத்துவம் பெறுகிறது. நாள் தோறும் மில்லியன் கணக்கில் நாணயங்கள் உலகளவில் கைமாறுகின்றன. நிதி நிறுவனங்களின் நுண்ணிய வலைப் பின்னல்கள் உலக அளவில் பரவியிருக்கின்றன. சிட்டி வங்கி போன்றவை அமெரிக் காவில் மையம் கொண்டிருந்தாலும் இந்தியாவிலிருந்துதான் அதிக இலாபத்தை பெறுகிறது. உற்பத்தித் துறையில் மட்டுமல்லாமல் நிதி நிர்வாகம், பண்டமாற்று ஆகிய துறைகளிலும் நிதித்துறை தன்னை ஈடுபடுத்தியிருக்கிறது. இதன் ஒரு விளைவு, வணிகச் சூதாட்டம். அமெரிக்காவில் வணிகச் சூதாட்டத்தின் விளைவாக நூற்றுக் கணக்கான சிறுசிறு வங்கிகள் திவாலாயின. இந்தியாவில் ஏற்பட்டதைப் போலவே அங்கும் பங்குச் சந்தையில் மோசடி நிகழ்ந்தது. நில பேரங்களில் பெரும் நிதி குவிக்கப்பட்டது.

நுகர்வைப் பொறுத்தவரை அன்றாட வாழ்வைப் பொருள் மயமாக்கும் போக்கு அதிகரிக்கிறது. 'வாழ்க்கை நடை' (ஸ்டைல்) விற்கப்படுகிறது. அதாவது உணவு, உடை, வீடு, வீட்டு அலங்கா ரம், சுற்றுலா ஆகியவற்றில் புதிய வாழ்வியல் நடைகள் நுகர்வுக் கலாச்சாரத்தினால் ஊக்குவிக்கப்படுகின்றன. நவீன குளியலறை வடிவங்கள் முதலியவை இன்று விநியோகம் ஆகின்றன. நிறுவனங் களும், தங்கள் நாணயம், தொழில் திறன், ஆகியவற்றை விளம் பரங்கள். மூலம் மக்கள் மத்தியில் விநியோகம் செய்கிறார்கள். தங்கள் பிம்பத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக அறக்கட்டளைகள் வைப்பது, இலக்கியத்திற்கு நன்கொடை தரு வது போன்ற செயல்களை நிறுவனங்கள் செய்கின்றன.

80-களில் அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றத்தை சர்வாதி கார ஜனரஞ்சகம் என்று குறிப்பிடலாம்.

இன்றைய இந்தியாவின் அரசியலை இந்தப் பெயரால் குறிப் பிடலாம். அரசியலில் தனிநபர் சார்ந்த பெருமைகள் அதிகம் பேசப் படும். தலைவர்கள் இவ்வாறு விநியோகம் செய்யப் படுகிறார்கள். தொலைக்கட்சி விவாதங்களின் மூலமாக பெரும் தலைவராக ரீகன் முன்நிறுத்தப்பட்டார். இதே போல, அரசியலில் புதிதுபுதிதாய் சிறு சிறு குழுக்கள் ஏற்படுவது, புதிய அடையாளங்கள் ஏற்படுவது ஆகியனவும் அரசியலில் புதிய போக்குகள். பெண்ணியம், சுற்றுச் சூழல் ஆகியவை இத்தகைய புதிய குழுக்கள். தேவையைப் பொறுத்து இந்தக்குழுக்கள் வெவ்வேறு அரசியல் அணிகளில் இடம் மாற்றிக் கொள்ளும். பெண்ணியத்திற்குள்ளும் வெவ்வேறு குழுக்கள் ஏற்பட்டிருக்கின்றன. கறுப்புப் பெண்ணியம் ஒரு உதாரணம்.

மேற்சொன்ன உற்பத்தி முறையில் அமெரிக்காவில் கூலி அதிகம், என்பதால் மெக்சிகோவில் தொழிற்சாலையை அமைத்துக் கொள்ளலாம். அமெரிக்க விமானப் போக்குவரத்து நிறுவனங் களைப் பொறுத்தவரை தேவையான தகவல்களை தென்அமெரிக்க நாடுகளில் குறைந்த கூலிக்குக் கிடைக்கும் ஊழியர்களைக் கொண்டு பதிவுசெய்து கணிப்பொறிஇணைப்பின் மூலம் தகவலைத் தொகுத்து பயன்படுத்திக் கொள்கிறார்கள். அமெரிக்க வெள்ளைக் காவலர் ஊழியருக்குத் தரும் ஊதியத்தில் பத்தில் ஒருபங்கு தென்அமெரிக்க ஊழியருக்குக் கொடுத்தால் போதும். கணிப் பொறியும் தொலைத் தொடர்புச் சாதனங்களும் இத்தகைய உற்பத்தி முறையைச் சாத்தியமாக்கியுள்ளன. நிரந்தரத் தொழிலா

ளிகளின் எண்ணிக்கை தொடர்ந்து குறைவதன் காரணமாக தொழிற்சங்கங்கள் பலமற்றுப் போகின்றன.

அரசின் கொள்கையில் ஏற்பட்ட இன்னொரு முக்கிய மாற்றம் பற்றி நாம் கவனிக்க வேண்டும். முன்பு முதலீட்டை அரசு ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்தியது. இப்பொழுது இந்தப் பணியிலிருந்து அரசு தன்னை முற்றிலும் விலக்கிக் கொண்டு வருகிறது. பன்னாட்டு மூலதனத்தை தேசிய அரசுகள் வரவேற்கின்றன. பன்னாட்டு நிறுவனங்கள் எங்கு எதில் முதலீடு செய்வது என்பதை தாமே தீர்மானிக்கின்றன. அரசுகளின் தலையீட்டை சர்வதேசிய நிதி நிறுவனங்கள் ஏற்பதில்லை. 80களில் இத்தகைய முதலீடு பல மடங்கு அதிகரித்தது.

இந்த மாற்றங்களின் அடிப்படையில் பின்-நவீனத்துவம் பற்றி நாம் பேசலாம். பின் நவீனத்துவக் கலாச்சாரத்தில் பிம்பங்களும் சொல்லாடல்களும் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன. அரசியல் தலைவர்கள் முதல் விளையாட்டில் ஈடுபடுவோர்வரை எல்லாருமே இப்போது விநியோகத்திற்குரியவர். இலக்கிய ஆசிரியர்களும் இப்படி உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறார்கள். இதற்கு உதாரணம் விக்ரம்சேத் விக்ரம் சேத்தின் படைப்பை விட தனிமனிதர் என்ற முறையில் இவரது பிம்பத்திற்கு அதிக விலை. படைப்பை விற்க இந்த பிம்பம் பயன்படுகிறது. டேவிட் ஹார்வி தரும் ஒரு விவரம் குறிப்பிடத் தக்கது 30—களில் கம்யூனிஸ்டுகள் ஜெர்மனியில் தாங்கள் நிகழ்த்திய அரசியல் நாடகங்கள் மூலம் மக்களின் கவனத்தை ஈர்த்தார்கள் நாஜிகள் ஆட்சியில் தங்களை நிலைநிறுத்துவதற்கு இத்தகைய. திருவிழாக்களை அமைத்தார்கள். இடதுசாரிகள் வெகுஜன ஊடகங்களை பூர்ஷ்வாக்களிடமும் வலதுசாரிகளிடமும் விட்டுவிட முடியுமா என்று இங்கு நாம் கேள்வி எழுப்பவேண்டும். பின் நவீனத்துவவாதிகளில் ஒருசிலர், இப்போக்கைக் கொண்டாடுகிறார்கள். இன்னொரு பிரிவினர், இந்தப்போக்கு மக்களை அடிப்படைவாதத்திற்கு இட்டுச்செல்லும் என்று கருதுகிறார்கள். இப்போக்கை முற்றாக மறுக்கவும் முடியாது. முற்றாகக் கொண்டாடவும் முடியாது.

பின்—நவீனத்துவம், இதுதான் கலாச்சாரம். இதுவே துறை. இது அரசு என்ற வேறுபாடுகளை இன்று ஏற்பதில்லை. இவை, ஒன்றோடொன்று ஒன்றி இணைந்துவிட்டன. முன்தைய பொருளாதார முறை இன்று மாறியிருக்கிறது. இன்று நடைபெறுவது குறிக

ளின் அரசியல் பொருளாதாரம். பொருள் உற்பத்திகுறித்த முன்தைய அரசியல் பொருளாதாரத்தை புரிந்து கொள்ள மார்க்சியம் உதவும். இன்றைய குறிகளின் அரசியல் பொருளாதாரத்தைப் புரிந்து கொள்ள பின்—நவீனத்துவம் உதவுகிறது.

பகுதி - 2

1981ல் Post Modernism—Cultural logical of late Capitalism என்ற புகழ்பெற்ற தன் கட்டுரையை பிரடெரிக் ஜேம்சன் எழுதினார். இக் கட்டுரையை ஒட்டி நியூலெஃப்ட் ரெவியூவுல் விவாதங்கள் நடைபெற்றன. அக்கட்டுரைகள் ஒரு தொகுப்பாக வெளிவந்தன. இப்பொழுது வெளிவந்துள்ள அவருடைய இன்னொரு புத்தகம் கலாச்சாரம்—கருத்தமைவு—உட்பட பலவற்றை இந்த நூலில் விவாதிக்கிறார்.

கலாச்சாரம் பற்றி ஜேம்சன் எழுதுகிறார். சமகாலத்தில் பிம்பம் என்பது பொருளின் இறுதி வடிவமாக இடம் பெறுகிறது. மூலமற்ற பிரதிகளின் பெருக்கங்களும் கேளிக்கைகளின் பெருக்கங்களும் கலாச்சாரத்தின் வடிவங்களாகிவிட்டன. கவிதைக்கான மையப் பொருள் இல்லை. வெறும் சொற்களின் தொகுப்பு எனக் காணப்பட்டாலும் சொற்களுக்குள் ஒரு பொருள் என்பன காண வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

சினிமாவில் பழமைப் பூரிப்பு (நாஸ்டாலிஜியா) என்பது நிகழ் காலத்தில் வைத்துச் சொல்லப்படுகிறது. இவ்வாறு கலாச்சாரத்தின் சில அம்சங்களைப் பற்றிப் பேசிய பிறகு கட்டடக்கலை பற்றி குறிப்பிடுகிறார்.

பின்—நவீனத்துவம் என்பதை ஏற்காதவர்களும் இருக்கிறார்கள். வீடியோ படங்களை பின் நவீனத்துவத்தின் தாக்கம் பெற்றவை எனக் காண்கிறார். எதார்த்தவாதத்திற்கும் வீடியோவிற்கும் உள்ள தொடர்பைக் குறிப்பிடுகிறார். ஏலியனேசன் என்ற வீடியோப் படத்தில் அறிவியல் புனைகதைகள் ஒரு சில அற்புதமான இசைப் பாடல்கள் இவற்றோடு தொடர்பில்லாத புகைப்படங்கள், சில விளம்பரங்கள் இப்படத்தில் இடம் பெறுகின்றன. இவையனைத்தும் சேர்ந்ததுதான் ‘அந்நியமாதல்’. இப்படத்தில் மையக் கருத்து இல்லை. ஒரே படத்தில் செவ்வியல்

இசையும், விளம்பர இசையும் இடம் பெறுகின்றன. ஒன்றோ டொன்று முரண்படாமல் ஒன்றை மற்றது நிராகரிக்காமல் இருக் கின்றன. வீடியோ படம் ஒரு 'கொலாஜ்' போல இருக்கிறது. இப் படம் எதை முன்வைக்கிறது என்று கேட்பது பொருத்தமாக இராது. இந்த வீடியோப் படம் ஒரு பெரும் தொகுப்பு என்ற அளவிலும் புரிந்துகொள்ள முடியாது. முரண்பட்டது/'சீரழிந்தது' எனத் தெரியும். இந்த வீடியோ படம் பற்றிய புரிதலுக்கான கருத் தாக்கத்தை எவ்வாறு கண்டறிவது என்று ஜேம்ஸ் ஆராய்கிறார்.

தொகுப்பு வாசிப்பைப் பொறுத்தவரை பின் நவீனத்துவப் பிரதிகள் யாருடையன? யார் வாசிக்கின்றனர்? ஒவ்வொரு பிரதி யும் தன்னத் தானே சுற்றிக்கொள்கிறது. தன்னைத்தானே கேலி செய்துகொள்கிறது. ஏதோ ஒன்றை சொல்கிற பாவனையில் சொல்லிக்கொள்கிறது. சீரிய ஒன்றைப் பேசுகிற தொனியை இது ஏற்படுத்துவதில்லை. உயர்ந்த இலக்கியம் என்று எதுவும் இல்லை, வழிபாட்டுக்குரியது என்று எதுவும் இல்லை. அனைத்தும் கலைப் படைப்புக்கள். அனைத்தையும் ஒரே தளத்தில் பார்த்துக்கொள்ள வேண்டும். அனைத்தும் கொண்டாடப்பட வேண்டும். வாசித்தலின் ஒரு அம்சம், கொண்டாடப்படுதல். இவ்வாறு தன்னைத்தானே சுற்றும் படைப்புகள் பின் எதைச் சுற்றுகின்றன என்ற கேள்வியை யும் ஆசிரியர் எழுப்புகிறார்.

பின் நவீனத்துவ இலக்கியம் தன்னைக் கேள்விப் பொரு ளாக்கிக் கொள்வதை உதாரணத்தோடு விளக்குகிறார். ஒரு நாவ லின் பின்னுரையில் இவ்வாறு குறிப்பிடப்படுகிறது: 'உடல் உழைப்பு, உணவு, அமைதி, ஓய்வு, கல்வி, மொழி, முறையற்ற உணர்வு போன்ற பல்வேறு விவரங்களை இந்த நாவலில் நான் எழுதியுள்ளேன். பெரிய விஷயங்கள் பற்றி நான் எழுதவில்லை. இவற்றையெல்லாம் நாவலில் எழுத வேண்டுமென்ற பேராசை எனக்கு இல்லை.' இப்படிக் குறிப்பிடும் நாவல் ஆசிரியர் இதன் மூலம் பழைய இலக்கியப் பொருளைக் கேலி செய்கிறார். இது பின் நவீனத்துவ நாவலின் வடிவம். அறிவியல் புனைகதைகள் இன் னொரு வடிவம். கற்பனை உலகுக்கு எதிரான பயங்கரத்தை இவை சித்தரிக்கின்றன.

'காலங்களின் பொருள்' என்பது ஒரு நாவலின் தலைப்பு. ஒரு புறத்தில் சிம்பன்சி பற்றியும் இன்னொரு புறத்தில் டி.என் ஏ. மூலக் கூறுகள் பற்றியும் இந்தக் கதை பேசுகிறது. பறவைகள் என்பவற் றில் தொடங்கி மரங்கள் பற்றிச் சொல்கிறது, மையப் பொருள்

இல்லை. மானிடர் பற்றி மையப்படுத்தவில்லை. ஒரே சமயத்தில் பல்வேறு பொருட்கள் பற்றிப் பேசுகிறது. பல்வேறு இடங்கள், பல் வேறு நிகழ்ச்சிகள், அனுபவங்கள் சொல்லப்படுகின்றன. ஒரு மனிதன், ஒரு நகரம், ஒரே சமயத்தில் பல்வேறு இடங்களில் அவன் அனுபவங்கள் என நாவல் செல்கிறது. மையப் பொருள், அனுபவம், கருத்து என்பது எதுவும் இல்லை. இவ்வாறு பின் நவீனத்துவ இலக்கியம் எவ்வாறு இயங்குகிறது என்பதுபற்றி ஆசிரியர் ஆராய்கிறார்.

பின் நவீனத்துவ ஓவியங்களில் காலமும் இடமும் எவ்வாறு இயங்குகின்றன என்றும் பேசுகிறார். நவீனத்துவ ஓவியங்கள், டிவி போன்ற நவீனத்துவ சாதனங்களை தமக்குள் உள்ளடக்கிக் கொள்கின்றன. நவீன இல்லங்கள், நவீன வரவேற்பறைகள், நவீன கழிப்பறைகள்—இவை எவ்வாறு ஒன்றை ஒன்று கேள்விக் குள்ளாக்குகின்றன என்று சொல்கிறார்.

பொருள் உற்பத்தியை மையமாகக்கொண்ட பழைய சமூகங் களில் குறிகளின் உற்பத்தி பெருகி வருகிறது. இந்தச் சூழலில் இலக்கியம் ஓவியம் என்பவை என்ன ஆகின்றன? இந்த சமூகப் போக்கை இலக்கியமும் கலையும் எவ்வாறு காணமுடியும், கண்டிக்க முடியும் என்ற கேள்வி எழுகிறது. பின் நவீனத்துவக் கலையும் இலக்கியமும் ஒரே சமயத்தில் இரண்டையும் செய்கின்றன. ஒன்று, சமூகத்தின் அங்கமாக தன்னைப் பார்க்கிறது. சமூகத்திலிருந்து பிரிந்து நின்று உன்னை நான் விமர்சனம் செய்கிறேன் என்று இலக்கியம் சொல்வதில்லை. மாறாக, எதைப் பற்றி அது பேசு கிறதோ, அதுவே தனக்குள் இருக்கிறது என்று பார்க்கிறது. அதே சமயம், பொருள் மயமாக்கப்படுதலைக் கொண்டாடுவதாக வும் இலக்கியம் இருக்கிறது. கூடவே கிண்டல் செய்யும் அம்சமும் உடன் இருக்கிறது. ஒரே படைப்புக்குள் பல்வேறு வரலாறுகள் இடம் பெறுகின்றன. பல்வேறு வடிவங்கள் மட்டுமல்லாமல் பல் வேறு உரைநடைகள், பல்வேறு குரல்கள் இடம் பெறுகின்றன.

சந்தையைப் பற்றி நம் புரிதல் என்ன? என்று ஜேம்சன் ஆராய் கிறார். புரோதோன் உழைப்புக் கூப்பன்கள் பற்றிப் பேசியதை மார்க்ஸ் கடுமையாக விமர்சனம் செய்தார். முதலாளிய இயக்கத் தைப் புரிந்துகொள்ளாமல், புரோதோன் வைக்கும் வெற்றுத் தீர்வு இது என மார்க்ஸ் கூறினார். சந்தை என்பது உற்பத்தி உறவு மட்டுமல்ல. சந்தை என்பது ஒரு கருத்தமைவு. இங்கு கருத்தியல் என்பது பொருள் உற்பத்தி பற்றியது மட்டுமல்ல. சமூகத்தைக் கட்டமைக்கும் ஒரு சக்தி, சந்தை. சந்தை என்பது ஒரே சமயத்தில்

ஒரு பொருள், தவிர, கருத்தியல் சந்தை என்ற திகழ்வும் சந்தை என்ற கருத்தாக்கமும் வேறு வேறு. இரண்டையும் புரோதோன் ஒன்று எனக் குழப்பிக்கொண்டார். இப்படி மார்க்ஸ் விமர்சனம் செய்தார். சென்ற ஆண்டு பொருளாதாரத் துறையில் நோபல் பரிசு பெற்றவர் காரிபெக்கர். குடும்பத்தைப் பற்றி இவர் செய்த ஆய்வை குறிப்பிடுகிறார். குடும்பம் என்பது உற்பத்திக்கான ஒரு அலகு. குழந்தை வளர்ப்பு, குடும்பத்தில் நேரத்தைச் செலவிடுவது, இவை பொருளாதாரத்தின் பகுதிகள். சமையல் செய்வது, குடும்பத்தை நிர்வகிப்பது, இதற்கான நேரம் என்பனவும் பொருளாதாரத்தின் பகுதிகள். இவை பற்றி விவாதிக்கும் பொழுது, குடும்பம் என்பதன் குரல் மாறுகிறது. பொருள் உற்பத்தியோடுதான் குடும்பத்தை உள் வைத்துப் பார்க்க வேண்டும். வீடு தரும் சேமிப்புகள் மூலதனமாக மாறுகிறது. வீட்டில் பயன்படுத்தப்படும் தட்டுமுட்டுச் சாமான்கள், என்பவை மூலதன உற்பத்திக்கான கருவிகள். வீட்டில் உழைப்ப வர், உழைப்புச் சக்திகள். வீடு, ஒரு அமைப்பு/நிறுவனம். நிறுவனம் என்ற முறையில் மூலதனம், உழைப்பு ஆகியவற்றை மையமாகக் கொண்டது வீடு. வீடு/குடும்பம் என்ற அமைப்பு, தன்னிடமுள்ள பொருட்கள், தொழில் நுட்பத் திறன்கள் ஆகிய வரையறைகளுக்குட்பட்டு தன் பணியைச் செய்கிறது.

காரிபெக்கரின் ஆய்வில் நேரம் என்பது ஓர் மூலப் பொருள். குழந்தை வளர்ப்பது, வீட்டுவேலைகள், சமையல், ஆண் பெண் சேர்க்கை ஆகிய அனைத்திலும் நேரம் என்பது ஒரு மூலப்பொருள். ஜேம்சன் இது பற்றிப் பேசுகையில், மார்க்ஸ் பற்றியும் குறிப்பிடு கிறார். பேக்கர் குடும்பம் பற்றிச் சொல்வதற்கும் இன்று சந்தை என்பதற்கும் உள்ள தொடர்பை ஜேம்சன் குறிப்பிடுகிறார்.

நவீனத்துவமும்—பின் நவீனத்துவமும் எங்கே வேறுபடுகின் றன? பின் நவீனத்துவம் ஒரு புதிய வடிவம் தானா என்றும் ஆராய்கிறார். காப்காவின் ‘விசாரணை’ நாவலை இது நவீனத்துவ நாவலா? பின்—நவீனத்துவ நாவலா என்று ஆராய்கிறார். பழைய கலை வடிவங்களுக்கு அப்படியே நாம் இன்று திரும்பிச் செல்ல முடி யாது. விரும்பியோ விரும்பாமலோ, இந்தப் புதிய வடிவங்களோடு தான் நாம் இருக்கிறோம். பின் நவீனத்துவம் வேறுபட்டதுதான் என்ற போதிலும் நவீனத்துவத்துடன் தொடர்பும்கொண்டதுதான். பழைய நவீனத்துவ வடிவங்களை பின்—நவீனத்துவத்தின் மூலம் புதியதாகப் புரிந்துகொள்ள முடியும்.

நவீனத்துவம் பற்றிப் பேசும்பொழுது, எதை முன்வைத்துப் பேசுவது? இப்படிப் பேசுவது யாருடைய குரலாக, கலை அல்லது இலக்கியம் ஒலிக்க வேண்டும்? பழமையில் பூரிப்பு என்பதை முற்றி

லும் நிராகரிக்க முடியாது. பழமைக்கும் திரும்பவும் முடியாது. அதே சமயம் இதன் அரசியலையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

ஜேசம்னின் கருத்துக்களை ஒரு தொகுப்பினுள் கீழ்க்கண்டவாறு அடக்கலாம். முழுமை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டுமானால், கற்பனை உலகு என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். புரட்சிக்கர சோசலிசம் என்ற கற்பனை உலகமாகக்கூட இது இருக்கலாம். இது பற்றி தொடர்ந்த உரையாடலை முன்வைப்பதன் மூலமே இதைப் புரிந்துகொள்ள முடியும். வட்டார இயக்கங்களை எப்படி விரிவுபடுத்துவது, அணுகுவது என்பது பற்றியும் சொல்கிறார். டெட்ராய்டு நகரத்தில் தோன்றிப் பரவிய ஒரு இயக்கம் மாநில அளவில் விரிவு பெற்றது. இந்த அனுபவத்தை வீடியோக்கள், திரைப்படங்கள் மூலம் பல்வேறு நகரங்களுக்கும் மாநிலங்களுக்கும் எடுத்துச் சென்றார்கள். பல்வேறு இயக்கங்களுக்கு இது தூண்டுதலாக அமைந்தது. பிறகு இந்த இயக்கம், தன் அடிப்படைத் தளம் எது என்பது பற்றிய புரிதல் இல்லாத நிலையில் சுருங்கியது. பெரிய அரசியல் இயக்கமாக இது வளர்ச்சி பெறவில்லை. முதலாளியம் உலக அளவில் தன் சக்திகளை விரிவுபடுத்தி வருகிறது. இந்தச் சூழலில் சிறுசிறு இயக்கங்கள் என்ன சாதிக்க முடியும்? இந்த சிறுசிறு இயக்கங்களை ஒரு பேரியக்கத்தினுள் இணைப்பது சாத்தியமா? வேறுபாடுகளைக் கொண்டாடுகிற இயக்கம் பின்-நவீனத்துவம். இன்றும் பொருள் உற்பத்தி சிறுசிறு அளவிலும் நடைபெறத்தான் செய்கிறது. பொருள் உற்பத்தி பின்னப்பட்டிருக்கிறது. எதிர்ப்பியக்கங்களும் பின்னப்பட்டுத்தான் இருக்க முடியும், சின்னச் சின்ன இயக்கங்கள் தோன்றி மறைகின்றன. நிலைத்து நிற்கக்கூடிய இயக்கம் சாத்தியமா? உதாரணமாக கருக்கலைப்பு என்ற பிரச்னையில் வலதுசாரி இயக்கத்தோடு இடதுசாரி இயக்கமும் ஒரு கட்டத்தில் இணைந்து செயல்படுகிறது. தமக்கிடையிலான வேறுபாடுகளையும் இந்த இயக்கங்கள் மறைத்துக்கொள்வதில்லை. புதிய தொழில் நுட்பங்கள் புகுத்தப்படும்பொழுது சில கட்டங்களில் இடதுசாரி இயக்கங்களும் வலதுசாரி இயக்கங்களும் இணைந்து செயல்படுகின்றன. சுற்றுச் சூழல் இயக்கங்கள், மத்தியதர வர்க்கத்து இயக்கங்கள். இவை, தொழிலாளர் மற்றும் பெண்கள் இயக்கத்தோடு இணைந்து செயல்பட வேண்டியுள்ளது. ஒரு தளத்திற்குமேல் இவற்றின் நோக்கங்கள் இணைவதில்லை. பல்வேறு தளங்களில் பல்வேறு இயக்கங்கள் வேறுபட்டுச் செயல்படும்பொழுது இதுபற்றி பின்—நவீனத்துவம் என்ன சொல்கிறது? உலக அளவில் உழைக்கும் வர்க்கம் எனவும் பல நாடுகளில் ஒருங்கிணைந்த இயக்கம் எனவும் பேச முடியாததது

போல ஓரியக்கம் என்று இனி பேசமுடியாது. சில இயக்கங்கள் சிலவற்றில் அக்கறை காட்டலாம். பிறவற்றில் அக்கறை காட்டாமல் இருக்கலாம். இத்தகைய இயக்கங்கள் வரவேற்கத்தக்கவை. முதலாளியம் பின்னடைப்படுகின்ற காலச் சூழலில் ஒரு பேரியக்கத்தைச் சிதைப்பவை இந்த இயக்கங்கள் என்று மார்க்சியர் கருதலாம். ஜேம்சனைப்பொறுத்தவரை இறுதித் தீர்வு என எதையும் முன் வைக்கவில்லை. இத்தப் போக்குகளைப் புரிந்துகொள்ளும் சில அடிப்படைகளை முன்வைத்து தன் நூலை முடிக்கிறார்.

8

பின்-நவீனத்துவம் எழுப்பும் கேள்விகள் அமெரிக்கச் சூழலுக்குச் சரியாக இருக்கலாம். மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தவரை இதன் முக்கியத்துவம் என்ன? மேற்கின் சில போக்குகளைக் கண்டு நாம் அஞ்ச வேண்டியதில்லை, அப்படியே ஏற்கவும் வேண்டியதில்லை. மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தவரை இதன் முக்கியத்துவம் என்ன? இன்று எம் டிவி நம் வீடுகளில் நுழைந்திருக்கிறது. பெப்சி விளம்பரங்கள் நம்மைப் பாதிக்கின்றன. நுகர்வுக் கலாச்சாரம் பெருகிய நிலையில் பின்-நவீனத்துவக் கலாச்சாரமாக மாறுகிறது. குறிகளின் உற்பத்தியும் நுகர்வும், நம் காலத்தின் போக்காக மாறுகின்றன. ஸ்டார் டிவி, எம்டிவி பற்றி மட்டுமல்லாமல் அரசியல் ஒரு கேளிக்கையாக இன்று மாறியிருக்கிறது. கேளிக்கையான அரசியலில் சனரஞ்சகமாக, அரசியல் அதிகாரம் மாறியிருக்கிறது. இது சனரஞ்சகமான சர்வாதிகாரம். தாட்சர், ரீகன் ஆகியவர்களின் அரசியல் இது. வலதுசாரிப் போக்குகளும், மத வாதமும் ஒன்றிணைகிற இந்தக் காலகட்டத்தில் அரசியலை அவர்கள் கையில் எடுத்துக் கொள்வார்கள். மத்தியதர வர்க்கத்தையும், தொழிலாளிகளையும் தமக்குள் இழுத்துக்கொள்கிறார்கள். இவர்களின் சொல்லாடலை எப்படிப் புரிந்துகொள்வது? இவர்களின் கேளிக்கைகள் வெறும் கேளிக்கைகளா? இதைப் புரிந்துகொள்ள பின்-நவீனத்துவம் நமக்கு உதவுகிறது.

இன்று உயர் கலாச்சாரமும் வெகுமக்கள் கலாச்சாரமும் தனித்தனியாக இருக்கின்றன. இவற்றைத் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டியதில்லை என்பதைப் பின்-நவீனத்துவம் மறுக்கிறது.

ஒரே இயக்கத்திலுள் ஒரே படைப்பினுள் இரண்டும் சேர்ந்து முடியும். செவ்வியல் இலக்கியத்தில் முன்பு இடம் பெற்ற இராமனை இன்று கேளிக்கை அரசியல் மூலம் வெகுமக்கள் மத்தி

யில் எடுத்துச் சென்றிருக்கின்றனர். அரசியல் இங்கு கேளிக்கை அல்லது கொண்டாட்டமாக மாறுகிறது.

பேரணிகள், ஊர்வலங்கள் ஆகியவற்றின் மூலம் இந்தக் கொண்டாட்டம் நிகழ்கிறது. குறிகளின் உற்பத்தி இதைச் சாத்தியப்படுத்துகிறது. குறிகளின் உற்பத்தியும் விநியோகமும் இவற்றுக்குத் தேவை. இன்று இயக்கங்கள் நடத்துவதற்குப் பண உற்பத்தியை விட குறிகளின் உற்பத்தி தேவை. பல்வேறு பிம்பங்கள், குறிகளின் உற்பத்தி தொடர்கிறது. பின்-நவீனத்துவம் இதை விளக்குகிறது.

வெகுமக்கள் கலாச்சாரம் உயர் கலாச்சாரததிற்கு எதிரானது. இது தாழ்ந்தது, சீரழிந்தது. இந்தக் கருத்து முன்பு நிலவியது. ஆனால் இந்தச் சீரழிவை இப்பொழுது, புரிந்து கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இன்றைய அரசியலோடு சேர்த்து இதனைப் புரிந்து கொள்ள நேர்ந்திருக்கிறது.

இயங்கியல் பொருள் முதல்வாதம், வரலாற்றின் மூலம் வளர்ச்சி, இறுதியான இலட்சியம் என்றெல்லாம் முன்பு பேசப்பட்ட பெரிய சொல்லாடல்கள் இன்று செத்தொழிந்து விட்டன என்று பின்-நவீனத்துவம் கூறுகிறது. உலகவரலாறு தொழிலாளி வர்க்கம் என்ற ஒன்றின் மூலம் மட்டுமே செயல்படுவதில்லை. பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு சமூகப்பிரிவுகள் மூலம் பல்வேறு தளங்களில் குறிப்பிட்ட இயக்கங்கள் என்றுதான் பேச முடியும். வட்டார வரலாறுகள், உள்ளூர் வரலாறுகள், இயக்கங்களின் வரலாறுகள் என்பதாக வரலாறு மாறியிருக்கிறது. வரலாறு பற்றிய பார்வை மாறுகிறபொழுது, இயக்கங்கள் பற்றிய வரலாறும் மாறத் தான் வேண்டும். பேரியக்கத்தின் பகுதியாக இவற்றைக் காண முடியாது. பெரிய அளவில் எதுவும் இல்லை என்று சீரழிந்து விடும் வாய்ப்பும் இங்கு இருக்கிறது.

அயத்துல்லா கோமேனியின் அரசியலும் கூட பின்-நவீனத்துவ அரசியல்தான். ஷாவின் நவீனத்துவ சமூகத்திற்கு எதிராக கோமேனி பற்றிய பிரமைகள் முன்வைக்கப்பட்டன. மேற்கத்திய தொழில்நுட்பத்தைப் புகுத்தி ஷா இரானிய சமூகத்தை நவீனப்படுத்தினார் வலிமை மிக்க தேசிய அரசை உருவாக்கினார். ஷாவை, கோமேனி எதிர்ப்பதற்கு அவர் சார்பாக பத்திரிகைகள் இல்லை. சிறு சிறு நாடகங்கள் மூலம், நாடாக்கள் மூலம், மசூதிகள் மூலம் கோமேனியின் எதிர்க்கருத்து பரப்பட்டது. இலட்சக்கணக்கான பதிவு நாடாக்கள், பாரிசிலிருந்து கோமேனியின் அரசியலை எடுத்

துச் சென்றன. பழையகாலம் பற்றிய கொண்டாடுதல், பழைமை பற்றி பூரிப்பு, நவீனத்துவத்திற்கான எதிர்ப்பு. உயர் கலாச்சாரத் திற்கு எதிர்ப்பு. புராண அடிப்படையிலான சமூக அமைப்பு— இவற்றை கோமேனி முன்வைத்தார்.

பின் நவீனத்துவம் இரண்டு சாத்தியங்களைக் கொண்டுள்ளது. கோமேனியின் அரசியலை, புரிந்து கொள்ளுகிற அதே சமயத்தில் எடுத்துச் செல்ல வேண்டிய அரசியலை புரிந்து செல்லவும் பின்-நவீனத்துவம் உதவுகிறது. ஒரு மையப்படுத்தப்பட்ட கருத்தாக, பின்- நவீனத்துவம் இல்லை. பல்வேறு விளக்கங்களுக்கான சாத்தி யங்கள் பின்-நவீனத்துவத்தில் உள்ளன. ஹேபர்மாஸ், ஜேம்சன் போன்றவர்கள் பின் நவீனத்துவத்தை விமர்சனத்துடன் அணுகுகின் றனர். லியோ டாட், பாதுலார்ம் போன்றவர்கள் இதனைக் கொண் டாடுகின்றனர். அனைத்தையும் விளக்கக் கூடிய ஒரு கருத்து என்று இதில் இல்லை. எல்லாமே மூலமற்ற பிரதிகள். ஏராளமான பிரதி கள் உள்ளன. இவற்றுக்கு மூலம் என்று எதுவும் இல்லை. எந்த மாற்றமும் சாத்தியமில்லை என்ற வலது சாரிப்போக்குக்கும் இதில் இடமிருக்கிறது. பின்-நவீனத்துவத்தை ஏற்பது அல்லது மறுப்பது என்பதுடன் இதில் சில போக்குகளை உயர்த்திப் பிடிப்பது அல்லது மறுப்பது என்று பலவகையான போக்குகளுக்கும் பின்-நவீ னத்துவம் இடம் தருகிறது. பின்-நவீனத்துவம், கலாச்சார உற் பத்தி, குறிகளின் உற்பத்தி, அரசியல் பற்றிய புரிதல், உலகளாவிய முதலாளிய அரசியலுக்கெதிராக தேசிய இனங்கள் முன்வைக்கும் அரசியல்-இவற்றைப் புரிந்துகொள்ள உதவுகிறது. இந்தச் சிக்கல் பற்றி டேவிட் ஹார்வி, ஹெர்னஸ் மெண்டல்போன்ற பல அறிஞர் கள் தம் நூலில் விவாதிக்கிறார்கள். சடப்பொருள்கள் அத்தனையும் உருக்கப்பட்டு வாயுக்களாக மாறிக் கொண்டிருக்கின்றன என்று கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் மார்க்சும் எங்கல்சும் குறிப்பிட்டுள் ளனர். இந்தக் கண்ணோட்டம் பின்-நவீனத்துவத்திற்கு மிக நெருக்கமானது. உற்பத்தி உறவுகள் எப்பொழுதும் மாறிக் கொண்டேயிருக்கும். மார்க்சின் மூலதன நூலை மறுவாசிப்புக்கு உட்படுத்தித்தான் இன்று புரிந்து கொள்ள முடியும். பின்-நவீனத் துவம் பற்றிய விவாதங்களில் இன்று மார்க்சியரும் இடம்பெறுகின் றனர். பின்-நவீனத்துவம் என்பது கலாச்சாரம் அல்லது இலக்கியம் பற்றியது மட்டுமல்ல. இன்றைய முதலாளிய அரசியலும் ஆகும். நமது சூழல்பற்றிய ஆய்வுக்கும் இது உதவுகிறது. அதே சமயம் பின்-நவீனத்தும் பற்றி நமக்கு பிரமைகளும் தேவையில்லை. ●

கேரளத்திலிருந்து...

திரைப்படங்களில் இந்துத்துவம்

□

பிரபாகரன்

கலை, மனிதனின் இன்றைய உலக அளவிலான வெளியீடு. அவனது பிரபஞ்சக் கனவைத் தடுக்கக்கூடிய நிகழ் உலகத்துடன் மோதிக்கொள்ளும்பொழுது சிதறும் புத்துயிரின் கதிர் அது. நிகழ் உலகத்துடன் கலவரம் செய்வதும் உடைத்து முன்னேறுவதுமான கனவு என்பதுதான் மனிதக் கலையில் சாதனையாகவும் இருந்தது. கலையின் செயற்பாடுகள் கருவைத்து வளர்வது என்பது கருத்தியல் உலகில்தான் நடைபெறுகிறது என்பதனால் அதற்குரிய குறைபாடு களும் அதே நேரத்தில் அதன் ஒளி பொழிகின்ற நன்கொடை அம்சமும் இருக்கின்றன. நிகழ் உலகத்துடன் கலவரம் செய்வது என்பது அதன் பொருளியல் உலகத்தில் நடைபெறும் நடவடிக்கை யாகவும் அமைகின்றன-

மலையாள திரைப்பட உலகில் மிக நவீனமான முறையில் மனிதனின் கனவை ஆக்கிரமித்து கட்டுப்படுத்தி அனுபவ உலகத் திற்கு பணிய வைக்கிற போக்கு பலப்பட்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளில் வெளிவந்த திரைப்படங்களில் திட்டமிட்ட முறை யில் உணர்வு பூர்வமாக, நிலப்பிரபுத்துவ சமூகத்தின் காலாவதி யான, பகுதிகளின் காட்சிகளுடன் புத்துயிர்ப்பு கொடுக்கப்படும் இந்துத்துவம், கனவுலகில் புகுத்தப்பட்டிருக்கின்றது.

பிரியதர்சன் தயாரித்த படங்கள் குறிப்பாக இந்த வகையில் பிரதான இடம் பெறுகின்றன. **'ஆரியன்'**, **'அபிமன்யு'**, **'அத்வைதம்'** ஆகியவைகளில் தரமான சினிமாத் தொழில் நுட்பத் தைப் பயன்படுத்தியும், ஹாலிவுட் படங்களின் ஒளிவரிசைகளை மறு உருவாக்கம் செய்தும், இந்த நோக்கம் நிறைவு செய்யப் படுகிறது.

ஆரியன்: படத்தில் நில உச்சவரம்பு சட்டத்தினால் பாதிக்கப் பட்ட பழைய நிலப்பிரபுத்துவ 'நம்பூதிரி' குடும்பத்தைச் சார்ந்த ஓர் இளைஞன் ஊர் விட்டு அலைகிறான். பட்டினியோடு அலையும் பொழுது கோயில்களில் தன் பூணூலைக் காட்டி உணவைப் பெற்றுக்கொள்கிறான். கடைசியாக அவன் பம்பாயில் உள்ள

கடத்தல் கும்பலில் சேர்ந்துவிடுகிறான். அங்கிருந்து தனது காதலி யுடன் தப்பிக்க முயன்று தோல்வியடைந்து கடைசியில் கொலை யாளியாகி நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படுகிறான். தான் செய்தது குற்றமா என்று அவன் நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பு கிறான். இப்படத்தில் நிலப்பிரபுத்துவத்தின் அடிக்கட்டுமானத் திற்கு முற்றுப்புள்ளி வைத்த நிலச் சீர்திருத்தத்தை பிரதிவாதி யாக்கிக் கொண்டும் உயர்சாதி இளைஞர்களுக்கு அதனால் வேலை யின்மை உருவாகியுள்ளது என்றும், இதற்கு கம்யூனிஸ்டு இயக்கம் காரணமானது என்றும் மறைமுகமாகக் குற்றம் சாட்டுகிறான். வேலை இல்லாத காலத்திலும் கோயிலும் பூணூலும் அவனுக்கு சாந்தியளிக்கின்றன. இவ்விதமாக தகர்ந்து போன நிலப்பிரபுத்துவ குடும்பங்கள் மற்றும் உயர்சாதி இளைஞர்களை புதிய தீர்வுக்கான கனவைக் காண்பதிலிருந்து கட்டுப்படுத்துகின்றது இந்தத் திரைப் படம். அதே நேரத்தில் அவர்களின் உயர்சாதி பழக்கவழக்கங் களின், மத நம்பிக்கைகளின் படிமங்கள் காண்பித்து பழமையில் பூரிப்பை உண்டாக்குகிறது. கேரளாவில் இந்துமத அடிப்படை வாதத்தின் தளம் இதுதான்.

'அபிமன்யு' படத்தில் நாயகன் வேலை இல்லாததனால் ஊர் விட்டு பம்பாய் வந்து சேரும் 'நாயர்' (உயர்சாதி) இளைஞன். பம்பாயில் தொப்பி போட்ட 'முஸ்லீம்' போக்கிரிகள் அவனைப் பிழைக்க விடுவதில்லை. உடலை விற்கும் பெண்கள் ஆடிப்பாடி சந்தோசமாக இருக்கும் விபச்சார விடுதி ஒன்று படத்தில் காண் பிக்கப்படுகிறது. இது 'கஸல்' பாடல்களும், நாட்டியங்களும் தொடர்ந்து நடைபெறக்கூடிய, மகிழ்ச்சி பொழிகின்ற இடமாக சித்தரிக்கப்படுகிறது. நாயகன் எப்பொழுதுமே குங்குமத்தில் பெரிய நாமம் வைத்தபடிதான் காட்சி அளிக்கின்றான். (கேரளத் தில் இது இயல்பு அல்ல) சில காட்சிகளில் தொப்பிவைத்த முஸ்லீம் குண்டர்களின் தலைகளும் நாயகனின் நாமம் வைத்த தலையும் மோதிக்ககாள்வதை 'அண்மை'க் காட்சியில் காண்பிக்கின்றது. பிரதான தாதாவை—அவனும் தொப்பி வைத்த முஸ்லீம்—கணபதி ஊர்வலம் நடக்கும்பொழுது அவன் தங்கும் இடத்தில் சென்று சுட்டுக் கொல்கிறான். வில்லன் சுட்டு வீழ்த்தப்படுவதும், ஒரு பாட்டில் வெளிநாட்டு மது டேபிள்மேல் உருண்டு போகையில் அதற்குள்ளேயிருந்து மது வெளியே ஒழுகி முழுக்க தரையில் ஓடு வதும், மறுபடி கணபதி சிலைகள் தண்ணீரில் விழுவதும் ஆகிய காட்சி வரிசைப் படிமங்கள். காட்ஃபாதர் என்ற ஹாலிவுட் படத் திலிருந்துதான் இந்த நிகழ் வரிசை எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் காட்சியில் 'ராமாயண காற்றே' என்ற பாடல்கூட உண்டு.

'அத்வைதம்' என்ற படத்தில், நாயகன் வழக்கம்போல தகர்ந்து போன நாயர் குடும்பத்தை சேர்ந்தவன். இளமையில் அவன் கம்யூனிஸ்டு கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன் அவன் கட்சி அடியாள். அதன் பலனாக ஆட்சியின்போது அவன் பெரிய கோயில் (குருவாயூர் கோயில்) நிர்வாகத்தின் தலைவனாகிறான். கடவுள் நம்பிக்கை இல்லாத இந்த 'கம்யூனிஸ்டு' மற்றும் அவன் கோயிலில் வேலைக்கு வைத்த நண்பனும் சேர்ந்து கட்சித் தலைவன் கேட்ட படி கடவுளின் நகையைத் திருடி அப்பழியை தலைமை பூசாரிமீது சார்த்துகிறான். அந்தப் பெரியவர் அது தாங்க முடியாமல் தற் கொலை செய்கிறார். தொடர்ந்து, மனம் மாறிய நாயகனின் நண்பன் நகையை திரும்பக் கொடுக்கச்சொல்கிறான். கட்சித் தலை னின் கும்பல் அவனைக் கொன்றுவிடுகிறது. இதைக் கேட்டு ஆத்திரப்படுகிறான் நாயகன். கட்சித் தலைவர் அவனை வழக்கில் மாட்டிவிட்டு சிறைக்கு அனுப்புகிறார். சிறையிலிருந்து திரும்பி வந்த நாயகன் சன்னியாசி ஆகிறான். சிறுபான்மை மதத்தினரை தூக்கி வைத்து பெரும்பான்மை மதத்தினரை ஒடுக்குவதா என்று கேட்கிறான் சன்னியாசி. மார்க்சிஸ்டாக இருந்த அவன் ஏன் சன்னியாசி ஆனான் என்று கேட்கப்படும் பொழுது பொருள் முதல் வாதியான மார்க்ஸ் கூட கருத்து முதல் வாதியான ஹெகலிட மிருந்து கற்றுக்கொண்டார் என்கிறான். கடைசியில் மதக் கலவரங் களை அடக்குவதற்கு அமைதி ஊர்வலம் நடத்த முயன்ற சன்னி யாசியைக் கொல்வதற்கு கட்சித் தலைவர் திட்டமிடுகிறார். இது தோற்றாலும்கூட அகிம்சை வழி இனி பயன்படாது என்று முடிவுக்கு வருகிறான் நாயகன். அவன் 'தர்மத்தின்' வெற்றிக்காக வாள் எடுக்கிறான். இப்படி அவன் சத்திரிய சன்னியாசி ஆகிறான்,

இந்தப் படங்களின் தொடர்ச்சியாக மேலும் படங்கள் வெளி வந்து கொண்டே இருக்கின்றன. இப்படங்கள் மோகன்லால், மம்முட்டி போன்ற சூப்பர்ஸ்டார்களின் செல்வாக்காலும், ஆர்.எஸ். எஸ். இயக்கத்தினரின் ஆதரவாலும் இப்படங்களில் பயன்படுத்தப் பட்டுள்ள இந்துமத நிலப்பிரபுத்துவப் படிமங்களினாலும் பெரும் வெற்றி பெறுகின்றன. ●

‘நுழைவாயில்’ — ரிஷி கவிதை (நிகழ்-23)

எது குறித்து இந்தக் கவிதை

□

ரிஷி

ஒரு கவிதை எத்தனைக் கெத்தனை எழுதப்படாத வரிகளைத் தம்முள் மறைத்து அல்லது உள்ளடக்கி வைத்திருக் கின்றனவோ அத்தனைக் கத்தனை அந்தக் கவிதை கவிதையா கிறது என்பதாய் மனதிற்குள் ஒரு கணக்கு வைத்திருக்கிறேன். (இந்தக் கணக்கு ஆளுக்குஆள் மாறுபடலாம்!)

நுழைவாயில் — நுழைந்து விட்ட, நுழையப் போகும், நுழை கின்ற வாயில். நுழைந்து விட்டால் மட்டும் உள்ளிருக்கும் இடம் நமதென்று நிச்சயமாகச் சொல்லி விடமுடியாது. ஆக, நிச்சய மின்மை.

ஒரு கணத்திற்கும், மறுகணத்திற்குமான, ஒரு நிமிடத்திற்கும் அடுத்த நிமிடத்திற்குமான-எந்த இடைவெளியும் நுழைவாயில் தான்; வாழ்வுக்கும், சாவுக்கும் இடையேயான (வாழ்வு, சாவு இவற்றின் பல பரிமாண, உளவியல் ரீதியான பொருளில்) பிரி கோட்டுப் பள்ளத்தாக்கு— அகழி, எல்லைக்கோடு — தான் Many a slip between the cup and tip என்று சொல்வதற்கேற்ப. அத்த கைய ஏதோ ஒரு நுழைவாயிலில், பிரிகோட்டுப் பள்ளத்தாக்கில் ‘எண்ணப்படுவேனோ’ என்ற நினைப்பு; எண்ணப்பட வேண்டும் என்ற விழைவின் எதிரொலியாகவும் கொள்ளலாம்.

‘நினைக்கப்படுகிறோம்’ என்பதற்கான எந்தப் புறசமிக்ஞை யும் இல்லை (தொண்டை கமறுதல், காகம் கூவுவது இவற்றை யெல்லாம் கொண்டு வருவது சொல்லவந்த விஷயத்தை தெரிந்த தைக் கொண்டு சொல்லும் முனைப்பே. இவற்றைக் கொண்டு கவிஞன் சடங்குவாதியாகச் சாடப்பட வேண்டிய அவசியமில்லை என்றே தோன்றுகிறது!) இருந்தும் மனதின் நினைப்பு/விருப்பு அந்த அறிகுறிகளைக் கண்டதாகக் கொள்கிறது. காணவில்லை என்ற விழிப்பும் கூடவே இருக்கிறது. என்றாலும், willing suspension of disbelief நிலையில் மனம். தோள்கண்டு தோளே கண்டு—அடமாய் அந்த நினைப்பு/விருப்பிலேயே அமிழ்ந்திருக்கும் மனதைப் பேசுவதற்கு கம்பராமாயண வரி கை கொடுத்தது. ஆண்,

பெண்ணை நினைப்பதையும், பெண்ணெனில் ஆணை நினைப்ப தையும் 'இந்த தோள் கண்டு தோளே கண்டு' குறிப்பாலுணர்த்தி நிற்கிறது. அவரவர் கண்டது, அவரவர் விண்டது, அவரவர்க் கானது, அவ்வாறானதெனது. அவ்வாறு தானே ஒவ்வொருவருக் கும்? 'உன் பார்வை போலே என் பார்வை இல்லை, நான் கண்ட காட்சி நீ காணவில்லை' என்ற கண்ணதாசன் சினிமாப்பாடல் வரி யின் நீட்சியாக அவரவர் கண்டதை'க் கொள்ளலாம். இந்தக் கவிதையின் கவிதை வரிகளாக நான் கொள்வது கடைசி ஐந்து வரிகளைத்தான். தெரியாதது தேவதையாக தெரிந்ததாக வேண் டும் துர்தேவதை- இல்லை- தொல்லைதான்.

'தெரியாத தேவதையை விட தெரிந்த சாத்தான் மேல்'— இந்தப் பழமொழி விரித்து வைக்கும் சாத்தியக் கூறுகள் பிரமிக்க வைக்கும். தெரியாத ஒன்று தேவதையாவதற்கு தெரிந்த ஒன்று துர்த்தேவதையாக வேண்டும். அல்லது, துர்த்தேவதை தெரிந்த தாக வேண்டும். தெரியாதது தேவதையாகட்டும்- தெரிந்தது ஆகட்டும் துர்தேவதையாய் என்ற இறைஞ்சலும் தொக்கியிருப்ப தாகக் கொள்ளலாம். இவ்விதமாய் இந்த மூன்று வரிகள் பல் பொருள் சாத்தியக் கூறுகொண்டவை. இவற்றிலும் நுழைவாயில், பிரிகோட்டுப் பள்ளத்தாக்கு உறைந்திருக்கின்றன. தேவதை, துர்த்தேவதை, அவற்றின் பரிச்சயமின்மை, அவற்றிற்கிடையே யான ஒப்புறவு, சமன்பாடு அவற்றோடு மனித மனத்திற்கான பிணைப்பு, இணக்கம், முரண் இதில், சொர்க்கத்தை நரகமாக்குவ தும், நரகத்தை சொர்க்கமாக்குவதும் மனித மனமே என்பதான மார்லோ, ஷேக்ஸ்பியர் வரிகளின் தாக்கங்களும் கணக்கிலெடுக்கப் பட வேண்டியவை—தேவதை, துர்தேவதை ஆகியவற்றோடு மனிதனின் தொடர்பு இன்னும் நிறைய உண்டு. இல்லை- தொல்லைதான். மேற்கூறிய சமன்பாடுகள் அல்லது ஒப்புறவுகள் சொன்ன அளவில் இல்லையென்றால் தொல்லைதான்-மேற் கூறிய சமன்பாடுகள் (அ) ஒப்புறவுகள் சொன்ன அளவிலாவது, மாறிய அளவிலாவது இல்லாமலிருத்தல் தொல்லை தான். மேற்கூறியது போல் தேவதை, துர்த்தேவதை இல்லாமலிருந்தால் தொல்லை தான். தேவதை துர்த்தேவதையாகவில்லையென்றால், துர்த்தே வதைத் தேவதையாகவில்லையென்றால் தொல்லைதான்.

தோள் கண்டு தோளே கண்டு, இருக்க முடியவில்லை யென் றால் தொல்லைதான். அவரவர் கண்டது, அவரவர் விண்டது. அவரவர்க்காகவில்லை யென்றாலும் தொல்லைதான்—இப்படி முதல்வரிவரை இறுதி வரிகளை இணைத்துக் கொண்டு போகலாம்.

மொத்தத்தில், இத்தகைய மன அவசங்கள் இருந்தாலும் தொல்லை தான்—இல்லையென்றாலும் தொல்லை தானே?

ஒரு வருடம் இறந்து அடுத்த வருடம் பிறக்கப் போகும் இறுதித் தருணங்களில், (இல்லை அந்த இறுதித் தருணங்களின் அலைக்கழிதலை இன்னொரு தருணத்தில் எழுதியதா—சரியாக நினைக்கவில்லை) இறுதித் தருணங்களைப் பற்றி எழுதப் பெற்ற கவிதை, எல்லோரும் புது வருடத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எப்படி இத்தனை விரைவாக இதுகாறும் கூடப் பழகிவந்த, இப்பொழுது இறக்கப் போகும் வருடத்தை மறந்து விடுகிறார்கள் என்ற வருத்தமும், கோபமும் தேவையில் லாமல் எழும், ஒவ்வொரு புது வருடப் பிறப்பின் போதும். ஏதோ ஒரு நெருங்கிய உறவு—முழுவதும் பரிச்சயப் படுத்திக் கொள்ளு முன்பு, சொந்தங்கொண்டாடு முன்பு முடிந்து விடும். என்றைக்கு மாய்ப்பிரிந்து போய் விடும் துக்கம் மனதை நிராதரவாய் உணரச் செய்யும். விளைவாய், நெருங்கியவர்கள், நெருங்கி விலகியவர்கள் என்று இது காறுமான வாழ்க்கையில் நாம் நேர்கொண்டவர்களை யெல்லாம் நினைவின் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து பார்க்கத் தவறாது மனது.

எந்த வருட இறப்பின் சமயம் எழுதப்பட்டது. யாரை நினைத்து எழுதப்பட்டது என்பதான விவரங்களையே ஒரு வாசக மனம் அதிகம் நாடும் பட்சத்தில் அது/ அவர் படிக்க விரும்பு வது வேண்டுவது கவிதைகளையல்ல; நாட்குறிப்புகளையே. ●

எஸ். என். நாகராசன் கவிதைகள்

1) மறைந்த மறந்த மணந்த மணமற்ற அம்மணமான அக்காலம்
என்று வருமோ எனக்கேட்டாள் சீதை
மணந்த மணமற்ற அம்மணமான இக்காலம்
மறைந்து மறந்தாலன்றி வருமோ எனச் சொன்னாள் தாரை
அதுவேதான் நான் கண்ட முடிவு மென்றாள்
அவளுக்குப் பின் வந்த அவளை யொத்தாராதை

2) மாற மறுத்தால் மறிப்பாய்
மாறினாலும் மறிப்பாய்
மாறியும் மாறாமலிருப்பதே உயிர்
மாறினால் தான் மாறாமலுமிருப்பாய்

தற்கால உலகச் சிறுகதைகள்

□

கல்குதிரை-1992 தொகுப்பாசிரியர்: கோணங்கி

ஆசிரியரின் முன்னுரையைப் பற்றிக் கவலைப்படாமல், தொகுப்பின் உள் நுழைந்தால், (இதுபிரதிநிதித்துவத் தொகுப்பு இல்லை என்று சொல்லப்பட்டிருந்தாலும்) சில விடுபடல்களும் சில அதிகப்படிகளும் கவனத்தை ஈர்க்கின்றன. லத்தீன் அமெரிக்கக் கதைகள் அதிகம் உள்ளன (சில நாடுகளில் இரண்டுகதைகள் கூடச் சேர்க்கப்பட்டுள்ளன). இதுவரை அதிகம் கவனிப்புப் பெறாத சில குட்டி நாடுகளும், ஆசிய ஆப்ரிக்க, முஸ்லீம் நாடுகளும் கவனிப் புப் பெற்றுள்ளன. ஸ்லாவிய மொழிகளில் மூன்று நான்கு கதைகள். ஆங்கிலம், ஜெர்மன் போன்ற பிரபலங்கள் விடுபட்டு, பிரான்ஸ், இத்தாலி, போன்றவை மட்டும் இணைக்கப்பட்டுள்ளன. இந்தியா வைப் பிரதிநிதித்துவப்படுத்த தலித் கதை ஒன்று மட்டும் விவாதத் திற்குரிய முறையில் சேர்க்கப்பட்டுள்ளது. (நல்லவேளை தமிழ்க் கதை இல்லை! ஆனால் அதற்குப்பதிலாகத்தான் 'மூழ்கும் வார்த்தைகள்' என்ற முன்னுரைக் கதை உள்ளதே என்று யாரா வது வம்புக்கிழுக்கலாம்)

எனவே ஒரு முறையான கச்சிதமான தொகுப்பாக இந்நூல் தெரியாவிட்டாலும், மொழி பெயர்ப்புகள் ஒரே தரத்தில் அமைந்தி ராவிட்டாலும், தமிழ்ச் சூழலில் இது ஒரு சாதனைதான். தமிழில் முறையாக ஒரு பொருள் பற்றி பலரையும் எழுதவைத்து, செல வழித்துக் கொண்டு வருவது ஒரு பகீரதப் பிரயத்தனம் என்று நமக் குத் தெரியும். எனவே இத்தொகுப்பு ஒரு புதிய வரவாகக் கவனம் பெறுகிறது.

தொகுக்கப்பட்ட பெரும்பாலான கதைகளிலிருந்து, மூன்றாம் உலக, ஆசியத் தொல்குடிப்பண்பும், மேற்கத்திய வாடை பாயாத தேசியத் தன்மையும், யதார்த்தம் உதறிய அற்புதமும் மாயமும் மயக்கமும், கற்பனையும், மரபாக நிலைத்து விட்ட கதைகளின் சொல்முறையிலிருந்து மாறிய போக்கும், வாய்மொழி இலக்கிய வீச்சும், என்று ஒருபுறம் போர்ஹேயின் கதை மூலத்திலிருந்து பிறந்த நவீன இலக்கியமும், மறுபுறம் சிறு அளவிலாவது அலன் ரோப்கிரியே போன்ற முன்னேறிய நாடுகளின் உயர்வகை இலக்கிய வடிவமும் மற்றும் எதிர்ப்பு இலக்கிய உள்ளடக்கமும் என்று தேர்ந் தெடுத்துத் தரப்பட்டுள்ளது தெரிகிறது. தொடர்பற்றும்

தொடர்புள்ளதோ என்று மயங்கவைத்தும் இடை இடையே மங்கல் நிறத்தில் அச்சிடப்பட்டுள்ள பல ஓவியங்கள்—இவ்வாறாக உலகச் சிறுகதைகளின் சில விந்தை அழைப்புகளைக் கோணங்கி வாசகர் முன் படைத்திருக்கிறார்.

தமிழில் மொழி பெயர்ப்பு, ஒருபடைப்பு அந்தஸ்தைப் பெற்று இன்னும் வளர்ச்சி பெறவில்லை. வால்டர் பெஞ்ஜமின் தமது கட்டுரையில் (The Task of the Translator) கூறுவதுபோல், மொழிபெயர்ப்புக்கு உகந்த படைப்பை இனம் காண்பதும், அவற்றுக்குச் சிறந்த மொழி பெயர்ப்பாளனைக் கண்டு பிடிப்பதும் தான் முக்கிய விஷயங்கள். தமிழில் அபூர்வமாகவே இப்படி நிகழ்ந்துள்ளன. ரஷ்ய இலக்கியத்தை முதன்முதலில் மொழி பெயர்த்து ஒரு வித வழிபாட்டுணர்வை உருவாக்கிய கான்ஸ்டன்ஸ் கார்னெட் [இப்போது புதிய மொழி பெயர்ப்புகள் இவரை மீறி வருகின்றன], லத்தீன் அமெரிக்க இலக்கியத்தை தனிமனிதனாகவே ஆங்கிலத்தில் இறக்கிவைத்த கிரிகோரிரபாஸ்ஸா (மார்குவிஸ் தனது 'நூற்றாண்டுத் தனிமை'யின் மூலத்தைவிட ரபாஸ்ஸாவின் மொழி பெயர்ப்பே சிறந்தது என்கிறார்), இதாலியனிலிருந்து வில்லியம் வீவர் போன்ற புகழ் பெற்ற மொழி பெயர்ப்பாளர்கள் ஆங்கிலத்தில் புரட்சிகளை விளைவித்துள்ளனர். இங்கே இந்தியாவில் கிருஷ்ண தத்த, ஆண்ட்ரூராபின்சன், மேரிடாகோ ஆகியோர் இணைந்து தாகூரின் உண்மையான சிறப்பை இப்போதுதான் ஆங்கிலத்தில் வெளிக்கொண்டு வந்துள்ளனர். தமிழில் இது போன்று நிகழ வேண்டும்.

தமிழன் எழுத்துமுறையை ஆங்கிலம் இன்று வெகுவாகப் பாதித்துள்ளது. எனினும் ஓரளவு தமிழின் வாக்கிய அமைதியை உயிரோட்டத்தைப் போஷித்தபடி மொழியாக்கம் நடைபெற்றால் தான் சிறப்பாக இருக்கும். தமிழில் இன்று மோஸ்தராக பல மொழி பெயர்ப்புக்குளறுபடிகள் ஒரு புறம் நடக்கின்றன. இத்தொகுப்பு நூலில், லட்சிய பூர்வமான மொழி பெயர்ப்பு என்று எதையும் குறிப்பிடமுடியாவிட்டாலும், சில நல்ல எளிய முயற்சிகள் உள்ளது திருப்தியைத் தருகிறது. ராஜசுந்தரராஜனின் மிலன் குந்தராவின் 'அம்மா' மற்றவற்றிலிருந்து மாறுபட்டு, மோஸ்தரற்று, எளிய அழகான மொழி பெயர்ப்பாக இருந்தாலும், குந்தராவை தூத்துக் குடிக்கே இழுத்துச் சென்று விட்டதால் சில குழப்பங்கள் நேரிட்டு விடுகின்றன. (மேற்கில் கம்யூனிசம் சீர்குலைந்த பின்னால், ஸ்பை (உளவு) நாவல்களும், கம்யூனிசத்தை விமர்சிக்கும் நாவல்களும் தம் மவுசை இழந்து வருகின்றன. ஸ்பை நாவலாசிரியரான ஜான்

லேகார் தனது புகழ்பெற்ற ஜார்ஜ் சிமிலியை ரிடயர்மெண்ட் வாங்க வைத்து விட்டார் தமது கடைசி நாவலில். குந்தரா போன்றவர்களுக்கும் இனி மறுபரிசீலனை நடக்கும்) இக்குறைகளையும் மீறி இந்நூல் தனது சிறப்பை உணர்த்தவே செய்கிறது.

—ரமணீ

கோணங்கியின் 'மூழ்கும் வார்த்தைகள்' என்ற பைபிள் போன்ற (கதைகளைப்பற்றிய) சரித்திரக்கதையுடன் சேர்த்து இத்தொகுப்பில் உள்ள மொத்த கதைகள் 29. கடந்த இருபத்தி ஐந்து வருட உலக புனைகதைப் போக்குகளை பிரதிநிதித்துவப்படுத்துவதாக இதை கொள்ளலாமா?

உலக சிறுகதைகள் என்றால் என்னைப் போன்ற சாதாரண வாசகனுக்கு பிடிபடாமல் ஆகாயத்தில் பறந்து கொண்டிருக்கும் பொருட்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தால் இவைகள் எல்லாம் அதிசயமாக வாசகனுடன் பேசிக்கொண்டிருக்கின்றன!

—ஒரு வேளை தாட்சண்யம் கருதியும், பரிதாபப்பட்டும் அப்படிப்பட்ட அபூர்வ பொருட்களை சேர்க்காமல் விட்டிருக்கலாம்—போர், வறுமை, உறவுச்சிடுக்குகள், அசாதாரணகணங்கள், கனவுகள் என்று இக்கதைகள் தீவிரத்தன்மையுடன் பதிவு செய்து கொண்டு போகின்றன.

நாஜி துப்பாக்கிகள் கம்னியூஸ்ட்களின் தலைகளை சிதறடிக்கின்றன. அங்கே ஒரு வாசகம் 'மனிதமூளை, உண்மையில் அதை அப்படியே சாப்பிடுமளவிற்கு மிக மிருதுவானது' (இரவு உணவு-பக் 115). ஃபான்டஸி வடிவம் என்பது எவ்வளவுதான் எதார்த்தத்திலிருந்து விலகி ஓடி அதிசய எல்லைகளை கடந்தாலும் அது மனித இயக்கத்தை அர்த்தப்படுத்துபவதாகவே இருக்கிறது என்பதற்கு இதில் உள்ள கதைகள் சான்று.

இலத்தின் அமெரிக்க காடுகளில் திரியும் 'வாலிம்மை' ஆதி இனத்தவன். அவனை வளர்த்தெடுத்த செல்வவளம் கொழிக்கும் காடுகள், அவனுடைய தாயின் இனத்தைச்சேர்ந்த பெண்கள் எல்லோரும் மேற்கிலிருந்து வந்த நாகரீக இனத்தவரின் குரூரத் தாக்குதலுக்கு ஆளாகும் வரலாற்றுக் கொடுமையை பதிவு செய்கிறது, 'வாலிம்மை' என்ற கதை.

''நோமி இதனாலெல்லாம் என்ன பயன்? இந்த சிற்பக்குப்பைகளுடன் மாதக் கணக்கில் நான் செலவழித்திருக்கிறேன். நீயோ புத்தகம் புத்தகமாக எழுதிக்குவித்திருக்கிறாய். ஆனால் இதற்

கெல்லாம் அர்த்தம் என்று எதுவும் கிடைப்பதில்லை. இந்த பெண் மணி ராணுவத்தின் அத்துமீறல்களை, கொடூரங்களைக் கண்டித் துக் குரல் எழுப்புகிறார். கடைசியில் நம்மைப் போன்றவர்கள் வட்டமான மேஜைகளில் உட்கார்ந்து கொண்டு இதுபற்றியெல் லாம் பேசுகிறோம், வருத்தப்படுகிறோம், கண்டிக்கிறோம்..." (பக்.177)

ஒரு நெருக்கடி மிக்க சூழலில் கலைஞனுக்கு ஏற்படும் தார்மீக சிக்கல்களுடன், மனித உடல்களின் மீது அதிகாரத்தின் கொடிய கரங்கள் பதிந்து இறங்குவதை ஒரு ஓவியம்போல பதிவு செய்கிறார் கொர்த்தஸார்.

உலக வரலாற்றின் சதுரங்கப்பலகையில் மனித உடல்கள் காய்களாக நகர்வதையும், வெட்டியெறியப்படுவதையும் கலைஞர் கள் பதிவு செய்யும் முறைகள் அதிர்ச்சி தருவதாக இருக்கிறது.

வெறுமையை வாழ்வின் கணத்திற்கு கணம் எதிர்கொள்ளும் மனிதர்களைப்பார்த்து ஒரு கிழவன் கேட்கிறான்.

''...ஒவ்வொரு சிப்பியும் உனது வாழ்க்கையின் ஒரு ஆண்டைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக வைத்துக்கொள். ஒவ்வொன்றாகப் பிளந்து பார்த்து அது ஒவ்வொன்றும் காலியாக இருப்பதை நீ கண்டதாக வைத்துக்கொள். அப்படியானால் இரண்டு ரொட்டி களை இழப்பதற்காக இத்தனை சோகமாக இருப்பதுபோல் அப்போதும் இருப்பாயா?'' (அடிமையின் கோட்டை —பக் 68)

அதிகாரம் செயல்படுத்தும் தண்டனை முறைகளாக, போர்க் களத்தில் இதையும் மனித உடல்களாக, தனிமனித தாக்குதல் வெளிப்படும் இருத்தலுக்கெதிரான வன்முறையை சில கதைகள் தீவிரத்துடன் பதிவு செய்ய முயன்றிருக்கின்றன.

போர் மேகங்கள் மேலே மிதந்து கொண்டிருக்க ஒரு மர்மக் கதை சொல்கிறார் போர்ஹே. இதற்கிடையில் ஒரு நாவலின் வடிவசிக்கல்பற்றியும், அதில் 'காலம்' என்பதன் செயல்பாடு பற்றியும் பேசுகிறார்.

தமிழில் ஒரு தீவிரமான இலக்கிய இயக்கம் நிகழ்ந்து கொண் டிருக்கிறது என்பதற்கு இத்தொகுப்பு ஒரு சான்று. மொழி பெயர்ப் பாளர்கள் அதிக ஈடுபாட்டுடனும், அசிரத்தையுடனும் இக்கதை களை மொழி பெயர்த்திருக்கிறார்கள். புதுமைப்பித்தனிலிருந்து இன்றுவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள உலக படைப்புகளில் இது மிக கவனத்திற்குரியது.

—**சித்தார்த்தன்**

இன்னொரு பார்வை

கோணங்கி ஆற்றல் மிகுந்தவர். அடிக்கடி தன் மண்டையைப் பிய்த்துக்கொள்கிறார். மற்றவர் மண்டையையும் பதம்பார்க்கிறார். தமிழுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற தாகம். இத்தொகுப்பில் சாதாரண சிறு கதைகளும் ஏன் சேர்க்கப்பட்டிருக்கின்றன? இக்கேள்வியை ஒதுக்கி விட்டு, தீவிரமான சிறுகதைகளை நோக்கி நம் கவனத்தை திருப்பலாம். வரலாற்றில் மனிதர்களைத் தகர்க்கும் கொடுமைகள் எங்கெல்லாமோ நடக்கின்றன. இந்த நெருப்பிலிருந்து நிறையவே அள்ளித்தருகின்றன சில கதைகள். இந்த நெருப்பை வைத்து நாம் என்ன செய்யலாம். குளிர்காயலாமா? மொழி பெயர்த்தவர் எந்த நோக்கில் இந்தக் கதைகளைத் தருகின்றனர். தமிழுக்கு வளம் சேர்க்கவா? வாழ்வளிக்கவா? அந்நிய நாடுகளிலிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் கடன்களோடு கதைகளையும் சேர்த்துக்கொள்ளலாமா? தென் அமெரிக்கக் கதைகள் நம்மை குடைகின்றன. நமக்கு போர்ச்சூழல் இல்லை. இப்படிச் சொல்லலாமா? ஆயிரம் ஆண்டுப் புதைசேற்றில் நாம் மூழ்கிக் கிடக்கிறோம். எத்தனையோ எதிரிகள் நம்மீது நடந்து போயிருக்கிறார்கள். இந்தக் கோழைகளின் கையில் எந்த வீரவாள் பயன் படும்? புராணங்களை ஒதுக்கிவிட்டோம். கடவுளர்களை நாடு கடத்தி விட்டோம். கனவுகள் கூடாது என்கிறோம். தீ பற்றிக் கொள்ள எந்தக் கனவுகளை மிச்சம் வைத்திருக்கிறோம். நம் சமூகத்தில் எந்தக் கொடுமைகள் இல்லை? எந்த நெருக்கடி இல்லை? எழுத்தாளனுக்குள் நெருப்பு இருந்தால் இங்குள்ள எரி மலைகள் தெரியும். பார்வையைத் தொலைத்துவிட்டவனுக்கு மேலிருந்து மேற்கிலிருந்து ‘தெய்வங்கள்’ வர வேண்டும். கோணங்கி கொண்டு வந்து கொட்டுகிறார். நம்கையில் பெரிய தாகத்தான் பிச்சைப்பாத்திரம் இருக்கிறது. வாங்கி அடுக்கி வைத்துக்கொள்ளலாம்.

—ஆபுத்திரன்

வெளிவந்து விட்டது ஞாநியின்

பழைய பேப்பர்

வேர்கள் இலக்கிய இயக்கம்

12 டி, தந்தை பெரியார் சாலை, வட்டம்—7

நெய்வேலி—607 803

நூல் வேண்டுவோர்: ரூபாய் 25 அனுப்பி வைக்கவும்

எரிப்பதற்காக எரியும் தீ

வானம் நிரம்பி வழிந்த
ஒரு மழை நாளில்
ஒதுங்கினோம் மாட்டுத் தொழுவத்தில்.
மழையைத் தவிர
அந்நிய முகங்கள் யாருமில்லை.
பாவாடையால் தலைதுவட்டி விட்டாய்
''பள்ளிக்கூடம் போக நேரமாயிடிச்சி'' போக
''தலைச்சம் பிள்ளை மழையில போனா
இடி விழுந்திடும்''
பாட்டிபோல் பயமுறுத்தினாய்.
எத்தனையோ நாள்
பிரம்படி விழாமல் காத்தது
உன் கூட்டல் கழித்தல்கள்,
பதியமிட்ட முல்லை
அவசர அவசரமாய் பூத்து நின்றது
இருப்பினும் கள்ளி மறைவினில்
பேசிக்கொள்ளும் அணில்களாய்
நீண்டன நம் நேசிப்பு.
பள்ளிப் பயணம் தொடர்ந்தது
ஊர் எல்லையைத் தாண்டி
பிரிவினில் சிந்தியத் துளிகள்
இன்னும் ஈரமாய் இருக்கிறது.
விடுமுறை நாட்கள் காடுகளில்
தொடரும்.
கௌா பழம் பறித்து கொடுப்பாய்
மடி நிறைய நிறைய
ஓடிப்போவது கோழைத்தனம் என்றேன்
சாட்டை வரிகளோடு
நெஞ்சில் முகம்புதைந்தழுதாய்.
உன்னோடு விடாமல்
துரத்திய வெறிநாய்களால்
வெட்டிச் சாய்க்கப் பட்டுக் கிடந்தன
வேம்புகளும் கொடி முருங்கையும்
''சக்கிலி பயலுக்கு இம்முட்டுத் திமிரா?''
வேரோடு பிடுங்கி எரியப்பட்ட செடியாய்
விரட்டப் பட்டோம் குடும்பத்தோடு.

சுழன்றடித்த சூறாவளியால்
வேறு வேறு திசையில்
வீசி எரியப்பட்டோம்.
இடி இறங்கிய தென்னையாய்
நீ எரிந்துபோன செய்திதான் கிடைத்தது.
நள்ளிரவாயினும் ஓடோடி வந்தேன்,
உன்னை முழுதாய் தின்றுவிட்ட திமிரில்
சிரித்தது சாம்பல்.
தூரலாய் விழுகிறது மழை
இருப்பினும் எரிகிறது தீ!
என் நெஞ்சிலும்
சாதியத்தின் கைகளிலும்.
இன்னும் கொழுந்துவிட்டு
உக்கிரமாய் எரிகிறது தீ—

—பாப்லோ அறிவுக்குயில்

பறவைகள்

பறவைகள் அடிக்கடி
பார்வையில் படுகின்றன
விரும்பி கூடு தேடிய பறவைகள்
வலுவில் கூட்டில் அடைபட்ட பறவைகள்
ஒவ்வொன்றின் இறகுகளிலும்
சுமைகள் பெரிதாய் கனக்கும்
விரும்பி ஏற்றுக்கொண்டதாய்
சிலதுகள் வேசம் போடும்
விடுபட திராணியற்று
உள்ளுக்குள் சிறகடித்து
சிலது கவலையில் மாயும்
பறவைகளுக்கு தெரியும்
சிறைபடுவதும் இன்னல்படுவதும்
ஆனாலும் கூடு தேடி சரணடைவது
தொடரும் தினசரி...!

—க. அம்சப்ரியா

இருத்தல்

கண்ணாமூச்சியில்
எப்போதும்
கண்ணைக் கட்டிக்கொண்டு
நெஞ்சும் கண்ணும்
துடிதுடிக்க
யாரையேனும் கண்டுபிடிக்க
அலைகிறேன்
எல்லோரும் எங்கே தொலைந்தார்கள்
யாராவது என் முன்னே
முன்னால்கூட வேண்டாம்
இருப்பதற்கான
சிறு அசைவையேனும் காண்பியுங்களேன்
குத்திக் கிழிக்கிறது
தனிமையின் கூர்வாள்.

—உதயசங்கர்

கௌரன்

வைக்கோல் பரப்பி
அதன்மீது குந்துக்காலிட்டு
ரசம் போன கண்ணாடியை
இடது கையில் பிடித்து,
ஒருமுறை அவனையும்
மறுமுறை தெற்கும். வடக்குமாக
சமயத்தில் வானத்துக்கும், பூமிக்கும்
என் முகம் நெளிய
முடிவெட்டத் தொடங்குவான்
கௌரன்!
இன்று வரை அப்படியொரு
சந்தோஷம் எனக்கு வாய்த்ததில்லை
இனியும் வாய்க்காது
கௌரன் உயிரோடில்லை!

—கேத்தம்பட்டி செல்வா

இடைவெளிகள்

கடைசியில்
விற்கும்படி நேர்ந்துவிட்டது
தோப்பை
எத்தனை மரங்கள் எத்தனை செடிகள்
—அத்தனையும் தோழர்கள்

அவர்களோடுதான்
எத்தனை அனுபவங்கள்
என் சிறுபிள்ளை விளையாட்டின்
பெரும் பகுதி—
—இவர்களோடுதான்

ஏறிக்குதித்து
கைகால் சிராய்த்துக்கொண்டு
ரத்தம் வர விழுந்தது
—இவர்களோடுதான்

அன்று அவள்
ஏமாற்றிப் போனபோது
கட்டியழுததும்
—இவர்களைத்தான்

நிழல் மட்டுமல்ல
நிம்மதிமட்டுமல்ல
எனக்குக் கவிதை தந்ததும்
—இவர்கள்தான்

கல்லூரித் தேர்வில்
தோற்று வந்தபோது
ஆறுதல் தந்தது
—இவர்கள் மடிதான்

அப்பனுக்குத் தெரியாமல்
திருட்டுக் கள் குடித்தது
நாடகஒத்திகை பார்த்தது
ரகசியமாய் கெட்டபுத்தகம் படித்தது
இன்னும் இன்னும்
எத்தனையோ...
மனிதனின் குரூரப் பசிகளுக்கு
எதையெல்லாமோ
காவு தரவேண்டியுள்ளது

விட மனசின்றி
வேலிப் படலின் முள்கூட இழுத்தது
—என் சட்டையை.
கீழ்மேல் தென்வடல்
ஜாதியடிகள்—என
மூலைக்கு மூலை
ஏதேதோ அளந்தார்கள்
இனி
எனக்கும்
அவர்களுக்கும் உள்ள
இடைவெளியையும் சேர்த்து
—ரவிசுப்பிரமணியன்

ஒரு முடிச்சில்
ஒன்றேயொன்றில்
புறப்படுமோ பிரளயம்?
நீர்க்குவிப்போ,
அக்கினிக்குஞ்சோ
கனன்ற சிறுபொறியில்
பிறக்குமோ புதுஉலகம்?
வாயில் வந்த விடுதலைப்பாட்டு
சிக்கிக்கொண்டது
கைவிரிப்பில்
அளக்க அளக்க
குறுகிய தாழம்
அழுத்த அழுத்த
வளர்ந்தது துயரம்
சிக்கலின் வலையில்
சிலந்திப் பூச்சி
அறிவும், ஆளுமையும்
அலமாரித்தட்டில்
வாய்ப்பாடுகளும், மரஉழக்குகளும்
சேர்ந்துகொண்டது கவிதைகளுடன்
இறுகிக்கிடக்கும்
இத்தனையுடன்
நான் முடிச்சில் மனம்
—பெருந்தேவி

இதயத்தைத்தவிர-ஒரு கடிதம்

நான் மீண்டும், மீண்டும்
ஏதாவதொரு பிரச்சினையில்
மாட்டிக்கொள்கிறேன்.
அதெப்படித்தான் நடக்குமோ, தெரியவில்லை
நான் மாட்டிக்கொள்கிறேன்
எவனுடனாவது அல்லது எவளுடனாவது
சண்டையிட வேண்டியுள்ளது.
என்னைச் சுற்றியுள்ள
அனைத்துமே என்னை
மாட்டிவிட பின்னப்பட்ட வலைகள் தான்
போலும்.
என்னுடன்
அறையில் தங்கியிருப்பவர்கள்,
உடன் பணிபுரிபவர்கள்,— எனக்கு
கீழ்பணியாற்றுபவர்கள்.
எனது அதிகாரிகள்—இதையும் மீறி
நான் பாடம் கற்றுக் கொடுக்கும்
மாணவர்கள்—இப்படி
யாராவது ஒருவரிடம்
மாட்டிக்கொள்கிறேன்.
தவறி தவறி விழுகிறேன்
கதறி கதறி அழுகிறேன்
ஒரு சமயத்தில் ஒருவரிடமோ
பலரிடமோ,
ஒரு நாளில் தொடர்ந்தாற்போல்
சிலரிடமோ,
சண்டையிட வேண்டியிருக்கிறது.
திட்டும், வரவும், மனவருத்தங்களும்,
வன்மங்களும், சகஜமாகிவிட்டன.
நான் அப்படியொன்றும்
அடாவடியான ஆளுமில்லை.
ஒருவர் ஏதோ ஒன்று கேட்டிருப்பார்
நான் ஏதோ நினைவில்
இல்லையென்றிருப்பேன், அவ்வளவுதான்
அவர் ஜென்ம விரோதி ஆகிவிடுவார்
மேலதிகாரி, தான் தப்பித்துக் கொள்ள

மாட்டிவிடும் அபாயங்களும் உண்டு.
மனிதனுக்கு வாய், கண்
செவி, உடல் இப்படி
ஏது வேண்டுமானாலும் இருக்கலாம்—
இதயத்தை தவிர,

—ம. ஜோசப்

ஒரு மரம்கூட அசையவில்லை

ஒருமரம் கூட அசையவில்லை
காற்று வரண்டுவிட்டது
மேகம் கறுப்படர்கிறது

ஒன்றிரண்டு குருவிகள்
பறந்து போகின்றன
குரலெழுப்பியபடி

நானும், என் அம்மாவும்
தெருவில் நிற்கிறோம்

அவரவருக்கான திசையில்
விரைகின்றனர்
சிலர்

பேசும் குரல்களில்
பிடிப்பில்லை

புழுக்கம்
உக்ரமாயிருக்கிறது.
உடல் காற்றுக்கு ஏங்கி
தவிக்கிறது

நான், அறைக்கு வந்து
படுக்கிறேன்

இன்னும் சற்று நேரத்தில்
மழை வரலாம்

—குருநாத் கணேசன்

விமர்சனத்துக்கு மறுப்பு

□

தமிழவன்

1. நான் நூல் பக் 74-இல் ''தன் மரபில் தெய்வப்புலவன் என்ற எல்லாரையும் விட உயர்ந்தவன் படைப்பவன் என்ற சமஸ்கிருத கருத்தியலையும்... ''என்று ஒரு வாக்கியம் எழுதியிருக்கிறேன். இதில் மதிப்புரை எழுதியவர் சங்க இலக்கியம் பற்றிய என் பிரஸ் தாபத்தை ஒதுக்கிவிட்டுள்ளார். சங்கஇலக்கிய கோட்பாடான ஆசிரியன் பற்றிய கருத்தாக்கத்தோடு தொடர்புபடுத்தி அதே பக்கத்தில் ''ஆசிரியன் இறந்து விட்டான் என்று அமைப்பியல்வாதி போல் பறைசாற்றாவிட்டாலும் ஆசிரியன் இல்லாத ஓர் இலக்கியமே அவர்களும் கண்ட இலக்கியத்துவமாகும்'' என்று எழுதுகிறேன். 'அவர்களும்' என்பது தமிழ்க் கோட்பாட்டையும் சமஸ்கிருதக் கோட்பாட்டையும் தொடும். மதிப்புரையாளர் சமஸ்கிருத வாதிகள் என்று அர்த்தப்படுத்துவது அவரது குறைகண்டு பிடிக்கும் மனோபாவத்தாலோ என்னவோ? சமஸ்கிருதத்திலும் தமிழிலும் முரண்பாடின்றி ஆசிரியன், தெய்வப்புலவன் என்ற கருத்தும் ஆசிரியன் ஒரு கூட்டுக்குரல் என்ற கருத்தும் உள்ளன. ஒன்றை இன்னொன்று மறுக்கவில்லை.

2. என்நூலில் பக் 64—இல் பொய்த்தேவு நாவலைச் சி.சு. செ ஓர் அர்த்தமுள்ள நாவலாகப் பார்த்ததை விளக்கியுள்ளேன். பக்.65—இல் ''க.நா.சு.கூட பலவிதப் பொருளும் ஒரு படைப்பில் இருக்க முடியும் என்ற கருத்தை ஆதரிப்பதையே காட்டுகிறது." என்கிறேன். ஆக இலக்கியவியல் குழுவின் இருவரிடம் இரு கருத்துக்கள் இருப்பதை மனதில் உணர்ந்து அதே கட்டுரையில் பக்.82-ல் படைப்பில் ஒரு பொருள் இருக்கும் என்று இலக்கியக்குழு இடம் பிடிக்கும் என்றும் 81-ல் படைப்பில் பல பொருள் இருப்பதை இலக்கிய குழு சுட்டியது என்றும் கூறுகிறேன். சி.சி.செயும் சார்ந்திருப்பது இலக்கியக் குழு. எங்கே முரண்?

3. நான் பக்-28ல் பிரிட்டிஷ் எம்பிரிசிச வழிகைலாசபதி வந்ததைக் கூறி, கைலாசபதியின் எம்பிரிசிச விஞ்ஞானப் பார்வைக்கும் ஜார்ஜ்லூக்காக்சுக்கும் வெகுதூரம் என்கிறேன் (பார்க்.பக்.39) அதே போல் பக்.45 ''விமர்சன முடிவுகளில் லூக்காக்ஸ் வழிவந்த சில பார்வைகளும் கைலாசபதியின் மார்க்சிய இலக்கியப் பார்வை

களும் கைலாசபதியின் மார்க்சிய இலக்கியப் பார்வையாய் உருவாகியிருக்கின்றன'' என்கிறேன்.

பிரிட்டிஷ் எம்பிரிசிச விஞ்ஞான பார்வையிலிருந்து கைலாசபதி உருவாகியதை விளக்கி விட்டு அந்த ஆய்வு முறையைப்பின்பற்றும் ஜார்ஜ்லூக்காக்சின் முடிவுகள், அதாவது—மதிப்பு முடிவுகள்—தேவையாகியிருக்கின்றன. முன்னது ஆய்வு முறை; பின்னது வெறும் முடிவு. ஆக ஆய்வு முறையைப் பொறுத்தவரையில் ஜார்ஜ் லூக்காக்சைச் சாராமல் அவரை வெகுதூரத்தில் வைக்கும் கைலாசபதி நூல் பற்றிய முடிவுகளைக் (நல்லதா இல்லையா என்று) கூற மட்டும் ஜார்ஜ் லூகாக்சைப்பயன் படுத்துகிறார். இதில் எங்கே முரண் இருக்கிறது.

மதிப்புரையாளர், தரமதிப்பீடு வேண்டாம் என்று அமைப்பியலாளர்களுக்கு முன்பே சொல்லப்பட்டது என்கிறார். யார் இல்லை என்றது? (பூர்வ அமைப்பியல் கட்டத்தில் அப்படிக் கூறிய அர்த்தம் வேறு என்பதையும்) தமிழ்ச் சூழல் வேறு என்பதையும் அறிய வேண்டும். மாயை அழித்தல் Mythification இல்லை என்கிறார் மதிப்புரையாளர். அகராதியைப் பார்த்து Small Irrigation Scheme என்பதைச் 'சிறுநீர்ப் பாசனம்' என்று மெகழிபெயர்க்சு சிபாரிசு செய்கிறார் மதிப்புரையாளர். S/Z என்ற நூலில் ஆயப்படுவது பழம்பிரதி அல்ல. ஒரு குறுநாவல் எப்போது பழம்பிரதி ஆயிற்றோ, பழம்பிரதியைத் தூக்கி எறி என்கிற நான் 'நச்சினார்க்கினியரில் ஸெமாயாடிக்ஸ்' என எழுதமாட்டேன்.

பூக்காரி என்ற ந.பி பற்றிய என் வாசிப்பில் எந்த வாசிப்பையும் முழுமையாய்ச் செய்யும் திறன் இல்லை என்று தீர்ப்பு வழங்குகிறார் மதிப்புரையாளர். ஆணுறுப்பின் அதிகார வலியுறுத்தல் என்பது பொத்தாம் பொதுவானதாம். எந்தப் பெண்ணிய விமர்சனத்தின் அடிப்படையும் இதுதான் என்பதைப் பிரியாத கூற்று இது. மார்க்சிய அணுகலைக் கவிதையின் ஒரு பகுதிக்கு மட்டும் பயன் படுத்திவிடுவது என்ன வகை அமைப்பியலோ என்கிறார். பல்வகை அமைப்புக்கள் சுயமாயும் ஒன்றை இன்னொன்று சார்ந்ததாயும் அவற்றின் இயக்கத்தின் மைய உருவாக்கம் வாசித்தலில் உருவாவதையும் கூறியிருக்கிறேன்.

நார்த்ராப் ஃப்ரையை முன்னுதாரணமாகக் காட்டுகிறார் என்கிறார். ஐந்திணைக் கோட்பாடு சார்ந்த தமிழியல்பான அமைப்பியலைக் கட்ட (அமைப்பியலை ஐந்திணையிலிருந்து தொடங்குவது இப்படித்தான்) நார்த்ராப் ஃப்ரையை நான் சுட்டு

கிறேன். திருச்சி பல்கலைக்கழக ஆங்கிலத் துறையின் செல்லப்பன் எழுதியுள்ளதை மதிப்புரையாளர் தெரிந்து கொள்ளவேண்டும்.

இறுதியாக ஒன்று. தமிழகத்தில் அமைப்பியல் அறிமுகமானதற்கு ஒரு காலத்தில் தேவையிருந்தது. அப்போதிலிருந்தே தமிழ்ச் சூழலில் விழிப்பாக இருந்த, சிவசுவின் மேற்கோளுடன் இதனை முடிக்கிறேன். ''படைப்பை விமர்சிக்காமல் வெ. சா பல சமயம் படைப்பாளிகளையே தூற்றினார். தர்மு சிவராம் இந்தக் கட்டத்தில்தான் படைப்பென்பது படைப்பாளியின் உள்ளொளித் தரிசனம் என்ற கருத்துக்களை முன்வைத்தார். வெ.சா, சிவராம் போன்றோர் எழுப்பிய சந்தேகங்களை நிவர்த்திக்க சொல்லித் தரப்பட்ட மார்க்சியம் போதவில்லை, இங்குதான் ஸ்ட்ரக்சுரலிசம் நூல் வெளியாகிறது" (மேலும் ஆகஸ்டு 92) ○

ஜீவனம்

நேற்றைய தூறல் கிடக்கும்
அடிதளக் குழியில்
சவ்வுக்கால் பரப்பி
குதித்துக் கொண்டிருந்தது தவளை
கான்க்ரீட் கலக்கியாயிற்று.
அந்த சின்ன ஜீவனை
எடுத்து வெளியே போட
பத்தரையடிக் குழியில் இறங்கப்போன
வேலைமெனக்கெட்ட சுப்பிரமணியை
நேரம் கடத்துவதாய்
கெட்டவார்த்தையாடினான்
கடன்கார மேஸ்திரி.
ஒவ்வொரு சட்டி
திருட்டுக் கான்க்ரீட் வந்து விழும்போதும்
தாவிக் குதித்து
ஒதுங்கி ஒதுங்கி—இறுதியாய்
சப்பாத்தித் தோல் நசுங்க
புதைந்து அமைதியானது.
வேலையாகிக் கொண்டிருக்கிறது
வேக வேகமாய்.

—அமுதன் இஸ்மாயில்

கடிதங்கள்... கடிதங்கள்... கடிதங்கள்

□

எஸ்.பி. தங்கவேலு: இரு கடிதங்கள்
18-1-93 உதய்ப்பூர் / (ராஜஸ்தான்)

பிரிய கி.ப. அவர்கட்கு,

...வேலை தேடி அலையும் படலம் இன்னும் முடியவில்லை, எனக்கு. ஏரிகள் நிறைந்த இந்தச் தொன்மையான நகரத்திற்கு வந்ததிற்கு வேறுகாரணங்கள் இல்லை. நான்கு திசைகளிலும் மக்கள் என்று சொன்னால் மிகவும் எளிமையாகப் போய்விடும். எங்கு திரும்பினாலும் மலைகள். நடுவில் ஊர். Landscape சமமாக இல்லை. அழகு என்பதற்கு புதிய அர்த்தங்களை இங்கு காண முடியும். பல ஏரிகள், கோட்டைகள், தோட்டங்கள் நிறைந்த ஊர். பல இடங்களில் வீட்டு சுவர்களைப் பார்த்தபோது, இங்குள்ள மக்கள் செங்கல் பயன்படுத்தவில்லை எனத் தெரியவந்தது. கற்கள். கற்கள். இது உதய்ப்பூரின் Character.

6-3-93/காட்மண்டு (நேபாள்)

...இங்கு வந்து 3 நாட்கள் ஆகின்றது. அலுவலக வேலையாக வந்துள்ளேன். சூரிய வெளிச்சம் அறையில் நிறைய—மூன்று புறமும் பெரிய ஜன்னல்கள் உள்ள கெஸ்ட் ஹவுஸ் Room-ல் தூங்கலாமா என யோசித்துக் கொண்டு இருக்கும் போது உங்கள் நினைப்பு எனவே இக்கடிதம். மலைமீது அமைந்துள்ள இந்த ஊர் மிகவும் அழகானது. எங்கும் மலை. வியாபாரம்தான் முக்கியமான விஷயம். தெருவில்நிறைய ஜப்பானியகார்கள். இந்திய ஆட்டோ ரிக்ஷாக்கள் (பஜாஜ்) பார்க்க முடிகிறது. மிகச்சிறிய தெருக்கள். புத்தகத்தில் படித்தும், கேட்டும் விளங்கிக் கொள்ள முடியாத நிறைய விஷயங்கள் இருக்கின்றன. பயணம் இது வரை கண்டிராத பரிமாணங்களை திறந்து வைக்கிறது. இந்திய ரூபாய் மிகவும் பலம் வாய்ந்தது. நேபாள் ரூபாய் உடன் ஒப்பிடும் போது, ரூ 100 (இந்திய ரூபாய்) 160 நேபாள் ரூபாய்க்குச் சமம். இந்திய அரசு Aid தந்துள்ளார்கள் போல் தெரிகிறது. ○

மனுஷ்யபுத்திரன் கடிதம்

12-3-93

அன்புள்ள ஞானி அவர்களுக்கு,

மதுரமான அதிகாலை நேரம். விடிய இன்னும் ரொம்ப நேரம் இல்லை. கடிதமோ கவிதையோ எழுத தூசுகளே இல்லா இந்த நேரத்தைவிட முகூர்த்தம் ஏது? மேலும் மிகவும் பசியாக இருக்கிறது. இரண்டு வாரங்களுக்கு முன்பு திடீரென வெளிப்பட்ட குடல் புண் (அல்சர்) அடிக்கடி தொந்தரவு செய்கிறது. நாலைந்து ப்ரெட் துண்டுகள் இருந்த ஞாபகம். தேடிப் பார்த்து கிடைக்கவில்லை. நேற்று உங்கள் கடிதம் பார்த்து மிகவும் சந்தோஷமாக இருந்தது. சக்கர நாற்காலியில் உங்கள் கடிதத்தை எடுத்துப் போய் ராஜாத்தியிடம் காட்டி சந்தோஷத்தைப் பகிர்ந்துகொண்டோம். மற்ற எல்லாவற்றினிடத்தும் போல கவிதையிலும் ஆழமான நம்பிக்கையின்மைகளுடனும் லேசான நம்பிக்கைகளுடனும் சென்றுகொண்டிருக்கிறேன்.

'கால்களின் ஆல்பம்' கவிதை பற்றிய ஒரு செய்தியைக் குறிப்பிட ஆசையாக இருக்கிறது. நிஜமாகவே இரண்டு வருடங்களுக்கு முன்பு கால்களின் ஆல்பத்தை தயாரித்துக் கொண்டிருந்தேன். அதன் காரணமோ நோக்கமோ என் புரிந்துகொள்ளும் சக்திக்கு அப்பாற்பட்டது. அந்த சமயம் சில முக்கியமான சம்பவங்களால் கடும் மனச்சோர்வு ஏற்பட்ட நிலையில் மனச்சிதைவு ஆரம்பமாகியிருந்தது. பயம், குழப்பம், நெஞ்சில் எந்நேரமும் ஒரு இரும்புக்கை பிசையும் வலி. அப்பொழுதுதான் கால்களை உக்கிரமாக கவனிக்கத் தொடங்கினேன். கால்களின் விநோதங்களும் உன்னதங்களும் பெரும் அனுபவமாய் பெருக்கெடுத்தது. எனக்கு படம் வரையத் தெரியாத சோகத்தை முழுமையாக உணர்ந்தேன். அப்பொழுது தான் ஆல்பம் தயாரிக்கத் தோன்றியது. நிறைய தமிழ்—ஆங்கில பத்திரிகைகளிலிருந்து பல்வேறு பட்டவர்களின் புகைப்படங்களை எடுத்து அவற்றின் கால்களை வெட்டிப் பிரித்தேன். என்னுடைய தொகுப்பில் விளையாட்டு வீரர்கள் முக்கிய இடம் பெற்றிருந்தனர். ஈழத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் கால்கள், சில நடிகைகளின் கால்கள், நடராஜரின் கால்கள் என்று நிறைய சேகரித்தேன். (வெட்டியெடுத்து பத்திரப்படுத்தப்பட்ட சேகுவாராவின் கைகள் எனக்கு ஏன் அடிக்கடி ஞாபகம் வருகிறதென்று புரியவில்லை) ஒரு பெரிய நோட்டில் அதையெல்லாம் ஒட்ட முயன்றபோது என் செயலின் அபத்தத்தைக் கண்டு மூளையின் ஏதோ ஒரு செழிப்பான

பகுதி சிரிக்க எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டேன். பிறகு அவற்றை கவிதையாக பதிவு செய்தேன். அந்த மனநிலையில் வேறு இரண்டு கவிதைகளும் எழுதினேன். ஒன்று ''கழிப்பறையில் 90 நிமிடங்கள்.'' வீட்டிற்கு திடீரென சில அன்னியப் பெண்கள் வந்தபோது நான் கழிப்பறையில் ஒளிந்திருந்த அனுபவம்பற்றியது. நான் மற்றவர்களிடம் காட்ட சங்கடப்படும் ஒரு கவிதை. எனினும் வர இருக்கும் தொகுப்பில் அதைச் சேர்த்திருக்கிறேன். மற்றது ''சவக்குழியிலிருந்து ஒரு நேர்முக வர்ணனை'' எழுதிய பிறகு ஒரு துர்ச்சகுனக் குறியாய் அக்கவிதை என்னை பயமுறுத்தியது. மூலப் பிரதியிலேயே அதை அழித்துவிட்டேன். பிறகு வந்த இந்த இரண்டு வருடங்களில் நான் நிறைய மாறியிருப்பதுபோலத்தான் தோன்றுகிறது. ஊனங்கள் வாழ்க்கை முழுவதும் பரவிக்கிடக்கும் பயங்கரம் புரிகிறது. நான் என்னை அதிக முக்கியத்துவப்படுத்திக்கொள்கிறேனோ என்று வெட்கமாகவும் அவமானமாகவும் இருக்கிறது. போன மாதம் திருச்சியிலிருந்து பஸ்சில் திரும்பிக் கொண்டிருந்தபோது இரண்டு போலீஸ்காரர்கள் ஒரு 16-17 வயதுப் பையனைக் கைது செய்து மதுரைக்கு அழைத்துப் போய்க்கொண்டிருந்தார்கள். எனக்கு பக்கத்து இருக்கை. ஏதோ திருட்டுக் குற்றம் வழியெல்லாம் அடித்து விசாரித்துக்கொண்டே வந்தார்கள். ''ஐயோ...எந்தங்கச்சியெல்லாம் அநாதியா போயீடும்யா...என்ன ஒண்ணும்பண்ணிடாதிங்கய்யா'' என்று கதறிக்கொண்டே வந்தான். ஒரு போலீஸ்காரனின் முழங்கால்களுக்கு நடுவே கீழே உட்கார்த்தி வைக்கப்பட்டிருந்த அந்தப் பையனின் குரல்வளையில் போலீஸ்காரனின் இரண்டு கைகளாலும் நெறிக்கும் தோற்றத்தில் ஓடிவிடாமல் பிடித்துக்கொண்டிருந்தான். எவ்வளவு தொந்தரவான விஷயம்! அந்த நிலையிலும் அந்தப் பையன் இடையிடையே தூங்கி விழுந்து கொண்டிருந்தான். இன்னும் ஏதோ ஒரு காய்ப்பேறிய கை என் தொண்டை முடிச்சை நிரடிக்கொண்டே இருக்கிறது. தொண்டையிலிருந்து அந்தக் கைகளை எப்படி அகற்றுவதென்றோ, அந்த அனுபவத்தை ஒரு கவிதையினால் அகற்றிவிட முடியுமா என்றோ எனக்குத் தெரியவில்லை.

தனிப்பட்ட சோகங்களை வாழ்க்கையில் ஒட்டுமொத்த அழிவுகளோடு பிணைத்துக் காணும்போது இலக்கியமும் இதயமும் தன்தளைகளிலிருந்து விடுதலை பெறும். என்றேனும் அது எனக்கு கூடி வரலாம்.

(விடிந்துவிட்டது)

ஜி.எஸ்.ஆர். கிருஷ்ணன் கடிதம்

□

வலுவான அரசு வேண்டுமா?

வலுவான அரசு (tough state) அமைக்க வேண்டும் என்பது அருண் சௌரியின் வாதம். வலுவான அரசு என்பது எனது பார்வையில் மிகவும் மோசமான விளைவாக இருக்கும். பி.ஜே.பி./ஆர்.எஸ்.எஸ். நண்பர்கள் பலர் வலுவான அரசு வேண்டும் என்பார்கள். சி.பி.எம்/சி.பி.ஐ.கூட அதையே வேறு வார்த்தைகளில் சொல்வார்கள். வேடிக்கை என்னவென்றால் இந்துத்துவத்தின் வக்கீல்களான கிரிலால் ஜெயின் போன்றவர்களும் அதைக் கடுமையாக எதிர்க்கும் மதச்சார்பின்மை வாதிகளும் விரும்புவது ஒன்றையே. அதாவது இந்தியா ஒரு வலுவான அரசு ஆக மாற வேண்டும். நவீன அரசு (Modern state) என்பதுதான் இந்த் மேட்டுக்குடியினரின் கனவு. பி.ஜே.பியை ஆதரிக்கும் இந்திய முதலாளிகள், வியாபாரிகள், மத்திய தர வர்க்கம், அறிவு ஜீவிகள் எல்லோரும் விரும்புவதும், 'வலுவான' அரசு, நவீன அரசு. காங்கிரஸ் கட்சி இனிமேல் லாயக்கில்லை. அது உடையப் போகிறது. ஆகவே மாற்றுக் கட்சி தேவை என்று உணர்ந்து பி.ஜே.பி பக்கம் இந்த நவீனவாதிகள் மற்றும் இந்திய முதலாளிகள், வியாபாரிகள் முதலியவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக சாய்ந்து வருகிறார்கள்.

நாளை தேர்தல் நடந்தால் பி.ஜே.பியை ஆட்சியில் அமர்த்தி விடுவார்கள். அவர்களுக்கு சாதுக்களும், சந்நியாசிகளும், ஏன் ராமனும், கிருஷ்ணனும் கூட இனிமேல் தேவைப்படாது. ஆனால் ஆர்.எஸ்.எஸ்.க்கு உள்ளேயே இதற்கு எதிரான போக்குகள் உள்ளன. அதில் ஆச்சரியமில்லை. அவர்களை ஆதரித்து நம் கருத்துக்களைப் பரப்ப வேண்டும் என்றெல்லாம் நான் சொல்ல மாட்டேன்.

காங்கிரசில் உள்ள முற்போக்கான சக்திகளை நம் நம் இடதுசாரிகள் அடித்த கூத்து மறக்குமா? முஸ்லீம் விரோதப் போக்கு என்பதற்கு தீனிபோட்டு அதையே வளர்த்து வலுவான அரசைக் கட்ட நினைக்கும் இந்திய முதலாளிகள், வியாபாரிகள், அறிவுஜீவிகள் பெரும்பாலும் வெற்றியடைவார்கள் என்றே தோன்றுகிறது. அவர்களை நேர் எதிர் அணியில் நின்று மோதுவது

விவேகம் அல்ல. அதைச் செய்யவேண்டும் என்றால் மக்களைத் திரட்ட வேண்டும், திரட்டி இருக்க வேண்டும்.

அயோத்தியில் கழிப்பறை கட்டவேண்டும், ஆஸ்பத்திரி கட்ட வேண்டும் என்று புத்திசாலித்தனமாக பேசினால் யார் வருவார்கள்? மக்களைத் திரட்டாத போது சாமர்த்தியமாக செயல்பட வேண்டும். ஆர்.எஸ்.எஸ்—பி.ஜே.பி சக்திகளின் positive contribution-ஐ ஏளனம் செய்யாமல், அதைத் தாண்டிச் செல்ல, அறிவுஜீவிகள் நடுவே விவாதம் நடக்க வழி செய்யவேண்டும்.

இந்தியாவை புனரமைப்பது எப்படி என்ற விவாதமாக அதைக் கொண்டு செல்ல வேண்டும். இந்து முஸ்லீம் பிரச்னையோடு மற்ற பல பிரச்னைகளையும் முன்வைத்து பெரிய விவாதம் நடக்க வழி செய்ய வேண்டும். நம் பொருளாதார அமைப்பு, கல்வி, தொழில் துறை, விஞ்ஞானம், பிற்பட்ட ஜாதிகள், இனங்கள், என்று பல விஷயங்களைக்கிளற வேண்டும். ஆனால் யாரும் எதைப்பற்றியும் கவலைப்படாமல் நீங்கள் எந்தப் பக்கம், எந்தக் கட்சி, என்பதையே கேட்டு மகிழ்கின்றனர். நண்பர்கள்கூட 'அரசியல்பிரக்ஞை' என்பது இல்லாமல் கட்சி கட்டுவதிலேயே குறியாக உள்ளனர்-

எனக்கும் சூரத், பம்பாய் முதலிய இடங்களில் நடந்தவற்றைக் கேள்விப்பட்ட போது, படித்த போது, இரண்டு மூன்று நாட்கள் தூக்கம் வரவில்லை. பொற்கோவிலில் இந்திய இராணுவம் தாக்குதல் நடத்திய போது ஏற்பட்ட அதே வேதனை, சங்கடம் ஏற்பட்டது. ஓரளவு அதிகமான வேதனை என்று கூடச் சொல்லலாம். பொற்கோவிலில் நடந்தது இந்திய அரசுக்கும் சீக்கிய இனத்துக்குமான மோதல். ஆனால் இந்துக்கள் முஸ்லீம்களைக் கொன்று குவிப்பது என்பது அதைவிட மோசமானது. 1984-ல் இந்திராவின் மரணத்துக்குப்பிறகு நடந்த சம்பவங்களை விடவும் சமீபத்திய நிகழ்ச்சிகள் வேதனையளிக்கின்றன.

இந்தியா ஒரு நவீன அரசாக சி.பி.எம்/சி பி.ஐ உதவும் என்று இங்குள்ள வியாபாரிகள், முதலாளிகள், அறிவு ஜீவிகள் நினைத்தால் சி.பி.எம்./சி.பி.ஐ. கட்சிகளை ஆதரிக்கத் தயங்க மாட்டார்கள். ஆனால் அது நடக்கவில்லை. சி.பி.எம்./சி.பி.ஐ. கட்சிகளுக்கு அகில இந்திய ரீதியில் மக்களைத் திரட்ட திராணி இல்லை. காங்கிரஸ் ஒன்றுதான் அக்காரியம் செய்ய முடியும். ஆனால் அது பீஷ்மரைப்போல மரணப் படுக்கையில் கிடக்கிறது. உத்தராயண புண்ணியகாலம் வரவில்லை. வந்தவுடன் அது, மண்டையைப் போடலாம். அல்லது காங்கிரஸ்கட்சி புத்துயிர்

பெறலாம். புத்துயிர் பெற வேண்டும் என்றால் அது பெரும்முயற்சி செய்ய வேண்டும். ராமர் கோயிலைக் கட்டுவதோடு இந்துத்துவத்தை 'அபகரிக்கும்' வேலையைச் செய்ய வேண்டும்.

காங்கிரஸ் கட்சிக்கு அப்படியான 'அபகரிக்கும்' செயல் புதியதல்ல. யார் எந்த கோஷம் முன்வைத்தாலும் அதைத் தன்னுடையதாக்கும் 'இந்தியத்தனம்' காங்கிரஸ் கட்சிக்குப் பிறவியிலேயே உண்டு. ஆனால் இன்றுள்ள காங்கிரஸ் அப்படிச் செய்யக் கூடிய நிலையில் இருப்பதாகத் தோன்றவில்லை. நரசிம்மராவைப் போன்றவர்களால் அது முடியும். ஆனால் பதவிப் போட்டியும் மற்ற விஷயங்களும் அவருக்கு எதிராக இருக்கின்றன.

இந்துத்துவத்தை அபகரித்துத் தன்னுடையதாக அதை மாற்றிக் கொள்ள காங்கிரஸ் கட்சி முயன்றால் நம் முற்போக்குகள் உடனே ஐயோ, மதச்சார்பின்மை செத்துவிட்டது என்று ஓலமிடுவார்கள். அந்த ஓலத்துக்கு பயந்து மற்றும் இடதுசாரி, முற்போக்குகளின் ஆதரவுக்காகவும் ஏங்கி, காங்கிரஸ் இந்து முன்னணியை எதிர்க்க எதிர்க்க அது மேலும் வலுவடைந்து காங்கிரசின் இடத்தைப் பிடிக்கும். முற்போக்குகள் தங்கள் இடத்தில் பத்திரமாக இருப்பார்கள். அவர்களுக்கென்று தொழிற்சங்கங்கள், கொஞ்சம் பாராளுமன்ற இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றை யாரும் ஒன்றும் செய்யப் போவதில்லை. பி.ஜே.பி ஆட்சிக்கு வருவதில் இடதுசாரிகளுக்குக் கொஞ்சம் லாபம் கிடைக்கலாம். உயிருக்கு பயந்து முஸ்லீம்கள் அவர்களை ஆதரிக்கலாம். 30-40 எம்.பி-க்கள் முஸ்லீம்களின் ஆதரவால் பாராளுமன்றத்தில் அமரலாம். மூன்றாவது அணி, நான்காவது, ஐந்தாவது...களுக்கு நாடாவது மண்ணாங்கட்டியாவது. அவர்களுக்கு இருக்கவே இருக்கிறது உள் சண்டைகள். அவர்களில் பலர் 'அரசியலை' என்பதை மறந்து வெகுகாலம் ஆகிறது. யாரையாவது கடத்திக் கொண்டு போய் பரபரப்பான நாடகம் நடத்தலாம், துப்பாக்கி இருக்கவே இருக்கிறது.

வர்க்க எதிரி யாரும் அகப்படவில்லை என்றால் துப்பாக்கிக்கு வேலையில்லையா என்ன? உள்கட்சி ஜனநாயகத்தை எப்படி காப்பதாம்? தமிழ்ச் சிறு பத்திரிகைகள் பாவம்! அவர்களுடைய தியானத்தை முறிப்பதற்காகவே கங்கணம் கட்டிக் கொண்டு பல நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன. தியானம் தடைப்பட்டு அவர்கள் கண் விழித்துப் பார்ப்பது, திரு திரு என்று முழிப்பது, மீண்டும் கண்ணை மூடிக் கொண்டு உடைப்பு விமர்சனம், உடைந்தும்

உடையாத கவிதை, ஒன்றுமில்லாத நாவல். அல்லது மொழியில் கலகம், கலகத்தில் மொழி என்று ஆழ்ந்த தியானத்தில் மூழ்குவது நடக்கும். மறந்து விட்டேனே, தமிழின் தனித்துவமான பார்வையை பார்ப்பனியத்தின் சூழ்ச்சி வெற்றி பெறுகிறது என்ற தங்கள் கொள்கைக்கு இதைவிட அருமையான வாய்ப்பு கிடைக்குமா? பி.ஜே.பி—ஜெயலலிதா இணைப்பு அதை உறுதி செய்யவில்லையா? ○

இரங்கற்பா

கம்பிகளால் அறுபட்டும் குறையாமல் சிரித்தபடி
நிலவு பொழிந்து கொண்டிருந்தது
ஊர் மீது; ஊன் மீது; உயிர் மீது!
எங்கெங்கு காணினும் நிலா மயம்!
சூழ நிலா மணம்!
ஆழ உள்ளிழுக்கும் மனம் அனத்தும்—
'நிலவைப் பெண்ணெனல் எத்தனை சுயநலம்!'
தடையறாத் தழுவலுக்காய்
தடுப்புகளற்ற வாயிலோரம் என்னை
எடுத்துச் செல்ல
'எவன் ஏமாற்றினானோ,
விழத்தான் போகிறாளோ'
எனப் பின்னிருந்தொரு குரல்.
நின்றன கால்கள்.
என் இம்சை கண்டு
நேயக் கலகலப்பில் நகைப்பதாய்
வண்டியோட்டத்திற்கிணையாய்
தடுக்கி விழுந்து எழுந்துருண்டு
துள்ளிக் குதித்தோடி வருகிறது நிலா!
தூக்கித் தடவ வேண்டுமாய் காந்துகிறது.
'இருக்கட்டும்—இறங்கி நடக்கையில்
இருண்ட அந்த வழித்தடத்தில்
இறுக்கிக் கொள்வேன் உன்னை!'
இறங்கி நாலெட்டு வைக்க
தத்தித்தத்திக் கூட வருமொரு
மூட்டைப்பூச்சி ஆட்டோ
முகம் பார்க்கும்; தயங்கும்; பின் முன்னேகும்

மெதுமெதுவே.
மிதிவண்டி மனிதனொருவன் மெலிதாய்
உரசி மீள்வான்.
'யாரது யாரது தங்கமா'வின்
அதிமலிவுப் பதிப்பை
வீறிடும் ஓரக் கடை.'
நெட்டித் தள்ளும்
நிற்கும் நரனொருவனின் சாராய வாடை
முட்டியும் ஆடுசதையும்
விண்ணெனத் தெறித்துச்
சுண்டியிழுக்க
விரைவோட்டப் பந்தயமாய் நடக்கையிலும்
கூட வரும் நிலா
வெளிர்மஞ்சள் தெருவிளக்காய்.

'ரிஷி'

பேருந்தில் பயணிக்கையில்
தூங்கியதுண்டா நீங்கள்
தூங்காதிருக்க முடிவதில்லை யென்னால்
குறுகியதூரப் பயண மென்றாலும்...
நண்பர்கள் ஆச்சர்யப் படுவதுண்டு
மனைவி பயப்படுவதுண்டு
உடன்வரும் போது
எரிச்சலும் வருகிறதென்பாள்.
ஒன்றும் சொல்ல முடிவதில்லை அம்மாவால்.
விழிப்பு பற்றிய பிரக்ஞை
மழுங்கிவிட்டது அம்மாவுக்கு
என்றாலும்...
எல்லாரும் சொல்கிறார்களே யென்று
தூங்காதிருக்க முடிவதில்லை யென்னால்,
கனவுகளற்ற தூக்க மது.

மதுசூதனன்

வரப்பெற்றோம்

கவிதைகள்

சின்னஞ்சிறிய சோகம்—தேவதேவன், பக்கம்: 49. ரூபாய் 15, எஸ். பியார் புக்ஸ் 4/5, மணிநகர், நூத்துக்குடி-628 003

புத்துயிர்ப்பு—புதிய ஜீவா, பக்கம்: 83, ரூபாய் 12, 'சுருதி', 25, விநாயகம் பேட்டை தெரு, சென்னை-15

நிகழ் உறவு—இளமுருகு, பக்கம்: 64, ரூபாய் 8, 'திருஞ்இ', 3, மாரீசன் 5வது தெரு, சென்னை-16

புலிகளின் காலம்—சு. செங்குட்டுவன், பக்கம்: 67, ரூபாய் 8, தாயகம் பதிப்பகம், 50, கடலூர் சாலை, பெரியார் நகர், விருத்தாசலம்-606 001

ஓர் அவசரத் திருத்தம்—ஆர். ரத்தினசாமி, பக்கம்: 60, ரூபாய் 10. விஜயா பதிப்பகம், 20 ராஜவீதி, கோயமுத்தூர்-1

காகித உளிகள்—கோபிகா. பக்கம்: 80, ரூபாய் 10, நந்தா பதிப்பகம், 24-ஒய், பங்களா தெரு, பாலக்கோடு, தருமபுரி-636808

வைரப் படிகங்கள்—நெல்லை சு. முத்து, பக்கம்:112, இந்திரா காந்தி இன்ஸ்டியூட், 64, 2வது தளம், தம்பி ரெட்டி வீதி, சென்னை-33

சிறுகதை, நாவல்

திசைகளின் நடுவே—ஜெயமோகன், பக்கம் 176, ரூபாய் 35, அன்னம் (பி) லிட், 2, சிவன்கோயில் தெற்குத் தெரு, சிவகங்கை-623560

ஸ்பானியச் சிறகுகளும் வீரவாளும்—தொகுப்பாசிரியர் எஸ். கருணா, பக்கம்: 156, ரூபாய் 30

பலி—தேவிபாரதி, பக்கம்: 196, ரூபாய் 25, காலம் பதிப்பகம், 87, பாரதி தெரு, (முதல்) ஈரோடு-638 004

மக்கத்துச்சால்வை—எஸ்.எல்.எம். ஹனீபா, பக்கம்: 118+28 ரூபாய் 40, ஷனுபா மன்ஸில், மூன்றாம் வட்டாரம் ஒட்டமாவடி, இலங்கை கி,மா.

உக்கிலு—குமார செல்வா, பக்கம்: 101, ரூபாய் 21. தாயகம், 27/24. மெயின் ரோடு, மார்த்தாண்டம், குமரி-629 165

நாதம்—சுப்ரபாரதி மணியன், பக்கம்: 110. ரூபாய் 18, ராதி பதிப்பகம், 4/70, சாந்த நகர், திருப்பத்தூர்-635 601, வ.ஆ.அ. மாவட்டம்

நேற்று வாழ்ந்தவர்கள்—பாவண்ணன், பக்கம்: 205, ரூபாய்26 Kaavya, 16, 17E Cross Indra Nagar, II Stage, Bangalore—560038

பறக்கும் கோப்பை—வான்முகில், பக்கம்: 112, ரூபாய் 16, அகரம், 2. சிவன் கோவில் தெற்குத் தெரு, சிவகெங்கை-632 560

திறந்தவெளிச் சிறைகள்—சி. பன்னீர்செல்வம். பக்கம்: 152, ரூபாய் 12, ஜே. ஜே. பதிப்பகம், 76-B என்.ஜி.ஓ. காலனி, திண்டுக்கல்-624 009

கொலைகாரன் கதை—மோபசான், பக்கம் 110. ரூபாய் 15, சாந்தா பப்ளிஷர்ஸ், 5, ஸ்ரீபுரம் 2ஆம் தெரு, சென்னை-14

உலகச் சந்தையில் ஒரு பெண்—செ. கணேசலிங்கன், பக்கம் 184. ரூபாய் 22, பாரி நிலையம். 84, பிராட்வே, சென்னை-108

வாக்குமூலம்—நகுலன், பக்கம் 112, ரூபாய் 15, முன்றில், சாந்தி காம்ப்ளக்ஸ், 28, 2வது தளம் ரங்கநாதன்வீதி, சென்னை-17

சுடுமணல்—சுப்ரபாரதி மணியன், பக்கம் 108. ரூபாய் 15, காவ்யா வெளியீடு

காலத்துளி—எஸ் சங்கரநாராயணன், பக்கம் 200, ரூபாய் 26. ஆனந்த பப்ளிகேஷன்ஸ், 15, தீத்தாரப்பன் வீதி, சென்னை-5

கடல் காற்று—எஸ். சங்கரநாராயணன். பக்கம் 108, ரூபாய் 18, அட்சரா, 15, நெசவாளர் தெரு, சென்னை-5

இரயிலுறவா—குன்றம் மு. இராமரத்நம், பக்கம் 24. ரூபாய் 30, குறிஞ்சிமலர் பதிப்பகம், புலமைப்பண்ணை, கோவை-7

மின்மினிகளின் கனவுக் காலம், பக்கம் 128, ஜி. சித்தார்த்தன், நிகழ் வெளியீடு, ரூபாய் 20

கட்டுரைகள்

நவீனதிருக்குறள்—எஸ். வெற்றிவேல், பக்கம் 143, ரூபாய்29 புத்தகப் பூங்கா, 32, அய்யம் பெருமாள் தெரு, சென்னை-14

நவீன இலக்கியச் சிந்தனைகள்—ம. மதியழகன், பக்கம் 177, ரூபாய் 35, ப்ரீத் வெளியீட்டகம், 25, புனுகீசுலரர் வடக்கு வீதி, மயிலாடுதுறை

காப்பிய இயல்—டாக்டர் அ. பாண்டுரங்கன், பக்கம்: 276, ரூபாய் 40, தமிழரங்கம், 30, அவ்வை நகர், புதுச்சேரி-8

தமிழ் நாவல்களில் நனவோடைக் கோட்பாடுகள்—டாக்டர் ம. வீ. பச்சையப்பன், பக்கம் 284, ரூபாய் 35, அருவி பதிப்பகம். 5, எம்.ஜி.ஆர். தெரு, பம்மல், சென்னை-75

இன்றைய தமிழ்—ந. தெய்வசுந்தரம், பக்கம் 97, ரூபாய் 12, நயினார் பதிப்பகம், திருநெல்வேலி

நோக்கு (தொகுதி 3)—டாக்டர் அ. பாண்டுரங்கன், பக்கம் 205, ரூபாய் 45, தமிழ்த்துறை, புதுவைப் பல்கலைக்கழகம், காரைக்கால்-609 602

இரு வானொலி உரைகள்—அருளி, பக்கம் 83, ரூபாய் பத்து, அறிவன் பதிப்பகம், 'தனித் தமிழ் மனை' காளிக் கோயில் தெரு, புதுச்சேரி-9

பெண்ணியக் கலைச் சொல் விளக்கக் கையேடு—டாக்டர் தேவதத்தா, டாக்டர் தி. கமலி, பக்கம் 120, ரூபாய் 60, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், சென்னை-32

தமிழில் நீங்களும் தவறில்லாமல் எழுதலாம்—புலவர் பொற்கோ, பக்கம் 70, ரூபாய் 20, புதுவாழ்வுப் பதிப்பகம், 111, கடைவீதி, சென்னை-15

தமிழும் குறியியலும்—தமிழவன், பக்கம் 108, ரூபாய் 17. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை-113

குறியியலும் அரங்கக் குறியியலும்—ந.ம.வீ. ரவி. பக்கம் 190, ரூபாய் 40, கயல் பதிப்பகம், நெல்லியேந்தல்பட்டி, வவ்வால் தோட்டம் மதுரை—107

வ.உ.சி. வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும்—டாக்டர் சு. சக்கரவள்ளி நாயகம். பக்கம் 334, ரூபாய் 50, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 154, டி.டி.கே. சாலை, சென்னை-18

அரசு அறிவு அதிகாரம்—ஃபூக்கோ. பக்கம் 94, ரூபாய் 9, கார்முகில், மதுரை—2

மார்க்சியமும் இலக்கியத்தில் நவீனத்துவமும்—அ. மார்க்ஸ், பக்கம் 268, ரூபாய் 35, பொன்னி புத்தக மையம், 25, அருணாசல புரம் பிரதான சாலை, சென்னை-20

பாரதியும் அரசியலும்—கோ. கேசவன், பக்கம் 126, ரூபாய் 25, 'அலைகள்', 36, தெற்கு சிவன் கோயில் தெரு, சென்னை-24

பாரதியார் ஒரு பாலம்—டாக்டர் ம.ரா.போ. குருசாமி, பக்கம்: 140, ரூபாய் 18, விஜயா பதிப்பகம், 20, இராஜ வீதி, கோவை-1

சமூகப்பணி, அ-சமூகப்பணி, எதிர்-சமூகப்பணி—சஃபி & கோபி கிருஷ்ணன், பக்கம்: 52, ரூபாய் 12, முன்றில் 28, சாந்தி காம்ப் ளக்ஸ் ரங்கநாதன் சாலை, சென்னை-17

புத்துலகம் படைக்கவே—எக்ஸ். டி. செல்வராஜ், பக்கம்: 210 ரூபாய் 20, தூய பவுல் இறையியல் கல்லூரி, அஞ்சல் பெட்டி எண், 36, திருச்சி-1

எரியும் எண்ணங்கள்—வெ. மரிய அல்போன்ஸ்-ஜெகத்கஸ்பார் பக்கம்: 72, ரூபாய் 8-50. நாளை வெளியீடு, தூய கத்தரினாள் பணியகம், கப்பியறை, குமரி-629156

எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள். பக்கம்: 170, சிராக்: 19/6B, 7வது தெரு, கொடைக்கானல், மதுரை-624 102

தலித் விடுதலை இயல்—பீ. கம்பர்மாணிக்கம், பா. மோகன் லார்பியர், பக்கம்: 215, ரூபாய் 30, தலித் ஆய்வுமையம், அரசரடி, மதுரை-625 010

இந்துயிசத்தின் தத்துவம்—அண்ணல் அம்பேத்கர், பக்கம்: 196, ரூபாய் 20, சமூகநீதிப் பதிப்பகம், 54, கண்ணகி நகர், திருப்பூர்-638 602

இனி ஒரு விதி செய்வோம்—யுகசிற்பி, பக்கம்: 180, ரூபாய் 25, மணிவாசகர் பதிப்பகம், 55, லிங்கி தெரு, சென்னை-1

தமிழகத்தில் பிரம்மசமாஜம்—பெ. சு. மணி, பக்கம் 327, ரூபாய் 44, பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைகுளம் மேற்கு வீதி, சென்னை-4

பாரதிதாசன் வரலாற்றுத் தேவை—வசந்தகுமார் நிழல் வண்ணன்

காவ்யா வெளியீடுகள்

(Kaavya, 16, 17th E Cross, Indira Nagar, Bangalore-560 038)

ஆராரோ—சுந்தரபாண்டியன், பக்கம்: 147, ரூபாய் 18

பணியம்மா, கன்னட நாவல்—தமிழில் இறையடியான், பக்கம்: 144, ரூபாய் 20

குமரகுருபரர்-நாடகம் –பாரதிதாசன், பக்கம்: 134, ரூபாய் 20

தொ. பொ. மீ.யின் ஆய்வுத்திறன்—டாக்டர் மே. அ. பாலமுருகன், பக்கம்: 275, ரூபாய் 50

கொங்குநாட்டுப்புற இலக்கியம்—டாக்டர் சு. சண்முகசுந்தரம், டாக்டர் மே. அ. பாலமுருகன், பக்கம்: 123

எண்பதுகளில் தமிழ்க் கலாச்சாரம்—ராஜ் கௌதமன் பக்கம்: 124, விலை ரூபாய் 24

தமிழ்க் கவிதையும் மொழிதல் கோட்பாடும்—தமிழவன், பக்கம்: 186, ரூபாய் 36

கோழி

கோழிப்பெட்டியில் அடையலாம்
அது
கொல்லைபுறத்தில் இருக்கிறது
அப்பாவின் தாமிரப்பட்டயத்தை தள்ளிவிட்டு
புத்தகங்களில் வெளிக்கிருந்து
உத்திரங்களில் ஏறிக்குதித்து
இடுக்குகளில் நுழைந்து வெளிப்பட்டு
கைகளைக்கண்டால் மிரண்டு
உள்ளேயும் வெளியேயும்
ஓடிக்கொண்டிருந்தது.
முட்டையிடவேண்டுமானால்
கோழிப்பெட்டியில் அடைபட்டு
குந்தியிருக்கத்தான் வேண்டும்.

—இலக்குமிகுமாரன் ஞானதிரவியம்

பா.வெங்கடேசன் கவிதைகள்

□

1. நண்பன்

நடக்கும்போது முகங்களை கவனிக்கும்
பழக்கம் எனக்கில்லை.
நடந்து போகும் வயற் பாதையிலும்
தெரிந்த முகங்கள்
அடிக்கடி தென்படுவதில்லை.
முகங்கள் பிரதிபலிப்பை வேண்டுபவை
என்பது என் நினைப்பு. அதற்கு
நான் லாயக்கில்லை என்பது
உப நினைப்பு
புத்தகத்தினுள் தலையைப் புதைத்துக்கொண்டு
நடக்கும் கனவான் எங்கேனும்
மரத்தில் மோதியோ
பள்ளத்தில் விழுந்தோ அடிபட்டுச்
சாகத்தான் எனும் குரல்கள் கடந்து
போவதைக் கேட்டதுண்டு.
பார்த்ததில்லை.
முகங்களைக் கவனிக்கும் பழக்கம் எனக்கில்லை.
எப்போதாவது
மாடுகள் சகிதம் எதிர்ப்படும்
வரப்போரம் வழி ஒதுக்கி அடங்கும்
கலப்பைக் காரன் மேல்
பார்வை இடறுவதுண்டு.
அப்போதெல்லாம்
காளைகளை இரைந்தபடி செல்லும்
தன் வழியில்
அவனும் கவனமாயிருக்கிறான்.

2. புனைபெயர்

பேனா பிடித்துக் கோப்புகளினூடே உழல
வேண்டுமென விதிக்கப் பட்டிருப்பவர்கள்
குமாஸ்த்தாக்கள் என்றே பொதுவாய்
அறியப்படட்டும்.

கலப்பையும் காளைகளுமாய் வயற்காட்டுச்
சகதியில் புரள ஆக்கப்பட்டிருப்பவன்
உழவன் என்று பேர் பெறட்டும்.
சுத்தியும் சம்மட்டியும் பிடிக்கும் கூட்டம்
பாட்டாளிகளென்றும் சிக்குப்பிடித்த
அடுத்தவன் படுக்கையை தலையில் சுமந்து
திரிபவன் கூலி என்றும் கண்டு
கொள்ளப்படட்டும்
படைத்தவன் தனது மகத்தான
படைப்பு இஃ
தென்று யாவரும் தெரிந்து கொள்ளத் தன்
சொந்தப் பெயரைத் தானே உரக்கக்
கூவியபடி யெங்கும் எங்கும்
அலைந்து கொண்டிருக்கட்டும்.

3. மதுரைக் கோயில்

கோவில் வாசலில் கோபுரத்தின்
கீழொரு மேடை போட்டு நேற்று எதையோ
எவனோ பேசிச் சென்றான். அதற்கு முன்
தினமும் வேறொருவன் வே
றொன்றைக் கூறிச் சென்றான்
ஆகப்பழைய கோபுரம் வார்த்தைக்
கொரு செங்கல்லென்றாலும் இந்நேரம்
இடுப்புயரமாகியிருக்க வேண்டும்.
சொல்லுக்கொரு
காரையென்றாலும் குப்பை
மேடாகியிருக்க வேண்டும். இதை நானும்
நானும் நீயும் பேசிக்கொள்வது போல
நாளை
நீயும் அவனுமோ யார் கண்டது.
என்ன ஏதென்று பேச்சு விளங்கிக்
கொள்ளத் தொலையாத உயத்தில் இன்னும்
கோபுரம் எத்தனை
யுகாந்திரங்களுக்குச்
சிலை சிலையாக விழித்துக் கொண்டிருக்கச்
சபிக்கப்பட்டிருக்கிறதோ பாவம்

எம். வி. வெங்கட்ராம்
37, தோப்புத்தெரு,
கும்பகோணம்-612001.

Miss Screenica, Fort, Coimbatore

அன்புள்ள நண்பர் அவர்களுக்கு,

....நாற்பதுகளின் தொடக்கம் முதல் கிட்டத்தட்ட முடிவு வரை நான் எந்த அரசியல் கட்சியையும் சாராத அழுத்தமான நாத்திகனாக இருந்தேன். கடவுளை செய்பவனைவிட கலைஞனே உயர்ந்தவன் என்று நான் நம்பிய பருவம் அது; கலைஞன் தான் உலகத்திற்கு அமைதியும் ஆனந்தமும் தரமுடியும் என்று அப்போது நான் கருதினேன். இந்த என் கருத்துக்களின் அடிநாதத்தை அப்போதைய என் எழுத்துக்களில் கேட்கலாம். நித்திய கன்னி, நிலைத்த நடை, மற்றும் சில சிறுகதைகளை இந்த காலகட்டத்தில் தான் எழுதினேன். என் வசன கவிதைகள் யாவுமே நான் நாத்திகனாக எழுதியவை.

நாற்பதுகளின் இறுதியில் நான் தீவிர ஆத்திகன் ஆனேன். அது வேறு கதை. இப்போது தேவையில்லை. ஆக, மேலே நான் விவரித்த என் மனப்போக்கும், ஆயும் என் வசன கவிதைகளை மதிப்பீடு செய்யப் பயன்படலாம்.

ஒரு வேண்டுகோள்: மதிப்புக்குரிய பெரியவருக்கு என்று ~~இ~~ தங்கள் வினாக்கணையில் வைத்தது தருகிறது; மனதில் கூச்சத்தை ஏற்றுகிறது. அன்புள்ள எம்.வி.வி. என்றால் போதுமே.

அன்புள்ள தங்கள்
எம்.வி.வி